# உத்தரகாண்டம்.

## படலங்களின் அட்டவணை.


| எண். | படலம். | பக்கம். |
|---|---|---|
| க-வது. | திருவோலக்கப்படலம். | ௫ |
| உ-வது. | புலத்தியப்படலம். | ௬ |
| ௩-வது. | அரக்கர்பிறப்புப்படலம். | கஉ |
| ௪-வது. | தோத்திரப்படலம். | க௮ |
| ௫-வது. | இலங்கையழித்தபடலம். | உஉ |
| ௬-வது. | இராவணன்பிறப்புப்படலம். | உ௮ |
| ௭-வது. | வரையெடுத்தபடலம். | ௩௮ |
| ௮-வது. | திக்குவிசயப்படலம். | ௪௯ |
| ௯-வது. | கார்த்தவீரியஈர்ச்சுனப்படலம். | ௮க |
| ௰-வது. | வாலிவாலாற்கட்டுண்டபடலம். | ௮௪ |
| கக-வது. | அநுமப்படலம். | ௮௭ |
| கஉ-வது. | சீதைவனம்புகுபடலம். | ௯௭ |
| க௩-வது. | இலவணன்வதைப்படலம். | கக0 |
| க௪-வது. | சம்புவன்வதைப்படலம். | கஉ௪ |
| க௫-வது. | அசுவமேதயாகப்படலம். | க௩௩ |
| க௬-வது. | கந்திருவர்வதைப்படலம். | க௭௩ |
| க௭-வது. | சந்திரகேதுநகர்ப்படலம். | க௮க |


படலங்களின் அட்டவணை.

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

# ஸ்ரீமத்கம்பராமாயணம்.

## ஏழாவது,

# உத்தரகாண்டம்.

தெய்வப்புலமைக்

**கம்பநாட்டாழ்வார்**

அருளிச்செய்தது.

இஃது

கோமளபுரம் வித்வான்.

இராஜகோபாலபிள்ளை மாணாக்கராகிய

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தமிழ்பண்டிதர்

**ம. சண்முகம்பிள்ளை அவர்களால்**

பரிசோதித்த பிரதிக்கிணங்க,

அமரம்பேடு

**இரங்கசாமிமுதலியார் & சன்ஸ்**

அவர்களாற்றமது

சென்னை:

பூமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம். ம

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணம்.

## ஏழாவது,

# உத்தரகாண்டம்.

## முதலாவது, திருவோலக்கப்படலம்.

### பாயிரம்.

### கடவுள் வணக்கம்.

வெள்ளியங்கிரியைமீதேவேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயநாலைந்துங்கனகமாமவுலிபத்தும்
துள்ளியம்புவிமேல்வீழவொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்னமலரடிவணக்கஞ்செய்வாம். (க)

### வேறு.

### மெய்ப்பொருள் வணக்கம்.

ஒன்றாய்ப்பலவாயுளவாயிலவாயுரைப்போர்க்
கன்றாகியாமாயருவாயுருவாகிமெய்ம்மை
குன்றாதஞானக்கொழுந்தாய்க்குணமூன்றிறந்து
நின்றானியாவனவனீள்கழனெஞ்சில்வைப்பாம். (உ)

### அவையடக்கம்.

புன்சொற்களேனும்புதல்வன்குதலைச்சொற்றந்தை
இன்சொற்களாகக்கொளலான்முனியீங்குரைத்த
தென்சொற்றமிழும்வடசொற்றுறையுந்தெரிந்தோர்
என்சொற்கள்பொல்லாதெனினும்மிகழார்களன்றே. (ங)

இதுக்குத்தரமில்லையிராமகதைப்பரப்பை
நதிக்குத்தரமன்னதைநன்னெறியுய்ப்பதொன்றை
அதுக்குத்தரமில்லதையாய்ப்பொருளாயவாய
மதிக்குத்தரமன்னதைவாக்கினிற்கூறலுற்றேன். (ச)

கால்காட்டவேகுநெறிகண் ணுடையோர்கண் முன்னே
கோல்காட்டமெல்லக்குருடற்குநடக்கலாமால்
பால்காட்டுமின்சொன் முனிபாவழிகாட்டவேத
நூல்காட்டிராமன்கதைமேற்றமிழ் * நூற்கலுற்றேன். (ரு)

## நூல்.

## இதுமுதலேழுபாடல் இராம னரசிருக்கைத்திறம்.

கண்ணுருலகிற்கருதார்குலக்கட்டைவாங்கித்
தண்ணுர்தருமந்தழைக்கத்தனிக்காவல்பூண்டு
மண்ணோர்வணங்கமதிவெண்குடைமேனிழற்ற
விண்ணோர்குலம்வாழவிராகவன்வீற்றிருந்தான். (சு)

கண்கால்கரஞ்செங்கமலத்தடங்காடுகொட்டத்
திண்கார்வரைபோற்றிருமேனிதிகழ்ந்துகாட்டத்
தண்காறடவத்தடம்பூண்முலைத்தையலார்கள்
வெண்சாமரைவீசிடவேதியராசிகூற. (எ)

சீரார்மணிச்சோதிதிரண்டெழுஞ்செம்பொன்மௌலி
காரார்வரைமேற்கதிரோனெழுங்காட்சிகாட்ட
வாரார்தடங்கொங்கைமடந்தையர்வாட்கண்மொய்ப்ப
ஏரார்திருமேனியவ்விந்திரன்மேனியேய்ப்ப. (அ)

சீரொத்தமுத்தந்திகழ்நீள்வடஞ்சேர்ந்தசன்ன
வீரத்தொளியாகியவெள்ளைநிலாவையோட்டி
ஆரத்தெழுஞ்செம்மணிக்கோவையலம்பிடத்தண்
காரொத்தமேனிகருஞாயிறுபோன்றுகாட்ட. (கூ)

தடஞ்சேர்வலயந்தழுவுந்திருத்தோள்கணுக
வடஞ்சேர்வடமந்தரமாமலைதன்னைமானப்
படஞ்சேரரிமாமணிப்பஃறலைக்கோவைகோத்த
புடஞ்சேரெழிற்பொன்னிறவாடைபொலிந்திலங்க. (கo)

கொடிமன்னுமாடக்குலமென்னுமயோத்தியெய்திக்
கடிமன்னுவாயிற்கடைநின்றருள்காலநோக்கிப்
படிமன்னிவாழும்வலமன்னியர்மண்டலீகர்
முடிமன்னரெல்லாமுறையேபுகுந்தேவல்கேட்ப. (கக)

மூவாமுனிக்கூட்டமுமுன்புமுப்பத்துமூவர்
தேவாதிபருந்திருப்பாற்கடலெய்தியெம்மைக்
காவாயெனப்போற்றிடக்கண்டுயினீங்கியின்பம்
ஓவாதுதான்வீற்றிருக்கும்படியொத்திருந்தான். (கஉ)

---

* நூற்கலுற்றேன்-செய்யத்தொடங்கினேன்.

### வேறு.

### இராமன் அவயத்திருடிய ரெய்துதல்.

அந்தவேலையதனுளடங்கிய
குந்தவேலையில்வாட்கைக்கொடியவர்
நந்தவேலையடங்கலுநக்கினேன்
சந்தவேலையைச்சார்சமதக்கினி. (கரு)

சிரத்துவாசவிதழிச்சிவனைநேர்
பரத்துவாசன்வசிட்டன்பகைகெடத்
துரத்துவாசவன்மெய்க்குறிதூக்கினன்
சுரத்துவாசச்சுகம்புரிகோசிகன். (கச)

காயுந்தீவினைக்காசிபனத்திரி
தாயின்மன்னுயிர்க்கன்புடைத்தௌமியன்
தூயஞானச்சுகத்திமுதலினோர்
நாயகன்றிருவாயிலைநண்ணினர். (கரு)

வாயிலோயெம்வரவுரையென்றலும்
கோயிலெய்தியவனடிகூறலும்
தூயவன்புகுத்தீங்கெனச்சொல்லலும்
போயவன்புகுத்தப்புகுந்தாரரோ. (கசு)

### இராமன் முனிவரை வணங்குதல்.

புக்கவந்தப்புராணமுனிவரை
மிக்கெழுந்தவுவகையின்மேதினித்
தொக்கபன்மணிச்சோதிமுடியுறத்
தக்கவாறடிதாழ்ந்துதராபதி. (கஎ)

### முனிவர்க்காசன மளித்தல்.

ஈசனங்கமெரித்திடுநாண்முதல்
கூசனங்கன்குறுகாவருந்தவ
மாசனங்கண்மகிழ்ந்தினிதேறிட
ஆசனங்கள்வழங்கியருளினன். (கஅ)

### முனிவரை இராமன் குசலம் விசாரித்தல்.

பொருந்துமாமணிபோர்த்தபொன்னாசனத்
திருந்தவந்தவிருந்தவத்தோர்களைத்
திருந்துதாமரைச்செங்கணினோக்கிநும்
அருந்தவங்கட்கழிவிலையேயென்றான். (கக)

எங்களுக்குயிராயவிருந்தவத்
தூங்களுக்குமும்புத்திரபௌத்திரர்

தங்களுக்குமைச்சார்ந்தவர் தங்கட்கும்
அங்கெவர்க்குமருந்துயரில்லேயே. (உ0)

சுந்தரச்சிலேயோன் சுதையூறிய
அந்தவச்சொலேக்கேட்டவருந்தவர்
தந்தமுள்ளத்துவகைதழைப்புற
இந்தவார்த்தையிராமற்கியம்பினர். (உக)

## வேறு.

### முனிவர் பதில்கூறுதல்.

புலத்தியன்றன்வழிப்போந்துபொல்லாவொழுக்கமில்லாத
குலத்துமுனிவிச்சிரவாவுக்கரக்கியவயிற்றினிடைத்தோன்றிக்
கொலேக்கையரக்கர்முதலாயகோடாகோடிப்படைகொன்ற
சலத்தின்வலியாய்நீயிருப்பவுண்டோவெமக்குத்தவமென்றார். (உஉ)

கும்பனிகும்பனகம்பன்மனங்கும்புவெம்போரதிகாயன்
உம்பருலகுகம்பஞ்செய்கும்பகன்னனுலகனைத்தும
தம்பமாயநம்பன்வரைசாய்த்துமொய்ம்பன்றசக்கிரிவன்
இம்பருலகுதென்புலமேற்றம்பன்விகடனென்றிவரும். (உங)

தீயராயகராதியருந்தேவாந்தகனுநராந்தகனும்
மாயைவல்லமகோதரனுமற்றுளோருங்களத்தவியப்
பேயுநாயுமவருடலம்பிச்சுத்தின்னச்சரந்தொட்ட
தூயவில்லிநீயிருக்கத்துயரமுண்டோவெமக்கினியே. (உச)

மூவராலுமற்றொழிந்தமுனிவராலுமூவுலகத்
தியாவராலும்வெலற்கரியவெல்லாமாயைகளும்வல்ல
தேவராசன்றனேப்பற்றிச்சிறையிலிட்டவிராவணியாம்
பாவகாரிசிரமறுத்தோனிருக்கவெமக்குப்பயமுண்டோ. (உரு)

என்றுமுனிவர்தாங்கூறவிராமன்கூறுமோரிரண்டு
குன்றமனேயதிரள்புயத்துக்கும்பகன்னன்முதலாயோர்
வென்றிகூரிராவணிதன்வீரநீர்கூறியவாறே
அன்றுசிவன்பாலவன்பெற்றவரமும்வலியுமவன்பிறப்பும். (உசு)

### இராமன்முனிவர்களே இராவணாதியர் சரிதங்கூறவேண்டுதல் அதறல்.

இரக்கமில்லாவன்னெஞ்சத்தெல்லாமாயைகளும்வல்ல
அரக்கர்பிறப்புமவர்பெற்றவரமும்வலியுமவர்செயலும்
பரக்கவுரைமினெனவமரிற்பண்டிந்திரனுக்குடைந்தசுரர்
கரக்குங்கடலேழையும்வாங்கிக்கையாற்குடித்தமுனிகழறும். (உஎ)

க-வது, திருவோலக்கப்படலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-உஎ.

# ௨-வது, புலத்தியப்படலம்.

## அகத்தியனிராமனுக்கிராவணன் பிறப்பாதிய உரைத்தல்.

அண்டர்நாயகனணிதிகழுந்தியாமடுவில்
புண்டரீகநான்முகன்மகன்புலத்தியனென்போன்
மண்டலந்திகழ்திவாகரன்றேரதுவலஞ்சூழ்
விண்டலந்திகழ்மேருவாம்வெற்பினைச்சேர்ந்தான். (௧)

அந்தமாமலைச்சாரலிலருவினையகல
விந்தமாநிலத்தியாவருமருந்தவமியற்றும்
சாந்தவார்பொழிற்றடவனஞ்சார்ந்துசார்வினைகள்
சிந்தமற்றவனருந்தவஞ்செய்கின்றவேலை. (௨)

நாககன்னியர்நான்மறைமுனிவர்கன்னியர்கள்
போகமேவியபொன்னுலகத்துமங்கையர்கள்
பாகுபோன்மொழிப்பங்கயமுகத்தியரந்தப்
பூகநீடியபொழில்வனநாடொறும்புகுந்து. (௩)

பாடுவார்புனலாடுவார்பன்மலர்பறித்துச்
சூடுவார்மலர்நாடுவார்தோழியர்தம்மைத்
தேடுவாரவர்க்கூடுவார்தேவருந்திகைப்ப
ஆடுவார்விளையாடுவாராயினரடங்க. (௪)

இந்தவண்ணம்வந்தேந்திழையார்விளையாடச்
சிந்தையானதுகலங்கிடச்செய்தவஞ்சிதைய
அந்தமாமுனியாரழலாமெனச்சீறி
வந்துதோன்றினன்மங்கையர்யாவருமருள. (௫)

எரியுநெஞ்சினனென்னிடையிற்றைநாடொடங்கி
மருவினீரெனின்மங்கைமீருங்களுக்கடாத
கருவுண்டாகெனச்சவிப்பவக்கன்னியர்கலங்கி
வெருவியோடினர்திசைதொறும்வேறுவேறாகி. (௬)

அரியநான்மறைப்பொருளிளையங்கையிற்கனிபோல்
தெரியுமாமுனிதிரணவிந்துவின்மடக்கன்னி
புரியுமாதவப்புலத்தியன்சாபமதறியாள்
கரியவார்குழற்கன்னியர்தங்களைத்தேடி. (௭)

பண்டுபோல்விளையாடிடப்பயமிலளெய்தி
வண்டுசேர்மலர்க்குழலினுண்மறையொலிகேட்டுத்

தண்டுகுண்டிகைதாங்குகைத்தவமுனிதன்னைக்
கண்டலும்மவள்வயிற்றிலுண்டாயதுகருப்பம். (அ)

மேனியானதுவெளுத்துத்தன்விழிகளும்பசப்ப
மானினேக்கினண்மற்றதன்காரணமறியாள்
தான்விரைந்துபோய்த்தந்தையைவணங்கவத்தன்மை
ஆனகாரணமாங்கவனென்னெனவறைவாள். (கூ)

பாங்கிமார்களைத்தேடியான்படர்வனமெய்தி
ஓங்குமாதவப்புலத்தியனுறைவிடமுற்றே
னீங்கென்மேனிபோயிவ்வண்ணமாயினதென்ன
ஆங்கியோகத்தினிருந்தவன்புகுந்தவாறறிந்தான். (கo)

அறிந்தமாமுனியரும்பெறற்கன்னியையுடன்கொண்
டிறந்தமாதவப்புலத்தியனிருப்பிடமெய்தி
நிறைந்தகேள்வியாய்சினக்கிவடாரமாகுகைக்குச்
சிறந்துளாள்குணவதியெனச்செப்பினன்கொடுத்தான். (கக)

கொடுத்தநாண்முதற்கொம்பனாள்கோதறுமுனிவற்
கடுத்தவேவல்செய்தாங்கினிதொழுகிடவந்தக்
கடுத்தவெவ்வினைகடிந்தவன்காதலிதன்மேல்
வடுத்தபேரருளுடையனாயிவ்வுரையியம்பும். (கஉ)

காதன்மேவுநின்றோழியாயகன்னியைச்
சூதநீடுபூஞ்சோலையிற்றேடியான்சொல்லும்
வேதவோசைநீகேட்டலின்விச்சிரவாவென்
றோதுநீதியாளொருவனைப்பெறுதியாலென்றான். (கங)

அந்தவாசகமருண்முனிகூறலுமுவந்த
சிந்தையாடிருவயிற்றினிற்றிசைமுகன்றனக்குத்
தந்தைதோன்றியதொன்மைபோற்றவநெறிதழைப்ப
வந்துதோன்றினன்விச்சிரவாமறைவிளங்க. (கச)

தன்னினேர்பிறரில்லவன்றனக்கருந்தந்தை
அன்னமாமுனியறம்புரிந்தொழுகலினவற்குப்
பன்னுமாமறைபகருமப்பரத்துவன்றேவ
வன்னியேயெனுங்கன்னியைக்கொடுத்தனன்மகிழ்ந்து. (கரு)

தேவவன்னியச்செய்தவமுனிவனுங்குறைத்த
ஏவல்செய்தவளினிதிருந்தொழுகிடவந்தப்
பாவைதன்வயிற்றோன்றினன்பல்லுலகுள்ளோர்
யாவருமனமகிழ்ந்திடவெழின்மணிப்புதல்வன். (கசு)

விரிஞ்சனே முதலாகியவேதியருவகை
புரிந்தநெஞ்சினர்புரந்தரனாதியர்புகுந்து
தெரிந்துநோக்கிவைச்சிரவணனெனப்பெயர்செப்பித்
திரிந்துபோயினர்திசைதொறுஞ்சேயினைவாழ்த்தி. (கஎ)

விரிந்தவேதங்கள்விளம்பியபொருள்களின்முடிவைத்
தெரிந்துகண்டவைச்சிரவணன்செய்தவந்தன்னில்
புரிந்தநெஞ்சினன்புரையறுமுனிவனம்புக்கான்
சரிந்துதீவினையோடிடத்தருமமுந்தழைப்ப. (கஅ)

தோயமேதனக்காகரமாகவுந்துரக்கும்
வாயுவேயுணவாகவுமன்னுபேரறத்தை
நேயமாகியுநிராசனனாகியுநியமம்
சாய்விலாதுபல்லாண்டுநின்றருந்தவஞ் * சரித்தான். (ககூ)

அன்னதன்மைவைச்சிரவணனருந்தவஞ்செய்ய
முன்னைநான்முகன்றோன்றியிம்மூவுலகத்தில்
உன்னையொப்பவர்யாவருமில்லையென்றுரைத்துச்
சொன்னயாவையுந்தருகுவென்சொல்லுதியென்றான். (உ0)

இலகுமாமணியெழின்முடியிந்திரனியமன்
அலகிலாவலிவருணனுங்கவர்களோடொப்ப
உலகபாலகனாகவுமொண்ணிதிதனக்குத்
தலைவனாகவும்வேண்டுவென்றுவெனத்தந்தான் (உக)

† வரவுபோக்கினன்மனோகதியுடையதுவானத்
திரவிதேரினுங்கடியதீரேழுலகுள்ளோர்
விரவியேறினும்வெளியிடமிகுவதுவேகப்
புரவியில்லதுபுட்பகவிமானமுங்கொடுத்தான். (உஉ)

கொடுத்துமைந்தநீபோதெனவாசிகள்கூறி
விடுத்துவிண்ணவர்சூழ்தரவிரிஞ்சனேகியபின்
தடுக்கவொண்கலாவருளுடைத்தனபதிதனைப்பெற்
றெடுத்ததாதைக்குப்பெற்றனயாவையுமியம்பி. (உங)

பின்னுங்கூறுவான்பிதாமகன்பெருவரந்தந்தான்
இன்னதானத்திலிருத்தியென்றியம்பலனெனக்குத்
துன்னலார்களாற்றுன்னுதற்கரியதாய்த்துறக்கம்
அன்னதானநீயருள்கெனவருண்முனிகூறும். (உச)

இலங்கைமாநகரிராக்கதரிருப்பிடமுன்னாள்
வலங்கொளாழிமாமாயனோடெதிர்மலைந்தமரில்

---

* சரித்தான்-இயற்றினான்.

† வரவுபோக்கினல்-வருதல்போதல்களாலே.

கலங்கியோடியகிருதர்கீழுலகிடைக்கரந்தார்
அலங்கன்மொய்ம்பிஞேயங்நகரிருத்திநீயென்முன். (உரு)

என்றுகூறியதந்தையையிணையடியிறைஞ்சி
நன்றுநன்றெனமகிழ்ந்தெழிலிலங்கைமாநகரில்
சென்றுமேவினன்சித்தர்வித்தியாதராியக்கர்
தன்றுணைப்பெருங்கிளைதனைச்சூழ்தரத்தனதன். (உசு)

அலங்கன்மோலியானச்சுதற்கமராழிந்தரக்கர்
கலங்கியோடியநாண்முதற்கவினழியிலங்கை
துலங்கியோங்கிடயாவருந்தொழுதடிபோற்ற
விலங்குநீண்முடியிந்திரனெனனவீற்றிருந்தான். (உஎ)

தெண்டிரைக்கடலேழையுஞ்செங்கையால்வாங்கி
உண்டமாமுனியிவ்வகையுரைத்திடக்கேட்டு
வண்டலம்பியதண்டுழாய்மணிமுடிதுளக்கப்
புண்டரீகமேயனையகட்புரவலன்புகல்வான். (உஅ)

இந்தமாநிலத்திராவணனுதியாமரக்கர்
முந்தையோரெலாம்புலத்தியன்வழியெனமொழிந்தாய்
அந்தவண்ணமேயன்றியேவேறொருவழியால்
வந்துளோர்களார்மாமுனியுரைத்தருளென்றான். (உகூ)

ஏயுநீள்வலியிராக்கதர்தோற்றமுமிலங்கை
ஆயவாறுமங்நகரவர்க்காயகாரணமும்
மாயனுக்கவரோடியவண்ணமுமற்றும்
தூயமாமுனிகூறெனக்குறுமுனிகூறும். (௩0)

உ - வது, புலத்தியப்படலம் - முற்றிற்று.

ஆ - திருவிருத்தம்-ருகூ.

---

## ௩ - வது, அரக்கர்பிறப்புப்படலம்.

ஆதிதன்பாலனைத்துலகங்களும்
பேதமாயவுயிரும்பிறந்தநாள்
ஓதுபல்லுயிரிற்சிலவுத்தமம்
ஏதுசெய்வோமெனவிறைகூறுவான். (க)

பரக்குமிந்தப்பலபுவனங்களை
இரக்கியுங்கோளெனவிரங்காமலேன்

றுரைத்தலாலென்றுரைத்தவுயிரெலாம்
அரக்கராயினரந்தவரக்கரில். (உ)

ஏதியும்பிரகேதியுமென்றுல
கோதுபேர்களுடன்பிறந்தோர்களில்
நீதியோன்பிரகேதிநெறிதவச்
சாதுமார்க்கந்தனினின்றுசார்ந்தனன். (ங)

மற்றையேதிமருவலரோடிடச்
செற்றகாலற்கிளையவடீவிழிக்
கற்றைவார்குழற்கன்னிபிரபைமுன்
பெற்றபேருடையாள்கைபிடித்தனன். (ச)

எத்திக்குந்திறலெய்தியவேதிக்குப்
பத்திச்செம்மயிராள்பயைபாருற
வத்திக்குங்கொடியாடன்வயிற்றிடை
வித்துக்கேசன்பிறந்தனன்வீரனே. (ரு)

இந்திரற்குச்சசிபோலெழிலுடை
அந்தவீரற்கணிமணிப்பூண்முலைக்
கந்தவார்குழற்சாலகடங்கரிற்
சந்திதன்மகடாரமதாயினாள். (சா)

நீடுவார்குழனேரிழையாளும்வண்
டாடுதார்திகழ்ந்தவரக்கனும்
கூடுமாவியுங்கூடியவன்றிலும்
பேடுமென்னப்பிரியலராயினார். (எ)

பெருகுகாதலினாள்பெருத்தோங்கிய
ஒருவன்வீரியமுற்றதுதாங்கினாள்
விரியும்வெண்டிரைமேவியவேலைவாய்க்
கரியமேகங்கருத்தரித்தென்னவே. (அ)

ஆயபேதையரிதினிலீன்றதன்
சேயைநீத்துச்சிறந்ததொர்காதலன்
போயதெவ்விடமவ்விடம்புக்கனள்
நேயமோரிடத்தேயன்றிநிற்குமோ. (கூ)

சேமமில்லாச்சிறுவனைப் * போகட்டுப்
போமடந்தைபுரிந்துபின்பார்த்திலள்
வாமமேகலைமாதர்க்குமைந்தர்க்கும்
காமமிக்கதன்பின்புகண்டோற்றுமோ. (கo)

* போகட்டு - போகவிட்டு.

போயபின்பவன்பொற்கரமுட்டிதன்
வாயில்வைத்துமழையிடிப்பொத்திட
ஆயமைந்தன்வந்தஞ்சலென்பாரின்றித்
தாயிழந்துதனியேகதறினான். (கக)

இந்திராதியிமையவர்யாவரும்
வந்துகூடிமகிழ்ந்துமலர்மழை
சிந்தியீசன்றிருவுளமென்கொலென்
றந்தரத்திடைநின்றடிபோற்றிட. (கஉ)

ஊறுநீங்கியுலகோருறுவினை
பாறியோடப்பவனியுலாவுவான்
நாறுபூங்குழனாயகிதன்னொடும்
ஏறதேறியிறைவனங்கெய்தினான். (கங)

இரக்கமின்றியேயீன்றதாய்போகிடத்
தரிக்கிலாதழுஞ்சேயைச்சகத்துமை
அருட்கணோக்கிடுமாளுடைநாயகி
திருக்கணோக்கிச்சிவற்கிவைசெப்புவாள். (கச)

தாயைவிட்டுத்தனியேகதறுமிச்
சேயினுக்கருள்செய்யத்தகுமென
நாயகற்கந்தநாயகிகூறலும்
பாய்புனற்சடைதாழும்பரமனும். (கரு)

ஒல்லையீன்றவளொத்தபிராயமும்
எல்லையில்பரமாயுவுமிங்கமும்
நல்லமைந்தன்பெறுகெனநல்கிவிண்
செல்லுஞ்சீரிற்றிகழ்புரநல்கினான். (கசு)

மேயகற்பமிறைவர்தம்மெய்யுமத்
தாயொடொக்கும்பிராயமுந்தாழ்சடைத்
தூயநக்கன்றுணைவியராகத்தன்
ஆயவர்க்கமுண்டாகவருளினான். (கஎ)

எக்கணக்குமிறந்தபெருமையன்
பொக்கணத்தன்புலியதளாடையன்
முக்கணத்தன்மொழிபெற்றழுபவன்
அக்கணத்திலவனடிதாழ்ந்தனன். (கஅ)

சுந்தரத்தோட்சுகேசனெனச்சிவன்
தந்தபேரும்வலியுந்தழைத்திட
அந்தரத்தோரரும்பதிசெய்ததில்
இந்திரன்போலினிதிருந்தானரோ. (ககூ)

* கொங்கடங்கலர்கொன்றையெருக்கராத்
திங்கடங்கியசெஞ்சடையானிடப்
பங்கடங்கியபார்ப்பதியோனருள்
அங்கடங்கலும்பெற்றவரக்கர்கோன். (உ0)

பாடுகந்தருவக்குலப்பாவையைக்
கேடில்கீர்த்திக்கிராமணிபெற்றிடும்
தேடுமாமணித்தெய்வவதியினை
நாடிமற்றவனன்மணஞ்செய்தனன். (உக)

சோதிமாமணிமௌலிச்சுகேசனும்
தீதிற்றெய்வவதியெனுந்தெய்வமா
மாதராருமயங்கிவளர்பெருங்
காதலென்னுங்கடல்கரைகண்டிலர். (உஉ)

மாலைதாழும்வரைத்தோட்சுகேசனுக்
கேலவார்குழல்வல்லிவயிற்றிடை
மால்கொண்மாலியவானுஞ்சுமாலியும்
மாலியும்மெனுமைந்தர்பிறந்தனர். (உ௩)

தூயதெய்வவதிவயிற்றோன்றிய
ஆயமூவருமாகுதிபொங்குமுத்
தீய்வளர்ந்தெனச்செய்மருந்தொன்றுமில்
நோய்வளர்ந்தெனநொய்தின்வளர்ந்தனர். (உச)

அந்தமூவருமன்றரன்றன்னிடைத்
தந்தைபெற்றவரமும்வலியுந்தஞ்
சிந்தையொன்றித்திகழ்வடமேருவாம்
தந்தநீடுதவவனஞ்சார்ந்தனர். (உரு)

இஞ்சைபொய்களவேதம்வந்தெய்திடும்
வஞ்சபாவம்வரும்வழிமாற்றிநற்
றஞ்சநெஞ்சர்தயாவினர்தம்புலன்
அஞ்சும்வென்றங்கருந்தவஞ்செய்தனர். (உ௬)

முன்னைவானவர்தானவர்முற்றுநூல்
மன்னுதாபதர்மானுடர்மற்றுளோர்
அன்னமூவருந்தவங்கண்டுல
கென்னதாகுமோவென்னநடுங்கினர். (உஎ)

ஆயகாலத்தவர்கண்முனந்தணன்
தூயமாமணித்தேர்மிசைத்தோன்றினன்

---

* கொங்கடங்கு - வாசனை தங்கிய.

ஏயுமாதவத்தீர்நும்மனத்திடை
மேயயாவையும்வேண்டுதிர்நீரென்றான். (உஅ)

பூவயன்புகலப்புகல்வாரவர்
தேவராதிதிரிபுவனத்துளோர்
ஏவரேனுமெமக்கமர்தோற்கவும்
தேய்வில்காலங்கள்செல்லவுஞ்செய்குவாய். (உகூ)

சிந்தையெண்ணிநீர்செப்பினயாவையும்
தந்தனமெனத்தாமரையாசனத்
தந்தணனிருவரவர்கடோள்
வந்துபூரித்துமால்வரையென்னவே. (ந௦)

ஆதிதன்னிடைப்பெற்றவரத்தினல்
பீதியன்றிப்பெரும்புவனங்களை
வாதபித்தகபமெனவன்றிறல்
ஓதுமூவருமொத்துநலித்தனர். (நக)

காசில்பன்னகநாடுகலங்கிட
நாசமெய்திடநானிலமானது
வாசவன்முதல்வானவரோடிட
* ஆசைபத்துமடிப்படுத்தாரரோ. (நஉ)

மாவலிப்புயமாலியவான்முதல்
மூவர்முப்புவனங்களைவென்றுளோர்
தேவர்தச்சன்வருகெனச்செவ்விதிற்
கூவிமற்றவனுக்கிவைகூறினர். (நந)

## வேறு.

நீடுபுவனமொருமூன்றுமயனுஞ்சிவனுநெடுமாலும்
கூடியமரின்முயன்றாலுங்குறுகவரியவரணினதாய்
† ஆடலமரர்பதியினழகழிக்குநகரியமைக்கவுடன்
நாடுநல்லோயெனவுரைப்பநன்றென்றவன்போய்நாடுவான். (நச)

முன்னாள்காற்றும்வாசுகியுந்தந்தம்வலியினிலைமொழிந்து
பொன்னார்வரையைவாசுகிதன் ‡ பணத்தாற்பொத்திப்புறங்காப்பத்
தன்னார்விசையின்பெருங்காற்றுத்தாக்கச்சற்றுஞ்சலியாது
விண்ணோர்முனிவர்வேண்டியிடவீரன்சற்றேமுடிசாய்த்தான். (நரு)

வாயுவியக்கமில்லாமல்வானேருலகுமண்ணுலகும்
காயுங்கனலிலிட்டதுபோற்கலங்கிப்புழுங்கிக்கசிந்துற்று

---

* ஆசைபத்தும்-பூமியந்தரங்களுஞ் சேர்ந்த பத்துத்திசையும்.
† ஆடல்-வெற்றி.
‡ பணம் - படம்.

வேயின்பணத்தாயிரவரவைவிண்ணோர்முனிவர்வேண்டியிடச்
சாயும்படிசற்றறியாதான்சற்றேதன்றோண்முடிசாய்த்தான். (௩௬)

குலையாநிலத்தின்வடமேருக்குலையமோதியதன்றிகழ்முத்
தலையார்சிகரந்தனைமுறித்துத்தடங்காலதனைக்கொண்டுபோய்
அலையார்கடலின்முன்பிட்டவந்தவிடமிம்மூவருக்கு
நிலையாம்பதியாமெனத்தச்சனினைத்தங்கதனைநிகழ்த்துவான். (௩௭)

மூலதலத்தேகனகமலைமுறிந்தசிகரக்குடுமிக்
கோலவரையாங்கதுபிறராற்குறுகவரியகொள்கைத்தால்
சால்பினமைந்தவராலிலங்கையெனும்பேர்தரத்தக்க
தாலமனையகடுந்திறலோர்க்கதுவேநகரமாமென்று. (௩௮)

தாழ்வின்மதியுங்கதிரோனுந்தாராகணமுந்தண்முகிலும்
கீழவாகிமேலோங்கிக்கிளர்ந்துபரந்தநகரியினைச்
சூழுமதிலுமம்மதிலைச்சூழ்ந்தகிடங்கும்புவிசூழ்ந்த
வாழிவரையுமவ்வரைசூழகல்வேலையையுமொத்துளதல். (௩௯)

குலையும்வண்ணநமையெல்லாங்குலிசத்தாலேசிறகறுக்கும்
இலகுமவுலியிமையவர்கோனின்னுஞ்சீறவடுக்குமென
அலைகொள்பெருநீர்க்கடல்சூழ்ந்தவழியாவிலங்கையரண்டேடி
மலைகளெல்லாமவ்விடத்தேதிரண்டதொக்குமணிமாடம். (௪௦)

ஆக்குமூலமுகாந்தத்திலழிக்கும்வெள்ளமதுதனக்குப்
போக்குவேண்டுமெனவகுத்தபோன்றபெருங்கோபுரவாயில்
காக்குமொருநாற்றிசைமுடிவுகாணப்போந்தகாரிருளை
நீக்குமணி * வேதிகையிருபாணிறைத்துவிளங்குநெடுவீதி. (௪௧)

சகரரகழ்ந்தநீள்வேலைதழுவுமிலங்காபுரிதன்னில்
நிகரில்கூடகோபுரநீண்டரங்கசாலைநிலைநீண்ட
சிகரமாடமணுச்சோதிதிரண்டொன்றாகச்சிவந்தெழலால்
மகரவேலையுட்டிகழும்வடவாமுகத்தையொத்துளதால். (௪௨)

இன்னதாயவிலங்கையினதெழிலைநோக்கியெதிரில்லா
மன்னுவீரமாலியவான்சுமாலிமாலியென்றுரைக்கும்
மன்னர்மூவர்மகிழ்ந்தந்தவாசாரியற்குப்பூசனைசெய்
தொன்னலார்களிடந்துடிப்பவொலிநீரிலங்கையுட்புகுந்தார். (௪௩)

யாவராலுங்கண்களினாலெட்டிப்பார்க்கவொண்ணாத
காவலிலங்கைவீற்றிருந்தகாலைக்கானக்கந்திருவப்
பாவையானதருமதைதான்பயந்தமூவர்மங்கையரில்
மூவராயவாங்கவர்க்குமூத்தவடைவின்முறைகொடுத்தார். (௪௪)

* வேதிகை - மேடை.

சிறந்தகாதன்மாலியவான்றனக்குஞ்சீரார்சவுந்தரிக்கும்
பிறந்தார்பெருவச்சிரமுட்டிபெரும்பாக்கன்றுன்முகப்பெயரான்
மறந்தான்பெருகுஞ்சுதகத்தனியாயகோபன்மத்தன்மனத்
தறந்தானில்லாவுன்மத்தனென்னுமெழுவரனலையொடும். (௪௫)

பாதிமதிக்கும்படர்செய்நுதல்பணியாமணியார்கலையல்குல்
சூதுமதிக்குமிளங்கொங்கைத்துணைக்கைகசியுந்தூமலர்மேல்
மாதுமதிக்கும்வடிவுடையமங்கைவனசவிலோசனையும்
கேதுமதிக்குஞ்சுமாலிக்கும்பிறந்தாரறந்தான்கெட்டோட. (௪௬)

இளையார்வெம்போரனலன்சீர்திகழுமனிலனரனென்போன்
வளையாவலியான்சம்பாதிமன்னுமுலகின்மைந்தர்மனத்
தளையாம்விழியாடருமதைதான்றந்தமூவர்மங்கையரில்
இளையாடனக்குமாலிக்குமிவர்கள்பிறந்தாரீரிருவர். (௪௭)

கூற்றமென்னக்கனலென்னக்கொதிக்குமாலமெனக்கொடியோர்
சீற்றமென்னவறிவில்லோர்செல்வமென்னத்திகழறத்தின்
ஆற்றினிற்றலதுநீக்கியாறிலொன்றுகொள்ளாதே
ஏற்றமானவிறைகொள்ளுமிறைவன்பாவமெனவளர்ந்தார். (௪௮)

ஏழிற்புவனம்படைத்தோன்பாலெய்தும்வரத்தின்வலியாலே
பாழித்திரடோண்மாலியவான்சுமாலிமாலியெனும்பாலர்
ஆழித்தேராடற்சிலையரளவிலாதபெரும்படையர்
ஊழிக்காற்றுந்தீயும்போலுலகையழிக்கத்தொடங்கினர். (௪௯)

மேவிநாகர்கருவறுத்துவேலையுலகம்பொடிசெய்து
தேவர்கோமான்றனைத்துரந்துசெம்பொனுலகங்கைக்கொண்டு
பாவுமிந்தப்பல்லுலகம்படைத்துக்காத்துத்துடைக்கிற்போர்
மூவராவாரெவர்களுக்குமூவரின்றியெனமொழிந்தார். (௫௦)

௩ - வது, அரக்கர்பிறப்புப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௦௬.

---

## ௪ - வது, தோத்திரப்படலம்.

பரவைப்புவியிலுள்ளோரும்பதிவிட்டோடிந்திரனுதி
சுரர்கொத்துள்ளோர்யாவர்களுந்துணையில்லாதமுனிவர்களும்
உரகப்புவனத்துள்ளோருமொருபற்றின்றியுறுதுயரால்
நரகத்துள்ளேகிடந்தழுந்திநடுங்குமுயிர்போனடுங்கினர். (௧)

கோலகாலமாயுலகங்குலையநடுங்கிக்கொதித்துவரும்
ஆலகாலமமிழ்தாகவடக்கிவைத்தமணிமிடற்றன்
பாலகாலமுண்பலெனப்பற்றிப்பற்றியிழுத்திடுமெக்
காலகாலன்வீற்றிருந்தகயிலைமலையைக்கண்ணுற்றார். (உ)

குவளைவிழிப்பூணிளங்கொங்கைக்கொடிமென்னுசுப்பிற்குயின்மென்சொ[ல்
அவளையிடத்துமுடியிடத்துமாறுந்தரித்தவரும்பொருளைத்
தவளநிறத்துத்தடங்கிரிமேற்றவமாமுனிவர்தற்சூழப்
பவளவரைபோற்பொலிந்திலங்கும்பரசுபாணிதனைக்கண்டார். (௩)

எந்தாய்போற்றியேறேறுமிறைவாபோற்றியேழுலகும்
தந்தாய்போற்றியணிகொன்றைத்தாராய்போற்றிசகமுய்ய
வந்தாய்போற்றிவஞ்சகர்முன்வாராய்போற்றிமலரோனும்
செந்தாமரைக்கட்டிருமாலுமாணாய்போற்றிசிவபோற்றி. (௪)

என்றுபலவும்போற்றித்தன்னிணைத்தாமரைத்தாடாழ்ந்திறைஞ்சி
நின்றுபரவுமவர்தம்மைநீலகண்டன்முகநோக்கி
இன்றுதேவாசுராதிகளுமிருடிகளுமங்கெல்லீரும்
ஒன்றிவந்தகாரணமென்னுரைமினென்னவவருரைப்பார். (௫)

வன்றிண்புயத்துமாலியவான்முதலாயுள்ளவாளரக்கர்
சென்றிந்திரனைச்செருவழித்துத்தேவருலகங்கைக்கொண்ட
வென்றிவீரர்தங்குலத்தைவேரோடறுத்துவிடுதியேல்
இன்றுநாளையுலகங்களெல்லாமழிப்பரெனவுரைத்தார். (௬)

மல்லார்புயத்துச்சுகேசன்றன்வழியிலுள்ளவாளரக்கர்
எல்லாப்பிழையுஞ்செய்தாலுமென்னையடைந்தோராதலினல்
கொல்லேனவரையென்கையாற்கொல்லுமுபாயங்களுமெல்லாம்
வல்லோன்மாயனென்றவர்க்குமங்கைபாகன்விடைகொடுத்தான். (௭)

### வேறு.

தூயவன்றன்பொற்றுணையடிபணியார்தொகுபுரமெரித்தவன்றரித்த
தேயவன்விடுப்பத்தேவர்தானவர்கள்சித்தர்வித்தியாதரரியக்கர்
மேயகந்திருவர்விளங்குமாமுனிவர்மேதினியுள்ளவர்நாகர்
ஆயவர்முதலோரச்சுதன்றயிலுமணிதிருப்பாற்கடலடைந்தார். (௮)

தீங்குடையரக்கர்செல்வமுஞ்செருக்குந்திறலுடனுயுவுஞ்சிதைந்து
நீங்கினவெங்குநிலையிலாவெவையுநிலையினைப்பெற்றதுமறைகள்
ஓங்கினவுலகம்பிழைத்தனவென்னுமுவகையானதுதழைத்தோங்க
ஆங்கவர்தம்மைக்கண்டெழுந்தாடியார்ப்பதுபோன்றதவ்வாழி. (௯)

முந்தைமாலியவான்சுமாலிமாலியெனும்பேரிவர்மூவருமவர்கள்
தந்தைகாளையருந்தடமணித்தேருந்தானையுந்தரைப்படுமுபாயம்

சிந்தையாலெண்ணித்தேவர்கோன் முதலோர் திருமகள்காதலன் றன்பால்
வந்தனரென் றுமகிழ்ந்தெதிர்கோடல்போன் றனவரும்பெருந்திரைகள். ()

நீடியவரக்கர்நெடும்படைக்குடைந்துநிலையழிந்தொருவழிநில்லா
தோடியகாலருடைந்தமேனியர்களூறுவிடாய்தணிப்பலென் றவர்கள்
வாடியமுகத்துமார்பினும்புயத்தும்வளரிளம்புன்னையின்வாசம்
கூடியசீதம்பூசுவண்டிவலைகொடுப்பதொப்பதுகுளிர்தென்றல். (கக)

ஆயபாற்கடலையடைந்தவாங்கவர்களதுவிதென்றையுறுமவர்க்கும்
காயமதுலர்த்தித்தவம்புரிவார்க்குங்கமலவாசனன் முதலாய
தூயயோகியர்க்குஞ்சொல்லுமேதுவுக்குஞ்சுருதிக்குந்தோன் றநில்லாது
சேயனாயடைந்தோர்க்கணியனாமாதிதேவனைத்தெரிவுறக்கண்டார். (கஉ)

ஒருங்கியமனத்தின்யோகியருண்மையுணர்ந்தவருறுபெருந்தவத்தால்
நெருங்கியெம்மருங்குமிருந்துசேவிப்பநாரதர்நின் றுகூத்தாடப்
பெருங்கரமெடுத்துமாகதரேத்தப்பிறழ்திருப்பாற்கடன்மேலோர்
கருங்கடல்பரந்துகிடந்ததுபோலக்கிடந்துதன்கண்டுயில்வானை. (கங)

தெரிவையரிருவர்செங்கையால்வருடச்சிவந்தசேவடிமலரானைக்
கருவரைசூழ்ந்துநின் றபின்னொளியைக்கட்டியபீதகவாடைத்
திருவரையானைத்திசைமுகனாதிதேவருமுனிவருமுற்றும்
ஒருவருமொழியாதுலகங்களெல்லாமுள்ளடங்குதரத்தினானை. (கச)

வண்டெனவிரிஞ்சன்மாமறைபாடவடவரைகொட்டையாய்ச்சூழ்ந்த
திண்டடங்கிரிகளல்லியாய்த்திசைகளிதழ்களாய்த்திகழுமிவ்வண்டப்
புண்டரீகத்தைப்புறப்படவிட்டவுந்தியாம்பொற்றடத்தானை
தெண்டிரைக்கடலிலெழுந்தினகரன்போற்றிகழொளியாரமார்பினனை. ()

வண்டடங்கிரிபூண்கட்டியதொப்பவலயங்கடழுவுதோளானைத்
தண்டரளத்தினகையொளிதழும்புபவளமுந்தாமரையிரண்டும்
குண்டலமிரண்டுங்குனிசிலையிரண்டுங்கூடியகுளிர்மதிவதன
மண்டலத்தானைவலக்கைகீழ்க்கொடுத்துவளரொளிமணிமுடியானை. (கசு)

ஆழியுஞ்சங்குஞ்சாபமும்வாளுமடற்பெருந்தண்டுமிவ்வைந்தும்
சூழவும்வந்துநின் றுமெய்காப்பச்சுவணனுஞ்சுற்றும்வந்துலாவப்
பாழியாவநந்தன்போகத்திலவன் றன்பணங்களாயிரங்கொடுகவிப்ப
ஊழியாயிரங்களொருகணமாகயோகநித்திரையுகந்தானை. (கஎ)

இன்னதன்மையனாயிந்திரைகொழுநன்யோகநித்திரைசெயுங்காலை
முன்னைவானவர்கடானவர்முனிவர்முதலினோர்மூண்டெழுபயத்தால்
என்னதாகுங்கொலிவன் றிருவுள்ளமெனநினைந்தியாவருநிற்ப
அன்னவன்குணந்தானறிந்தனவெல்லாமமரர்கோனறயலுற்றனனால்.

உலகினையெல்லாம்படைத்தளித்தழித்துமுண்டுமிழ்ந்தளந்திடந்தாண்டும்
நிலையுடைவானுய்வாயுவாய்க்கனலாய்நீருடனிலனுமாயெண்ணில்
தொலைவிலாவுயிராய்ச்சுடர்களாய்த்தோன்றுச்சுருதியாய்ச்சிவனயனுகி
அலகிலாவிளையாட்டாடுவாயகண்டமாயினுயாருனையறிவார். (கக)

பிறியிலாவுயிருமுடலும்வாசகத்துப்பேர்கலாப்பொருளுமாங்கெனவும்
வெறியுநன்மலருமென்னுமெண்ணெயும்போல் விரிந்தவப்பொருள்களின்
கறுவிமேன்முயலுங்காரியமாகிக்கண்ணுமாய்க்கருத்ததுவாகி [மேவிக்
அறியவுமாயறியப்படுவதாயறிவராயினுயாருனையறிவார். (உ0)

பொன்னிடைப்பிறந்தமுடிபலபணியாய்ப்பூண்பனபோலவும்புணரி
தன்னிடைப்பிறந்ததடந்திரையெனவுந்தரையினின்றெழுதுகளெனவும்
நின்னிடைப்பிறந்தசுரர்மனுசாதிமுதலபல்லுயிர்களுநீயும்
அன்னியமாகியாயினுனென்றுதியாழியாயாருனையறிவார். (உக)

உறப்பெரிதுணரினுருவமாயருவாயுளவுமாயில்லையுமாகிப்
பிறப்பிலியாகிப்பிறத்திநீயாண்பெண்ணலியெனப்பேசவும்படைத்தாய்
மறப்பகையொன்றுமன்றியேயென்றும்வலிகொள்பஞ்சாயுதமெடுத்தி
அறச்சிலுகுடைத்துநின்றிறமுரைக்கினச்சுதாயாருனையறிவார். (உஉ)

பவக்கடல்கடக்கும்படியறியாதுபலபெருஞ்சமயத்தின்மயங்கி
அவத்தமேபிறந்துநசிப்பவரெல்லாமகண்டமாய்வரவுபோக்கற்றுச்
சுவத்தனுய்நின்றநின்னிலையறியார்நின்னுளேதோன்றியவுலகம்
அவற்றினுதாரமாதியாந்தெய்வமாயினுயாருனையறிவார். (உந)

தெவ்வடலவுணவடவியையெறியத்திகிரிசங்கங்கையிற்றரித்தாய்
செவ்வடங்கோத்தமணியெனக்கோத்துத்திரியவுஞ்சிதறுவையுலகை
மொய்வ்வடமேருவோடுமூன்றுலகைமுற்றுமுண்டாலிலைத்துயின்றோய்
அவ்வடநின்றதெவ்விடமறியேனமலனேயாருனையறிவார். (உச)

கனற்றுறைநிற்றியந்தணர்க்குள்ளங்கசிந்துகண்ணீர்சொரிபத்தர்
இனத்தொடுநிற்றியேவல்செய்தொழிந்தோர்யாவர்க்குமாசையினிற்றி
மனத்துறைநிற்றியோகியருக்குமாசறுதூயஞானிகட்கும்
அனைத்தினுநிற்றியொருவழிப்படாதவநந்தனேயாருனையறிவார். (உரு)

ஒருமுதலாகிக்கவடுமூன்றுகியுயர்பெருஞ்சாகைகள்பலவாம்
தருவெனநின்றுய்தலைபுலைதெரியாச்சமயநூல்யாவையுந்தந்தாய்
அருவினையாகியருவினைப்பயனுயருவினையனுபவிப்பவனுய்
அருவினையாக்கியருவினையறுக்குமற்புதயாருனையறிவார். (உசு)

என்பனசொல்லியிந்திரனேத்துமேத்தொலியிருசெவியெய்த
இன்பரித்திரையைவிட்டுணர்ந்தருளியேழுலகுடையவனவரை

அன்புறநோக்கியனைவரும்வந்தகாரணமென்னெனவகத்தில் [ஞர்
துன்பமதொழித்துத்தொழுதகையினராய்ச்சுராதிபரிவையிவைசொன்

வரப்பெருவலியான்மாலியவானுஞ்சுமாலியுமாலியுமென்னும்
இரக்கமிலரக்கரெதிரிலாப்படையரெவ்வுலகங்களுமூழி
நெருப்பெனவரிக்குநிருதர்வேரறுத்துநீடுலகங்களைநீயே
பரித்திலையாகினினியடிதொட்டுப்படைக்கவேண்டும்படிபடுமே. (உஅ)

நஞ்சினுங்கொடியவெஞ்சினவரக்கர்நாடொறுங்கோறலாலைய
எஞ்சினேஞ்செக்கிலெட்பிழைத்தாற்போலிங்குவந்தேங்களேபிழைத்தே
அஞ்சனமேனிக்கஞ்சநாண்மலர்க்கண்ணமலமற்றொருகதியில்லேம் [ம்
அஞ்சினேம்வந்துன்னடியிணையடைந்தேமாழியாயபயமுன்னபயம். (உகூ)

ஆங்கவரபயமென்றலுமஞ்சலஞ்சனீரென்றுகையமைத்துத் [ணம்
தீங்குடையரக்கர்குலத்தைவேரறுத்துஞ் சிந்தைநோய்தீர்க்குவென்றிண்
நீங்கள்போயுங்கணிலைகளினின்மினெனவடனேமியோன்விடுப்ப
ஓங்கியவமரர்போயபினரக்கர்க்குற்றனவொழிவின்றிமொழிவாம். (௩௦)

ச - வது, தோத்திரப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கநகூ.

---

## ரு - வது, இலங்கையழித்தபடலம்.

### வேறு.

இமையவரரக்கராலேயுற்றதம்மிடும்பையெல்லாம்
உமையொருபாகத்தானுக்கோடியேயுரைத்தவாறும்
நமையடைந்தவரைநாமேவெல்கைநன்றனாகத்
தமைதுயிலரிபாற்சென்மினென்றவனறைந்தவாறும். (க)

அந்தமந்திரத்தைநெஞ்சிற்கொண்டனரமரரெல்லாம்
செந்திருமகள்கோனுக்குத்தேவர்கோன்செப்பவுங்கள்
சிந்தைநோய்தீர்ப்பென்றிண்ணமென்றருள்செய்தவாறும்
வந்துசாரணர்தாங்கூறமாலியவானுட்கொண்டான். (உ)

தம்பியர்க்குற்றவெல்லாந்தானுரைத்தவருந்தானும்
வெம்பியமனத்தராகிமேற்செயும்வினைகடேர்வார்
அம்புயக்கண்ணன்றன்மேலாயிலோர்குற்றமில்லை
உம்பர்களவனதுள்ளந்திருத்தியுட்படுத்துக்கொண்டார். (௩)

ஆதலானம்மையெல்லாமடியறவெண்ணுமந்தப்
போதமிலாததேவர்பொன்னகர்பொடியதாக்கிக்
காதிமற்றவரையெல்லாங்களப்படக்கொன்றுமீடும்
தீதினஞ்சேனைமுன்னேசெல்கதேர்வருகவென்றான். (௪)

வீரராயுள்ளோர்மண்ணில்விண்ணுலகத்தில்யாரும்
நேரெதிர்போரையின்றிச்செப்பியநிருதர்சேனை
போரெனும்வார்த்தைகேட்டுப்பொங்கியவுவகைதூண்டி
ஆர்கலியுவாவுற்றென்னவாவிமிக்கெழுந்ததன்றே. (௫)

எறிபடைவீரர்பாய்மாவிருண்மதக்களிறுதிண்டேர்
செறிதலிற்பக்கம்பேரவிடம்பெறாதுள்ளேதேங்கி
மறிகடன்மோழைபட்டதாமெனவாயிரோறும்
உறுபடைவெள்ளந்தள்ளிப்பரந்தவெவ்வுலகுமுட்க. (௬)

இடருறுகருமம்பார்த்தோமென்னகாரியஞ்செய்தோமென்
றுடனடுங்கும்பரெல்லாமொளிப்பிடந்தேடியோடப்
புடைபரந்துயர்ந்தவாயிற்போக்கிடம்பெறாதுவானில்
தடமுகில்பரந்ததென்னப்பரந்ததுதானைவெள்ளம். (௭)

காலிடையணிந்தவீரக்கழலினர்கவசமிட்ட
கோலநீண்மார்பர்பட்டங்குலவியநுதலர்கொற்ற
மாலியவானுமற்றைச்சுமாலியுமாலிதானும்
நீலமால்வரைபோன்மெய்யரேறினார்நெடும்பொற்றிண்டேர். (௮)

தேரொலிகொம்புகாளஞ்செறிவளைசின்னமூதும்
பேரொலிமுழங்குபேரிமுரசொலிபெருங்கைவேழக்
காரொலிகவனமாவாங்காற்றொலியெல்லாங்கூடி
ஓரொலியாகியெங்கும்பரந்ததெவ்வுலகுமோட. (௯)

பண்ணுறுபாய்மாவேழம்படர்கொடிநெடுந்தேர்காலாள்
எண்ணுறுசேனைபார்கீழிருந்திடவெழுந்துபொங்கி
விண்ணுலகாயதெல்லாம்வெளியிடமின்றிவிம்மி
மண்ணுலகாகும்வண்ணஞ்சேர்ந்ததுவளர்ததூளி. (௧௦)

உதிரமுமென்புமேகம்பொழிந்திடவோங்கல்கம்பித்
ததிர்படக்காகமேங்கவன்னதுன்னிமித்தங்கண்டு
மதியினிற்கொண்டுமீளார்வாளெயிற்றரக்கருந்தும்
விதியினைவெல்லவல்லார்யாவரேவினையமெண்ணி. (௧௧)

### திருமால் அசுரரைப் பொருதழித்தல்.

அரக்கராரம்பமெல்லாமமரர்கள்விடுத்ததூதர்
உரைத்தலுமுறக்கநீங்கிவுணர்ந்தெழுந்துவணப்புள்ளின்

வரைத்தடங்தோளிலேறிவானவர்வாழ்த்தவந்தச்
செருக்கிளர்படையைச்சென்றுதாக்கினுன்றிருவின்கேள்வன். (கஉ)

துன்னணிகலப்பொற்சோதிச்சுடரொளிமறைத்துத்தோன்றத்
தன்னெதிரில்லான்ருளிற்ருன்றியசார்ங்கபாணி
பொன்னெடுமேருவுச்சிப்பொருசிலையோடுங்கூட
மின்னெடுந்தழுவிநின்றுவீங்குகார்மேகம்போன்ருன். (சங)

வெற்றிசேர்வயினதேயன்விரிசிறைவேகவாயு
உற்றிடமுறிந்ததிண்டேருலந்ததோலுருண்டபாய்மா
கொற்றவாளரக்கரெல்லாங்குன்றெனக்குலைந்துவீழ்ந்தார்
பற்றுறுபதாகையெல்லாம்பஞ்சுபோற்பறந்துபோன. (கச)

ஆயவைநிகழுங்காலையஞ்செனக்கிரியைமூடித்
தோயகமெல்லாம்வாரிச்சொரிவதோர்தோற்றங்காட்டித்
தீயவர்வளைந்தசெம்பொற்சிலையினர்செறுத்துநோக்கி
மாயவன்றன்னைச்சூழ்ந்துவடிக்கணைதூவியார்த்தார். (கரு)

ஒண்டிறலரக்கர்வேலையுவாக்கிளர்ந்தென்னப்பொங்கித்
திண்டடங்தேருமாவுஞ்சினமுகக்கரியுந்தூண்டித்
தண்டுவாள்முசலங்கூர்வேல்சக்கரஞ்சூலம்பாசம்
பிண்டிபாலங்களாதிப்பெரும்படைக்கலங்கள்விட்டார். (கசு)

## வேறு.

தேவர்தேவனவ்வரக்கர்செய்தசெயல்கண்டுதன்னுணைகைசெய்துதன்
சாவமேருவைவளைத்துவிட்டசதகோடிகோடிதழல்வாளியால்
பாவகாரிகள்விடுத்தபல்படையனைத்தையும்பொடிபடுத்தியம்
மூவரேவிவிடுமுன்பெரும்படையைமூடவாளிமழைதூவினுன். (கஎ)

தேர்துணிந்ததிகழ்தேர்கடாவினர்சிரந்துணிந்தனதுணிந்தமாத்
தார்துணிந்தசமுகந்துணிந்ததடவெண்மருப்புடையசெம்முகக்
கார்துணிந்தமருமந்துணிந்தகவசந்துணிந்தனதுணிந்தவிற்
போர்துணிந்தவடல்வீரர்கால்கையுடல்பொன்முடித்தொகைதுணிந்தவே.

கொள்ளைவார்கணைதுணித்தபேருடல்குரத்தினிற்பரிமிதித்தலும்
அள்ளலாயுதிரவாறுமண்டியவமர்க்களத்துநிலையற்றிரும்
பள்ளமோடுபெருவெள்ளமாமெனவுடைந்துபோனபடைவெள்ளமுட்
கள்ளமேவியசுமாலிவில்லினணைகட்டிமாயவனைமுட்டினுன். (கக)

எடுத்தவில்லினனெறிந்தநாணினனிடித்துரப்பியகடுஞ்சொலன்
மடித்தவாயினன்மதித்தநெஞ்சினனிம்மாயன்வெங்குருதியங்கையிற்
குடிப்பெனென்றுசினம்வந்துமூந்தவுயர்குன்றுபோர்புரவியொன்றுதேர்
முடுக்கிவந்துசரமாரியாலரியைமூடினனமரரோடினுர். (உ0)

நல்லைநல்லைவலிநன்றுநன்றுயிர்நடுங்குபோர்செயுமுபாயநீ
வல்லைவல்லையுனையொக்கும்வில்லிகளிம்மாநிலத்தினிலையென்றுமால்
வில்லினுந்துசரமாரியாலவன்விடுத்தவெஞ்சரம்விலக்கிவெம்
பல்லவங்கள்கொடுபாகனோடுபரிகொன்றுதேர்பொடிபடுத்தினான். (உக)

நேரழிந்தமரரோடுதானவர்களோடவோடவிடுநீள்கொடித்
தேரழிந்துதமயன்றளர்ந்துவினைசெய்வதொன்றுமறியாதிடக்
காரழிந்திடவிடித்தடர்ந்துவருகாலனென்னவிடமென்னவும்
வாரழிந்ததிருமேனியானைவயமாலிவந்திடைவிலக்கினான். (உஉ)

ஆனைபாய்புரவிதேர்நெருங்கியவளப்பிலாவடலரக்கர்வெஞ்
சேனைசூழவுயர்தேர்கடாவிவரைமேல்கொள்சீயமெனமாலிபோர்
வானைநீள்வயினதேயன்மாலினொடுமண்ணுவிண்ணுமறையப்பெருஞ்
சோனைமாரியெனவோய்விலாதசுடர்வாயவாளிமழைதூவினான். (உங)

அந்தவார்கணையையாதிநாயகனனைத்தையுந்துணிபவெய்துநீள்
கந்தநாறுகுழன்மங்கைமாருடையகண்கணேர்கொடியவம்பினால்
மந்தராசலமெனத்திரண்டபுயமாலிமார்புருவவெய்துதேர்
உந்துபாகனொடுவாசிநாசமுறவொன்றலாதசரமுந்தினான். (உச)

மார்பினின்றுதிரவாறுமண்டிடமயங்கியொல்லையினுணர்ந்துதன்
தேரினின்றுமிழியக்குதித்துவெகுள்சிங்கமாமெனமுழங்கிவெங்
காரினின்றிடிவிழுந்ததெனச்சுரர்கலங்கிடக்கலுழனெற்றிமேல்
மூரிநின்றதொருதண்டுகொண்டதிரமோதினானசுபமோதினான். (உரு)

நெற்றிமேலடிபடத்தளர்ந்துநிலைநின்றவீரனிலைகண்டுமால்
வெற்றிநேமியைவிடுப்பமற்றதுவிளங்குமாறிருவரன்றியும்
மற்றுமோரிரவியுண்டெனக்கதுவமாலிதன்சிரமடிக்கழுத்
தற்றுவீழவதுகண்டுவானவர்களாடினார்நிருதர்வாடினார். (உசு)

மண்டலங்கிழியவாளரக்கர்கண்மயங்கிவீழவடவெற்பொடும்
திண்டடங்கிரிகள்விண்டிடத்திகழ்திசைத்தடங்கிரிதிகைத்திட
அண்டம்விண்டதெனவஞ்சிவானவரலந்தலைப்படவகண்டமும்
உண்டசெம்பவளவாயில்வைத்துவளையூதினான்மறைகளோதினான். (உஎ)

மாலிபட்டுவிழமற்றவன்றமயன்மார்கள்சோகமுறமாயவன்
கோலிவிட்டசுடர்நேமியாலுமிருகூரயிற்கணைகளாலுமா
ஆலமொத்தகதையாலும்வாளினுமரக்கர்தம்படையவிந்தவால்
வேலியுற்றபயிர்காலியுற்றெனவும்வேந்தரில்லுலகுமென்னவே. (உஅ)

வெற்றிமேவுதிகழ்சக்கரத்தின்மிசைவிண்ணிலேறுவனவீழ்பவாய்
அற்றபைந்தலைகளுற்றவீரமகளாடுமெம்மனையையொத்தவால்

கொற்றவெண்குடையினற்றதிண்கையவைசென்றுவீழ்வகுளிர்திங்களைப்
பற்றிராகுவினையொத்தபாறுகள்பரந்தகூளிகணிரந்தவே. (௨௯)

வெஞ்சுடர்க்கணை துணித்தசெந்தலைகண்மீளவவ்வழிமூளத்தபோ
லுஞ்சடக்கெனவெழுந்தசெங்குறுதியோதவேலையினையுற்றதால்
மஞ்சடக்கியகிறத்தனேமிபதம்வன்கரஞ்சிரமறுப்பவுள்
அஞ்சடக்கியகிடக்குநீலகிறவாமையொத்தனரரக்கரே. (௩௦)

கால்களற்றவுரலொத்தலிற்சுளகுகன்னமொத்தலிலுரோமநீள்
வால்களற்றனதுடைப்பமொத்தலின்மருப்புலக்கையினையொத்ததால்
மாலையொத்தநிறமால்செயக்கொடிமலர்க்கைபற்றுவதுவைக்குமுன்
கோலிநெற்குறுமிடத்தையொத்தமதகும்பிபட்டுவிழுசூழலே. (௩௧)

குன்றின்மேலிடிவிழுந்தெனக்கதைகொதித்துமோதவுயர்கொற்றவம்
பொன்றுதேர்களவைதூளியாயினவுலந்ததானைகண்மலைந்துபோர்
வென்றிவீரர்கள்கரும்புபோலுடனெரிந்துபோயினர்விளங்குசீர்க்
கன்றுவாளிலொருகண்டநூறுபலகண்டமாயினர்கள்கண்டரே. (௩௨)

## வேறு.

அடுமாலியவானீங்கிடவடையாருயிர்கவரும்
கடுமாலியவானவ்வழிகடிதோடியகாலைக்
கொடுமாலியவான்சேனையுங்குலைந்தோடிடக்குலையா
நெடுமாலியவானின்றெனநின்றான்பகைவென்றான். (௩௩)

கட்டோய்கமழ்கண்ணித்திகழ்கண்ணன்றனைக்கனலாக்
கெட்டோடியபடைகொன்றனைகிளர்வீரரிலெண்ணப்
பட்டோயலையுலகிற்பெரும்பழிபூண்டறநெறியை
விட்டோர்செயல்செய்தாயிதுகேணீயெனவிளம்பும். (௩௪)

பொர்விட்டமிலாதோரமர்புறகிட்டவர்புகுந்தோர்
கரம்விட்டவெம்படையோரமர்கைவிட்டவர்தூதாய்
வரவிட்டவரலிமங்கையர்வன்றேயருன்னுறவென்
றுரம்விட்டவரிவர்வெங்கொலைக்குரியோரலருரவோய். (௩௫)

தடந்தோணிருதன்கூறிடத்தாமோதரன்மொழிவான்
உடைந்தோடியுமக்கஞ்சியொளித்தும்பர்களைமுன்
படைந்தோர்களுக்கமரஞ்சியழிந்தோடினுமுமைநான்
தொடர்ந்தேகொலமுன்னேவரங்கொடுத்தேனெனச்சொன்னான். (௩௬)

தன்னேடிணையில்லாதவன்றனிங்கிவைகூற
நின்னேடெதிர்பொருவான்றனிநின்றேனிலைபேரேன்
என்னேடெதிர்பொரவாவெனநிருதன்னிடித்துரப்பா
மின்னேடிகலொலிவேலினைவிடுத்தானறங்கெடுத்தான். (௩௭)

வெவ்வேலையில்விடநுங்கிய விமலன்றருகுமரன்
கைவ்வேலொடுவலியொப்பதுகனலாமெனக்கனலாச்
செவ்வேதிதழ்திருமார்பிடைச்சென்றங்கெதிர்தைப்ப
அவ்வேலினைப்பிடித்தச்சுதனவன்மார்பிடையெறிந்தான். (௩௮)

அஞ்சத்தியழைப்பக்கடிதணுகாரருளுடையான்
கஞ்சத்திருநயனன்றிகழ்கரியோன்விடுகனல்கால்
வெஞ்சத்தியரம்பைக்கனிமேலூசியின்வெய்யோன்
நெஞ்சத்தினுழைந்தோடிடநெஞ்சத்திதளர்ந்தான். (௩௯)

இறந்தானவனெனவானவரெழுந்தாடுமளவில்
உறங்காவுணர்ந்தனன்போலவுமுணர்ந்தானொருசூலம்
அறங்காவலன்மிசையேவினனதுசென்றவன்மணிமார்
பிறங்காதெதிர்தைத்தோடிடவிகலோனிதுசெய்தான். (௪0)

கருவிற்கிடைகடியுங்கணைகழலான்கருமுகிறன்
உருவிற்கிடையொருவன்றனதுதரத்துமுகத்தும்
செருவிற்கிடையாதோன்வலிசெறிமுட்டியிற்சாடி
ஒருவிற்கிடைபாய்ந்தவ்வழியுயர்வெற்பெனநின்றான். (௪௧)

உடையான்வலியினனச்சுதனுருமேறெனவுரப்ப
இடையானெதிர்நின்றானெறிகடல்வாய்விழவிற்கால்
புடையாவுறுபெருங்காற்றினிற்பொருதேர்கரிபரியாட்
படையானதுபஞ்சாமெனப்பறந்தோடிடவறைந்தான். (௪௨)

மறிந்தார்சிலர்மலைபோற்பெருவாடைச்சருகிலைபோல்
செறிந்தார்சிலர்பிறிந்தார்சிலர்திகைத்தார்சிலராயுப்
பறிந்தார்சிலர்பதைத்தார்சிலர்பகைத்தார்சிலர்பணைத்தோள்
முறிந்தார்சிலர்தெரிந்தார்சிலர்சொரிந்தார்தலைமூளை. (௪௩)

கழிந்தார்சிலர்கடலேழையுங்கலுழன்சிறைக்காற்றால்
எழுந்தார்சிலர்விழுந்தார்சிலரிளைத்தார்சிலரிழியா
அழிந்தார்சிலர்புரண்டார்சிலரரண்டார்சிலர்மிகையற்
றொழிந்தார்சிலரிரிந்தார்சிலருலைந்தாரடலரக்கர். (௪௪)

பாழிப்புயத்தரக்கன்பழியொடுதம்பியுந்தானும்
ஆழித்துயினெடுமால்படையைந்தாலுமக்கருளன்
ஊழிப்பெருங்காற்றாலுமிவ்வுலகிற்பிழைப்பரிதென்
றேழிற்பெரும்பாதாளமதடைந்தாரிகலிடைந்தார். (௪௫)

முன்னேமுழுவலிமாலியவானேமுதலானோர்
தங்நேர்வலிபிறரில்லவர்தாஞ்சாலகடங்கர்

உன்னோடெதிர்மலைந்தோர்புலத்தியனார்வழியுள்ளோர்
என்னாவிவைமுனிபின்னுமிராமற்கிவையியம்பும். (சசு)

ஓராவறநிருதக்குலமொழியாமலறுக்கக்
கூராழியினாற்கல்லதுகூடாததிகுணத்தோய்
நேரேதிருநெடுமாலவனீயாதலினவர்தம்
வேரோடறவறுத்தாய்பிறர்வேறாரிதுசெய்வார். (சஎ)

ரு - வது, இலங்கையழித்தபடலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஅகூ.

---

## சு - வது, இராவணன்பிறப்புப்படலம்.

### இராவணன் பிறப்புரைத்தல்.

வேலையுண்டமாமுனிவன்விரித்துவிளம்புங்கதைகேட்டுக்
கோலமணிநீண்முடிதுளக்கிக்கொண்டல்வண்ணன்வியப்பெய்தி
ஆலமனையவிராவணன்றனவதாரமுமாங்கவன்செயலும்
சாலவிருப்புற்றனன்கேட்கச்சாற்றுகென்னமுனிசாற்றும். (க)

பெருநாளரக்கர்பாதாளம்பேராதுறையுங்காலத்தில்
ஒருநாள்சுமாலிதன்மகளுக்கொத்தவரனைத்தேடுவான்
குருநாண்மதிபோன்முகத்தவளைக்கூடக்கொண்டிக்குவலயத்தில்
வருநாளம்பொன்மதிலிலங்கைமன்னன்குபேரன்வரக்கண்டான். (உ)

காதற்குருசொல்வழிகாட்டக்கற்குந்தோறுமிகப்பெருகும்
போதத்தளவும்பெருகிடவும்புட்பகத்துமிசையேறி
வேதத்தலைவரியக்கர்திகழ்விண்ணோர்சூழவருவானைக்
கோதற்றகுணத்தாதையிடங்கூடுமாசையுடையானை. (ங)

திக்குநிகழிந்திரனியமன்சீரார்வருணன்குபேரனென
ஒக்கவெண்ணுந்தரத்தானையொளிசேர்சங்கபதுமநிதி
பக்கம்வந்துசேவிப்பப்பண்டுசெய்ததவத்தானைத்
தொக்கமணிநீண்முடியானைச்சுமாலிகண்டிங்கிவைநினைந்தான். (ச)

### சுமாலி நினைத்தல்.

வலியாரெல்லாங்கீழ்ப்பட்டுமெற்றையவரேமேற்பட்டுப்
புலிவாழிடத்தேபசுவுறைந்துபோராராழித்தேராராய்

அலியாமிவனேயாணுகியஞ்சா திலங்கையுட்புகுந்து
நலிவாரின் றியரசாளக்கண்டோநாராயணனேலே. (ரு)

என் றுநினைந்து தன்மனத்திலெழுந்தவெறுப்பன்பாதாளம்
சென் றுபுகுந்து தமையனுடன்செய்யுங்கருமந்தெரிந்தெண்ணி
வென் றிவேல்வில்பிறைபவளம்விளங்குந்தரளம்விளைவதனத்
துன் றுகுழறன்மகடன்னைச்சுமாலிநோக்கியிவைசொன்னன். (சு)

**சுமாலிதன்மகளை விச்சிரவசிற்கு மனைவியாகத்தூண்டுதல்.**

தக்ககுணத்தோய்பெண்பிறக்கத்தந்தைகுலமுந்தாய்குலமும்
புக்ககுலமுமிவைவிளங்கும்பூமேலிருந்தபொற்பாவை
ஒக்குமுருவமுடையாயிங்குன்னாலேநங்குலம்விளங்கும்
மக்களுண்டாம்புலத்தியன் றன்மகனைவரனாய்வரியென்றான். (எ)

**கைகசி விசிர வசினிருப்பிட னெய்துதல்.**

தந்தையுரைத்தவம்மாற்றந்தலைமேற்கொண்டதடங்கண்ணாள்
எந்தைகுறையையான்முடிப்பலிதுநன்றாகதீதாக
வந்தவண்ணம்வருகவெனமனத்திற்கொண்டுமாமறைதேர்
சந்தமலரோன்மகன்மகன்சேர்தானமதனைத்தானுற்றாள். (அ)

**கைகசிவிசிரவசி னெதிரினிற்றல்.**

சுத்தமுனிதீத்தொழின்முடித்துச்சுடர்தீநாலுண்டெனத்தோன்ற
வைத்தகலசவனமுலையான்மருங்குவளைத்துமலர்க்கமலம்
ஒத்தசரணப்பெருவிரலாலொல்கிநின் றுநிலங்கீறி
மைத்தகுழலாண்மற்றவன்முன்மலர்மேன்மடந்தையெனநின்றாள். (கூ)

**விசிரவசு கைகசியைவரலாறு வினுதலும் அவள் விடையிறுத்தலும்.**

அன்னவவளையருமறையோனருளினோக்கியார்மகணீ
என்னகருமம்போந்ததுபேரென்னென் றுரைப்பச்சுமாலிதரு
கன்னிபெயர்கைகசிவந்தகருமங்கண்டுகொள்ளென்ன
மின்னினிடைதன்கருத்தறிந்துவேதமுனிவன்விளம்புவான். (க0)

**விசுரவசு நீயென்னிடம் பெறும்பிள்ளைகள் கொடியவர்களாக இருப்பாரெனல்.**

மைந்தர்ப்பெறநீகாதலித்துவந்தாய்வந்தகாரியத்தைச்
சிந்தையெண்ணிநீயென்னைச்சேர்ந்தகாலந்தீதுன்கண்
வந்தகுமாரர்குணத்தாலும்வரத்தினாலுங்கொடியோராய்
இந்தவுலகையிடர்செய்வாரென்னமின்னேரிடைவிளம்பும். (கக)

**கைகசிக்கு விசிரவசுன்னிளைய மகன் நற்குணமுடையவனுவனெனல்.**

உன்னையடைந்துன்னருள்பெற்றேற்குன் றன்குணத்துக்கொவ்வாத
அன்னகுமாரருண்டாகலாமோவென்றாயிழைகூற

வன்னியனையசீற்றத்துன்வயிற்றிற்பிறந்தமைந்தர்களில்
பின்னையவன்பேரறிவுடையானாகுமென்றான்பெருந்தவத்தோன். (௧௨)

### இராவணன் பிறத்தல்.

இத்தத்துவங்களுரைத்தமுனியிரவிகுடபாற்றிசைவீழும்
அத்தப்பொழுதிலாங்கவளையன்பானினைவின்படியணையப்
பத்துத்தலையும்பத்திரட்டிதோளுமாகப்பாரொடுக்கும்
சத்திக்கிரியான்றசக்கிரிவன்றான்வந்துதித்தான்றரைநடுங்க. (௧௩)

### கும்பகர்ணன் பிறத்தல்.

நறையார்குழலாடன்வயிற்றின்ஞாலமடங்கவிழுங்கிடினும்
நிறையாவயிற்றினெடுவரைபோனீண்டவுருவனிமிர்கையன்
பிறையாரெயிற்றுப்பிலவாயன்பெருத்தவிழியனொருக்காலும்
குறையாதெழுவெம்பசியினொடுகும்பகருணன்பிறந்தனனால். (௧௪)

### சூர்ப்பநகை பிறத்தல்.

பண்ணார்மொழியாளவள்வயிற்றிற்பருத்தவிடையும்பருங்கழுத்தும்
விண்ணார்மேகத்திடியென்னவெடித்தகுரலுமுடையாளாய்க்
கண்ணார்கனலும்புகையுமெழக்கனன்றுகாலன்கருக்குலையப்
பெண்ணாய்ப்பிறந்தாளெனவந்துபிறந்தாள்பெரியசூர்ப்பநகை. (௧௫)

### விபீடணன் பிறத்தல்.

மன்னுதவத்துப்புலத்தியன்றன்மரபுவிளங்கமறைவிளங்கத்
தன்னேரில்லாத்தந்தைக்குத்தக்கமகவாய்ச்சண்டாளர்
அன்னோர்முன்னோரவருதித்தவந்தவயிறுசுத்தமுற
மின்னேரிடையாடன்வயிற்றில்விளங்கும்புகழ்வீடணன்பிறந்தான். (௧௬)

பாதமறைவெவ்வரவினுக்குப்பாலுநெய்யும்புகட்டிடினும்
வாதைசெய்யும்வல்லிடமேவளருமாபோன்மனுநூலும்
வேதமவையோராயிரமும்விளங்குங்கலையுந்தசக்கிரிவன்
ஓதவோதப்போதங்கெட்டபோதமானதோங்கியதே. (௧௭)

### இராவணாதியர் செயல்கள்.

ஒத்தகுலத்துக்குடிப்பிறந்தோரொழுக்கங்கெடவிவ்வுலகத்து
வத்தியமைபுலத்தியன்றன்வழிவந்தோர்பார்க்கைகண்டோம்
குத்துவாதைமிகநலிந்துகும்பகருணன்குவலயத்தில்
சுத்தராயமுனிவரையேகொன்றுதின்னத்தொடங்கினான். (௧௮)

### சூர்ப்பநகையின் செயல்கள்.

வசையின்மறையோர்குடிப்பிறந்துமாதாகுலத்தின்வழிநின்றும்
அசைவிலாற்றற்சூர்ப்பநகையாணைப்பிறந்தார்பின்றொடர்ந்து

பசையினெஞ்சர்தமையெல்லாம்பத்தாவாகவசிகரித்தும்
இசையிலாதார்தமையெல்லாமெடுத்துப்புடைத்துந்தின்னுமால். (௧௯)

### விபீடணன் செயல்கள்.

பொய்யுங்களவும்பாதகமும்பொல்லாவொழுக்குமவைகடிந்து
மெய்யுந்தயாவுந்தருமமுடன்விளங்கும்பொறையுமிவைபூண்டு
செய்யுஞ்செயல்களவையெல்லாஞ்சிட்டர்செய்யுஞ்செயலாகி
அய்யன்புகழ்வீடணன்மறைகளறந்தவத்தின்வழிநின்றான். (௨௦)

### கைகேசி குபேரனைக்காட்டி இராவணற்குரைத்தல்.

அந்தவனத்திலந்நால்வரந்தவழியேயொழுகுநாள்
எந்தைசரணவிணைபணிவேனென்னுமாசைதனையுந்த
வந்தவவனைக்கைகசிதன்மலர்க்கணாலேநோக்கித்தான்
தந்தகிரித்தோட்டசக்கிரிவன்றனக்குக்காட்டியிவைசொன்னாள். (௨௧)

நலஞ்சார்தெய்வம்புட்பகமுநாடற்கரியநிதியிரண்டும்
சலஞ்சார்வில்லாத்தவத்தாலேசாதித்துடையோனின்றமையன்
வலஞ்சார்திரடோண்மைந்தாநின்வழியிலுள்ளோர்முன்பாண்ட
இலங்காபுரியையாள்கின்றானிவன்காண்குபேரனெனவுரைத்தாள். ()

### இராவணன் தவத்திற்குக் கொன்றைக்கா னடைதல்.

என்றுதாய்தானிவைகூறவெயிற்றினாலேயிதழதுக்கி
ஒன்றுதவத்தாலிவனோடேயொத்தன்மிகுத்தல்செய்வெனெனக்
கன்றுமனத்தாய்தனைத்தேற்றிக்கறுவுமனத்தரிளைஞரொடும்
குன்றுபுரைதிண்புயத்தரக்கன் * கொன்றைவனத்தைக்குறுகினான். ()

### கும்பகன்னன் தவத்திறம்.

கும்பகன்னனைந்தீயுட்கொதிக்குங்காலத்திடைநின்றும்
உம்பர்நடுங்கக்கார்காலத்தொவ்வாமழையினுடனனைந்தும்
தம்பம்பொருநாராசத்துச்சலியாதிருந்துஞ்சயித்தியத்தில்
அம்பின்முழுகிக்கிடந்துழந்துமாண்டுபதினாயிரங்கழித்தான். (௨௪)

### விபீடணன் தவத்திறம்.

திரிகாலமுணர்செய்தவத்தோர்திகைப்பவையாயிரத்தாண்டங்
கொருகால்போலவொருகான்மண்ணூன்றியொருகாலெடுத்துயர
எரிகாலிரவிமண்டிலமேனோக்கியிருகைகளுமெடுத்து
வருகாலக்கால்வீடணனும்வருடமையாயிரங்கழித்தான். (௨௫)

### இராவணன் தவத்திறம்.

ஓராயிரமாண்டுபவசித்துக்கழிந்தாலோரோர்தலையாகச்
சீரார்சிரமொன்பதுந்தடிந்துசெந்தீயிடையோமம்புரிந்து

---

* கோகன்னவன மெனவும்பாடம்.

பேராவுபவாசத்தினுய்ப்பின்புமோராயிரத்தாண்டில்
தாரார்மற்றைத்தலைதடியலுற்றான்பற்றித்தசக்கிரிவன். (உ௬)

### அயன்றோன்றி இராவணாதியர்க்கு வரமளித்தல்.

அன்னகாலையயன்றோன்றியவனைநோக்கியருந்தவத்தின்
நின்னையொப்பார்நீயன்றியொருவரில்லைநின்கரத்தால்
முன்னமரிந்ததலையெல்லாமுன்புபோலமுளைத்திடுக
என்னவவைதாம்பண்டையிலுமெழிலுண்டாகவெழுந்தனவால். (உ௭)

பின்னுஞ்சொல்லும்பிதாமகன்றான்பெருகுதவத்துநீயிங்குச்
சொன்னசொன்னவரந்தருவேன்சொல்லென்றுரைக்கத்தொல்லுலகில்
மன்னுமனிதர்தமைப்பொருளாமனத்தினினையாவாளரக்கன்
உன்னுபொருளொன்றொழியாமல்வேண்டவிரிஞ்சனுவந்தளித்தான். ()

தருமசீலன்வீடணன்மெய்தழுவிநின்றுதவஞ்செய்த
அருமைகண்டுவியப்பெய்தியாதிமூர்த்திவெளிப்பட்டுன்
னிருமைசேர்ந்தவுள்ளத்தினியைந்தவரம்வேண்டுதியென்னக்
கருமைசேராவருந்தவத்தோன்கருதியினையகட்டுரைத்தான். (உ௯)

### விபீடணன் வரம் வேண்டுதல்.

நல்லாயறத்தைக்கைவிட்டுநெடுங்குமிடும்பைவரினுநான்
பொல்லாதனசெய்யாதொழிகபோரிற்பிரமாதிகளென்னை
வெல்லாதொழிகவிவ்வரங்கள்வேண்டுமென்னவிரிஞ்சனவை
எல்லாம்பெறுதிநீயென்றுமிறவாதிருத்தியெனவுரைத்தான். (௩௦)

### கும்பகன்னன் போநட்டுத் தேவாதியர் இராமனிட முறையிடுதல்.

கும்பகன்னன்றவங்கண்டுகுலைந்தீங்கிவனேவரங்கொள்ளின்
தம்பமில்லைநமக்கென்றுதடுமாறியசிந்தையராகி
உம்பரோடுதானவருமுயர்மாதவருமொத்தீண்டி
எம்பிரானேகேட்டருளென்றிறைஞ்சியயனுக்கிவையுரைத்தார். (௩௧)

படைத்தாயாதிபல்லுலகம்பறிப்பான்கையிற்சிற்றறிவாள்
கொடுத்தாயாதிமுன்னமேகொடியகும்பகன்னனுக்கு
வடுத்தானில்லாவினியவரம்வழங்கினையேலெங்களையும்
கெடுத்தாயாதியெனத்தேவர்கிளத்தவயனிங்கிதுசெய்தான். (௩௨)

### கும்பகன்னன் வாய்ச்சொற்பிழையாகக் கலைமகளை யேவுதல்

சொல்லார்கலைக்குநாயகிதன்றுய்யகமலமுகநோக்கிப்
பொல்லாவொழுக்கமிவைபூண்டுபுவனமூன்றும்பொடிசெய்து
வல்லான்கும்பகன்னனெனைவரம்வேண்டுங்காலவன்வாய்நின்
றெல்லாம்பிழைப்பத்துயில்வேண்டுமென்னும்படிநீயியற்றென்றான். ()

### கும்பகன்னன் தேவர்வஞ்சனையாற் றுயில்வேண்டு தலும் அயனளித்தலும்.

இந்தப்படிக்குநாமகளையிசைவித்தடவியிருந்தவஞ்செய்
அந்தக்கும்பகன்னனிடையமரர்சூழவயன்வந்துன்
சிந்தைக்கினியவரந்தருவென்செப்பென்றுரைப்பநாமகளு
வுந்துத்துயில்வேண்டுவெனென்னவுற்றாயென்றங்கயனுரைத்தான். ()

அள்ளன்மடுவின்மூழ்கித்தாமரும்பட்டினிபட்டலம்வந்தும்
உள்ளந்தூய்யரல்லாருக்கொருகாரியமும்பலமாகா
கள்ளமனச்செய்தவக்கும்பகன்னன்கருதும்வரங்கொடுக்கும்
வள்ளன்மலரோனிடைப்பெற்றவரத்தான்மாறாத்துயில்பெற்றான். (௩௫)

சந்தமலரோன்போனதற்பின்றடந்தோட்கும்பகன்னன்றன்
சிந்தைதெளிந்திங்கிவையெல்லாந்தேவர்செய்தமாயையென
நொந்தமனத்தன்முன்னேற்றநுண்ணூலுணர்ந்தபின்னவற்கும்
வந்ததுரைத்தபின்னவர்கள்வளர்சீர்த்தொல்லைவனமடைந்தார். (௩௬)

### வேறு.

### இராவணன்வரம்பெற்றதுணர்ந்த மாலியவானதியர்களவனையடைதல்.

ஆங்கவர்கள்பெற்றுடையவரமுமாண்மையும்வலியுமடங்கக்கேட்டுப்
பூங்கமலக்கண்ணனுக்குப்போர்தோற்றுப்பாதாளம்புக்குவீழ்ந்த
ஓங்குபுயமாலிவான்சுமாலியெனப்பேர்பெற்றோருள்ளிட்டார்கள்
தாங்கரியபேருவகைதள்ளப்போய்த்தசக்கிரிவன்றன்னைச்சார்ந்தார். ()

### அசுரரனைவருமிராமணனைத் தழுவிப்புகழ்தல்.

கொலையடுத்தகுன்றென்னக்குவவுத்தோட்டசக்கிரிவன்கும்பகன்னன்
கலையடுத்துவளர்ந்தோங்குவீடணனென்றிங்கிவரைக்கண்ணினோக்கி
அலையடுத்தகடற்றுயிலுமச்சுதனுக்கமரழிந்தவரக்கரெல்லாம் [ர்
தலையெடுக்கப்பிறந்தீர்கள்வருகவெனவுயிர்பொருந்தத்தழுவிக்கொண்டா

### சுமாலி தனது முற்காலதற் காலநிலைமைகளை இராவணற்குரைத்தல்.

அன்னவர்களினிதிருந்தக்காலைத்தசமுகனைச்சுமாலிநோக்கி
முன்னமரிற்றாமெல்லாமுகில்வண்ணன்றனக்கஞ்சிமுதுகிட்டோடிப்
பன்னகர்நாடதுவாயபாதளம்புக்கமையும்பண்டுதாமாள் [ன்.
பொன்னகரத்திடைதனதன்புக்குவீற்றிருந்தமையும்பொருதுசொன்னு

தண்ணுக்குந்தடமலரோன்வழிவந்ததசக்கிரிவன்றன்முன்பாண்ட
மண்ணுக்கும்பலரறியமணம்புகுந்துமனையாளாய்வகுக்கப்பட்ட
பெண்ணுக்கும்பாடாதார்தம்பெருவாழ்விற்பிச்சையேநன்றுகாண்பேம்
கண்ணுக்கும்பொறிபறக்கக்கடலிலங்கையாள்கின்றான்குபேரன்காண்டி

### அசுரர் இலங்கையைக் கைப்பற்றுமாறு கூறுதல்.

தேனத்தார்திகழ்மார்பன்றென்னிலங்கையாள்கின்றகுபேரன்சேர்ந்த
மானத்தாலுனக்கந்தவளநகரிவிடுகிலான்சாமபேத
தானத்தாற்றாரானேற்றண்டத்தாற்கொள்ளுதிநீகொள்ளாயாகில்
வானத்தார்நகைசெய்வர்மாசுண்ணுநின்வலியும்வரமுமென்றான். (௪௧)

என்றுதாய்தந்தைதனக்கியம்பியசொற்கேட்டதசக்கிரிவனேரே
இன்றெனக்குமூத்தானைக்கன்றுமாறெங்ஙனென்றுகூறத்
துன்றுபுயப்பிரகத்தன்சூரரதுபார்ப்பாரோதுரந்தபோரில்
அன்றுபிராதாக்களாமசுரர்குலமறுத்திலரோவமரரென்றான். (௪௨)

### பிரகத்தன் குபேரனிடந் தூதுபோதல்.

என்றுதனக்கவனியம்பக்கேட்டதசக்கிரிவனதற்கிசைந்துநீயே
சென்றுதனபதிக்கிதனைச்செப்பிவாவெனவிடுப்பவவனுஞ்சென்று
குன்றுபுரைமணிமாடகூடகோபுரவிலங்கைகுறுகிச்சீரின்
தன்றுணையிலான்றனக்குச்சமரவாசகங்களையேதழுவச்சொன்னான். (௪௩)

உன்னுடையதம்பியாமுயர்வரைத்தோட்டசக்கிரிவனுரைத்தகேட்டி
முன்னிலங்கைநகராண்டோர்மாலியவான்முதலாயமூவர்மூத்தோர்
பின்னதனுக்குரியார்கள்யானன்றிப்பிறரில்லைப்பேசிப்பேணி
என்னுறவுவேண்டுமேலிலங்கைநகர்தருகவெனவியம்பச்சொன்னான். ()

### இராவணற்கிலங்கையைக் கொடுக்கக் குபேரனிசைதல்.

அன்னவாசகங்கேட்டவருநிதிக்கோன்வருங்கருமமனத்தினாராய்ந்
தென்னரசுமென்பதியுமென்றம்பியினதன்றேயெனக்கென்றம்பி [லாம்
சொன்னபடிசெய்வனெனச் சொல்லிவிடுத்தவன்றனக்குச்சொன்னவெல்
தன்னுடையதாதைக்குத்தான்கூறக்கேட்டந்தத்தவத்தோன்கூறும். ()

### குபேரனுக்கு விசிரவசு சமாதானங் கூறுதல்.

முன்னாளிலென்னுடையமூதாதையாண்டநகரிலங்கையென்று
பன்னாளுமெனக்குரைப்பப்பழியானகாரியநீபகர்தியென்று
சொன்னாலுமவன்கேளான்றுன்மதியான்றசக்கிரிவனவனுக்கானேன்
என்னானைமைந்தவுனக்கிதமானகாரியங்கேளென்றுசொன்னான். (௪௬)

### வேறு.

திசைமுகன்வரமெனும்வலிகொடுதிசைதொறும்
வசைமுகம்வளர்தரமகிதலநலிதரு
தசமுகன்வழிநகர்தனைவிடுதரணியில்
இசைமுகம்வளர்தரவெனமுனியிவைசொலும். (௪௭)

### விசிரவசு பனிமலையினெடுபுறத்திற் குபேரனுக்கிடங்காட்டுதல்.

குடதிசைகுணதிசைதழுவியகுரைகட
லிடைநுழையிருதலையிமையமதெனுமலை

வடதிசையுளதுமலையரசிதுவென
இடமுடையுலகவரிடுபெயருடையது. (௪௮)

மயிலியலுமையினைமகளெனவுடையது
குயின்மொழியவளொடுகுளிர்சடையரனுறை
கயிலையையொருபுடையுடையதுகதிரவன்
வெயிலுழைவருமரமிடைதடமுடையது. (௪௯)

பகுமுகமொடுதிகழ்பகிரதியிழிதரு
மொகுமொகுமெனுமொலிமுழவொலியதுவர
அகமகிழுறுபதவளியிசைமுரறா
மிகமயினடமுறுவிரிபொழிலுடையது. (௫௦)

எறிகதிர்மணிமுடியிமையவர்பொழிலுடை
வெறிமலர்மதுநுகர்விரிசிறைமதுகரம்
உறுதலுமதுநுகரிவரெனவுவகையொ
டுறுபதமெதிர்கொளுமரவமதுடையது. (௫௧)

மலைதலின்மனமெனவரியவெழுமதி
குலைகுலைகுலைதருகுடுமியதுடையது
கலகலவெனவெழுகழையொலியொடுபுனல்
சலசலவெனவிழுதடவொலியுடையது. (௫௨)

**குபேரனிலங்கையை விடுத்து, அளகையை யடைதல்.**

இனையனவெழிலுடையிமையமதெனுமலை
தனையுறுகிளையொடுதழுவுதிதழுவிய
பினையதனிடைவளர்பெருநிதியொடுதிரு
எனமுனியிசைவசொலவிசைமனமுடையவன். (௫௩)

**வேறு.**

**இராவணனிலங்கைக் கரசனாதல்.**

எந்தையுரைத்ததுசெய்வெனெனத்தனதனிருங்கிளையோடிலங்கைவிட்
சிந்தையெனுங்கடுந்தெய்வத்தேரேறித்திகழிமயஞ்சென்றுசேரத் [டுச்
தந்திரமாகடறழுவத்தசக்கிரிவன்றன்னகரிவந்துசார்ந்து
மந்திரிகண்முடிசூட்டமாமணிமண்டபத்தின்மிசைமகிழ்ந்திருந்தான். ()

**பாதாளத்திருந்த அரக்கரிலங்கையிற் குடியேறுதல்.**

உழந்துயரும்பர்க்காயுலகனைத்துமுண்டுமிழ்ந்தவொருவன்முன்னாள்
அழன்றிலங்கைபாழாக்கவன்றுமுதற்பாதாளமடைந்துளோர்கள்
இழந்ததனம்பெற்றவர்போலிராக்கதர்களிரைத்தீண்டியிழந்ததங்கள்
பழம்பதியிற்குடிபுகுந்துபண்டுபோற்குடியிருப்பவிலங்கைவேந்தன். (௫௫)

### சூர்ப்பநகையின் விவாகம்.

தடையில்லாவலியில்லையரம்பையர்க்குத்தம்மூலைகடம்மைத்தாங்க
இடையில்லையென்னைப்போலிமைப்பளவிலெவ்வுலகுமுட்டிமீளும்
நடையில்லையெனப்பழிக்குநங்கையடற்சூர்ப்பநகைநலத்தைக்கண்டு
விடைவல்லோனெனவிரும்பும்வித்துருசிங்கவனுக்குவிரும்பியீந்தான். ()

### தசக்கிரீவன் மயனைவினுதல்.

ஆங்கொருநாட்டசக்கிரிவனடவியிடைவேட்டைபோமளவிலாங்கோர்
தேங்கமழ்பூங்குழலி யொடுதிகழ்மணிப்பூண்மயனவனைச்சென்றுசேர
ஈங்கிவளையுடனேகொண்டியாருமில்லாவனத்துவந்தோயாவன்
பாங்குபெறவுரையென்றுதசக்கிரிவன்பகரமயன்பகரலுற்றான். (௫௭)

### மயன் தன்வரலாறுகூறுதல்.

தாமநெடும்புயத்தோயான் றயித்தியர்கோன்மகனென்னத்தகுவேன்பண்
மாமலர்மேற்றிருவொக்கும்வடிவுடையதருச்சனையைவானோரீய [டு
ஏமபுரியென்படிதனக்கிருப்பாகயாணிருமித்தவளுநானும்
காமமெனும்பெருங்கடற்கோர்கரைகாணுதைஞ்ஞூறாண்டிருந்தகாலை. ()

அங்கவடன்மணிவயிற்றில்வந்துபிறந்தவண்மண்டோதரியென்பாளி
ம்,மங்கையுடன்பிறந்தோர்கண்மாயாவிதுந்துமிவில்வலியின்மிக்கார், இங்
கிவடன்குணத்துக்குமெழிலுக்குநிகரொக்கும்வரனைக்காணு, தெங்குமுழ
ன்றிவ்வனத்தினிடைப்புகுந்தேனென்றுரைத்திங் கிவைபின்சொல்லும்.

குலம்வேண்டுமென்றிருப்பார்குலத்துள்ளார் கல்வியினுற்குறையாளனப்
பலம்வேண்டுமென்றிருப்பார்தந்தைமார்பரந்தபெருஞ்செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார்தாய்மார்கள்யவ்வனமுமழகுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார்நாறுகுழற்கன்னிமார்நலத்தின்மிக்கார். (௬௦)

பண்புடையகுடிப்பிறப்பும்பழிப்பில்லாப்பேரழகும்பரந்தகேள்வி
நுண்பொருளைநீரொழியப்பாலுகருமன்னம்போனுக்கித்தீரும்
ஒண்பொருளுமிந்நான்குமுடையாரைக்கிடையாதிவ்வுலகந்தன்னில்
பெண்பெறுகைபோலிந்தப்பெரியதுயர்தானுண்டோபேசுங்காலே. (௬௧)

### இராவணன்தன் வரலாறுகூறுதல்.

பின்னுமயன் கூறுவனின்பேரெழிலும்யவ்வனமும்பேசவேண்டாம்
உன்வழியுமுன்பதியுமுன்பெயருமுன்னலமுமுரைத்தியென்ன
அன்னவனுமயன்மைந்தன்மகன்மைந்தனணியிலங்காபுரியையாளும்
மன்னவன்பேர்தசக்கிரிவனமறைகளோராயிரம்யான்வல்லேனென்றான்.

### இராவணன் மண்டோதரியை மணம்புரிதல்

திண்டடந்தோட்டசக்கிரிவனிவைசெப்பச்சேயிழையைவளர்த்துவைத்
துக், கொண்டிருந்தமயன்பெற்றேனெனமகிழ்ந்துகுண்டிகைநீருதகஞ்செ

ய்ய, எண்டிசையும்போற்றுதிறலிராவணனென்னெழிலரக்க' ரெவரும்போற்ற, வண்டமருங்குழன்மண்டோதரியைமணஞ்செய்ததற்பின்மகிழ்ந்துமாமன். (சுரு)

## மயனிராவணனுக்கு வேலாயுதமளித்தல்.

தாளார்தண்டாமரையோன் றன்மேலேவிடினுமவனுயிர்கொண்டன்றி
மீளாவேலுங்கொடுத்துமயன்போகமெல்லியலையுடனேகொண்டு
தோளாறுமேழிரண்டுஞ்சுடர்முடிகளீரைந்தும்பொலிந்துதோன்ற
வாளார்திண்படைசூழமதிளிலங்கைவளநகரின்மன்னன்புக்கான். (சுசு)

## விபீடண கும்பகன்னர்கள் முறையே வச்சிரசுவாலை சரமைகளை மணம்புரிதல்.

மன்னும்வயிரோசனன் றன்மகன்மகளாம் வச்சிரசுவாலையென்னும், கன்னிதனையணிவீரக்குழற்கும்பகன்னன்கைப்பிடித்தபின்பு, தன்னெதிரில்கந்திருவத்தலைவன்கைதூடணன் முன் றந்தவேற்கண், மின்னிடையாள்சரமைதனை விளங்குபுகழ் வீடணன்முன் விதியின்வேட்டான். ()

## இராவணனுக்குப் புத்திரசனனமு நாமகரணமும்.

இந்திரனுஞ்சசியும்போலிலங்கிழைமண்டோதரியுந்தானுமேய்ந்த
சிந்தையுவந்தனுபவித்துச்செல்கின்றகாலத்துத்திருவனாள்பால்
வந்துபிறந்திடுமைந்தன்மழையிடித்ததெனவாய்விட்டழுதலாலவ்
வெந்திறன்மைந்தனைமேகநாதனெனப்பேரிட்டானிலங்கைமன்னன். ()

## மேகநாதன் வளர்ச்சி.

பிறையெயிற்றுப்பிலப்பேழ்வாய்ப் பெருவரைபோற்கருவுருவப் பிறழ்கட்டிண்டோட், டுறுகழற்காற்ற சக்கிரிவன்முன் றலையிம் மூவுலகுஞ் சுடுவான்வேண்டி, உறுசுவைச்சோறூன்முதலாயுள்ளவெனுஞ் சிறுகுளகையிட்டூட்டிச், சிறுநெருப்பைப்பெருநெருப்பாயாக்குவார்போல் வளர்த்தார்செவிலித்தாய்மார். (சுஎ)

## கும்பகன்னனுக்குப் புத்திரசனனம்.

அன்னவன் றன்பின்பிறந்தோரதிகாயன்றிறலக்குமாரன்வானோர்
பொன்னகரிபொடிபடுத்தித்தனித்தனியேபூணிக்கும்போரீல்வீரர்
மன்னியசீர்வச்சிரச்சுவாலைதன்மணிவயிற்றில்வரைத்தோட்கும்ப [ர்.
கன்னனுக்குப்பிறந்தோர்கள் காலனையொக்குங்கும்பனிகும்பனென்போ

## கும்பகன்னனுறங்க மண்டபங்கட்டச் சொல்லுதல்.

பனிகாய்செங்கதிரொளியிற்பன்மணிப்பூண்பொலிந்திலங்கும்பாலரோங்
தனியேநற்றவஞ்செய்துசாதித்தும்பெற்றதுயிற்றனைச்சாரக் [கத்
குனிசாபத்தசமுகனைக்கும்பகன்னன்முன்குறுகிக்கூறுவானிங் [ஞன்.
கினிதாகவெனக்குறங்க வெழுமணிமண்டபஞ் சமைப்பியென்னச்சொன்

தென்னிலங்கைமன்னவனுந்தெய்வதச்சனுக்குளவாறுரைப்பக்கேட்ட
அன்னவனுமகலமோரோசனையுமதற்கிரட்டியகலம்பெற்ற
பொன்னணிமண்டபமுப்பாற்புவனத்தினில்லதுசெய்தமைப்பக்கும்ப
கன்னனதுகண்டுவெந்துநெடுங்காலங்கண்டுயிலாநின்றகாலை. (எ0)

௬-வது, இராவணன்பிறப்புப்படலம்-முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-உ௫௩.

---

## எ - வது, வரையெடுத்தபடலம்.

### இராவண னளகைச்சோலையை யழித்தல்.

பூவயவன் றருவரத்தினாற்புயவலிச்செருக்கால்
ஆவதல்லதொன் றறிகிலர்வரக்கர்கோனியக்கர்
தேவர்மாதவர்சிதறிடத்துரந்துநல்லளகைக்
காவெலாம்பொடிசெய்துவெங்களிறெனத்திரிந்தான். (௧)

### இராவணனுக்குக் குபேரன் றூதனுப்புதல்.

அன்னதன்மையனதிக்கிரமங்கள்கேட்டளகை
மன்னவனொருதூதனைவிடுப்பமற்றவன்போய்த்
தென்னிலங்கைநாயகன் றனைச்சென்றுகண்டுமையன்
சொன்னவாசகங்கேளெனத்தூதுவன்சொல்லும். (உ)

### தூதன் கூறுங்குபேரனதறவுரை.

சொல்லும்போதறவிளிவனசூழவுமிருந்து
சொல்லுவோர்பெரிதாகவச்சொற்பயனிலாத
சொல்லும்போதறக்கடுகுமாய்ச்சொற்பயனினிய
சொல்லுவாரில்லைச்சொன்னசெய்வார்களுமில்லை. (௩)

மூத்துளோர்கள்சொன்முன்பினோர்பின்பனீதென்று
வார்த்தையுண்டதுமனத்தினிற்கொண்டியானுரைப்ப
வார்த்தையாகுமீதென்றுகொண்டறம்வழுவாமல்
பார்த்துச்செய்வசெய்பழிபடுகாரியஞ்செய்யேல். (௪)

தேவரந்தணர்தங்களைச்சீறிடுந்தீயோர்
யாவராயினுமிம்மையிற்கெடுவர்மேன்மறுமைப்
பாவகாரியர்புகுந்திடும்பழியொடும்புகுவார்
ஆவர்செய்குவரவரொடும்பகைகொளாரறிவோர். (௫)

உம்பர்வானவராதியருணக்கிடைந்துலகில்
தம்பமின்றியேதளர்ந்திடுந்தன்மையுங்கேட்டேன்
வம்புசேர்பொழில்வந்ததுமடித்ததுங்கண்டேன்
தம்பியாகிலித்தன்மைசெய்யாதொழிதக்கோய். (௬)

குபேரனுக்கு பிங்களாக்க முண்டானசரிதம்.

இமையத்தம்முகத்தீசனைநோக்கியானெழில்சேர்
சிமையத்துத்தவஞ்செய்கின்றவேலையிற்சிவனே
டுமையைக்கண்டிந்தவுத்தமியாவளோவெனவோர்
சமையைத்தாங்கவள்சலித்தெனைத்தழலெழவிழிப்ப. (௭)

பார்த்தவென்னிடக்கண்ணதுபற்பமாய்வீழ
வேர்த்துமெய்தொலைந்தவ்விடத்திருக்கையான்வெருவிச்
சீர்த்தவத்திகழ்சிலம்பின்வேறோரிடஞ்சேர்ந்து
பேர்த்துமுன்புபோற்பெருந்தவம்புரிந்தனன்பேணி. (௮)

அரியதாய்விரதத்தினின்றண்டிருநூறும்
உரியவாகியேயொருதினம்போற்செய்துமுடிக்க
விரிபெருஞ்சடைவிமலனுஞ்சிவன்வெளிப்பட்டுப்
பிரியனுயெனைப்பேணிநோக்கினனிவைபேசும். (௯)

நின்னையொப்பவர்தவத்தினினீயல்லதில்லை
உன்னையொப்பவர்யானலாலொருவருமில்லை
நின்னையுத்தமத்தோழனுய்வேண்டுவென்யானும்
என்னையொத்தநின்றோழனுய்க்கொள்ளுதியென்றான். (௧௦)

மங்கைசீறிடவாய்ந்தநின்வாமநேத்திரமும்
பிங்கலந்திகழ்நிறத்ததாய்ப்பெறுதிநீயென்று
கங்கைசேர்சடைக்கண்ணுதலானிவைபுரிந்தான்
இங்குகேளெனவின்னமுங்கேட்டியானியம்ப. (௧௧)

வாசவன்முதலாகியவானவர்தாமும்
ஈசனன்னமாதவம்புரியிருடிகளெவரும்
கூசிநின்வலிக்கோடினார்கூடினுருனக்கு
நாசமெண்ணுவர்தசமுகநாடொருமிருந்து. (௧௨)

தூதன்மொழிகேட்ட இராவணன் சீற்றங்கோடல்.

அரக்கனன்னவைகேட்டலுமனமெழவுயிர்த்துக்
கரத்தினேடுகைபுடைத்துவெங்கனல்விழிகாலப்
பரத்தினேக்கித்தன்பாடிருந்தவர்முகநோக்கி
இரக்கமில்லவனிவர்களுக்கிவையிவையியம்பும். (௧௩)

### இராவணன் தூதனைவாளால் வெட்டிக்கொல்லுதல்.

ஆசில்லாதரனொப்பவனளகையிலவனும்
ஈசன்றோழனுமவையெலாமென்முனஞ்சார்ந்து
பேசுந்தூதனார்பெறுகெனவிவையெனவாளால்
வீசினானவனிருதுணியாகமண்வீழ. (கச)

### இராவணன் குபேரனோடு போரவெழுதல்.

அன்னகோபத்தவரக்கர்கோனளகையிலவனை
முன்னஞ்சென்றுநான்முட்டிமேமனச்சினமுடித்துப்
பின்னைநின்றதுசெய்வனென்பெரும்படையெழுக
என்னலுங்கடல்கிளர்ந்தனவெழுந்ததுசேனை. (கரு)

### அசுரசேனையினெழுச்சி.

கட்டியிட்டபொற்கனைகழற்காலினர்கரிய
வட்டமொத்தமாமேனியர்வயங்கியவீரப்
பட்டநெற்றியர்பணைத்ததிண்டோளினர்படர்மார்
பிட்டபொற்கவசத்தினரிராக்கதரெழுந்தார். (கசு)

தேர்களூற்றனசெம்முகக்கரியினைநெருக்கப்
போர்மதக்கரிபுரவியைநெருக்கிடப்புரவி
வீரரைக்கரிநெருக்கிடவீரர்போகத்
தாரைபெற்றிலர்தங்களிற்றனித்தனிநெருக்கி. (கஎ)

பாழிசாலெயிற்றரக்கர்கோன்படையெழுதூளி
எழுலோகமுமெய்திமீண்டிவ்வுலகத்தில்
ஆழியானவையடங்கலுந்தூர்த்தசேறாக்கிச்
சூழுமாதிரத்தும்பிகைத்தூம்புசெம்மியதே. (கஅ)

அன்னமாப்படையளகையைநெருக்கிடவரக்கர்
மன்னன்மாநிலத்தலைவன்மேற்கறுவுகொண்மனத்தன்
பொன்னின்வார்கழல்பொலிவுறக்காலிடைப்புனைந்து
மின்னுமாமணிப்பஃறலைக்கச்சொடும்விசித்து. (ககூ)

கூர்மையிட்டவேல்விழியினார்குவிமுலைக்குறியும்
ஆர்வம்விட்டபோரங்கவர்கண்களூநெருங்கும்
சீர்கொள்வட்டமார்பதனிடைக்கவசமுஞ்சேர்த்து
வீரபட்டங்கணுதலொருறும்விளங்கிடவீக்கி. (உ0)

உடன்றுணித்தெழும்படையினாலுலகுகீழிருப்ப
விடந்துடித்திடுவெள்ளெயிற்றரவுமெய்ந்நடுங்கிப்
படந்துடித்திடப்படைத்தொழிலளகைநாயகனுக்
கிடந்துடித்திடவிராவணனேறினானிரதம். (உக)

மாயைவல்லனுமகோதரன்வயப்பிரகத்தன்
தீயராஞ்சுகசாரணர்திறற்புகைக்கண்ணன்
சூயமாமன்மாரீசனவ்வறுவர்தற்சூழப்
போயினனவனளகையாம்பொன்னகர்நோக்கி. (உஉ)

## இராவணனளகையை முற்றுகைபோடுதல்.

சென்றசேனையைச்செறிபொழிலளகையைச்சேறப்ப
நின்றுகாப்பவர்நீசனுந்தசமுகனம்மேல்
ஒன்றிவந்துநம்மணிநகர்ப்புறத்துவந்துற்றான்
என்றுகூறமாடிருந்தவர்க்கியக்கர்கோனியம்பும். (உங)

## குபேரன் சபிகர்க்குரைத்தல்.

அறிவிலாதவற்கறிவனசொல்லுவாரவரால்
இறுதியெய்துவாரென்னுமதின்றுகைகண்டோம்
உறுதியாயினகாரியமுரைத்துவிட்டோமால்
மறுகிநேர்பொரவந்தனன்வாளெயிற்றரக்கன். (உச)

## குபேரன் போருக்கெழுதல்.

என்றுவாய்மடித்தெரிவிழித்திராக்கதர்கோமான்
வென்றிவீரமும்வரங்களும்படும்படிவிண்ணோர்
இன்றுகாண்பராலெனவெழுந்திரும்பரியிரதம்
ஒன்றுசேனைமுன்செல்கெனவுரைத்தனனுரவோன். (உரு)

## வேறு.

## குபேரன்சேனைகள் போருக்கேகுதல்.

அரக்கரோடமரென்றளகாதிபன்
உரைத்தவாசகங்கேட்டலுமூழியில்
திரைப்பெருங்கடல்சீறியெழுந்தென
விரைத்துமண்டியெழுந்ததுசேனையே. (உசு)

மூரிமேகமுழங்கியவாமெனப்
பேரிபம்பைபெரும்படகந்துடி
தாரைசொம்பணிசங்குமுழங்கின
வீரராய்ந்தணிவீதிநெருங்கினர். (உஎ)

தாள்களோடவர்தாடமொறின
தோள்களோடியர்தோள்கடுறும்பின
வாள்களோடவர்வாள்கண்மயங்கின
கோள்களோடியர்கொடிகள்பிணங்கின. (உஅ)

ஆனைதேர்பரியாளளவற்றதன்
சேனைசூழ்தரச்செறிகுழற்றேன்மொழி

மானைநேர்விழிமங்கையர்வாழ்த்திடத்
தானசீலன் றனபதிதோன் றினன். (உக)

### இயக்கருமசுரரும் பொருதல்.

திரைப்பெருங்கடன்மேற்கடல்சென் றன
அரக்கர்சேனையொடும்மளகைப்படை
இரைப்பமண்டியெதிர்ப்பவிமைப்பிலோர்
வெருக்கொளும்படிபூசல்விளைந்ததே. (௩0)

சென் றுதாக்கினதேர்களுந்தேர்களும்
கன் றுவேழமும்வேழமுங்காந்தின
ஒன் றுமாவொடுமாப்பொரவுற்றனன்
வென் றிவீரரும்வீரரும்வெம்பினர். (௩க)

கொற்றவீரர்கொடும்படையேவிட
அற்றகால்சிரமாய்நெரிந்தோங்கின
இற்றகைமெய்யிருதுணியாயின
உற்றதாழியுதிரத்தின்வெள்ளமே. (௩உ)

### தூமாட்சமகோதரர்கள் பொருதல்.

ஆயகாலையளகைப்பெரும்படை
வீயநூறியவெம்புகைக்கண்ணனும்
மாயம்வல்லமகோதரனும்முதல்
ஆயவீரரழலெழச்சீறினர். (௩௩)

ஏகவீரவரக்கரியக்கரைப்
போகநூறிப்புனல்பெருங்காற்றினல்
நாகமோழையினும்புகநாடுபோர்
யோககண்டகனென்போனுரறினன். (௩௪)

### யோககண்டக மாரீசர்கள் பொருதல்.

ஆயவன்னிலைகண்டவனோடடல்
மாயையாவையும்வல்லமாரீசனும்
தீயவன்சென் றுதாக்கலுந்திண்டிறல்
சாயமோதினன் றன்கரத்தண்டினல். (௩௫)

மயங்கிவீழ்ந்துதெளிந்துமாரீசனும்
தயங்குபூண்வலிசாயவியக்கரைத்
தியங்கியோடத்துரந்தவன்சேனைமண்
மூயங்கிவீழக்கதைகொண்டுமோதலும். (௩௬)

### இராவண னியக்கசேனையையழித்தல்.

பற்றலார்கள்படுகளவம்மியில்
கொற்றமேவுதண்டென்னுங்குழவியால்

வெற்றிவேலிலங்கேசன்வெகுண்டெழுந்
துற்றசேனையொருகுழம்பார்க்கினான். (௩எ)

**இராவணனளகாபுரியின் கோபுரவாசலைக் கிட்டுதல்.**

தானையெல்லாந்தரைப்படுத்துத்தமர்
ஆனதீயமகோதரனோடடல்
ஏனையோர்புடைசூழவிராவணன்
வானைநேர்நகர்வாயிலைமுட்டினான். (௩அ)

**சூரியபானு விராவணனைத் தடுத்தல்.**

வானிகமிர்ந்தமழைதவழ்வாயிலோன்
மேனிமிர்ந்தெழுமெய்யினன்சூரிய
பானுவென்னும்பெரியவன்பாதக
நீநில்லென்றெதிர்வந்தமர்நேர்ந்தனன். (௩௯)

இலங்குதோரணகம்பமிருகையால்
நிலங்குலுங்கிடவாங்கிநிருதன்மேல்
விலங்கன்மேலிடிவீழ்ந்தெனவீழ்த்தனன்
கலங்கலானிலங்காபுரிக்காவலன். (௪0)

**இராவணன் சூரியபானுவைக் கொலைபுரிதல்.**

அன்னதோரணமேகொண்டரக்கர்தம்
மன்னன்மன்னுபெருவலிவாயிலோன்
றன்னைமெய்தரியாவகைசாடினான்
என்னவீரனோவென்றிமையோர்சொல. (௪௧)

**மாணுபத்திரன் போருதல்.**

ஏணின்மிக்கவன்வீழவியக்கர்கோன்
காணவப்படைகைகழிந்தோடிடத்
தாணுவொத்தபுயத்தினன்றானைசூழ்
மாணுபத்திரன்வந்துவிலக்கினான். (௪௨)

விலங்கியாங்கவன்வெய்யவரக்கரைக்
கலங்கியோடக்களப்படக்கொன்றிட
வலங்கொள்வாளம்மகோதரனாதியோர்
சலங்கொள்சீயமெனவந்துதாக்கினார். (௪௩)

தாக்கிமேல்வருதானைசரிந்திட
நூக்கவாயிரவாயிரநூழில்கள்
ஆக்கியாக்கியரைத்திடவப்படை
காக்குநாயகன்கண்ணெரிகான்றுளான். (௪௪)

நன்றுநன்றுநம்வீரமெனநகர்க்
கொன்றுமேல்வருகூற்றமன்னோர்களில்
கன்றுவெம்புகைக்கண்ணனேக்கண்ணுறாச்
சென்றுதாக்கினன்றேவர்திகைப்பவே. (சரு)

தாக்குவெம்போரியக்கர்தலைவனும்
வீக்கும்பைங்கழல்வெம்புகைக்கண்ணனும்
நூக்கிநாட்டமெரியெழநோக்குவோர்
போக்கிலாதுபொருகின்றவெல்லையில். (சசு)

**தூமாட்சன் மாணுபத்திரனைத் தண்டாலெறிதல்.**

மாணிரைத்தமணிவலயங்களாம்
பூணுடைப்புயத்தம்பன்புகைக்கண்ணன்
மாணுபத்திரன்றன்வரைமார்பிடை
ஏணுடைக்கதையான்முனிந்தெற்றினன். (சஎ)

**தூமாட்சன்மாணுபத்திர னடியால் விழுதல்.**

அலகிலாற்றலியக்கனடித்திட
நிலைகலங்கலிலாதநிசாசரன்
தலைநெரிந்திடத்தண்டினடித்தலும்
மலைவிழுந்தெனவீழ்ந்தனன்மண்ணின்மேல். (சஅ)

ஆங்கவன்விழக்கண்டவரக்கர்கோன்
தாங்குதண்டினன்சென்றுதரைப்படப்
பூங்கழற்காலியக்கனும்போரெதிர்
நீங்கிலான்வந்தவனொடுநேர்ந்தனன். (சகூ)

**மாணுபத்திரவக் தூதர்கள் இராவணன்மீ தம்பேவுதல்.**

அக்குரூரனுமாங்கவனுஞ்சினும்
மிக்கபோரிலிராவணன்மெய்யின்மேல்
தைக்கவெய்யவியக்கன்வெந்தண்டினால்
பக்கமோவிபறிந்திடமோதினன். (ருO)

முடிபிளக்கத்தரிக்கிலனும்முகில்
இடியெனக்கதறிக்கொடிராவணன்
கொடுமெனத்தன்கொதித்தவன்மேல்விழ
அடுபுலிங்கிடையாடெனவோடினன். (ருக)

**இயக்கசேனை முதுகிடல்.**

ஈடுபட்டவியக்கரிரிந்துபோய்
நாடுவிட்டார்சென்றந்தநன்னிலைக்

கோடுவிட்டகுரங்கெனக்கூடலார்
காடுவிட்டருங்கன்முழைநண்ணினர். (ருஉ)

அன்னசேனைகெடவளகாபுரி
மன்னன்வாளமர்மாறெதிர்ப்போரிலாத்
தென்னிலங்கைக்கிறைவன்முன்சென்றவற்
கின்னவாயவினியனசெப்பினன். (ருங)

## குபேரனிராவணனுக் கறவுரைகழறல்.

முன்னுனக்குமொழிந்தவுறுதிகள்
பின்னெனக்குப்பெரும்பகையானவா
கொன்னினைப்போர்மனத்தறங்கூடுமோ
என்னுனக்கினிச்சொல்லுவதேதைழகேள். (ருச)

தந்தைதாயரைத்தம்முனைச்சார்நெறி
அந்தணாளரைச்சீறுமறிவிலோர்
இந்தலோகத்திரும்பழியெய்திமேல்
அந்தலோகத்தருநரகெய்துவார். (ருரு)

## இராவணனுடன் குபேரன்போருதல்.

என்னநீதியிராவணனுக்கவன்
சொன்னமாற்றஞ்சுவறெறிபங்கென்ன
அன்னவன்னுண்ணுழையாதைத்திடத்
தன்னினேரிலான்றண்டினைவாங்கினன். (ருசு)

## வேறு.

நீதியானதோதினலுநீசரானவர்க்கறம்
போதியாதெனத்தெளிந்துபோர்புரிந்துபொற்கணன்
ஏதியானசாதியாமிராவணன்றன்மெய்யின்மேல்
ஆதினானமோதினனழன்றுதண்டுகொண்டரோ. (ருஎ)

துன்றுதோளிராசராசன்மோதமெய்துளங்கலால்
இன்றுகாணலாமிவன்றன்றிண்மையென்றிராவணன்
குன்றுசென்றதன்னவுட்கொதித்துமண்டிமேல்விழ
வென்றிவீரர்தங்களுக்குவெய்யபோர்விளைந்ததே. (ருஅ)

கோபமுந்துவாலிசுக்கிரீபருங்கொதித்தசுந்
தோபசுந்தரும்மெனச்சுழன்றுசாரிகைத்துறைத்
தாபமின்றியேதசக்கிரீவனுந்தமையனும்
பாவதன்மமும்மெனப்பகைத்துளோர்கள்போர்செய. (ருகூ)

தேசநாசமானதென்றுசித்தருமியக்கரும்
கூசவாசவாதியோர்குலைந்திடச்செருச்செயும்

நீசன்மேலவ்வீசனண்பனீணெருப்பினுயுதம்
வீசவாசில்பாசபாணிவாளியால்விலக்கினன். (சுo)

### இராவணன் குபேரன்றலையில் தண்டான்மோதுதலுமவன் மூர்ச்சித்தலும்.

எயுமென்னமாயையொன்றியற்றியுண்மயக்கியத்
தீயவன்குபேரனைச்சிரத்தின்மீதடிக்கவத்
தூயவன்றளர்ந்துமெய்துளங்கியாவிசோர்தலும்
ஆயதன்மைகண்டுசேனையங்குநின்றகன்றதால். (சுக)

### இராவணன் அளகையைக்கொள்ளை யடித்தல்.

வண்டுசேர்பொழிற்குபேரமன்னன்வாழுமாநகர்
கண்டகண்டமாடெலாங்கவர்ந்துகொண்டுபண்டைநாள்
புண்டரீகவாசனன்கொடுத்தபுட்பகத்தையும்
கொண்டுவென்றிகொண்டரக்கர்கோனுவந்துபோயினன். (சுஉ)

வேறு.

### புட்பகங்கைலையிற் றடைபடல்.

வெற்றிகொளரக்கன்விடுபுட்பகமெழிற்கயிலைவெற்பையணுகா
விற்றவலியச்சினவெனக்கருதிநிற்றலிலிதற்குநடவாக்
குற்றம்வருகைக்குவழிதெற்றெனவுரைத்திரெனவுட்கொடியனாய்
அற்றதலைபெற்றிடுமரக்கனதுரைத்திடவமைச்சர்நினைவார். (சுங)

அந்தணனிருந்தவமுயன்றதனதன்பெறவுவந்தருளொடும்
தந்தபினவன்றனைநெடும்பகல்பிரிந்திலதுதங்குபிரிவால்
சிந்தையலம்வந்துசெயலின்றியிதுநின்றதுகொலென்றுதெளிய
மந்திரிகள்சிந்தைசெயவந்தணுகியிந்தவுரைநந்தியயிலும். (சுச)

### நந்தி யிராவணனுக்குப் புட்பகந்தடையுற்ற காரணங்கூறுதல்.

சங்கமலையுந்தடிதடங்கடலநந்தசயனந்தனிலிருஞ்
செங்கமலையுந்திகழ்முகுந்தனுமயன்றனுடிருந்திரிபுரம்
மங்கழல்செய்சங்கரனுமங்கையுமகிழ்ந்தினிதிருந்தவிடமித்
துங்கமலையென்றிரதமிங்குவருகின்றிலதுதுன்றுதிறலோய். (சுரு)

படிக்கழிவினைச்செய்மிகுபற்றலர்கண்முப்புரநெருப்பின்விழவோர்
வடிக்கணைதிரித்தவன்மலைக்குமிசைபுட்பகநடக்கவரிதிங்
கடுக்கழிவினைச்செயலகப்படுமெகநிச்சயமகற்றிரதமென்
றிடித்தவனுரைத்திடவிரக்கமிலரக்கனிதுசைத்திதுசெய்தான். (சுசு)

### இராவணன் நந்தியை இகழ்தலு மவன்சபித்தலும்.

உரங்குடையநெஞ்சரமெனுஞ்சொல்பலவுஞ்சொலியுயர்ந்தகுணனும்
அரன்றனதுநந்திதன்முகந்தனையிகழ்ந்திடவவன்குபிதனாய்

இரங்கலைகுரங்குமுகமென்றெனையிகழ்ந்தவுனிலங்கைநகரில்
குரங்குகள்புகுந்துதனிகொன்றிடுகநின்குலனையென்றுரைசெய்தான். ()

## இராவணன் கைலையை யெடுத்தல்.

சகட்டுருளையிற்றிரிபிறப்பிலிசலிப்பவெருவுற்றதவசிப்
பகட்டிதுவெனக்கருதிரக்கமிலரக்கனோர்பழிப்பிலவர்மேல்
முகட்டெனதுபுட்பகம்விலக்குகயிலைக்கிரிமுரிப்பனெனவோர்
துகட்டுகள்படக்கடிதெடுத்தனன்மிகைத்தவர்துணுக்கமுறவே. (சுஅ)

சத்தவிருடிக்கணமகப்படவெழிற்றவமுனித்தலைவரும்
சுத்தவிதயப்பிரமநிட்டருமிறப்பில்சுரர்கொத்தடையவும்
பித்தருமதித்ததவபத்தருமெழிற்பிறமதத்தலைவரும்
சித்தருமியக்கரும்வெருக்கொளுமனத்தரடையச்சிதறினர். (சுகூ)

ஆடல்புரிபூண்முலையரம்பையர்கள்சிந்தையலம்வந்தலறினர்
பாடல்புரிதும்புருவுநாரதருமாதியர்பயந்தழுவினர்
கூடலைமுயன்றனர்விரும்பவதிகோபமொடுகூடநினையா
ஊடலைமறந்துமைமடந்தையரனைத்தனமுறத்தழுவினள். (எ0)

## சிவன் கைலையில் கால்விரலாலூன்றலும் இராவணன் வருந்துதலும்.

மறைத்தவர்மறுக்கமுமடக்கொடிநடுக்கமுமனத்திலுணராப்
பிறைச்சடைமுடிக்கடவுள்பொற்றிருவடிப்பெருவிரற்றலையினால்
நெருக்கெனவழுத்திடவுடற்பொறைபதைப்பநிருதர்க்கிறைவனும்
கறுத்தவுருவத்தனுமறக்கருமனத்தன்வெருவிக்கதறினன். (எக)

## இராவணனழுதல்.

காயவரையாலைமிசைபாய்பவரமுக்கியகரும்பதெனவே
சேயுயர்விசும்புநிலனுந்திரைகளுந்திசைகளோடுதிர்தர
வாயொருபதுங்குருதிபொங்கிடவயங்குவருடங்களவையோ
ராயிரம்விலங்கலுளடங்கினன்முடங்கியலம்வந்தலறினன். (எஉ)

## வேறு.

வான்றிகழ்வெள்ளிவெற்பின்கீழுற்றுவருந்துகின்ற
ஊன்றிகழ்வேலினானையமைச்சர்தாமுற்றுநோக்கித்
தேன்றிகழிதழியான்றன்றிருச்செவிசாரநின்கை
தான்றிகழ்வீணையாகப்பாடுதிசாமமென்றார். (எங)

## இராவணன் சாமகானஞ்செய்தல்.

அன்னதேகருமமென்னாவரக்கனுமறிவுட்கொண்டு
தன்னதுதலைமிலொன்றைத்தடிந்துதன்கையிற்சேர்த்த

இன்னவின்னரம்பிற்றுந்தங்கிளை முதலிசைகளேழால்
பன்னருஞ்சாமகீதம்பரிவுடன்பாடலுற்றான். (எச)

**சிவ னிராவணனுக்கு வரமளித்தல்.**

அவ்வழியவனும்பாடவரன்மகிழ்ந்தழைத்துக்கொண்டு
மூவ்வகையுலகுமாளமூன்றரைக்கோடியாண்டும்
எவ்வகைப்படையும்வெல்லுஞ்சந்திரவாளுமீந்தான்
பொய்வகைநிருதன்பெற்றுவிடைகொண்டுபோகலுற்றான். (எரு)

**வேறு.**

பொருப்பரையன்மடப்பாவை யிடப்பாகன்பொருப்பின்கீழ்க் கிடந்துபோகா, திரக்கமுறக்கதறுதலா லிராவணன்று னெனப்பெயருமியம்பிவாவென், றரக்கனுக்கு முக்கோடியரைக்கோடிவாணாளுமளித்துப் போவென், றுரைப்பவரனடிவணங்கி யாங்கெழில்சேர் புட்பகத்தி னுவந்து போனான். (எசு)

**வேறு.**

அரக்கனுக்கிவ்வரமளித்தவாறெலாம்
துரக்கறவுணர்ந்தனன்றுளபமார்பனும்
நிறக்கருமேனியனிலையுருவகை
அறுப்பெனென்றெழுந்தனனமரர்கூப்பிடால். (எஎ)

தெண்டொடுகுடையதுசெங்கையேந்தினன்
குண்டிடைநிறைதரக்குளிரச்சாத்தினன்
தெண்டிரைக்கடலினுட்சென்றவாறெலாம்
நின்றெனக்கருளெனநிருதன்கூறுவான். (எஅ)

**வேறு.**

பொன்னிறக்கண்ணன்றன்மேற்பொருந்திடும்போரும்வென்று
நன்னிறத்திங்கள்சூடுநாயகனிருக்கைபோந்தேன்
அன்னதுகண்டுதானேயகமலர்ந்தருளினாலே
பன்னரும்வாளொடாயுள்பழிப்பிலானீந்தானென்ன. (எகூ)

**வேறு.**

**திருமால் இராவணனை வஞ்சித்தல்.**

மற்றவாளரக்கன்றனைமாயவன்முன்னம்
பெற்றமூன்றரைக்கோடியுமொழியநீபேணி
உற்றபேரரைக்கோடிநாள்கேளெனவுவந்து
பெற்றவாகனனிடத்தவன்பின்னருஞ்சென்று. (அ0)

**சிவனிராவணற் கரைக்கோடியாயுளளித்தல்.**

முன்னமூன்றரைக்கோடியுமொழியநீமுதல்வ
இன்னமோரரைக்கோடிநாளீந்தருளென்ன

---

* 77-78-79-ம் பாடல்கள் பல பிரதிகளிற் காணப்படவில்லை.

மன்னுமாசுணப்பாயலான்மாயமீதென்னு
உன்னுமாமலைகளுடனுமாபதிநகைத்தே. (அக)

அன்னவாறரைக்கோடியேயளித்தனமென்றும்
நின்னனுமமாமிராவணனெனநியமித்தும்
மின்னும்வார்சடைக்கண்ணுதல்விண்ணவன்விடுப்பப்
பொன்னின்மாமுடிப்புட்பகம்பொருந்தினன்போனன். (அஉ)

ஏ - வது, வரையெடுத்தபடலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-நகரு.

## அ - வது, திக்குவிசயப்படலம்.

கங்கைசேர்சடைக்கண்ணுதல்காதலி
தங்குபங்கன்றனதருள்பெற்றவத்
துங்கமால்வரைத்தோணிருதன்றிசை
எங்கும்போர்செய்தியவனமெய்தினன். (க)

வாக்கினன்மனத்தான்மழைவண்ணனைப்
போக்கிவேறறியாதபொற்பாவையை
ஆக்குவேணியுமானுரியாடையும்
வீக்குமாதவவேடத்தினுடனை. (உ)

### இராவணன் வேதவதியைக் காண்டல்.

மய்தவழ்ந்தகார்வண்ணனைக்கண்ணுறச்
செய்தவம்புரிசிந்தையினுடனைக்
கய்தவமிலாக்கற்புடைக்கன்னியை
எய்தவந்தவிராவணனோக்கினன். (ந)

### வேதவதியை இராவணன் வரலாறு வினுதல்.

அன்னகன்னியைநோக்கியரக்கர்கோன்
உன்னைநோக்கியுலகஞ்செயுந்தவம்
தன்னைநீசெயத்தக்கதன்றுன்பெயர்
என்னையார்மகணீயென்றியம்பலும். (ச)

### வேதவதி தன்பிறப்பு முதலியவுணர்த்தல்.

கோதினீதிக்குசத்துவசன்னெனும்
மாதவன்மறையோதிடமற்றவன்

ஓதுவேதத்தினுற்பவித்தேனையென்
காதைவேதவதியென்றுசாற்றினான். (௫)

பேசிவந்தவர்தங்களுக்கென்ப சா
டாசின்மால்வரனாயென்மகளுக்கு
வாசுதேவனெனவரித்தேனென
ஆசையற்றங்கனைவரும்போயினார். (௬)

சம்புவென்னுந்தயித்தியர்கோன்மனம்
வெம்பியெல்லியுறங்கிடும்வேலையில்
எம்பிதாவைவதைத்திடவெம்மனை
உம்பர்வாழ்த்தவுடனெரிமூழ்கினாள். (௭)

எந்தையெண்ணமுடிக்கவியற்றுமென்
சிந்தைமாதவன்றன்வழிச்செய்கையால்
இந்தமாதவம்பூண்டனென்யானென
அந்தநீசனடாதனகூறினான். (௮)

**வேதவதியை இராவணன் மனைவியாமாறு வேண்டுதல்.**

இலங்கைமன்னனிராவணனென்பெயர்
புலன்கள்வென்றபுலத்தியன்பௌத்திரன்
கலங்கல்சிந்தையென்காதலியாய்த்தரா
தலங்களுக்குத்தலைவியுமாகென்றான். (௯)

**இராவணன் நாரணனைப் பழித்தல்.**

குலத்தினான்மிகுங்கொற்றத்தினாற்பெரும்
பலத்தினாலோர்பழிப்பில்வடிவினால்
நலத்தினாலெனைநாரணனொக்குமோ
உலத்தினாய்பயனென்கொலுடம்பைநீ. (௧௦)

**வேறு.**

**வேதவதி நாரணனைப்புகழ்ந்து இராவணனை யிகழ்தல்.**

ஓராதவரனுக்கனுரைத்தசொலச்
சீரார்மடவாள்செவியிற்கனல்காய்
நாராசநுழைந்தெனநண்ணுதலும்
வேராவிவளின்னவிளம்பினளால். (௧௧)

பய்யாடரவிற்றுயிலும்பரனைக்
கய்யாழியனைக்கருணாகரனை
மய்யார்மழைவண்ணனைமாமலர்மேல்
செய்யாளுறையந்திருமார்பினனை. (௧௨)

சேயோனையடைந்தவர்சிந்தையனைத்
தூயோனையெனுவியையென்றுணையை
மாயோனைவரித்தனென்யானெனவும்
பேயேறினைபோலிவைபேசுதியோ. (௧௩)

நிலமன்னிநெடும்பழிமேனிரயம்
பலமன்னுவைபாரினினைந்திடிலைம்
புலன்வென்றபுலத்தியமாமுனிவன்
குலமன்னவனுக்கிவையோகுணமே. (௧௪)

### இராவணன் வேதவதியைத் தீண்டல்.

குயில்பற்றியசொல்லிவைகூறுதலும்
மயில்பற்றியமன்மதனைங்கணைதன்
உயிர்பற்றியரிந்திடவுள்ளழியும்
செயிர்பற்றியசிந்தையனீதுசெயும். (௧௫)

மெய்யார்குழலாடன்மலர்க்கையினைக்
கய்யாலவன்முட்டிலுங்கனல்காய்
நெய்யாரழலாமெனநின்றெரியச்
செய்யார்வடிவாளிவைசெப்பினளால். (௧௬)

### வேறு.

### வேதவதி இராவணனைச் சபித்தல்.

வாடாமலரோன்வரச்செருக்கான்மற்றெனைநீ
கூடாதெனசொல்லிக்கூசாதுதீண்டினையால்
ஏடாவுனக்குமிலங்கைக்குமுன்கிளைக்கும்
கேடாகத்தோன்றுவேனென்றுள்கிளர்சினத்தாள். (௧௭)

### வேதவதி தீப்பாய்தல்.

வானோர்மகிழ்ந்துமலர்மாமழைபொழிய
ஏனோர்களெல்லாமினிப்பிழைத்தோமென்றியம்பக்
கானாரருந்தவத்தோர்கண்டுவியப்பெய்தத்
தேனார்மொழிமடவாள்செந்தழலின்மூழ்கினாள். (௧௮)

### வேதவதியே சீதையெனல்

வன்னியிடைமூழ்கிமாதவத்தான்மாச்சனகன்
தன்னுடையவேள்வித்தரணியிடைவந்துதிப்ப
அன்னவளைமுன்னாளமிழ்திற்பிறந்தாளைப்
பொன்னொளிசேர்பூணினாய்வில்லிறுத்துக்கைபிடித்தாய். (௧௯)

### இராமன் இராவணனுடைய மற்றைச்சரிதமு முரையெனல்.

என்றுமுனியுமியம்பவதுகேட்டு
வென்றிச்சிலைதரித்தவீரன்வியப்பெய்திக்
கன்றியசிந்தையரக்கன்கடைச்செய்த
தொன்றுமொழியாதுரைத்தியெனவுரைப்பான். (௨0)

### அகத்தியனிராவணனது மற்றைச்சரிதமு முரைத்தல்.

வேதவதிதான்சீறிவெந்தீயின்மூழ்கியபின்
போதமிலாவரக்கன்புட்பகத்தின்மீதேறி
ஏதமிலாவிந்திரனேயாதியிமையவரும்
மாதவருஞ்சேர்ந்தமருத்தன்மகமடைய. (௨௧)

### இந்திரனாதிய ரிராவணனுக்கஞ்சி வேற்றுருவேய்துதல்.

வாசவனஞ்சிமயிலுருவந்தான்கொண்டான்
பாசக்கரத்தான்பறந்தானோரன்னமாய்க்
காசினமன்கலங்கிக்காக்கைவடிவாகக்
கூசிக்குபேரனும்கோம்பிவடிவானான். (௨௨)

மற்றையவரெல்லாமாயாவுருவங்கொண்
டுற்றதிசைதிசையேயோடவுயர்ரியமம்
பற்றியிருந்தபரமன்றனைநோக்கிக்
கொற்றம்புரிமனத்துக்கோளரக்கன்கூறுவான். (௨௩)

தோற்றேனுனக்கென்றுசொல்லுதிநீசொல்லாயேல்
ஆற்றினாலென்னோடமர்பொரவாவென்றுரைப்பச்
சீற்றமிகுமன்னநீயாரேயெனச்செப்பச்
கூற்றமனையோனகைத்தினையகூறினான். (௨௪)

மன்னன்குபேரனைமுன்வாளமரிற்போர்வென்று
பொன்னின்விமானமாம்புட்பகமுங்கைக்கொண்ட
என்னையறியாயோவென்னவிறையுனக்கு
முன்னவனைப்போர்வென்றமூர்க்கனேதானென்றான். (௨௫)

### வேறு.

என்றுரைத்தெரியிற்பொங்கியெழுந்தமர்புரியுநீதிப்
புன்றொழில்கடிந்தவந்தப்புரோகிதனவனைநோக்கித்
துன்றியதிறலோய்நீயுந்தொடங்கியமகமுற்றாது
குன்றியவினையதாகிற்கொல்லுநின்குலத்தையென்றான். (௨௬)

அன்னவனுரையக்கேட்டவரசர்கோனமர்கைவிட்டு
வன்னிசார்ந்திருக்கும்வேந்தன்மாதவமடையநாறி

என்னதுவெற்றியென்றூர்த்திராவணனேகத்தேவர்
மன்னவன்பிழைத்தேனென்றோர்மயிலினைநோக்கிக்கூறும். (உஎ)

### இந்திரன் மயிற்பறவைக்குவரமளித்தல்.

தீயவல்லரக்கன்சீறித்திகழுநின்னுருவங்கொண்டு
போயுயிர்பெற்றேனின்றபுகழினாய்புவனந்தன்னில்
ஓய்விலாமாரிபெய்யினுவகையுமென்னைப்போல
ஆயிரங்கண்ணுமுண்டாகென்றனனமரர்கோமான். (உஅ)

### இயமன் காகத்துக்கு வரமளித்தல்.

வனத்திலோர்காக்கைகண்டுமென்னுசீரியமன்கூறும்
உனக்கொருகொலைநோயின்றியுலகத்திலிறந்தோர்தம்மை
நினைத்துனையூட்டவன்னோர்மகிழநீணிலத்தில்வாழும்
அனைத்துயிர்களினுந்தீர்க்கவாயுவுண்டாகவென்றான். (உகூ)

### வருணனன்னப்பறவைக்கு வரமளித்தல்.

பாலைநீரொழியவுண்ணும்பறவையைவருணன்கண்டுன்
கோலநீடுருவமெய்யைக்கொண்டுநான்பிழைத்துப்போந்தேன்
மேலைநான்முகத்தினனுக்கூர்தியாய்விளங்கும்வெள்ளை
வாலிதாநிறமுமாகிவாழுதியாகவென்றான். (௩0)

### குபேரன் கோம்பிக்கு வரமளித்தல்.

பொன்னிறச்செல்வன்கோம்பிபோவதைபோற்றிக்கூறும்
என்னிறறிவதனைக்காத்தோய்க்கெதிருபகாரமுண்டோ
மின்னுறவிளங்கும்பூணாய்வேண்டுவேண்டுருவமாகி
உன்னிறமெல்லாஞ்செம்பொன்னொளிநிறமாகவென்றான். (௩க)

### இராவணன் அயோத்தி யெய்துதல்.

இந்திரன்முதலாயுள்ளோரிவ்வகைவரங்களீந்து
வந்துமன்னவனோடந்தமகத்தினைமுடித்துப்போனார்
வெந்திறலரக்கன்பாரிலெதிர்ந்தவர்தம்மைவெல்லா
அந்தகன்புரத்தினேற்றியயோத்திமாநகரஞ்சார்ந்தான். (௩உ)

### வேறு.

### அயோத்தி அரசனோடு இராவணன் பொருதல்.

எம்மாலுமிருக்காலுமொருக்காவுணரிமையோர்
தம்மாலுமொருக்காலுநினைக்குந்தரமல்ல
இம்மாநகரனரண்ணியனென்போனெழின்மதில்சூழ்
அம்மாநகர்மன்னற்கிவையுரைத்தானடலரக்கன். (௩௩)

போரஞ்சினெனுனக்கென்னுதல்போர்செய்குதல்செய்கென்
றீரஞ்சினதெனவிஞ்சொளிமுடியோனிவைவிளம்ப

வீரஞ்சினமிகுமன்னவன்மேகங்குமுறிடமைச்
சீரஞ்சினமயிலாலுயர்திருநாடனுரைக்கும். (௩௪)

திருவோங்கியவிம்மாநகரரசாண்டவர்தீயோய்
ஒருவோங்களுங்கேளாதசொல்லுரைத்தாயெனையினிநாம்
இருவோம்பொரவிருவோம்படையிடைவந்துதவாமல்
பொருவோஞ்செருவெனவேவலும்புறப்பட்டதுபடையே. (௩௫)

பாழிப்புயத்தரக்கன்பரிவொடுதம்பியுந்தானும்
ஆழிப்பெருந்தேரான்மிடையனரண்ணியன்படையும்
ஊழிக்கனலெனவொன்றிடவுறுசேனையையரக்கன்
தாழிப்பெருஞ்சோரிக்கடைநூறாயிரஞ்சமைத்தான். (௩௬)

யானைப்பெருந்தேராண்மிடையளவற்றனபெரும்போர்த்
தானைக்கடல்பாழாகிடத்தரியாதவன்சலியா
மானத்தினரனரண்ணியன்வளைவாளெயிற்றினன்மேல்
சோனைப்பெருமாரிக்கணைசொரிந்தான்மனநெரிந்தான். (௩௭)

வீரச்சிலையனரண்ணியன்விடுவாளிகள்வெய்யோன்
மார்பத்திடையுறைத்தைக்கவுமதியாதுவந்தடர்த்துப்
பாரப்பணைக்கரத்தாலவன்பதைப்பப்புடைத்தாவி
சோரத்துயருறுவான்றனைமுகநோக்கினன்சொல்லும். (௩௮)

பொடிபட்டதுன்றிண்படைபொரவந்தமராற்று
தடிபட்டுவிழுந்தாயெனக்கமரஞ்சினையென்றும்
மிடிகெட்டரசாளாதறவிமைத்தாயெனமிகையால்
இடிபட்டிடநகைசெய்தலுமனரண்ணியனியம்பும். (௩௯)

துன்னிட்டதலைத்துன்மதிதோற்றேமெனவறப்போர்
நன்னிட்டையிலாதாயெமைநகைசெய்தனைநாங்கள்
வெந்நிட்டிலமுனக்குன்றொடுவெம்போர்செயவென்கால்
முன்னிட்டதுபின்னிட்டிலெனெனப்பின்னையுமொழிவான். (௪௦)

## அயோத்திமன் அனரணியன் இராவணனைச் சபித்தல்.

காலத்தினைஞாலத்தவரெவரேகடப்பவர்தாம்
ஆலக்கொடுமெனத்தோயவமதித்தாயெனையதனால்
கோலத்தசரதராமனென்குலத்தோன்கொடுங்கணையால்
தாலக்குலைபோனின்றலைதரைவீழ்கெனச்சபித்தான். (௪௧)

இச்சாபமயோத்திப்பதிக்கிறைவன்சினத்தியம்ப
அச்சாபமனத்திற்கொளகில்லாதடலரக்கன்
கைச்சாபம்வளைத்துப்பலவிழியுங்கனல்பொங்க
நச்சார்கணைபலதூவிநடந்தான்பழிநடந்தான். (௪௨)

### நாரதன் வருதல்.

ஒன்னார்களிலங்காபுரியுடையானுடனொளிவாழ்
மின்னார்முடியனரண்ணியன்வெம்போரெழும்வேலைப்
பொன்னார்புரியாழ்கொண்டிசைபொன்னடியல்புகலும்
முன்னாரதமுனிவந்திறையுடனோக்கினன்மொழிவான். (சரு)

### வேறு.

### நாரதன் இராவணனை இகழ்தல்.

போரார்வெஞ்சிலையரக்கபொருளல்லா நரியோடும்பொருமோசீயம், தீராததீவினையாலடர்ப்புண்டு திண்பசிநோய்மூப்பினொந்து, சோராவிம்மானுடரைத்தொடர்ந்திறுத்தாயெனக் கேட்டோந்துன்னார்போரில், போராதரிலையுடையோய்பிணம்வெட்டிவான்முறித்துப்பெறும்பேறுண்டோ.

பெற்றதாய்புரண்டலறப்பிள்ளையுயிர்தான்கொண்டும்பெருகுங்காதல்
உற்றழவப்பாலர்தமையீன்றெடுத்துவளர்த்தாரையுயிரையுண்டும்
குற்றமானதும்பெருக்குங்கொடுநமன்றன்வலைப்பட்டுக்குலைந்துவீழும்
மற்றேராசாமில்லாமானுடரைக்கொல்லல்வழக்கன்றேயென்றான். ()

### நாரதன் யமனோடுபோர விராவணனை யேவுதல்.

என்றுமுனியிவைகூறவிராவணன்கேட்டெம்பெருமானியம்பிற்றன்றோ
இன்றுசெயுமிதுவல்லாய்யானறிவதொன்றுண்டோவென்றுகூற
நன்றுபெரிதெனமகிழ்ந்துநாரதமாமுனிகூறுநல்லையின்னே
சென்றுநமன்றன்னோடுசெருச்செய்தியவன்றோற்கைதிண்ணமென்றான்.

### நாரதன் நமனை யடைதல்.

அந்தமுனியிவையருளவவனுடையவடிவணங்கியரக்கர்கோமான்
சிந்தையினுங்கடுந்தெய்வத்தேரதனைத்தென்றிசைமேல்விடுப்பத்தேரின்
முந்துமுனிதனைக்கண்டுமுறையாலேயருச்சித்துமுனியேயிங்கு
வந்தபொருளுரையென்றுநமன்கூறமாமுனிவன்வரைந்துகூறும். (சஎ)

### நாரதன் நமனை இராவணனோடு போரவேவுதல்.

மின்னஞ்சுமொளிமுடியாய்விளம்பக்கேள்வேதியனும்விதியைநோக்கி, முன்னஞ்செய்தவச்செருக்கான்முனிவினன்மூவுலகுஞ் சுடுவோன்கண்ணும், என்னெஞ்சவிராவணன்வாளமர்பொருவானின்றன்மேல்வரக்கண்டாற்றேம், என்னெஞ்சமெனையுந்தயான்வந்தேனிதுவிங்குப் புகுந்ததென்றான். (சஅ)

அதித்தன்றருமைந்தற்கந்தமுனியிதவுரையறையுங்காலைச்
சாதிக்கும்பொருளெல்லாந்தவத்தினற்சாதிக்கத்தகுமென்பார்போல்
சோதிப்பன்மணிநெடுந்தேர்ச்சுடர்மவுலியிராவணன் றொல்லுலகையெல்லாம், வாதிக்குநமன்றன்னைவாதிப்பான்வளநகரிவந்துசார்ந்தான். (சகூ)

## இராவணனெமலோக வாசிகளைக் காணுதல்.

சீர்க்குமிழினிலைகலக்கித்திகழ்குழையைச்செலநோக்கிச் செறுத்துக்கோட்டிப், பார்க்கும்விழிப்பாவையராம்படுகுழியில்விழாதோர்க்கும் பற்றொன்றில்லா, நீர்க்குமிழியுடம்பென்றுநிலையறங்கள் செய்தோர்க்குநெறியினின்றோர், யார்க்குமிழிவாஞ்சுவர்க்கத்தவ்வவர்களினிது வீற்றிருப்பக்கண்டான். (௫௦)

பூதானங்கோதானமுதலானபூசுரர்கடம்மைப்போற்றி
மாதானஞ்செய்தோரும்வறியோராயிவைகொடுக்கமாட்டாராயின்
யாதானுந்தமக்கப்போழ்தெய்தியதையிட்டுண்ணுமிவருமன்ன
தாதாவுமுதலானதயாவினோர்வீற்றிருந்ததன்மைகண்டான். (௫௧)

ஈடங்கொடுக்கும்வினைகடிந்ததாபதர்களினிதங்குத்தங்கக்கட்டி, மடங்கொடுத்துமறையவர்க்குமனைகொடுத்து வைகாசிமாதந்தண்ணீர்க், குடங்கொடுத்துங்குளிர்காலங் குளிர்ந்தவர்க்குப்போர்வையினைக் கொடுத்துந்தங்க, இடங்கொடுத்துமிங்கிவர்களெழின்மணிமாமண்டபத்திலிருக்கக்கண்டான். (௫௨)

உடுப்பதுவுமுண்பதுவுமில்லாதோர்க்குடைகூறையுதவியுண்ணக் [ம்மை
கொடுத்தவர்நோய்தீர்த்தோருங்கொடியோராய்க்குணங்கள்பல செய்துத
அடுத்தடுத்துவைதாலும்பொறுப்போருமந்தணரோடாவுக்குற்ற
நடுக்கமதுதீர்த்தோருநல்லுலகினாயகராயிருப்பக்கண்டான். (௫௩)

மன்றுபறித்துண்டோரும்வழக்கல்லாதுரைத்தோருமனையாடன்னோ
டொன்றியுடன்வாழாதேயோராதேபரதாரமுவந்துளோரும்
கொன்றுடலந்தின்றோருங்கோட்சொல்லித்திரிவோருங்கோலிச்செய்த
நன்றிதனைமறந்தோருநரகத்தினிடைக்கிடந்துநடுங்கக்கண்டான். (௫௪)

கற்றவரைக்காய்ந்தோருங்கைப்பிடித்தகாதலியைக்கனன்றுளோரும்
பெற்றவர்தம்பசிகூரப்பெருவயிறுவளர்த்தோறும்பேணித்தம்மோ
டற்றவருக்கருதோருமந்தணரையிகழ்ந்தோருமமரிலாண்ட
கொற்றவனைவிட்டோடுகொடியோருங்கும்பியிடைக்குளிப்பக்கண்டான்.

கோபத்தால்வினையெண்ணிக்குடிகேடுசூழ்ந்தோருங்குலத்தால்வந்த
தாபத்தாலிறந்தோரைத்தாமடர்ந்துவைதழிக்குந்தயாவிலோரும்
ஆபத்தாலபயமென்றேயடைந்தோரைவிட்டோருமாதியாய
பாபத்தாரும்பலரைப்பழிப்போரும்படுநரகிற்பதைப்பக்கண்டான். (௫௬)

மாவிரிநீர்க்கடல்சூழ்ந்தமண்ணுலகின்மனிதராய்ப்பிறக்கப்பெற்றும்
நாவிலரியோநமோநாராயணாயநமவென்னமாட்டாப்
பாவியரும்பலதெய்வம்பழித்துரைக்கும்பாதகரும்பரந்துதங்கள்
வாய்வழியேபுழுச்சொரியமாநகரக்கும்பியிடைமறுகக்கண்டான். (௫௭)

### இராவணன் நரகரைக் கரையேற்றுதல்.

கூறுபடுதசைமூளைகுருதியொடுகுடர்வழும்புகுழம்பியொன்றாச்
சேறுபடுகொடுநரகிற்றீவினையோர்கிடந்துழைப்பத்தெரியநோக்கி
ஏறுமினென்றவ்வரக்கனேறவிடவின்றெல்லாம்பிழைத்தோமென்றென்
றூறுதுயரின்றாகியருநரகங்காவலர்களழன்றுவந்தார். (ருஅ)

### வேறு.

### எமபடரிராவணனோடெதிர்த்தல்.

வெஞ்சினமுருக்கொண்டன்னமேனியர்வெய்யகண்ணர்
மஞ்சிடியிடித்தசொல்லர்மலைமுழைதிறந்தவாயர்
நஞ்சினுங்கொடியநெஞ்சர்நமன்றருஞாலமெல்லாம்
அஞ்சுநம்வலிக்கென்றஞ்சாரரக்கரோவெனவந்தார்த்தார். (ருகூ)

என்றுரைத்தெரியிற்பொங்கியிராவணன்றனைச்சூழ்ந்து
கொன்றுயிர்குடித்துமென்றுகொதித்துமேன்மண்டிவீழ
வன்றிறலரக்கனமைச்சரோதானமுதலாயுள்ளோரர்
சென்றுதாக்கினர்களந்தச்செருக்கிளர்சேனையோடும். (சுo)

தருக்குடைத்தருமன்சேனைதாக்கியவரக்கன்சேனை
வெருக்கொளநெருக்கிப்புக்குவெங்களத்தவியநூறி
அரக்கர்கோன்கரியமேனியணிதிகழுருக்குப்பூத்த
பொருப்பெனக்குருதிபொங்கப்பொருபடைதூவியார்த்தார். (சுக)

விரிகடலிலங்கைவேந்தன்மேவியவூழிகாலத்
தெரியெனவெழுந்துபொங்கியிருபதுகரங்களாலும்
பொருபடைவழங்கித்தெய்வப்புட்பகங்கடாவிவெம்போர்த்
தருமன்றன்சேனையெல்லாந்தரைபடச்சாடுங்காலை. (சுஉ)

செருவழிந்தியமன்சேனைதிரண்டொருங்கெழுந்துசெல்லின்
உருவழியரக்கர்மேனியுள்ளுறப்படைகளுந்தி
ஒருவழியொருவர்போகாவகையுறுபடையையோட்டிப்
பொருவழியரக்கன்சீறிப்புட்பகமின்றும்பாய்ந்தான். (சுங)

வரிசிலைகையில்வாங்கிவாளெயிற்றரக்கனீசன்
பொருபடைவிடுதலோடும்பொங்கெரிபரந்துகண்ணில்
தருமன்வெஞ்சேனைதாவத்தாவியதாலமென்னத்
திரிபுரமென்னவெந்துதீந்ததுகாலன்சேனை. (சுச)

### எமன்சீறிப் பொருதல்.

போர்ப்படைபொடியாய்நூறிப்புனைகழலரக்கனார்ப்ப
ஆர்ப்பொலிசெவியினெய்தவனுயிர்த்தழன்றுபொங்கித்

தார்ப்பொலிகுருதிவண்ணத்தாண்டுமொப்பூண்டுசெம்பொன்
தேர்ப்பொலிந்திலங்குமேனித்தென்புலத்திறைவன்சீறி. (௬௫)

நெற்றியிற்காலன்செல்லநீள்பெருங்காலபாசம்
மற்றைவெங்காலதண்டம்வந்திருமருங்குஞ்செல்ல
உற்றபேரூழிகாலத்துருத்திரமூர்த்தியொப்பச்
சுற்றியசேனையோடுந்தோன்றினனுலகமுட்க. (௬௬)

நட்டமாமுலகமின்றேநாமினிப்பிழைப்பதெங்கே
எட்டனையறிவுமில்லாவிராவணவேள்வியின்று
பட்டதுபடுகவென்றுபயமுறப்பின்புபாராக்
கெட்டனரரக்கரெல்லாங்கெடாதிலங்கேசனின்றான். (௬எ)

நின்றவனிலைமைகண்டுநெய்சொரியழலிற்பொங்கி
வென்றனனன்றேவென்முன்வெருவலனின்றபோதே
என்றுதென்றிசைக்குநாதனீட்டிவேல்குலிசமேவச்
சென்றவன்றிறத்திற்றைக்கத்தென்னிலங்கேசன்சீறி. (௬அ)

கார்முகம்வளையவாங்கிக்கார்முகமாரிபோலக்
கூர்முகவாளியாலேகுறித்தவைதுணித்துவீழ்த்து
நேர்முகத்தெதிரிலாதநிருதனேநிறத்தில்வன்னி
ஆர்முகக்கணைகளுந்தியந்தகற்கலக்கஞ்செய்தான். (௬௯)

இருவருமிந்தவண்ணமேழுநாளிடைவிடாதங்
கொருவரையொருவர்வெல்லத்தொடங்குவருபாயம்பார்ப்பர்
பொருவழியரக்கன்சீறிப்பொருந்துதேர்ப்பாகன்றன்மேல்
தருமன்மேற்காலன்றன்மேற்சரங்களாயிரந்தைப்பித்தான். (எ0)

### வேறு.

என்புலத்தியன்மேனியிருந்தவன்
வன்புலத்தியன்மாற்றியமாமுனி
நன்புலத்தியனன்மகன்மைந்தன்மேல்
தென்புலத்தியமன்மிகச்சீறினான். (எக)

ஆலமென்னவனலென்னவந்தகன்
ஞாலமெல்லாநடுங்கக்கொதித்திடும்
வேலைவெங்கனலென்னவெகுண்டுவெங்
காலனன்னவற்கின்னகழறினான். (எ௨)

என்னையேவுதியென்னிலிராவணன்
றன்னைநானுயிருண்பன்றடையிலா
வன்னியன்னமதுகைடவர்முதல்
ஒன்னலாருயிருண்பதுணர்தியால். (எ௩)

### யமன் காலதண்டம்விடக்கருதலும் பிரமன்றேன்றித்தடுத்தலும்.

காலனிவ்வகைகூறிடக்காணிவன்
காலமுண்டெனனநமன்கண்ணெரி
காலமன்னுயிரெல்லாங்கலங்கிடக்
காலதண்டம்விடுவான்கருதினன். (எச)

ஆயகாலையனைத்துலகங்களும்
மாயுமின்றெனவானவரஞ்சிடத்
தூயநான்முகன்றோன்றியத்தொல்லுயிர்
நாயகன்றனைநண்ணியிவைசொன்னன். (எரு)

திண்டடம்புயத்தென்னிலங்காதிபன்
பண்டுபெற்றவரத்தின்பலத்தினல்
தண்டுநீ விடினுங்கவன்றன்னுயிர்
உண்டிடாதுவிடுதவொழிதியால். (எசு)

என்றுநான்முகனிவ்வாறியம்பலும்
தென்றிசாதிபன்றீயவரக்கன்மேல்
வென்றிமேவியதண்டம்விடாதவன்
னின்றகாலைநிருதர்குலாதிபன். (எஎ)

### வேறு.

### இராவணன் பாதாளலோகம் புகுதல்.

வெற்றியெனதென்றனைத்துமிக்கெழுந்தவுவகையனுய்விறலின்மிக்க
மற்றடந்தோண்மாரீசன்மகோதரனேமுதல்வரொடுமணித்தேரேறிப்
பற்றலரைநிலைகெடுப்பான்பாதாளத்திடைபுக்குப்பண்பினேடும்
பொற்றடமாளிகைவிளங்கும்போகபுரியெனுநகரிசென்றுபுக்கான். (எஅ)

### இராவணனேடு நிவாதகவசர் போருதல்.

அந்நகருக்கரசனுமடன்மிகுதோள்வாசுகியோடளவளாவி
மன்னியநல்லுறவாகிமணிமதியாம்வளநகரிவந்துசாரத்
தன்னிகரில்லாதோர்கள்சாதித்தபெருவரமும்வலியுஞ்சார்ந்தோர்
மின்னிலெனப்புறப்பட்டுநிவாதகவசாதியர்கள்சென்றுசேர்ந்தார். (எகூ)

ஆங்கவர்களடர்ந்துவந்தார்த்தரக்கர்மேலளவிலாப்படையையேவப்
பூங்கழற்காலரக்கனுமப்பொருபடையைப்பொருபடைகள்விடுத்துமாற்றி
தாங்கரியபடைவிடுத்துமப்படையையவர்தடுத்துந்தளர்வொன்றின்றி
ஓங்கியபேராற்றலர்களோராண்டுகைவிடாதுறுபோர்செய்தார். (அ0)

### பிரமன் நிவாதகவசர்க்குச் சமாதான முரைத்தல்.

புண்டரிகத்தயன்வந்துபொருமவரைப்போர்விலக்கிப்புகல்வானீங்கள்
பண்டுடையவரத்தினுற்பகைத்துநீர்பல்லாண்டுபடைசெய்தாலும்

திண்டிறலிலொத்தீர்களொருவரையுமொருவரமர்செயிக்கவொண்ணு
எண்டிசையுமுங்கள்வலியேறியதாலினியுறவேயினிதிங்கென்றான். (அக)

பூமருவுநான்முகத்தோன்புகன்றவுரையதுபோற்றியவனைப்போக்கித்
தாமருவியெல்லாருந்தப்பாமற்றனித்தனியேசபதஞ்செய்யத்
தேமருவுதாரவுணர்சிறப்பொடுபூசனைசெய்யவரக்கர்கோமான்
ஏர்மருவுமந்நகரிலீராருதிங்களினிதிருந்தகாலை. (அஉ)

## இராவணன் வருணன்நகரில் பொருதல்.

அந்நகரிவிட்டரக்கரடல்வருணன்றனைவெல்வானவன்றான்மேவும்
கன்னகிரிதனைமூடிக்காலகேயரையெல்லாங்கணத்திற்கொன்று
தன்னுடையதங்கையாந்தடவரைத்தோட்சூர்ப்பநகைதன்னைக்கொண்ட
மின்னனையசுடரிலைவேல்வித்துருசிங்கன்றனைவெங்களத்துவீழ்த்தான்.

புனலுறுவெண்மேகமெனப் பொலிந்திலங்கித்தோன்றுவதைப் பொருந்தாருரை, நினைவதன்முன்னெரிசெய்த நெடுஞ்சரத்தோனிருக்கின்றநெடியவெற்புத், தனையுருவநிறுத்திஞு லொக்குமெனத்தகுவதனைச் சாயாவென்றிக், கனைகழற்காற்றசுக்கிரிவன் கடலரசன்மாளிகையைக் கண்ணிற்கண்டான். (அச)

பைவிரிநாகத்தணைமேற் பரன்றுயில்கொள்பரந்தபாற் கடலிற்றந்த, தெய்வநெடுஞ்சுரபிதனைச் சென்னியிலுறவணங்கித் திறலின்மிக்க, மைவரைபோன்மெய்யரக்கன் வந்துனக்குத்தோற்றேனென் றுரைத்தலன்றி, வெவ்வமர்செய்குதல்செய்யா தெங்கொளித்தான்வருணனென விளம்பும்வேலை. (அரு)

ஊழித்தீயெனப்பொங்கி யோங்கியசீர்வருணன்றன் னுயர்தோண்மைந்தர், ஆழித்தேர்படைசூழ வரக்கர்பெரும்படையோடு மமர்செய்காலைச், சூழிப்போர்மதகரியுந் தொகுபரியுமிரதமும்போர் துணியநூறிப், பாழித்தோள்வாளரக்கன் பாசகரத்தான்படையைப் பாரில்வீழ்த்தான். (அசு)

சேனைபடத்தரியாதுதிறல்வருணன்றன்மைந்தர்சீற்றம்பொங்கி
வானமதிற்புட்பகத்தின்மிசைநின்றவாளரக்கன்றன்மேல்வந்து
சோனைமுகிற்குலமாரிசொரிவனபோற்கணைமாரிதூவியார்ப்ப
ஆனவவைவிலக்குகையேபணியாகவடலரக்கனலக்கணுற்றான். (அஎ)

மதிகொன்றைவளர்சடையோன் வரையெடுத்தோன்வாருணிக ளொடும்போர்செய்ய, அதுகண்டுமகோதரன்பே ரழலென்னவாலமென வழன்றுவேகக், கதிகொண்டுவருணபலங் கைக்கொண்டுகளத்தவிய நூறக்கண்டு, குதிகொண்டுவொருதிநீர் குரைகடற்கோன்மைந்தர்மனங் கொதித்துளோர்கள். (அஅ)

மாயமிகவல்லவனுமகோதரன்றன்மருமத்தில்வன்னிபோலும்
சாயகங்களுறத்துரந்துதானையினைத்தரைப்படுத்துத்தசக்கிரீவத்
தீயவன்றன்செறிவயிரத்திரள்புயத்துமார்பகத்துஞ்செந்நீரோதம்
பாயவடிக்கணையேவிப்பகிரண்டங்குலுங்கவுயிர்பதைக்கவார்த்தார். (அகூ)

ஆலமென்னவழலென்னவழன்றரக்கர்கோன்சரங்களைத்திறலும்
சூலமயில்வெங்குலிசந்தோமரந்தண்டுலக்கைமுதற்படைகடேண்டிக்
காலனெனக்கதித்துரப்பிக்கடிதடர்ந்துமேல்வீழவருணன்றந்த
பாலரனைவருங்கெட்டுப்பயத்தோடும்பழியோடும்பதியில்வீழ்ந்தார். (கூ0)

வெவ்விடத்திற்கொடியோனும்விறலரக்கன்விளம்புவான்விழியினில்லா
தெவ்விடத்தான்வருணனெனவவனமைச்சரீரண்டுமுகத்தோன்வைகும்
அவ்விடத்தானவன்குமரரமருக்கின்றுற்றுராயழிந்துபோந்தார்
இவ்விடத்தினினக்கொருவரெதிரில்லையிராவண நீயினிதேகென்றார். ()

அந்தவுரைகேட்டுவெந்தவடலரக்கன்பகிரண்டமதிரவார்த்து
வந்தவழிபுறப்பட்டுமதிலிலங்கைநகர்நோக்கிவழிக்கொள்வேலை
அந்தணர்தங்கன்னியருமசுரர்கடங்கன்னியருமளவிலாத
கந்திருவர்கன்னியருமுதலாயகன்னியரைக்கண்ணிற்கண்டான். (கூஉ)

### இராவணன் பலசாதித் தேவமாதரை யபகரித்தல்.

ஆங்கவர்கள்பூனைவாயகப்பட்டகிளியென்னவளவிலாற்றல்
ஓங்குபுலிவாய்ப்பட்டவுழையென்னவுண்ணடுக்கமுற்றார்கொன்றைத்
தேங்கமழ்பூங்குழலியரைத்தெய்வத்தேர்மிசையேற்றிச்சேனைசூழத்
தாங்கரியபேராற்றற்றசக்கிரிவன்றன்னகரிவந்துசார்ந்தான். (கூங)

### தேவகன்னியரின் றய்மார்கள் இராவணனைச் சபித்தல்.

கன்னியர்கடாய்மார்கள்கன்றிழந்தபசுப்போலக்கதறியெங்கள்
நன்னுதலார்தமையெல்லாநடுக்கம்கண்டிடுதலானறுமென்கூந்தல்
அன்னநடையார்பொருட்டாலடலிலங்கைபாழாகியரக்கர்கோமான்
தன்னுடையமுடியோடுந்தலையற்றுவிழுகவெனச்சபித்தாரன்றே. (கூச)

### வே று.

### சூர்ப்பனகையின் கணவனிறந்தானென அவள்புலம்புதல்.

ஆயவன்றனணிநகரமவனடையவடல்கால
கேயரமர்பொருகளத்துக்கிளரரக்கர்பெருஞ்சேனை
சாயவமர்பொருகளத்துத்தன்கணவன்படக்கேட்ட
தீயகொடுஞ்சூர்ப்பநகைசெய்தனயாமுரைசெய்வாம். (கூரு)

சலமேவுதுயரினளாய்த்தான்விழுந்துபுரண்டலறித்
தலைமேலேகைவைத்துத்தன்கணவன்றான்கிடந்த
கொலைமேவுபோர்க்களத்தைக்குறுகியவன்மிசைக்கிடந்த
மலைமேலேவந்ததொருமலைவீழ்ந்ததெனவீழ்ந்தாள். (கூசா)

விழுந்தாளைநெடும்பொழுதுவெய்துயிர்ப்பொன்றில்லாளைக்
கழிந்தாடன்கணவனொடுமென்றிரங்கிக்காரிகையார்

செழுந்தாரைநீர்முகத்துத்தெளித்தெழுப்பச்செத்தவர்கள்
எழுந்தார்போலெழுந்தவடானிவைசொல்லிப்புலம்பினாள். (௯௭)

காதலாநீயென்னைக்கைப்பிடித்தவன்றாமுதல்
பேதையேன்சொல்லியசொல்பிழைத்தறியாப்பேரவுணா
நாதனேயென்னைநீநடுக்கங்காணாதூரில்
போதநீயெழுந்திராய்பொய்யுறக்கமுறங்காதே. (௯௮)

என்னிற்பின்சூர்ப்பநகையிருக்குமோவிலளோவென்
றுன்னிச்சோதிப்பானுள்ளுயிரடக்கிக்கிடந்தாயோ
பின்னிற்கும்பழிபூண்டுபெருந்துயரப்பட்டுநான்
உன்னிற்பின்னிருக்கிலேனெழுந்திராயுத்தமனே. (௯௯)

முன்னமேதானென்னைமுறைமையாலேகொடுத்துப்
பின்னென்னைநூலிழப்பித்தவிராவணனுமென்றமையன்
றன்னைமூவுலகாளயான்கண்டுதாரவுணர்
மன்னனேயுடல்சுமந்துவாழ்வேனோவாழ்வேனோ. (௧௦௦)

கைம்முறுக்கிவாய்மடித்துநீகிடந்தகருத்தறியேன்
மைம்முகத்துக்கருமனத்துவாளரக்கர்கோமானை
மெய்ம்முறிக்கப்பெற்றிலேனெனநினைந்தோமேவாரை
மொய்ம்முறிக்குமாற்றலாய்காரணமென்மொழியாயோ. (௧௦௧)

### சூர்ப்பனகையின் கணவனைத் தகனஞ்செய்தல்.

என்றினையபலபன்னியெழிற்கணவன்றனைப்புல்லிக்
கன்றியநெஞ்சினளாகிக்கதறுகின்றசூர்ப்பநகை
தன்றுணைவிமாரவளைத்தாங்கிக்கொண்டகம்போகக்
குன்றனையதோளானைவிதிமுறைதீக்கொளுத்தினார். (௧௦௨)

ஆயதன்காதலனையழற்படுத்தாரெனக்கேட்டுக்
காயும்வெங்கனலென்னக்காந்துகின்றமனத்தாளாய்
வாயொருக்காலோயாதேமழையிடித்ததெனக்கதறிச்
சேயிழையாரெல்லாருந்தேற்றவுந்தான்றேறாதே. (௧௦௩)

ஆக்குமவனேயழிக்கையழகன்றென்றுணராதே
தாக்கியேகாதலனைத்தரைப்படுத்ததசமுகன்முன்
நாக்கினைநான்பிடுங்கியென்றனடலைநோயதுதீரப்
போக்குவெனென்னுயிரென்றுசூர்ப்பநகைபுறப்பட்டாள். (௧௦௪)

### இராவணனிடஞ் சூர்ப்பநகை முறையிடுதல்.

மாத்தானையுரிபோர்த்தவளர்சடையோன்வாழ்கயிலை
பேர்த்தானைப்பெருவலியாற்பெரும்புவனங்களைவென்று

போர்த்தானைபுடைசூழப்பொன்னகரிற்புகுந்திருந்த
மூத்தானையிளையாள்கண்டிவைசொல்லிமுறையிட்டாள். (௧0௫)

சொல்லெடுத்துப்பழிதூற்றித்துன்பங்கொண்டெடன்வீடு
கல்லெடுத்துநல்லுற்றூர்கரைந்தேங்கக்கடைக்காணீ
வில்லெடுக்கையுன்னுடையவீரத்துக்கழிவன்றோ
அல்லெடுக்குந்தலைமாய்த்தவண்ணாவோவண்ணாவோ. (௧0௬)

மூலைப்பாலேநஞ்சாகிமுனைமுகத்திலொருக்காலும்
கொலைப்பாலனல்லாத்தன்மைத்துனனைக்கொலைசூழ்ந்த
புலைப்பாவியுன்றமையன்பொல்லானென்றெல்லாரும்
அலைப்பாலேயறவலைந்தேனண்ணாவோவண்ணாவோ. (௧0௭)

காசுக்கும்பொன்னுக்குமாழிக்குங்கடுஞ்சொல்லின்
வாசிக்குங்காலுண்ணுமணவாளப்பிள்ளைகளைப்
பூசிக்கைபொருகளத்துக்கொன்றுபுரட்டிடுகையோ
ஆசைக்கும்புறஞ்செலுத்துமண்ணாவோவண்ணாவோ. (௧0௮)

மிகையெல்லாஞ்செய்தாரேயாயிடினும்விளையாட்டாம்
வகையல்லாலொருக்காலுமைத்துனர்மார்தம்மோடு
பகையில்லையென்னுமந்தப்பழமொழியுங்கேட்டிலையோ
அகைவில்லானவரையெடுத்தவண்ணாவோவண்ணாவோ. (௧0௯)

வேறு.

இலங்கைவேந்தன்றன்முன்னேயென்றுசொல்லிமுறையிட்டு
விலங்கல்வந்துவிழுவதுபோல்விரித்தகுழலுவெறுங்கழுத்தும்
கலங்குமனமுமுடையாளென்செய்வேனென்றுகையெடுத்துப்
புலம்பியவன்றனடிபூண்டுபொடியிற்கிடந்துபுரண்டழுதாள். (௧௧0)

தங்கைவிழுந்துபுரண்டலறத்தாங்கியெடுத்துத்தசக்கிரிவன்
மங்கையுனக்கிவ்வன்றுயரம்வந்ததெதன்காரணமென்னக்
கங்கைமுடியோன்வரையெடுத்தோய்காலகேயர்பொருகளத்துன்
அங்கைவாளாலென்கணவனுவியுண்டாயெனவழுதாள். (௧௧௧)

வேறு.

பெண்ணாகியுன்குலத்துப்பிறந்தாள்பேரிடும்பையுற
அண்ணாநீயரசாளவரக்கர்குலத்தறனுமோ
எண்ணாதென்காதலனையிகலமருளுயிருண்டாய்
விண்ணோரென்கூறுவாரெனவிம்மிவெய்துயிர்த்தாள். (௧௧௨)

## இராவணன் சூர்ப்பனகைக்குச் சமாதானங்கூறுதல்.

இன்னபலவும்பன்னுமிவட்கிலங்கைவேந்தனீதுரைக்கும்
உன்னையுடையகணவனையானென்றுமுணராதுயிருண்டேன்

என்னையமரின்மதிமயக்கியென்றாலேயின்றவனாவி
தன்னையுண்டவிதியாரைத்தடுக்கவல்லார்தாமுண்டோ. (கக௩)

## இராவணன் கட்டளையால் கரதூடணாதிகளிடஞ் சூர்ப்பநகை சென்றிருத்தல்.

என்றுதங்கைமனமுவப்பவெல்லாப்பூசைகளுமியற்றி
ஒன்றுகுணத்தினுந்சாயருடனேபிறந்தாள்வயிற்றுதித்த
வென்றிவீரர்கரனுமவன்விரிந்தபடைக்குத்தலைவனும்
துன்றுவிற்கைத்தூடணனுந்தோலாவலிமுச்சிரத்தோனும். (ககச)

இந்தமூவர்தண்டகமாமெழில்சேர்வனத்துளிருப்பாரால்
முந்தியேநானதுவவர்க்குமொழிந்துவிட்டேனவரோடும்
சிந்தையுவந்தாண்டினிதிருத்தியென்னத்தேவர்செய்தவத்தால்
அந்தவரக்கியவ்வனத்திலவரோடுறையுமக்காலை. (ககரு)

## சுக்கிரனாலிராவணி திறங்களை யிராவணனறிதல்.

நிருதர்கோமானிகும்பலையாநீடுவனத்தினுட்புக்கு
மருவியங்ஙன்மகஞ்செய்யுமகனைக்கண்டுமனமகிழ்ந்து
கருதிநீசெய்காரியமென்கழறென்றுரைப்பக்கலிகுருவாய்ச்
சுருதிவேலைகரைகண்டதோலாவினைச்சுக்கிரன்சொல்லும். (ககசு)

அங்கிட்டோமங்கோமேதமிராசசூயமயமேதம்
பங்கப்படாதபஞ்சுவணம்வாசபேயம்பாசுபதம்
இங்கிப்பேராம்பெருவேள்வியேழுஞ்சமைத்தநின்மகற்குக்
கங்கைச்சடையோன்வெளிப்பட்டுக்காளையிவனைக்கண்டுவந்து. (ககஎ)

அழிவிலாதவடற்றேருஞ்சிலையுமாவநாழியையும்
இழிவிலாதபெருந்தவத்தினின்பதுன்பங்களையறுத்தோர்
மொழியுஞ்சாபமெனத்தப்பமுரட்பல்லவமுமுனைமுகத்தில்
ஒழிவிலாதபகையறுக்குமொளிப்பத்திரமுமுவந்தளித்து. (ககஅ)

இலங்காபரணத்திளமுலையாரிடுக்கண்மாயத்தகப்பட்டுக்
கலங்காநெஞ்சத்தியோகியருங்கலங்குமாயைகடிதியற்றி
நிலங்கால்குலையநீடமரர்நின்றுநடுங்கநேர்வெல்லும்
பலங்களுனக்குண்டாகவென்றுபரமனளித்தானெனப்பகர்ந்தான். ()

அந்தவெள்ளியிவைகூறவரக்கர்கோமானகமகிழ்ந்து
மைந்தன்றன்னைமுகநோக்கிவானோரானோர்க்கவிர்ப்பாகம்
உந்துகருமமினிச்செய்கையொழிதியென்றுவிலக்கித்தான்
தந்தகுமாரனொடுமெந்தத்தசக்கிரிவன்றன்னகர்சார்ந்தான். (கஉ0)

## இராவணன் சிறைபிடித்தமாதரைக் கலவிக்கழைத்தலும் விபீடணன்தடுத்தலும்.

பாகுபோலமொழியாரைப்பற்றிக்கொணர்ந்தபாவையரைச்
சோகமேவுசிந்தையரைத்துணைக்கண்ணருவிசோர்வாரைச்
சேகுபோலுமனத்தரக்கன்றிரளவழைப்பத்தீவினையைப்
போகமுயன்றவீடணனைப்பொல்லாச்சரிதற்கிவைபுகன்றான். (கஉக)

மாசிலாதகுடிப்பிறப்புமானங்கீர்த்தியிவைமாய
ஆசைநோயானதுபெருகவநங்கசரத்தாலேவுண்டு
கூசலின்றிக்குலத்தவரைக்குலையச்செய்தார்குலத்தோடும்
நாசமெய்திப்பழியோடுநரகமுறுவரெனவுரைத்தான். (கஉஉ)

### மதுவோடுபோர விராவணன் சேறல்

ஏகவீரவிதுகிடக்கவியம்பக்கேண்முன்பெய்தியதை
மேகநாதன்வேள்வியுளான்வீரனுயவும்பிதுயிற்
போகமேவியவன்கிடந்தான்புனலின்மூழ்கியான்கிடந்தேன்
ஆகமதுவாமடலசுரனணிநீளிலங்கையரண்புகுந்து. (கஉ௩)

உற்றகரிதேர்பரிகாலாளுலையநூறியுயர்மௌலிக்
கொற்றவாநஞ்சிற்றவையைக்கும்பிநசியாங்குணவதியைப்
பற்றிக்கொண்டுதன்னுடையபதியிற்புக்கானெனத்தம்பி
சொற்றவார்த்தைகேட்டழன்றுதுடிக்குநெஞ்சனிவைசொன்னான். ()

பூனைசெவியையெலிமோந்துபுலியைப்புல்வாய்தொடர்ந்ததெனத்
தானைக்கடலைக்கலக்கியெனதாயர்க்கிளையாடனைக்கொண்டென்
மானக்குலத்தைவரம்பழித்தான்மதுவேகேட்டும்வாழ்ந்தோநம்
சேனைக்கடலைமதுபுரத்திற்செல்தவென்றான்சினமிக்கான். (கஉரு)

நம்பிபுகழ்வீடணன்றன்னைநகரங்காவல்பெறவிருத்தி
வெம்புபோருக்கொருப்படுகமேகநாதனெனவிளம்பி
எம்பியுறக்கந்தீர்த்தவனையிவணீர்கொணர்திரெனவியம்பப்
பம்பைபேரிதுடிமுரசம்பலவுமுழக்கவவனுணர்ந்தான். (கஉசு)

வய்யமோராயிரத்தேற்றிவந்தசோறுமதுவெள்ளம்
பெய்தகுடங்களாயிரமும்பெருங்கைவேழப்பெருந்தசையும்
வெய்யகோபனிவையெல்லாம்விழுங்கப்பசிபோய்மிகுத்ததாம்
நெய்யைநெய்யைச்சொரிந்தக்கானெருப்பையவிக்கவொண்ணுமோ. ()

பின்னுமோராயிரஞ்சகடம்பெய்தசோற்றுப்பெருங்குப்பை
தன்னையுண்ணச்சிறிதுபசிதணிந்துமகிழ்ந்துவாய்பூசி
மன்னனழைத்தகாரியத்தைக்கேட்டுமறுகுமனத்தினனாய்ப்
பொன்னின்மணித்தேர்போர்க்கோலம்பொலியவேறிப்புறப்பட்டான். ()

கும்பகர்னனுணர்ந்தெழுந்துகொடிவீதியுளானெனக்கேட்ட
கொம்புபோலுநுண்ணிடையார்கோதைசரியக்குழல்கரியச்
செம்பொன்மாடத்தரமியத்துச்சீரார்மணிப்பொற்கோபுரத்தின்
உம்பர்மடவார்தொக்கீண்டியொருவர்க்கொருவரிவையுரைத்தார். (௧௨௯)

கண்ணாலிவனையண்ணாந்துகணைக்கான்மேற்காண்பரிதென்பார்
விண்ணுடருக்கிங்கிவன்மேனிவிளங்கக்காணலாமென்பார்
பெண்ணாளிங்கொருத்திபெறும்பிள்ளையேயிங்கிவனென்பார்
எண்ணாமதுவந்தெதிர்ப்படுமேலிவன்கையாலென்படுமென்பார். (௧௩௦)

மண்கைதாழவருமிதுவோர்மலையென்பாராண்வடிவென்பார்
திண்கையொன்றாலெடுக்குமரன்சிலையையென்பார்சினமுகத்த
கண்களென்பாரல்லவெழுங்கனலேயென்பார்கண்டமடப்
பெண்களானாரிவ்வண்ணம்பேசப்பெருவீதியைக்கடந்தான். (௧௩௧)

கண்ணார்நுதலானருளியதிண்கவசமிட்டுக்கழல்கட்டித்
திண்ணாராவம்புறத்தார்த்துச்செம்பொற்றேரின்மிசையேறி
மண்ணோர்குலையத்தானவர்கண்மறுகியோடமனங்கலங்கி
விண்ணோர்வெருவச்சிலையேந்திமேகநாதன்புறப்பட்டான். (௧௩௨)

இலங்கைவேந்தனிலங்கியவாளிறுகவீக்கியெதிரிகளால்
கலங்கலில்லாத்திண்கவசங்கட்டிவீரக்கழலார்த்து
விலங்கன்மேன்மின்பரந்ததெனவீரபட்டநுதல்விசித்துத்
தலங்கொணெஞ்சன்வரைநெளியவேறினான்பொற்றடத்திண்டேர். ()

தேருமாவுஞ்சினக்களிறுஞ்செறிந்துசெல்லவழிகாணார்
வீரரானார்பின்னின்றார்முன்னின்றாரைமிகநெருக்கிப்
பேரும்பேருமெனவுரைப்பப்பேரும்பேருமிடமில்லா
ஊருந்தேரும்வகுத்தவன்றானென்றுமறியானெனவுரைத்தார். (௧௩௪)

உமையாள்பாகன்வரையெடுத்தவுயர்தோளரக்கன்படையெழுச்சி
கமையாதுலகெங்கணுநிறையத்தரணியேழுந்தடந்தூளி
அமையாதோங்கிக்கண்மறைப்பவகல்வானத்திலமரர்கள்கண்
இமையாதொழியவெமையிழைத்தோனிடும்பைசெய்தானெமக்கென்றார்.

## மதுவின்மனைவியும் இராவணன் சிற்றன்னையுமான கும்பநசி இராவணனைச் சமாதானப்படுத்துதல்.

மேகநாதன்முன்செல்லவெய்யதம்பிபின்செல்ல
நாகமனையபுயத்திலங்கைநாதன்மதுவின்புரநண்ணச்
சோகமேவுமனத்தினளாய்த்துணைக்கண்ணருவிசோரவிட
வேகமதுவின்றேவியவன்விளங்குங்கழற்கான்மிசைவீழ்ந்தாள். (௧௩௬)

தாளின்விழுந்ததாயர்தமைத்தாங்கியெடுத்துத்தசக்கிரிவன்
கேளிதென்சொல்லுன்மனத்துக்கேதமதனைவிடுதிவினைக்
கோளைவிதியையார்கடப்பாரென்றுகூறக்கொடியிடையாள்
மீளவவன்றனடிவீழ்ந்துவிம்மிவிம்மியிவைவிளம்பும். (௧௩௭)

மக்களிழந்தவிடும்பையினுமனையாளிழந்தவிடும்பையினும்
மிக்கவிடும்பையொவ்வாதவிதவையிடும்பையெனவிளம்பத்
தக்கதனாலென்கழுத்திற்றாலிநீதந்தருளென்று
தொக்கமணிப்பூண்மார்பனைத்தொழுதுபின்னுமிவைசொல்லும். ()

விட்டுவிளங்குமணிமுடியாய்வேதஞ்சொன்னபிரமாதி
எட்டுமணத்திலொருமணமாமரக்கர்குலத்தினியல்பறிதி
கட்டுமரியகாவலையுங்கலக்கிப்புக்குக்கன்னியரை
முட்டியிவரைக்கொடுபோந்துவேட்கைமுறையேயெனமொழிந்தாள். ()

என்றுசிறுதாயிவைகூறவெல்லாப்பிழையுமுனக்காக
இன்றுபொறுத்தோமுன்கணவனிமையோருலகங்கைக்கொள்ள
ஒன்றுமனத்தோனாகியென்னோடொக்கநடக்கவுரைத்தியென
நன்றிதென்றுதுயின்மதுவைநல்லாள்சென்றுநண்ணுற்றாள். (௧௪௦)

### இராவணன் மதுவில்லில் விருந்துண்டல்.

உறக்கநீங்கியிராவணனின்னுறவுவேண்டியிந்நகரின்
புறத்தினின்றானவனோடும்பொருந்தியினியபுகன்றவற்குத்
துறக்கம்வெல்லத்துணைப்படுதியென்றுதூயமொழிசொல்ல
மறுக்கிலாதமதுவிலங்கைமன்னன்றனைவந்துற்றான். (௧௪௧)

கொற்றவரக்கன்மதுவந்துகொண்டாடப்போயவனில்லம்
உற்றுமதுசெய்பூசனைகொண்டுவந்தங்கொருநாளினிதிருந்து
பிற்றைவைகல்பெருஞ்சேனைசூழவேகிப்பெருவினைகள்
அற்றதவத்தோர்பயிலிமயத்தளகாபுரியினயலிறுத்தான். (௧௪௨)

### இராவணனளகாபுரத்துச் சோலையையடைதல்.

அரவம்பெருகும்பெருஞ்சேனையரக்கர்கோமானளகையயல்
குரவஞ்செருந்திசுரபுன்னைகோலந்தமாலங்குளிர்சந்தம்
மரவங்குருந்தம்பாடலஞ்சீர்மௌவலாதிமரனெருங்கி
இரவும்பகலும்தெரியாதவிருள்பூம்பொழிலையெய்தினான். (௧௪௩)

வஞ்சமில்லாயோகியர்தம்மனம்போற்றெளிந்துமங்கையர்தம்
நெஞ்சுபோலமிகவாழ்ந்துநிலைப்படாதநெடுநீரில்
கஞ்சமலர்ப்பாசடைப்பள்ளிக்காதற்சேவலன்னமதன்
தஞ்சமாயபெடையோடுந்தழுவித்துயிலுந்தடத்தினதே. (௧௪௪)

ஆடற்றெய்வமடந்தையருமமரர்களும்வந்தவ்விடத்துக்
கூடிக்கலவியமுதுண்டுகொழும்பூம்புன்னைக்குளிர்நீழல்

வாடைக்கன் றுவந்தசைப்பமயில்களாடவண்டினங்கள்
பாடக்கண்டாங்கினிதிருக்கும்படிகத்தலம்பூம்பள்ளியது. (கசரு)

## சூரியாத்தமனம்.

அந்தவரக்கனப்பொழுதினழகைநோக்கியளவில்லா
இந்தமாயப்படையெழுச்சியாவர்மேலென்றறியாது
சிந்தைகலங்கிச்செஞ்சுடரோனிவன்முனிற்கைதீதாமென்
றுந்துதிரைநீர்ப்பெருங்கடலுளொளிப்பான்போலக்குளித்தானல். ()

## சந்திரோதயம்.

மாலையடையமடவார்கண்மனம்போற்செறிந்தவிருளினதாய்
மாலையடையமடவார்கண்மனமுங்கண்ணுவரிவண்டும்
மாலையடையவளர்புயத்துவயவாளரக்கன்வன்னெஞ்சம்
மாலையடையவாடையொடும்வந்ததாழிவளர்திங்கள். (கசஎ)

வெய்யமரீசியினமன்னன்வீழக்கண்டவிருட்குறும்பன்
வய்யம்புக்கவக்குறும்பைமாய்ப்பான்றூன்றுமதிமன்னன்
மய்கொளாழிகிளர்ந்தார்ப்பமண்ணில்வாழுஞ்சராசரங்கள்
உய்யநிலவாம்படைபரப்பியுதயகிரிவாரணமேற. (கசஅ)

தூயஞானச்சுடர்விளக்குத்தோன்றத்தோன்றரில்லாத
மாயையெனவுமறத்தினெதிர்வன்றீவினைமண்டிலமெனவும்
நேயவுலகங்காத்தளிப்பானேர்போர்புரியுநீண்முகத்துத்
தீயவரக்கர்நலமெனவுந்தீர்ந்ததந்தச்செறியிருளே. (கசகூ)

## அரம்பைவருதலு மவளையிராவணன்கண்டு காமுறுதலும்.

ஆயகாலையிளந்தென்றலசையவநங்கசரம்பாயக்
காயநெஞ்சுபதைபதைத்துப்பணைத்தோளரக்கர்பதியளகை
நாயகன்றன்மகனுயநளகூபரனைநண்ணுவாள்
மேயகாதன்மின்கொடிபோல்விளங்குமரம்பைதனைக்கண்டான். (கருo)

ஓடிப்போமினுடவர்களுயிரையிழவாதன்றியரண்
தேடிக்கொண்மினென்பனபோற்சிலம்புபுலம்பும்பதத்தாளை
ஆடற்கதலியிளந்தண்டினழகையழிக்குங்குறங்காளை
வீடுற்றெவரும்விரும்புமெழில்விளங்குமல்குற்றடத்தாளை. (கருக)

வனவாசச்சீர்மாதவரும்வானுளோருமற்றவரும்
மனமாலுற்றுவிழுந்தழுந்தும்வலஞ்சேருந்திச்சுழியாளைத்
தனமாமலையைத்தாங்குவதொன்றில்லையாகினில்லாதென்
றனுமானத்தாலுண்டாகவடுக்குமென்னுமிடையாளை. (கருஉ)

பூணிற்பொலிந்துபுடைபரந்துபொங்கியெழுந்தமுலையுலகைக்
காணிற்கொல்லுமென்றவற்றின்கண்ணைமறைத்ததுகிலாளைச்

சேணிற்சுடாசீராபரணந்திகழத்திகழுங்கழுத்தாளை
வாணித்திலத்தினிரைபதித்துவைத்தபவளவாயாளை. (கருங)

நீண்டுபரந்துகுழையோடுநெருக்கிமதர்த்தகண்ணாளைப்
பூண்டுகொலையிற்புரிசாபப்புருவத்தாளைப்பூரித்தல்
மாண்டமதிபோனுதலாளைமலர்த்தாமரைபோன்முகத்தாளை
ஈண்டுமெலருநறும்புகையுமின்றிக்கமழ்பூங்குழலாளை. (கருச)

## வேறு.

## மோகத்தாலரம்பையை வினவுதல்.

கண்டுமனங்கவிழ்ந்துகாதற்கடல்பெருக
எண்டிசையும்வென்றவிராவணனூர்தாநிற்ப
ஒண்டிறன்மாரனுரத்தோர்கணையுய்ப்பத்
திண்டிறலோய்ந்தாங்கவனினையசிந்தித்தான். (கருரு)

புண்டரிகமாதோபுனமயிலோபொற்கொடியோ
அண்டர்கடைந்தவமிழ்தோவதன்சுவையோ
தண்டதரனிந்தசகத்தினைத்தானீடழிப்பான்
கொண்டதொருகோலமோகோலத்தின்கொள்கலமோ. (கருசு)

விண்ணோருலகெல்லாம்வெற்றவெறும்பாழாக
மண்ணோரிலென்னைவழியடிமைகொள்ளவந்த
பெண்ணோநான்செய்தபெருந்தவத்தின்பேறோவென்
கண்ணோகளைகண்ணோகாமத்தின்றீங்கனியோ. (கருஎ)

ஆரோவறிகிலேனென்றவளைவந்தணுகிக்
காரோதிபேரழகைக்கண்ணிருபதாற்கவர்ந்திங்
கூரேதுனக்கிங்குறவேவருன்னுடைய
பேரேதுபெண்ணமிழ்தேபேசென்றவன்பேச. (கருஅ)

## இராவணன் அரம்பையைப் பரிகசித்தல்.

ஆயவளென்பேரரம்பையளகைக்கு
நாயகன்மைந்தனளகூபரனென்னும்
தூயவன்றோன்றலெனக்கென்றவள்சொல்லத்
தீயவரக்கன்சிரித்தினையசெப்பினான். (கருகூ)

தேவரேயாதிதிரிபுவனத்துள்ளோர்கள்
யாவரேயானுமெதிர்ந்தோரைவசிகரித்துப்
போவதேயல்லாற்பொதுமகளிராய்ப்பொருடேர்
பாவையர்க்குமுண்டோபதியென்றவன்பகர. (கசுO)

### அரம்பை இராவணனுக்குப் பதிலுரைத்தல்.

போரார்வேற்கையாய்பொதுமகளீராகியவக்
காரார்குழலியரைக்காதலித்துக்கைக்கொண்டோர்
யாரேனுமாகவவரளவுதாமென்றும்
பாராதபாவையர்கடம்பதியாய்க்கொள்வாரால். (கசுக)

மெய்க்கொண்டவுள்ளத்துமேலோரேயாயிடினும்
பொய்க்கொண்டசிந்தையாரேனும்பொதுவாய
மய்க்கொண்டகண்ணார்மனைவியராகித்தம்மைக்
கய்க்கொண்டிருந்தார்க்குத்தப்பக்கடனன்றால். (கசுஉ)

### இராவணனரம்பையைப் பற்றுதலும் அவள்வணங்கியுரைத்தலும்.

என்றரம்பைகூறவிராவணன்மேல்விழுந்து
சென்றவளைப்புல்கப்புகுமளவிற்சேயிழையாள்
நின்றுநடுங்கிநெறியல்லவைசெய்யேல்
குன்றனையதோளாயெனத்தொழுதுகூறுவாள். (கசுந)

சன்மங்கடிந்தபுலத்தியனுந்தாபதன்றன்
தன்மைந்தன்மைந்தன்றமையன்வயிற்றுதித்த
நன்மைந்தனெங்கோனளகூபரன்முறையால்
நின்மைந்தனுதலினுனீயென்குருவென்றாள். (கசுச)

### அரம்பையில் இராவணன் போருந்தாக்காமநுகர்தல்.

அரிவையிவைவிளம்பவாற்றாதநங்கன்
தெரிகணைகள்பாயத்தன்சிந்தைதடுமாறி
ஒருதலையாவின்றுதுகாமமெனவுன்னுன்
புரிகுழலைத்தான்பற்றிப்போகவிடந்தானுண்டான். (கசுரு)

வேறு.

### அரம்பை இராவணனைச் சபித்தல்.

வந்தியாகநீமாநிலமாதர்தம்
சிந்தையாலன்றியாவரைத்தீண்டினும்
கந்தவார்குழலாள்கற்பெரியினால்
வெந்துவீழ்தியென்றேகினள்விம்மினாள். (கசுசு)

வேறு.

மின்னனையாள்சாலவெருவிவிரைந்தேகித்
தன்னுடையகாதலற்குத்தான்புகுந்தவாறுரைப்ப
அன்னவனுமோகத்தினுயிழையைத்தன்வலியால்
தென்னிலங்கைமன்னவன்றான்செய்தபிழையுட்டெளிந்தான். (கசுஎ)

### அரம்பையினு லிராவணனழிசெயலுணர்ந்த நளகூபரன் சாபமிடுதல்.

நல்லார்புகழுநளகூபரனொருவன்
இல்லாளைத்தேராதுதீண்டிமிராவணனும்
பொல்லாவொழுக்கத்தான்பொன்முடிகளோடுதலை
எல்லாம்பொடியாகிவீழ்கவெனச்சபித்தான். (கசுஅ)

### இராவணனது விரகதாப வுரைகள்

கோகனகமாதனையகொம்புதனைப்பிரிந்து
போகநெடும்பொழுதுபோனவழிபார்த்திருந்து
சோகமுறுமனத்தன்றாயணையின்மீதேறி
வேகமடங்குகளிறனையான்வெய்துயிர்த்தான். (கசுக)

நீடுமதியநிலாவலையைவீசியிட
ஓடுமிடங்காணுனொளிப்பிடமுமொன்றின்றி
வாடியசிந்தைமதிளிலங்கைமன்னவனைக்
கோடியவின்மதனன்கொல்லத்தொடங்கினன். (கஎ0)

வென்றிமதனன்விடுசரம்பாய்வெம்புண்ணில்
சென்றுநுழைந்துபுகுந்தென்றற்கனலாவி
நின்றவிடந்தேடநிலைகலங்கிநீடுயிர்த்தங்
கொன்றுமறியாதுளைந்தீங்கிவையுரைத்தான். (கஎக)

மின்னிடையினூர்தம்மைவெல்லவரிதென்றெண்ணி
உன்னுடையகாந்தியொழித்தவொளிமுகத்தாள்
தன்னிடைநீசீருய்தழல்சொரிந்துதண்மதியே
என்னிடைநீசீறவுனக்கென்னபிழையான்செய்தேன். (கஎஉ)

தாழ்ந்தாரைக்கொல்லார்தயாவுடையார்தங்கேடு
சூழ்ந்தாரேயாயிடினுந்தோலாவலிமதனன்
காந்தாரமென்மொழியாள்கண்ணம்பாலேவுண்டு
வீழ்ந்தாரைக்கொல்லுமதுவீரற்கழிவாமால். (கஎங)

நின்றலைக்குமாழிக்குநீளுமிரவுக்கும்
அன்றிலுக்குந்தன்னையடக்குவாரில்லாத
தன்றலைக்கண்ணயித்தனியேனுயிர்கொள்ளும்
தென்றலுக்குமென்னேடுசீற்றமென்னேதேர்ந்திடினே. (கஎச)

செம்பஞ்சின்சீறடியுஞ்சீர்க்குறங்குமல்குலும்
கொம்பஞ்சிடையுங்குவிமுலையுமென்மனத்தைக்
கம்பஞ்செய்தோளுங்கழுத்துங்கவின்முகமும்
அம்பஞ்சுக்கஞ்சுமென்னுவியகற்றுமே. (கஎரு)

உம்பர்வளநாட்டுமொப்பிலாவுத்தமிகண்
அம்பவளநீலமணிதாளமுன்னிரைத்த
செம்பவளஞ்செய்வாய்க்கரும்பவடன்செஞ்சொன்மதன்
வெம்பவளந்தாழ்புருவம்வில்லேவிளம்பிடினே. (கஎசு)

விண்ணோர்பெருமான்றன்வெற்பெடுத்தவென்விறல்தீர்த்
துண்ணோவுசெய்தென்னுயிருண்டாள்கேவலமும்
பெண்ணோவவளல்லள்பெண்ணுருவுகொண்டிருந்து
மண்ணோர்களையெல்லாமாய்க்கவருங்கூற்றே. (கஎஎ)

### சூரிய வுதையம்.

மதியாணிவணிகழ்ந்தவண்ணம்வேறாக
உதியாமையோரிரவோரூழியாயிற்றென்னக்
கொதியாவரக்கனமைக்கோளிழைக்குங்கொல்லென்று
கதிரோனடுங்குவான்போலுதயங்கண்ணுற்றான். (கஎஅ)

### வேறு.

### தேவர் திருமாலை யடைந்திராவணன் வருகை யுரைத்தல்.

துன்னிருடுரந்துவெய்யோன்றோன்றிடத்துயரநீங்கித்
தன்னெதிரில்லாவென்றித்தசமுகன்றானைசூழப்
பொன்னுலகத்தைநோக்கிப்புறப்படப்புரைதீர்வானோர்
மன்னுடனதனைக்கேட்டுமாயனைவந்துசார்ந்தார். (கஎகூ)

ஒருங்கியமனத்துளோர்களுள்ளெழுமொளியையும்பர்
அருந்திடுமமிழ்தையன்பர்க்கன்னையையகன்றுநீண்டு
திருந்தியகைகால்கண்வாய்சிவந்தொளிதிகழ்தலாலே
கருங்கடல்கமலம்பூத்ததெனத்திகழ்காட்சியானை. (கஅ0)

உண்டிலையென்றுதம்மிலுணர்வலோர்பிணங்கிநின்ற
புண்டரீகக்கண்ணனைப்போக்கொடுவரவிலானைக்
கண்டனமென்றோர்க்கென்றுங்காண்பரியானையென்றும்
கண்டிலமென்றோர்கண்டகண்ணனைக்கண்ணிற்கண்டார். (கஅக)

கண்டடிவணங்கிநின்றகடவுளர்தம்மைநோக்கிக்
கொண்டலுங்கடலுமாமைகுன்றிடுங்கோலமேனி
வண்டுசேர்துளவமாலைமார்பனுமனத்திற்பீடை
உண்டதையுரைத்தீரென்னவும்பர்கோனுரைக்கலுற்றான். (கஅஉ)

முன்பெமக்கிடரைச்செய்தமுரணுடையசுரரோடு
வன்படையரக்கர்வர்க்கம்வழிவழியறுத்துமாற்றிப்
பின்பெமக்கிதமேசெய்துபெற்றதாயென்னப்பேணும்
அன்பவோரலக்கண்வந்தாலாருளார்நீயேயல்லால். (கஅங)

சிரத்தொகையறுத்துத்தீக்குத்திருத்திசெய்தன்பாற்பெற்ற
வரத்தினன்வலியின்மிக்கோன்மண்ணுலகழித்தின்றெம்மை
நெருக்குவான்சேனையோடுநிருதர்கோன்வந்துநின்றான்
திருத்திகழ்மார்பயாங்கள்செய்வதென்னெனச்சொன்னான். (௧அ௪)

உரைத்தவாசகங்கள்கேட்டவுத்தமனுலகைக்காயும்
அரக்கரையவியநூறியிராவணனயன்பாற்பெற்ற
வரத்தையோர்வழியினாலேமாற்றிமற்றவனீரைந்து
சிரத்தினையறுத்துவீழ்த்துஞ்சிந்தைநோய்தீர்ப்பனென்றான். (௧அ௫)

## தேவாசுரர் தம்மிற் பொருதல்.

என்றறியியம்பக்கேட்டவிந்திரனிமையோரோடும்
தன்றிருகரஞ்சென்றுசார்தலுந்தருக்கின்மிக்க
வென்றிவேலரக்கர்கோமான்விரிபெருஞ்சேனைசூழச்
சென்றுவிண்ணதிரவார்த்துத்தேவரைத்திடுக்கங்கண்டான். (௧அ௬)

## பிரமன் போர்காண வருதல்.

சேனையோடரக்கனம்மேற்செருச்செயவந்தானென்று
வானவர்சேனைவெள்ளமறிகடலென்னப்பொங்கி
ஆனைதேர்பரிமாவுந்தியரக்கரோடமர்செயவேலை
ஆனவர்பூசல்காண்பானுதரித்தயன்வந்துற்றான். (௧அ௭)

கொற்றவானவர்கள்விட்டகொடும்படையரக்கர்சேனை
உற்றனவூழித்தீயினுடன்றனதொடர்ந்துகொல்ல
இற்றனகைகால்பொங்கியெழுந்தனகுருதிவெள்ளம்
அற்றனதலைகள்பாடியாடினவலகைக்கூட்டம். (௧அஅ)

மின்படையநேககோடிவிடுத்துவிண்ணோர்கள்செல்லத்
தன்படைமடியக்கண்டதசமுகன்சலித்துத்தன்மேல்
அன்படைநெஞ்சராயிவ்வவனியையழிக்குமாற்றல்
வன்படைத்தலைவர்வானோர்மேற்செலவகுத்துவிட்டான். (௧அ௯)

சூரியன்பகைவன்கோபத்துன்முகன்றூமகேது
காரியமறியாவென்றிக்கரன்றிரிசிரத்தோன்போரில்
கூரியதூடணன்றீக்கொடுஞ்சுகசாரரென்போர்
பாரியல்போதுமில்லாப்பசாசன்வெம்பாசக்கண்ணன். (௧௯0)

## சுமாலி வதை.

மங்கியபுகழ்மாரீசன்மகோதரனியாயகோபன்
பொங்கியவீரபக்கன்புகைக்கண்ணன்குருதிக்கண்ணன்
தங்கியவகம்பன்கும்பனிகும்பன்வெஞ்சம்புமாலி
துங்கநீண்மொய்ம்பினோடுஞ்சூழ்தரச்சுமாலிநேர்ந்தான். (௧௯௧)

விட்டெறிசூலந்தண்டுவெிறன்மழுவுலக்கைகூர்வாள்
கட்டிநீள்பாசந்தோட்டிகப்பணங்கலப்பையீட்டி
வட்டவேன்முதலாவுந்திமழையிடிப்பென்னவார்ப்பக்
கெட்டனர்விண்ணோரோகைகிளர்ந்தனவரக்கர்க்கெல்லாம். (கக௨)
பொருப்புறழ்களிறுந்தேரும்புரவியும்போகத்தூண்டி
இருப்புறழ்தண்டுவாளேமுதனெடும்படைகளேந்திச்
செருப்புரிவாணோரானோர்திரண்டனர்செறுத்துத்தம்மேல்
ஒருப்புரிந்துந்திநில்லாதுடைந்ததவ்வரக்கன்சேனை. (கக௩)
இருபடைவீரருள்ளோரார்யாவருமெழுந்துசாய்ந்து
பொருவலிச்சுமாலிநோக்கிப்பொருகணைமாரிதூவி
வருபடைமாயங்கண்டுவெசுக்களோரெண்மராவோர்
செருவலிமிகுபொற்றோளார்சென்றவனோடுநேர்ந்தார். (கக௪)
ஒண்டிறலோர்கடம்மேலுற்றமர்செய்யுங்காலைக்
கண்டவர்வியப்பஞ்சாரவிந்திரன்கனன்றுபொங்கி
திண்டிறற்சுமாலிதேரைச்சின்னஞ்செய்தவன்றன்சென்னித்
தண்டனைவாங்கியாற்றற்றடக்கையாற்சுழற்றிவிட்டான். (கக௫)
காலவெந்தண்டமென்னக்கடவுளர்சீற்றமென்ன
ஆலமதென்னவூழியனலென்னவரனார்விட்ட
சூலமதென்னமாயோன்சுடர்விடுநேமியென்னச்
சீலமொன்றில்லான்றன்மேற்சென்றதுதேவர்வாழ்த்த. (கக௬)
குன்றின்வீழசனியென்னவமரர்கோன்குலிசமென்ன
வென்றிசேர்சுமாலிசென்னிவீழ்த்தவன்வெற்புமேனி
ஒன்றியவங்கமெல்லாமுருத்தெறிவுறுதவண்ணம்
கன்றியகுருதிநீராய்க்கரைத்ததுகதையாங்கூற்றம். (கக௭)

## மேகநாதன் தேவர்களை யெதிர்த்தல்.

பல்லணைகுளிப்பப்பண்டுபடிக்கொருவீரனென்னச்
சொல்லணையுறப்போர்வென்றதுறுகழற்சுமாலியென்னும்
வல்லணைமுறியவோடும்வளர்படைவெள்ளந்தாங்கி
வில்லணைகட்டிப்போர்த்துவிலங்கினன்மேகநாதன். (கக௮)
பரியின்மேற்பதாதிதன்மேற்பாய்மதவருவிவேழக்
கிரியின்மேற்செம்பொற்றேர்மேற்கிளர்வலிப்பாகன்றன்மேல்
விரிவுமேற்பதாகைதன்மேல்விறற்கணைவிடுத்தான்வெம்போர்
புரியுமேற்புவனமூன்றும்பொடிசெயவல்லவீரன். (கக௯)

## சயந்த விந்திரசித்த யுத்தம்.

ஓட்டியபரிதேர்காலாளுலேந்திடக்கண்டுநின்ற
வட்டவெண்குடைமாமௌலிவாசவன்மைந்தன்சீறி

விட்டிலங்கெயிற்றுப்பேழ்வாய்மேகநாதன்றனோடு
முட்டினனவனுஞ்சென்றுமுடுகினன்போரின்மூண்டான். (௨௦௦)

இருவருமேகநாதனிவனவன்சயந்தனென்று
தெரிவருங்கடுமையோரார்திரிபுவனத்துளோர்கள்
வெருவரவிருவர்சேனைவியந்துபோர்கண்டுநிற்ப
ஒருவரையொருவர்வெல்லவுற்றமர்புரியுங்காலை. (௨௦௧)

ஏமுகமறியவல்லவிராவணியெதிர்த்தோரஞ்ச
மாமுகமறிந்துதூண்டுமாதலிமைந்தனை
கோமுகனென்னும்பாகன்குலைந்திடவவன்றன்மெய்யில்
தீமுகவயிரவாளிசெறிந்திடச்சயந்தன்சீறி. (௨௦௨)

ஏகவீரியனாயுள்ளவிராவணியேறுதிண்டேர்ப்
பாகன்மேற்பகழிமாரிதூண்டிடப்பாயுஞ்சோரி
வேகமாநொய்திற்பொங்கியோங்கியவெகுளித்தீயின்
மேகநாதன்றன்வாளிவிடுத்தனன்சயந்தன்றன்மேல். (௨௦௩)

இயங்கியவடவைத்தீயினெரிகணைநிறத்திற்றைப்ப
மயங்கியசயந்தன்பாகன்மகன்வலிதப்பிலாமை
முயங்கியாங்கவனைக்கொண்டுமுனைக்களங்கடந்துபோகப்
பயங்கிளர்வானோரெல்லாம்பாறினர்பரந்தாரெங்கும். (௨௦௪)

தன்மகன்மயங்கச்செய்யாடலைமகன்றந்தவந்தத்
தொன்மகன்மைந்தன்றன்பாற்றோன்றியதூயமைந்தன்
புன்மகன்பயந்தவந்தப்புலைமகன்சயமும்போரில்
தன்மகன்றளர்வுங்கேட்டசதமகன்சலத்தின்மிக்கான். (௨௦௫)

## மேகநாதனோடிந்திரன் பொருதல்.

வருகதேரென்னவொல்லைமாதலிகொணர்ந்துநிற்பக்
குரைகழலணிந்துகோவைவிசித்துத்தன்கோலமார்பில்
திருமணிக்கவசம்வீக்கித்திகழ்நுதற்பட்டஞ்சேர்த்தித்
தெரிவையர்திரண்டுவாழ்த்தவேறினான்செம்பொற்றிண்டேர். (௨௦௬)

ஆனகமுரசம்பேரியாகியகவின்களெல்லாம்
வானகமுழக்கினின்றுமுழங்கமாகதர்களேத்தத்
தேனகுகோதைமாதகிதிரண்டனர்குனிப்பத்தெய்வக்
கானம்வந்தெழவந்தெங்குங்கலந்துகந்திருவர்பாட. (௨௦௭)

உருத்திரகணங்களானபதினொருவருமுற்றாரத்
தருக்குறுமெண்மராயவசுக்களுஞ்சார்ந்துபோற்ற
மருத்துவரிருவர்தாமுமுதலினர்வானோரேத்தச்
செருக்களமதனைநோக்கிச்சென்றனன்றேவர்கோமான். (௨௦௮)

## வேறு.

இந்துசேகரன்பொருப்பெடுத்ததோளிராவணன்
அந்தவிந்திரன்றன்மேலழன்றுபோரமர்ந்திட
விந்தையானதிண்புயத்துமேகநாதனில்லெனத்
தந்தையைத்தவிர்ந்துவந்ததானையோடுசீறினான். (௨௦௯)

வாரிமொண்டுகொண்டெழுந்துமாகமேவிவார்சிலைக்
காரதிர்ந்துகொண்டுதூவுகாலமாரியாமென
வீரவெஞ்சிலைத்தடக்கைமேகநாதன்விண்ணகம்
தூரவும்பர்சேனையம்புதுன்றநின்றுதூவினான். (௨௧௦)

காறுணிந்தகைதுணிந்தகந்தரந்துணிந்தநீள்
வாறுணிந்தமத்தகந்துணிந்தவெண்மருப்பொடும்
தோறுணிந்தவண்மையாவர்சொல்லுவார்துணிந்தவாள்
வேறுணிந்தவிற்றுணிந்தவெம்மழுத்துணிந்தவே. (௨௧௧)

உறந்துணிந்தகாறுணிந்தவாறுணிந்தவுற்றமா
சிறந்துணிந்ததார்துணிந்தவார்துணிந்ததிண்பதக்
குரந்துணிந்தகூளியுற்றகுத்துவாதைதீரவூன்
பரந்தவிந்திரன்பதாதிபட்டதேவர்பட்டுளார். (௨௧௨)

ஆழியற்றவாணியற்றவச்சுமற்றவற்றதேர்
ஊழியுற்றவாடையாலுலைந்தகுன்றையொத்தவால்
வேழமுற்றவீரர்விபகைமேகநாதன்வெங்களத்
தாழியுற்றதேவர்வெண்டயிர்க்குமத்தாயினான். (௨௧௩)

எண்ணகத்ததும்பைவீரனேகரூபியாயினும்
விண்ணகத்தும்விண்ணைமூடுவெற்பகத்தும்வேலைசூழ்
மண்ணகத்துமாதிரப்புறத்தகத்தும்வானுளோர்
கண்ணகத்துமுள்ளமோர்கருத்தகத்துமாயினான். (௨௧௪)

சந்தவில்லிமுப்புரந்தழற்படச்சரந்தொடும்
அந்தவில்லியுஞ்சினத்தரக்கரோடுதானவர்
சிந்தவில்லியைத்தொடுத்ததேவர்தேவனும்மலால்
இந்தவில்லியொக்கும்வில்லியெங்குமில்லையில்லையே. (௨௧௫)

என்றுகூறிநான்முகத்தனுதிதேவர்யாவரும்
வென்றிவில்லிமேகநாதன்வீரமேவிளம்பியுள்
கன்றுதேவரோடுபோர்செய்காய்சினத்தரக்கர்போர்
இன்றோடேமுடிந்ததென்றியம்புகின்றவெல்லையில். (௨௧௬)

## வேறு.

## கும்பகருணன் போருதல்.

அம்பரமுமெண்டிசையுநின்றதிரவங்கணரவம்பெருகிடத்
தம்பமதுகொண்டொருதடங்கிரிநடந்துவருகின்றதெனவும்
கும்பகருணன்குருதிகண்கள்வழிசிந்தவொருகுன்றெனநடந்
தும்பரடைதன்கையொருதண்டுகொடுறைந்தனனுலந்துவிழவே. (௨௧௭)

அடற்பொருகளிற்றினையெடுத்தொருகளிற்றினையடித்துமணிதேர்
நடக்கையினெடுத்தொரிரதத்தினையடித்தும்வலிதாவுகொடியோன்
படப்பரியினைப்பரியினெற்றியுமெதிர்த்தசுரரைச்சுரரொடும்
கடற்கடையுமத்தெனமிகைப்பொருபடைக்கடல்கலக்கினனரோ. (௨௧௮)

கடித்தெயிறுறத்திருகியிட்டுவலிமிக்ககதிமுட்டிதனினால்
அடித்தெனவுரத்தின்மிசைகுத்தியுமெதிர்த்தசுரரைக்கரமெடுத்
தடித்துமடியிற்படமிதித்துமவரைப்படவுதைத்துமணியார்
முடித்தலைமுளைப்புரளவெற்றியுமுரட்படைகளத்துதறினான். (௨௧௯)

முறிந்தனதகர்ந்தனபிளந்தனநெரிந்தனமுரண்டிரள்பணை
பறிந்தனநுகங்கழுமொடிந்தனவிரிந்துபரிபாகனொடுபோய்
மறிந்தனவிழுந்தகலமாமெனவழிந்தனவலிந்துகடவும்
செறிந்ததுணையாழிகளகன்றனசிதைந்தபொறிதேர்நிரைகளே. (௨௨0)

முரண்டருமெலும்புகண்முறிந்தசிலநீள்வயிரமொய்கொள்பணையில்
திரண்டகைநெரிந்தசிலதிண்பதமொடிந்தசிலவிண்பதவியின்
இரண்டுபிறைகொண்டுவிழுமஞ்செனவிழுந்திரணமொன்றுகளரிப்
புரண்டசிலகொம்புகண்முறிந்தசிலபொங்குமததும்பியினமே. (௨௨௧)

பரிந்தவிரிவார்குசைபரிந்தமணிதார்கள்பருமங்களுடனே
நெரிந்தவெரிநென்புறநெளிந்தனகிடந்தனநெடுந்துரகமாகச்
சொரிந்ததலைமூளையினதொங்குகுடரோடமர்தொலைந்தவலியோர்
சரிந்தனர்கள்வானவர்கடானவரடர்ந்தனர்தயங்குபடையால். (௨௨௨)

அருக்கரும்வசுக்களுமுருத்திரருமுட்பனைத்தமரரும்
வெருக்கொளநெருக்கொடுபொருக்கெனவுடற்று * குடவெஞ்செவியனும்
இரக்கமிலரக்கனையடர்த்தவனுரத்தடமிரத்தமெழலால்
முருக்கலர்பொருப்பினைநிகர்த்திடவடிக்கணைமுடுக்கினர்களால். (௨௨௩)

முத்தலையயிற்கணையமுற்கரமிரட்டியொடுகற்கடைமுரட்
சத்திமழுவச்சிரமுலக்கைகதைசக்கரமுரட்கணைகளாம்
வித்தினைவிதைத்துறுகளச்செருவினிற்படுவினைப்பயிர்விளைத்
தொத்தலகைமொத்தமொடுணப்புதியதிட்டனர்களொத்தனர்களே. ()

---

* குடவெஞ்செவியன் - கும்பகருணன்.

பொழிந்தகணைமாரியுறவெங்கழியகண்டர்கள்புரண்டுடல்கலம்
கிழிந்தனபரந்தனசெழுங்குருதியெண்டிசைகிடந்தமலைபோல்
விழுந்தனபெரும்பிணமெழுந்தனகவந்தவினம்வெங்களமெலாம்
ஒழிந்தனரிலாதவகையோடமர்மலைந்தனருலைந்தனர்களே. (உஉ௫)

## இராவணன் போருதல்.

இப்படியரக்கர்களிமைப்பொழுதினிற்பொருகளத்தவிதலும்
மைப்படிமனத்திரள்புயத்தசமுகத்தன்வடவைக்கொடியதீ
எப்படிகொதித்தமனமப்படிகொதித்தெயிறதுக்கியிடையான்
வெப்படிமனச்சுரர்மிசைத்தனிரதத்தினைவிடுத்தனனரோ. (உஉ௬)

## வேறு.

நீடுவார்சிலைநாணெறிந்துசாசரேசனிராவணன்
ஓடையானையின்மேலுமாதலியோய்விலாதுயர்தேரினும்
ஆடன்மாவினும்வீரராகியவவனிகாவலர்மேலுமா
வாடைகூடியகோடைமாரியின்வாளிமாமழைதூவினான்.  (உஉ௭)

வெஞ்சரங்கள்பரந்துசென்றுநெருங்குவிண்ணவர்சேனையைப்
பஞ்சரங்கியவங்கியாமெனநின்றுபற்றியெரிந்ததால்
மஞ்சரங்கியமங்கவந்துசெறிந்தகூளிகள்வார்மதக்
குஞ்சரங்களுருண்டதேர்கள்குலைந்தவாசிதொலைந்தவே. (உஉ௮)

அன்னவன்செயல்கண்டுசிந்தையழன்றுவெந்திறலிந்திரன்
நின்னிலென்றெதிர்தேர்கடாவிநெடுந்திகந்தநடுங்கிடத்
தன்னெடுஞ்சிலைநாணெறிந்ததசக்கரீவனுரத்தினும்
சென்னிமீதும்விடத்திறேடுறழ்தீயவாளிகடூவினான். (உஉ௯)

அந்தவம்புநிறத்தழுந்தவுமாற்றலேதுமழிந்திலா
வெந்தசெம்பனகண்ணிராவணன்வெய்யவாளிகடூவவும்
இந்திரன்கணைமாரியாயவிரண்டுசேனையில்வீரரும்
தந்தமிற்சரமாரிதூவிடவெங்கணுஞ்சரமாயதே. (உ௩0)

அரக்கர்சேனையைவாசவன்றன்னிகவீரரழன்றுபோய்
நெருக்கிவேழமுமாளுமாவுநெடுங்களத்துவிழுத்தலும்
தரிக்கிலாததசக்கிரீவன்வெகுண்டுசாரதியைக்குறித்
துரைக்குமென்னுரைகோடியாயினுணர்ந்துகொள்ளெனவோதுவான். ()

தேவர்சேனையினுட்புகத்திகழ்தேர்கடாவுதியாயின்யான்
யாவரும்படநூறியிந்திரனைப்படுத்தவனுதியாம்
ஓவரும்முயிருண்டுபின்சினமொழியமூவுலகங்களும்
காவலென்னதுவாகநீடரசாள்திநீயிதுகாண்டியால். (உ௩உ)

என்றுபுன்மொழிலோனியம்பவிசைந்தசாரதிமேருவாம்
குன்றுபோலுயர்தேரைவானவர்கூடுசேனையினுள்விடச்
சென்றதேரதுகண்டுதீயவரக்கனண்ணினனென்னவே
வென்றிமேவியவிந்திரன்னிவைவிண்ணவர்க்குவிளம்பினன். (உ௩௩)

என்னைவஞ்சனைசெய்துகொன்றிடவெண்ணுமிந்தவிராவணன்
றன்னைநானுமவன்றனைத்தளரப்பிணிக்குவனென்றவன்
முன்னிலாதுவிலங்கியோடமுயங்குதேவர்முடுக்கிய
தென்னிலங்கையரக்கர்கோன்மிகுசேனைபாழ்படநூறினன். (உ௩௪)

அன்னகாலையினூறுயோசனையுள்புகுந்தணிகெட்டிடத்
தன்னெடும்படைசாயநூறுதசக்கிரீவனைவானுளோர்
மன்னவன்படையோடுவந்துவளைப்பவஞ்சவரக்கரத்
தென்னிலங்கைமன்வீடினனெனநொந்துசிந்தைதியங்கினர். (உ௩௫)

அந்தவேலையின்மேகநாதனழன்றுபொங்கியடர்த்துறத்
தந்தைதன்னைவளைந்துவந்துநெருக்குதானையைநூறிய
விந்திரன்றனுரத்துமங்கவனேறுதேரினும்வேகமா
உந்துமாதலிமேலும்வாளிகளோய்விலாவகைதூவினன். (உ௩௬)

அண்டர்கட்கரசன்னெதிர்ந்தவமர்க்களத்தடையார்களால்
பண்டுபெட்டறியாதபாடுபடத்தரிக்கிலனுயவன்
கொண்டலொத்தமுழக்கிடைப்பொருகுன்றையொப்பதைவென்றிசேர்
சண்டவுக்கிரகிரியெனுங்கரிதன்னையோர்நொடியேறினன். (உ௩௭)

## இந்திரனோடு மேகநாதன் பொருதல்.

ஏறினனயிராபதத்தையினிப்பிழைப்பரிதின்றெனை
ஆறினரவ்வரக்கரவ்வழிபாகசாதனனங்கியிற்
சீறினனுறுபோரிலாளியெனத்தெசக்கிரீவன்மகன்
ஏறினுயர்தேரின்மீதமரேசனும்பொரவுற்றனன். (உ௩௮)

வன்னிகொன்றைமிலைச்சுதும்பைதரித்தவீசன்வரத்தினல்
அன்னெடுந்திறன்மேகநாதனடர்ந்தபோதகல்வானகம்
துன்னுபேரிருண்மூடமாயைவகுப்பநெஞ்சுதுளங்கிவான்
மன்னுதேவர்களாயினோர்கண்மயங்கியொன்றுமுணர்ந்திலார். (உ௩௯)

## மேகநாதன் இந்திரனைப்பாசத்தால் பிணித்தல்.

செய்வதொன்றறியாதுசிந்தைகலங்கியிந்திரனின்றிடக்
கய்யுமெய்யுமகப்படத்தெறுகால்பாசமிதாமெனும்
வெய்யபாசமுறப்பிணித்தனன்மேகநாதன்விளங்குசீர்
அய்யவெய்யவரக்கரானவராடினர்சுரர்வாடினர். (உ௪0)

### வேறு.

### இந்திரசித்திராவணனைக் கண்டு தனது வெற்றியையுரைத்தல்.

வெந்திறலரக்கர்சேனைமேகநாதன்கைப்பாசத்
திந்திரன்கட்டுண்டானென்றெறிகடலொலியினார்ப்பத்
தந்தையைவந்துசார்ந்துதரிப்பருமுவகைபொங்க
எந்தைநீகேட்டியென்னாவிராவணியினையசொன்னான். (௨௪௧)

என்னெதிர்நிற்கமாட்டாதிந்திரனென்கைப்பட்டான்
உன்னெதிரொருவரில்லையுருப்பசிமுதலாயுள்ள
அன்னமென்னடையினாருன்னடியிணைவருடவைய
உன்னைவானவர்சேவிப்புலகெலாமாடியென்றான். (௨௪௨)

### இராவணனிந்திரனைவென்ற தெவ்வுலகையும் வென்றதெனல்.

என்றவனியம்பக்கேட்டவிராவணனிருபதாய
தன்றிரடோள்களாரத்தழுவிக்கொண்டினிதுநின்று
பொன்றிரண்மணிமாமோலிப்புரந்தரன்றன்னையின்று
வென்றதெவ்வுலகுமன்றேவென்றனன்விரைவினென்றான். (௨௪௩)

### இந்திரனைச் சிறையிடுதலும் பிரமாதியர் வருதலும்.

இன்னனபலவும்பன்னியிந்திரனோடுதங்கள்
பொன்னகரெழுந்துபொங்கியெதிர்கொளப்புகுந்துதேவர்
மன்னவன்றன்னைக்கட்டிவன்சிறைவைத்தகாலை
அன்னவாகனனைமுன்கொண்டமரர்களடங்கவந்தார். (௨௪௪)

### பிரமன் இராவணனைப் புகழ்தல்.

வந்திலங்கேசற்கண்டுமலரயன்புகல்வான்வைவேல்
வெந்திறலுடையவீரவேறுனக்கெதிராருன்றன்
மைந்தனிந்திரனைவென்றுவான்சிறைவைத்தலாலே
இந்திரசித்தென்றெல்லாவுலகமுமியம்பப்பெற்றான். (௨௪௫)

சந்திரமவுலியீசன்றடவரையெடுத்ததிண்டோள்
வெந்திறலரக்கர்கோவேவிண்ணவரெனைமுன்கொண்டு
வந்தகாரியமிதாக்கும்வலியுனக்கேறிற்றெங்கும்
இந்திரன்றன்னையொல்லையிருஞ்சிறைவிடுதியென்றான். (௨௪௬)

### இந்திரசித்தழியாவரம் வேண்டுதல்

என்றவனியம்பவேண்டியிராவணியியம்புவானிங்
கின்றவன்றன்னைவிட்டால்யான்பெறும்பேறுவேண்டும்
பொன்றிகழ்மேனியாயிப்புவனமுள்ளளவும்பொன்றா
தென்றுநானிருப்பதாகவிவ்வரமருள்கவென்றான். (௨௪௭)

### பிரமன் பிறந்தவை இறக்குமெனல்.

இராவணியிளையகூறவிதயத்திலெண்ணிப்பார்த்துப்
பராவருமுலகமெல்லாம்படைத்தவன்பகரும்பாருள்
சராசரமானயோனிசார்ந்தபல்லுயிர்கட்கெல்லாம்
நிராமயமானநித்தத்துவமரிதிங்கென்றான். (உசஅ)

### இந்திரசித்திற்குப் பிரமன்வரமளித்தல்.

ஆயதுவிரிஞ்சன்கூறவரக்கர்கோன்மைந்தன்கூறும்
தீயிடைப்பிறந்ததெய்வத்தேரினின்றியான்போர்செய்ய
ஆயுவுக்கிறுதிவாராவகையெனக்கருணீயென்ன
நீயிதுபெற்றாயென்னநிருதன்மற்றிதுநிகழ்த்தும். (உசகூ)

திடந்திகழமரிளையசெறுநரைவெல்வாமெனண்ணித்
தொடங்கியவேள்விமுற்றுப்பெற்றிடிற்றுன்னலார்கள்
அடங்கலுந்தோற்கவேண்டுமெனவயன்பெறுகவென்னத்
தடம்புயத்தரக்கன்மைந்தன்றான்மகிழ்ந்திளையசெய்தான். (உருo)

### இந்திரனைச் சிறைவிடுதல்.

சிறையினூடிருந்தவந்தத்தேவர்கோன்றன்னைவிட்டு
மறையவன்றனக்குக்காட்டிமானவேன்மருமத்தான்ற
உறுதுயர்பொறுக்கலாற்றாதொருவரையெடுத்துநோக்கான்
கறைகெழுவேற்கைவாளுேர்காவலன்கவிழ்ந்துநின்றான். (உருக)

அன்னதன்மையனய்நின்றவமரர்கோன்றன்னைநோக்கிக்
கன்னிகர்தோளாய்முன்புகௌதமனிட்டசாபம்
உன்னைவந்துறுதலாலேயுனக்கிதுவந்ததுன்றன்
பொன்னகர்புகுதியென்றுவிட்டயன்போயினுனல். (உருஉ)

அ-வது, திக்குவிசயப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ருஅஎ.

---

## கூ-வது, கார்த்தவீரியார்ச்சுனப்படலம்.

அரக்கர்கோன்விசயமடங்கலுங்கேட்ட * வாழியானதிவியப்பெய்தித்
திரைக்கடலுலகம்வெருக்கொளவரக்கன்செருக்குநாட்டேயமன்னவரில்
ஒருத்தருண்டாகவுரைத்திலையடைந்ததவவலியுடையரானவரை
உரைத்திநீயென்னவுயர்பரம்பொருளுக் குதவியுண்குறுமுனியுரைக்கும்.

---

* ஆழியான்-இராமன்.

மாயிருஞாலமடிப்படுத்தெதிர்க்குமருவலரின்றிமண்ணுண்ட
ஆயிரந்திண்டோளருச்சுனன்றனக்கும்வாலிக்குமடலழிந்தன்னத்
தீயவாளரக்கனன்றெனச்செப்பச்செறிபுகழிராகவன்மனத்துத்
தூயமாமுனியேயக்கதைவிரித்துச்சொல்லெனமாமுனிசொல்லும். (உ)

உந்துநீர்வேலையுலகிடைவாழுமொளிமுடிமன்னரையோட்டி
அந்தவாளரக்கனாயிரந்திண்டோளருச்சுனனணிநகரடைந்திங்
கிந்தமாநகருக்கிறைவனெவ்விடத்தானிராவணனிகல்செயச்சமைந்து
வந்தனனெனவாங்குணர்த்துமினென்ன மந்திரித்தலைவர்கண்மொழிவார்

தெரிவையரோடுநருமதையென்னுந்திருந்தியநீர்விளையாட்டில்
புரியுநெஞ்சினனாய்ப்போயினனரசனென்றவர்புகன்றிடக்கேட்டுப்
பொருகழலரக்கனவ்விடநோக்கிப்போகுவான்பூம்பொழிற்சாரல்
விரிபெருஞ்சிகரமாயிரமோங்கிவிளங்குசீர்விந்தத்தையடைந்தான். (ச)

மழைமுகின்முழக்கங்கேட்டெதிர்பொரூதுவாளரியேறெதிர்முழங்கும்
முழையுடையதனைமுனைவர்தானவர்கண்முகிழ்நகையரம்பையரோடும்
கழிபெருங்காதலொடும்விளையாடக்காமபோகக்கனிநுகரும்
இழிபுனலருவிதழுவினவாடையிடைதவழ்சாரன்மேவினதை. (ரு)

இன்னமாமலையினெழிலினைநோக்கியிராவணனெழிலுரையாடை,ம
ன்னியகாஞ்சிதிகழ்வரையல்குல்வஞ்சிநேரிடைசுழியுந்தி, பொன்னணியா
ரம்புளினமென்கொங்கைபொருகயல் கண்ணறல்கூந்தல், அன்னமென்
னடைநேர்நருமதையென்னுமரிவையைத்தெரிவுறக்கண்டான். (சு)

அத்திருநதியிலமைச்சர்களோடுமரக்கர்கோனகமகிழ்ந்தாடி
மைத்திகழ்மிடற்றுவளர்சடையோனைமணல்குவித்தருச்சனைசெய்ய
நெய்த்திருள்குழலாரொடுமருச்சுனனுநீர்விளையாடுவானிமிர்ந்த
கைத்திரளதனாற்கடுவிசைநீரைக்கட்டினன்றேங்கினின்றெதிர்ப்ப. (எ)

தேங்கியபெருநீரிருகரைபுரளச்சென்றுகுன்றிருபதிற்றிகழ்தோட்
டங்குடையரக்கனவன்செயும்பூசைசிதைத்திடத்திகைத்தனன்சீறி
ஈங்கிதுவிளைந்தகாரணமெல்லாமிருவிருமறிமினென்றியம்பப்
பூங்கழல்வானோர்புறங்கொடுத்தோடப்பொருசுகசாரணர்போனார். (அ)

போயவர்செறிதோட்பூமிமன்னவர்க்கும்பொருகயற்பூங்குழையார்க்கும்
நேயம்வந்தொன்றிநீர்விளையாட்டுநிகழ்வுழிநெடுநிலமன்னன்
ஆயிரங்கையாலாற்றுநீரடைப்பவப்புனலெதிர்த்தமையறிந்து
தீயவர்வந்துதென்னிலங்கேசற்கச்செயறெளிவுறச்சொன்னார். (கூ)

ஆங்கவருரைப்பவமைச்சருந்தானுமருச்சுனனின்றிடமணுகிப்
பூங்கழலரக்கன்பொரூதுவெய்துயிர்த்துப்புரவலனமைச்சரைநோக்கி
ஈங்கமர்செய்யவிராவணன்வந்தானென்றுகுன்றாயிரமென்ன
ஓங்கிருந்தோளாற்குணர்த்துமினென்னவுறுவலியமைச்சரீதுரைத்தார். ()

தன்றெரிவையர்பாற்றளர்ந்தநெஞ்சினனாய்த்தராபதியவர்களுந்தானும்
நின்றுபேராற்றினீர்விளையாட்டினிகழ்வுழிநீயமர்புரிதல்
நன்றிதுவன்றுநாளைநீர்பொருமினென்றவர்நவின்றிடவரக்கன்
சென்றுமேல்வீழச்செறுவலியமைச்சரவனெதிர்சென்றுபோர்மூண்டார்.()

தருக்கிலர்மிக்கதராபதியமைச்சர்தம்மொடுந்தசமுகனமைச்சர் [பன்
நெருக்கிவந்தெதிர்ப்பநிகழ்ந்ததுபெரும்போர்நெடுஞ்சமர்நெருக்கினனிரு
செருக்கியசேனைநிருதர்மேலழன்றுசென்றுதாக்கியதுசெந்நீரால்
முருக்கலர்வனத்துச்சிவந்ததுபடைஞர்மூண்டமர்புரிமுனைக்களமே. ()

வக்கிரன்மனத்துமாபெரும்பக்கன்மகோதரன்வஞ்சமாரீசன்
செக்கரைநிகருஞ்செம்மயிர்செறிதோட்டீப்புகைக்கண்ணனேமுதலோர்
சக்கரமுலக்கைதண்டுவேல்குலிசந்தடமழுவாகியசமரத்
துக்கரமுடையவாயுதம்வழங்கவுடைந்ததாலருச்சுனனீகம். (கங)

தன்படைசாய்ந்துதன்னிடைவீழத்தராபதிநீர்விளையாட்டில்
அன்புடைமாதரஞ்சிமெய்ந்நடுங்கவஞ்சலீரென்றுகையமைத்து
மின்படைவேந்தன்விரிபுனல்விட்டுவெவ்வனலெனக்கொதித்திலங்கை
மன்படைதுரப்பவயப்பிரகத்தன்மற்றவனோடெதிர்மலைந்தான். (கச)

கோடியமனத்துக்கொடுந்திறலரக்கன்சொற்றவன்மிசைக்கொலைவலியால்
நீடியவுலக்கைநெருப்பெழத்துரப்பநீறுபட்டிடவதுதண்டால்
சாடிமற்றவனைத்தரைப்படவடிப்பத்தடம்புயமகோதரன்முதலோர்
ஓடியவோட்டங்கண்டிலங்கேசனூழிவெந்தீயெனவுடன்றான். (கரு)

தண்டதுவாங்கித்தடக்கையாயிரத்தோன் றன்னொடுந்தசமுகனொடு நேர், மண்டியொன்றொன்றிற்கறுவுகொண்டிரண்டு மழவிடைமலைவன வெனவும், கொண்டலினதிர்த்துக்கொதித்தடர்த்திரண்டு நின்றுபோர் கூடியவெனவும், எண்டிசைக்கரிக ளிரண்டெதிர்மலைவவென்னவுமிருவ ரும்பொருதார். (கசு)

கூற்றுவனென்னக்கொடுங்கனலென்னக்கொதித்திருதண்டினாலெற்றி
ஏற்றபோர்முகத்திராவணார்ச்சுனர்களிருவரும்பொருவுழியரக்கன்
காற்றெனமுடுகிக்காவலனுரத்துக்கரத்தினாலடித்திடக்கலங்கா
தாற்றினனின்றுங்கருச்சுனனடிப்ப வரக்கர்கோனாற்றல்போயழிந்தான்.

அன்னவன்றளரவறிந்தவாயிரந்தோளருச்சுனனாற்றலினவனைப் [ல்
பொன்னெடுந்தோள்களயர்வுறப்பிணித்துப் போகலுற்றானைவெம்போரி
மன்னவன்கைப்பட்டானெனநின்றமகோதரனாதிவாளரக்கர் [த்தான்.
நின்னிலென்றவன்மேனெடும்படைதுரப்ப நிருபனுநெருப்பெனக்கொதி

தண்டுவாண்முசலஞ்சக்கரஞ்சூலந்தடமழுத்தோமரநாஞ்சில்
பிண்டிபாலங்கோன்முதலவாயுதங்கள் பெருங்கையாயிரங்களால்வாங்கிக்

கொண்டுமேல்வீழுங்கொடுந்திறலரக்கர்குலேந்துகெட்டோடிடத்துரந்து
திண்டிறனிருபன்றிருநகர்புகுந்துதீயவன்றனைச்சிறைறவைத்தான். (௧௯)

கெட்டவாளரக்கர்கிளர்பெரும்பயத்தார்கேடில்சீரிராவணனமரில்
பட்டபாடெல்லாம்வீடணற்குரைப்பப் பரிவுறுமனத்தினனவன்போய்ச்
சிட்டனுயுள்ளபிதாமகற்குரைப்பச்சிந்தைநொந்தச்சிறைவிடுப்பான்
வட்டமாமதில்சூழருச்சுனன்வாழும்வளநகர்மாமுனிவந்தான். (௨௦)

அந்தமாமுனிவனடியிணைவணங்கியருச்சுனனருச்சனைசெய்திங்
கெந்தைநீவந்தகாரணமென்கொலியம்புதியென்றவனிசைப்ப
இந்திராதியரைவென்றுறநெடுநாளீட்டியவிறலெலாமுனக்குத்
தந்திராவணனின்றலைக்கடைச்சிறையான்றராபதியாருனைத்தடுப்பார். ()

ஏறியவலியேயினியுனக்கமையுமிறைவகேளிராவணன்றன்மேல்
சீறியசீற்றந்தவிர்ந்துநீயவனைச்சிறைவிடுகெனமுனிசெப்ப
ஆறியமனத்தனுயவன்விடுப்பவரக்கனையிலங்கையில்விடுத்துத்
தேறியசிந்தைச்செழுமறைமுனியாந்திசைமுகன்றனுலகடைந்தான். ()

௪ - வது, கார்த்தவீரியார்ச்சுனப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௬௦௧.

## ௫ - வது, வாலிவாலாற் கட்டுண்டபடலம்.

சீலமாமுனியாற்சிறைபேர்ந்தவன்
காலனென்னக்கனலென்னவெய்யதோர்
ஆலமென்னவவனியிழிந்துமா
வாலிமன்னும்வளநகரெய்தினன். (௧)

இங்குவாலியிருந்திலனேவவன்
எங்குளானென்றிராவணன்கூறிடத்
தங்குசீருடைத்தாரைபைசாசரின்
கங்குல்வாய்வந்தகாரணமென்னென்றாள். (௨)

வாலிதன்னெடும்வாளமர்செய்திடக்
கோலிவந்தனெனென்றவன்கூறிடக்
காலனோடுகெனன்றுபிழைக்கவோ
* சாலநன்றெனத்தாரையியம்புவாள். (௩)

துந்துமிப்பெயரான்முதற்றுன்னலார்
வந்துவாலியுடன்மலைந்தோருடற்

* சால - மிக்க.

பந்தமேவியபல்லெலும்பின்குவை
இந்தமாமலேயென்றுகொளேழைநீ. (ச)

ஆதலாலடல்வாலியொடும்பொரின்
சாதறிண்ணநீசாகரநான்கினும்
தீதிலாச்சிவபூசனைசெய்திடப்
பாய்தல்செய்யும்பதறலேயென்றனள். (ரு)

தரிக்கிலாயெனிற்றென்றிசைச்சாகரத்
தரக்கவேகுதியாலெனத்தாரையீ
துரைக்கவேகியுயர்சிவபூசையில்
இருக்கும்வாலியையெய்தினனேக்கினன். (சு)

### வேறு.

மேருவையொக்குமேனியன்விளங்கும்விரிகதிர்ப்பரப்பிவந்துதிக்கும்
சூரியனுக்குமுகத்தினன்கடலேச்சுராசுரர்க்கமிழ்தெழக்கடைந்த
வீரியனறியான்பரவசனுகிவிழிமுகிழ்த்திருந்திடவிதுவே
காரியமிவனைக்கட்டுவனென்னக்கருதினன்கருமனத்தரக்கன். (எ)

அவ்விடையவன்றன்கண்விழித்தந்தவரக்கனையறிந்தறியான்போல்
தெவ்விடைவெம்போர்த்திறன்மிகுவாலிதிரியவுங்கண்முகிழ்த்திருப்ப
இவ்விடையிவனைக்கட்டுவெ * னென்னுவிராவணனுழைபுலியெனவும்
வெவ்விடையொதுங்கிவருகின்றதெனவுமெள்ளவந்தவனையேபற்ற. (அ)

வெய்யவாளரக்கன்கையிருபதினல்வீக்கவும்விறன்மிகுவாலி
கய்யினலவனைநெருக்கெனவிறுக்கிவாலினற்கடிதுறக்கட்டி
மய்யணிகண்டன்பூசனை † முகித்துவாலுடனிராவணன்றூங்கப்
பய்யராவதனைக்கவ்விவிண்பறக்குங்கருடனின்மேற்கடல்பாய்ந்தான். (கூ)

வன்புளவாலிவல்விசைப்பாயமற்றவன்மெய்விசைக்காற்றால்
முன்புளமலேயுமரங்களுமுறிந்துமுன்புசென்றனமுரண்சேரம்
பின்புளவவையும்பிறிந்துபின்சென்றபெருவலிமகோதரன்முதலாம்
அன்புடையமைச்சரரசனைமீட்பானடன்மிகுவாலிபின்றொடர்ந்தார். ()

தாழ்வில்போராறற்றறடவரைப்புயத்தோன்றரியலர்மயங்கிடவமரில்
சூழுமாமாயையரக்கர்தம்விசையாற்றொடரவெண்டிறலமர்தொலேயாப்
பாழிமாவலிபாய்ந்திடவவன்றன்பருவரைமெய்விசைப்பின்செல்
ஊழிமாருதமேகொண்டுபோய்மலேப்பவுரனழிந்தனைவரும்வீழ்ந்தார். ()

பாரதவருடம்பரந்தயோசனைகளொன்பதினுயிரம்பாய்ந்து
நீர்தகமுயங்குநெடுந்தடவிமயகிலேயிரண்டாயிரநீங்கிச்
சீரதனுடையசிறந்தகிம்புருடமொன்பதினுயிரந்தீர்ந்தாங்
கேரணியேமகூடமோரிரண்டாயிரகிலேயிமைப்பினிற்பாய்ந்து. (கஉ)

---

* என்னு - என்று. † முகித்து - முடித்து.

பொன்னரிவருடம்பொருந்தியோசனைகளொன்பதினாயிரம்போக்கித்
தன்னிலையிரண்டாயிரமுடைநிடதந்தாவிமேலைக்கடல்சார்ந்த
பின்னரன்பூசைவிதிமுறைமுடித்துப்பெருகுசீரிரமியவருடம்
ஒன்னகர்காலன்வாலியோசனைகளொன்பதினாயிரமொழிந்து. (கங)

நீலமால்வரையீராயிரநீங்கிநின்றொளிர்பொன்மலைவருடம்
மேலுயர்சுவேதமோசனைபதினோராயிரம்விரைவினிற்பாய்ந்து
கோலநீள்குரவஞ்செருந்திமுன்சொன்னவளவுபோய்வடகடல்குறுகி
ஆலமாமிடற்றோனடியிணைபேணியங்கிருந்தருச்சனைமுடித்து. (கச)

மேற்கடலோடுவடகடலுள்ளயோசனைவிரிந்துபோய்க்கீழை
மாற்கடலெய்திவளர்சடையோனைமகிழ்ந்தவணிருந்துபூசித்துப்
பாற்கடலோடுதென்கடலுள்ளயோசனைவிசையொடுபாய்ந்து
போர்க்கடல்வாலிபுனைமணிமாடப்பொன்னகர்கிட்கிந்தைபுகுந்தான். ()

ஆங்கவன்வரக்கண்டகமகிழ்தாரையவனெடுவாலிடைக்கிடந்து
தூங்கியவரக்கன்றன்றுயர்கண்டுதுறகழல்வாலியைநோக்கி
ஈங்கிவன்யாவனிவனைநீபோகவினிவிடுகெனமனமிரங்கித்
தேங்கமழ்குழலிசெப்பிடவிடுத்துத்தீயவற்கவனிவைசெப்பும். (கரு)

பிஞ்ஞகன்பூசைபேணுதல்வேண்டிப்பெருங்கடன்றொறுஞ்செலவிரையும்
அந்நிலையதனிலரக்கனீவந்தகாரியமறிந்திலெனரக்கா
வெந்நிடைவந்தகாரணமதனைவிளம்பெனவிராவணன்விளம்பும்
உன்னொடுபொருவான்வந்தகப்பட்டேனுண்மை யீதெனவவனுரைக்கும்.

மின்னொளிர்முடியாய் வென்றவர்தோற்பர் தோற்றவர்வெல்வர் வெஞ்செருவில், என்னொடும்பொருவானிச்சையுண்டா யினிராவணபொருதியீண்டென்னக், கன்னெடுந்தோளாய்கலங்கினென்வாலாற்கட்டுண்டுபட்டதுகிடக்க, இன்னமும்பொரவோவினிச்செருவமையுமின்றுநின் றோழனெனென்றான். (கஅ)

என்றிலங்கேசனியம்பிடவாலியெழுந்தபேருவகையாலிறுகத்
தன்றிரடோளாற்றழுவியாங்கவனைத்தன்னெடுநகரிடைக்கொண்டு [ன்
சென்றினிதூட்டிச்சிறந்தனசெப்பித் திங்களொன்றினிதுகொண்டிருந்தா
இன்றினாடொடங்கியென்பிராதாநீயென்றிலங்கேசனைவிடுத்தான். (கக)

அலைதழுவுததியரவணைத்துயினீத்தயோத்திவந்தடைந்தடல்வீரச்
சிலைதழுவியகின்செஞ்சரமொன்றுநெஞ்சகம்பிளப்பவத்திறலோன்
நிலைதழுவியபூணிந்திரன்குலிசத்தேறுபட்டிருசிறகற்ற
மலைவிழுவதுபோல்வீழ்ந்தனன்வீரமற்றுனையொப்பவர்யாரே. (உ௦)

**கO - வது, வாலிவாலாற்கட்டுண்டப்படலம் - முற்றிற்று.**

ஆ திருவிருத்தம்-சுஉக.

## கக - வது, அனுமப்படலம்.

### இராமனனுமன் வீரப்பிரதாப முரைத்தல்.

* புலைவாளரக்க † னிருநாலிரட்டியொருநாலுபெற்றபுயமும்
தலையானபத்துமுறவால்விசித்தசயவாலிகொற்றமுழுதும்
‡ மலையாசலத்துமறையோனுரைப்பவெதலாமனத்தி $ லுணராச்
சிலையாலரக்கர்திறம்வேரறுத்ததிறலானுரைக்குமிவையே. (க)

மறவாலிகொற்றமதுவோகிடக்கமருவார்வெருக்கொள்வலியால்
நிறைவான்மிசைப்பொன்வரையீடழிந்துநெகிழாதுநிற்குநிலையால்
குறையாதவிச்சையதனுலளப்பில்குணநீதிகொற்றமொடுகூ
டறிவாலிவற்றிலநுமானையொக்குமவரார்சகத்திலினியே. (உ)

¶ அங்காரதாரைகுடர்மாலைசூடியலைவேலைதாவியடையார்
தங் o காரணங்கள்பொடியாகநூறிவருசம்புமாலிமுதலோர்
பொங்காரவாரமொடுநேர்பொருந்தவவர்சேனையானைபரிதேர்
சங்காரமாடுமநுமானையொக்குமவரார்சகத்திலினியே. (ந)

வரையோடுருத்திரனைமீடுதடுத்தவயவாளரக்கன்மகனைத்
தரையோடரைத்துநகர்தீமடுத்துவருசேனையைச்சலதியில்
திரையோடமுக்கியொருதாவிலத்திவடதீரமுற்றதிசைமேல்
உரையோடுவெற்றியநுமானையொக்குமுரவோர்சகத்திலுளரோ. (ச)

அருமாதவத்தின்முனிவாவுரைக்கினனுமானையொக்குமவரார்
செருவார்சிலைக்கையிளையோனைமிக்கதிறவானரப்படையொடு
மருவார்மயக்கவடமேருவுக்குவடபான்மருத்துமலைகொண்
டொருநாழிகைக்குள்வருவாரொருத்தருளரோசகத்திலினியே. (ரு)

இவனுலருக்கன்மகனோடெமக்குமினிதாயநட்புமியல்பும்
இவனுலளப்பில்பெருநீரடைத்ததிணையாவயத்தநுமனும்
இவனுலரக்கர்பொருசேனையிற்சென்றிடையூறகற்றியவெலாம்
இவனுலரக்கர்குலம்வேரறுத்தினியானுரைப்பதெவனோ. (சு)

### இராமனகத்தியனை அனுமன் சரிதமுரையெனல்.

? பிறியாவறத்தினநுமான்வளர்ச்சிபெருமேருவிற்பெரியனும்
சிறிதாயொடுக்குமெனின்மேனியற்பவணுவானதிற்சிறியனும்

* புலைவாள்-புலால்படிந்தவாள். † இருநாலிரட்டியொருநாலு-இருபது. ‡ மலையாசலத்துமறையோன்-பொதிகை மலையிலிருக்கும் பார்ப்பாஞகிய அகத்தியன். $ உணரா-உணர்ந்து. ¶ அங்காரதாரை-சாயாக்கிரகணி யென்னுமோ ரரக்கி. o அரணமென்பது எதுகைபற்றி ஆரணமென வந்தது. ? பிரியாவென்பது எதுகைபற்றிப் பிறியாவென வந்தது.

உறுகாரணத்தினளவாமுருக்கொளுயர்வீரனுற்றவலிதான்
அறியாதிருக்குமதுவேதுமுற்றுமறிவானுரைத்தியெனவே. (எ)

மறவோர்குலத்தையறவேரறுத்தமனுநீதிபற்றியரசாள்
திறலோனுரைத்தவமிழ்தூறுசொற்கள்செவிவாய்மடுத்துநுகரும்
குறியோனுரைக்குநெடியோய்குறிக்கொளெனமேதினிக்குளணிசீர்
அறிவோரின்மிக்கவநுமானுதிப்புமதிசேவகச்செயலுமே. (அ)

### வேறு.

### அகத்தியனனுமனவ தாரமுரைத்தல்.

சூரியன்றருவரத்தினன் * சுவணமேருவெனும்
பே † ரினன்செறிபெருவரைத்தோளினன்பேணும்
பாரிலஞ்சனைவயிற்றினிற் ‡ பவனனுக்குதித்தோன்
யாரினும்பெருவலியுடையெழின்மணிப்புதல்வன். (கூ)

பிறந்தபோழ்தினிப்பிள்ளைதன்பெருவலியறிந்த
சிறந்ததாயருந்தந்தையுஞ்சிந்தையுண்மகிழ்ந்தார்
மறங்கொணெஞ்சுடைவாளெயிற்றரக்கர்தம்வாழ்நாள்
குறைந்துளாரெனக்குனித்ததுவானவர்கூட்டம். (க0)

### அனுமன்தனக் துணவென்னை யெனலும் அவள்கனியெனலும்.

$ துனிவிலாமதியன்னையைப்புதல்வனுந்தொழுதிங்
கினியதாமிரையாதெனக்கியம்புதியென்னப்
பனியுலாவியசோலையிற்பருவத்திற்சிவந்த
கனியெலாமுனகாவதென்றன்னைதான்கழற. (கக)

### அனுமன் சூரியனைப் பழமெனக்கருதியவன் மீதுபாய்தல்.

செழுமலர்த்திருவனையதாய்செழுங்கனிநாடிப்
¶ பழுவமுற்றிடப்பசியினாற்பதைபதைத்திரங்கி
அழுதரற்றியபாலகனன்னைமுன்னுரைத்த
பழநமக்கிதுவாமெனப்பரிதிமேற்பாய்ந்தான். (கஉ)

### அனுமனை வேகத்திற்சிறந்தவனாகியெனத் தேவர்வாழ்த்துதல்.

பாயநோக்கினவானவர்தானவர்பழிப்பில்
தூயமாதவர்முதலினோர்தோன்றியவியப்பால்
வாயுவேகமும் o வயினதேயன்றன்மாக்கதியும்
ஒய்விலாதிவனிடத்தினிலிருக்கவென்றுரைத்தார். (கங)

பின்னுங்கூறுவார்பிறந்தபோதேயிவன்பிதாவே
அன்னவேகத்தனாற்றலாலருக்கன்மேற்பாய்ந்தான்

---

* சுவணம் - பொன். † இனன் - சூரியன்.
‡ பவனன் - வாயுபகவன். $ துனிவு - வெறுப்பு.
¶ பழுவம் - காடு. o வயினதேயன் - கருடன்.

மன்னுமாருதிவளர்ந்தபின்மருவலராஞேர்
என்னதாகியென்படிவரோவிவன்கையாலென்ருர். (கச)

**வாயு அநுமன்மீது சூரியகிரணஞ் சீதளமாகப் படுகவெனல்.**

ஈதுவானவர்தானவர்முதலிஞேரியம்ப
வாதராசனீதியம்பினன்வாயுமென்மைந்தன்
மீதுவெய்யவன்வெங்கதிர்வெண்ணிலாவென்னச்
சீதசந்தனச்சீதளமாகுகவென்ருன். (கரு)

**அநுமன் சூரியனைப்பற்றுதலும் அவன் சீறது குழந்தாயென்றலும்.**

ஆய்ந்ததாதையீதியம்பிடவருக்கன்மேலறப்
பாய்ந்து * மண்டிலம்பற்றினன்கௌவலுமதனுக்
கேய்ந்தவெய்யவனிவன்சிசுவெனமனமிரங்கிக்
காய்ந்திலன்பெருங்கருணையார் † காதலவென்ருன். (கசு)

**இராகு இந்திரனிடம் முறையிடுதல்.**

அற்றைநாளிலவ்வலர்கதிர்மண்டிலமதனைப்
பற்றுவான்சென்றுபற்றலும்பற்றியேனின்ற
கொற்றமாருதிதனைக்கண்டுகுலைந்துபோயிராகு
வெற்றிவிண்ணவர்வேந்தனைக்கண்டிவைவிளம்பும். (கஎ)

மன்னுமிந்திரமதிகதிர்மண்டிலம்விழுங்க
முன்னமேயெமைவிதித்தனைமுறைகெடவேருேர்
அன்னியன்புகுந்தலர்கதிர்மண்டிலங்கௌவி
இன்னமும்விடானிவையென்னநியாயங்களென்ருன். (கஅ)

**இந்திரனிராகுவைச் சூரியனைப்பற்றெனல்.**

என்றுகூறிடவெரிவிழித்திந்திரன்வெள்ளிக்
குன்றுபோலயிராவதமேற்கொண்டுகுறுகிச்
சென்றிராகுவைத்தினகரற்பற்றெனச்செப்ப
நன்றிதென்றவனுயிறுதனைச்சென்றுநண்ணி. (கசு)

**இராகுவின்மீதநுமன் பாய்தலு மவனிந்திரனடி பணிதலும்.**

இரவிமண்டிலம்பற்றுவானெண்ணியவிராகு
வரவுகண்டனன்மாருதிமண்டிலம்விட்டே
அரவின்மேலுறப்பாய்தலுமாங்கவன்கதறி
வெருவியோடினன்விண்ணவர்கோனடிவீழ்ந்தான். (உ0)

**அநுமன் ஐராவதத்தினை பெரியபழமெனப் பிடித்தல்.**

வெருவியோடினவெவ்வராவினைத்தொடர்வேக
‡ அரியின்மே $ லரியழன்றயிராவதமுந்தப்

* மண்டிலம்-சூரியவட்டம். † காதல-குழந்தாய்.
‡ அரி-அநுமன். $ அரி-இந்திரன்.

பெரியதோர்கனிபெற்றனனெனப்பெரிதுவந்து
கரியின்மேலெழப்பாய்ந்தனன்காற்றினுங்கடியான். (உக)

**இந்திரனனுமனை வச்சிரத்தா லெறிதல்.**

இன்னகாலையினிந்திரனெதிர்வருங்கூற்றம்
அன்னமாருதிமேற்கனலாலகாலமெனக்
கொன்னுனைப்பெருங்குலிசம்விட்டெறிதலுங்கொண்ட
தன்னினைப்பினைமறந்துபோய்த்தரணியில்வீழ்ந்தான். (உஉ)

**வேறு.**

**வாயுஅனுமனை யெடுத்துச் சென்றுசையா தொளித்தல்.**

மைந்தனைவீழக்கண்டவாயுவாசவன்மேற்சீறி
இந்தமூவுலகுமுற்றுமிமைப்பினிற்கெடுப்பனென்று
சிந்தையினெண்ணியந்தச்சேயினையெடுத்துக்கொண்டாங்
கந்தரத் * தியக்கமின்றியடங்கினனிருந்தகாலை. (உங)

**வாயுகோபத்தாலுயிர்கள் மூர்ச்சித்தல்.**

உறுவலியில்லாமாயவுடம்பினையுள்ளேநின்று
பிறிவிலாதியக்குகின்றபிராணவாயுக் † கோவிப்ப
அறுகயிற்றூசல்போலவங்கொடிங்குண்ணின்முட்டு
பொறியறுபாவைபோன்றுவீழ்ந்தனர்புவனத்துள்ளோர். (உச)

இறைவர்கள்காப்போரின்றி ‡ யிடும்பையாற்பெரிதுநொந்து
கறைகெழுவேற்கணுரைக்காமுறுவோர்களின்றி
மறையொலியின்றிச்சந்திவந்தனையின்றிவேள்வித்
துறைகளுமின்றிவையஞ்சூனியமாயிற்றன்றே. (உரு)

மாத்திரைப்போழ்துமேனிநிற்குமோவாயுவின்றி
¶ மூத்திரப்புரீடவாயிலடைத்தலான்முடுகுதோற்பை
காத்திரம்பெருத்துவீங்கக்கண்செவிமூக்குநாத்தோல்
சூத்திரமற்றுச்சிந்துந்தொகுமணிக்கோவைபோன்ற. (உசு)

காமபோகத்தைநீத்துக்கற்சுவருலர்ந்த $ காட்டம்
ஆமெனவிருத்தலானுமைம்புலனடக்கலானும்
வாமமும்வலமும்வாயுவழங்குதலில்லையானும்
ஏமநீருலகிலுள்ளோரியோகிகளென்னலானார். (உஎ)

**தேவராதியர் பிரமனையடைந்து குறையுரைத்தல்.**

ஆயவைகிகழுங்காலையமரர்தானவர்களாய
தூயமாதவர்கள்சித்தர்விஞ்சையர்துறக்கத்துள்ளோர்

---

* இயங்கம்-அசைவு. † கோவிப்ப-இயங்காமல் வெறுத்திருக்க.
‡ இடும்பை-துன்பம். ¶ மூத்திரப்புரீடவாயில் - சலமலத்துவாரங்கள். $ காட்டம்-விறகு.

வாயுகோபத்திஞலேமகோதரராகியுள்ளோர்
நாயகஞபிவந்தநான்முகன் றன்னைநண்ணி. (உஅ)

ஆதிவேதியனேகேட்டியமரர்கோன்குலிசத்தாலே
காதலஞயமைந்தன்காலன்வாய்வீழக்கண்டு
* வாதராயன்கோவிப்பவயிறுகள்பெருஞ்சாலென்னப்
பூதமதென்னவீங்கிப்புரண்டனர்புவனத்துள்ளோர். (உகூ)

**பிரமன் வாயுவையடைந்து சமாதானமுரைத்தல்.**

என்றவரியம்பக்கேட்டவிரணியகருப்பனின்று
சென்றுநோய்தீர்ப்பனென்னுஞ்சிந்தையன்றேவர்சூழ
வன்றிறன்மாண்டசேயைமடியிலேவைத்துநோயால்
கன்றியமனத்தஞயகாற்றினுக்கரசைக்கண்டான். (௩௦)

**பிரமன் பரிசத்தலால் அனுமன் உயிர்பெறுதல்.**

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்சூழவந்த
அந்தணன்றன்னைநோக்கியகத்தெழுதுன்பத்தோடு
வந்தடிபணிந்தோன்றன்னைமலர்க்கையாலெடுத்துவாயு
தந்தபாலனைத்தன்கையாற்றடவினன்றயாவின்மிக்கான். (௩௧)

நீடியமலரின்மேலோனெடுங்கையா † னீவலோடும்
வாடிமண்மடிந்த ‡ பைங்கூழ்மழைவிழத்தளிர்க்குமாபோல்
¶ வீடியமைந்தன்சீவன்பெற்றிடத்துயரின்வெந்து
கோடியனெஞ்சுதாதைகுளிர்ந்தனனுணர்வின்மிக்கான். (௩௨)

**தேவர் யாருதிக்கனும நாமமளித்து வாழ்த்துதல்**

திண்டிறன்மைந்தன்சீவன்பெற்றிடத்தேர்ந்தவாயு
பண்டுபோலுலகமெங்கும்பாய்ந்துதான்சரியப்பார்த்துப்
புண்டரீகத்தின்மேலோன்புரந்தரஞதியானேர்
அண்டர்களெவருநோக்கியவற்கிதமறையலுற்ருர். (௩௩)

**வே று.**

சீர்பெற்ருெளிர்பூணஞ்சனைதன்சிறுவன்றன்னைமுகநோக்கிக்
கூர்பற்றியவென்குலிசத்தாற்கூறுபடுபுண்வடுத்தீர்க
ஆர்பெற்ருர்நீபெற்றதுநின் $ னநுவற்றிடலாலநுமனெனும்
பேர்பெற்றுலகமுள்ளளவும்பெறுதிபெயராப்புகழென்ருன். (௩௪)

**சூரியன் அனுமனுக்கு வரமளித்தல்.**

பொல்லாவிருளைக்கடிந்தோட்டு ○ புவனதீபன்புகல்வானென்
வில்லார்கரத்திற்சதகூற்றிலொருகூறுனக்குமேவிடுக

---

* வாதராயன்-வாயுபகவான். † நீவல்-தடவுதல். ‡ பைங்கூழ்-பயிர். ¶ வீடிய-இறந்த. $ அநு-கதுப்பு. ○ புவனதீபன்-சூரியன்.

எல்லாவிஞ்சைகளுந்தரிக்கவிசைந்தசத்தியுண்டாக
நல்லாய்கொண்ணீதருகின்றேனென்றுநவின்றனலமிக்கான். (௩௫)

### வருணனும் எமனும் வரமளித்தல்

இரணபூமியிடைநேர்ந்தாலென்பாசத்தா * லார்த்தக்கால்
மரணமில்லையுனக்கென்றுவருணராசன்வரங்கொடுப்பத்
தரணியோரைவிதிவழியேதண்டிப்போனென்றண்டத்தால்
முரணின்மிகுமாருதியாவிமுடியாதொழியவரமளித்தான். (௩௬)

காற்றின்சிறுவன்முகநோக்கிக்கருணையாலென்கதையானீ
† கூற்றின்சூழலுறுயென்றுகுபேரன்கூறக்கூற்றுதைத்த
ஏற்றின்பாகனென்கரிசூலியிலையினுலுமென்னுலும்
‡ ஆற்றன்மிகுமாருதியாவியகலாதொழிகவெனவருள. (௩௭)

### அயனும் விசுவகன்மனும் வரமளித்தல்.

தாதாவுரைக்குமென்பிரமதண்டாற்றனுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருநாளும் ¶ விளியாநாளுமுறுகவென
தீதாயிரவேறுக்குமிவன்றேவர்படையாற்செருக்களத்தில்
வாதாமகன்சாவொழிகவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான். (௩௮)

வானோர்முதலாய்வந்துநின்றமறையோர்முனிவரருளாளர்
ஆனோரெல்லாமநுமானுக்கழிவிலாதவரமளிப்ப
நானவகையசராசரமுமுலகும்படைத்தநான்முகத்தோன்
ஊனொருடலினின்றியங்குமொருவன்றனக்கிங்குரைசெய்தான். (௩௯)

### அநுமன் செருக்கால் முனிவரிடங்களிற்புகுந்து குறும்புபுரிதல்.

வன்னிசகாயநின்மைந்தன்வையத்தோர்க்கும்வானோர்க்கும்
இன்னல்செய்யுமிராவணன்றனிலங்கைநகரிலெரியூட்டி
மன்னனிராமன்மனமுவப்பவயவாளரக்கர்குலமறுத்துப்
பின்னையவன்றன்பேரருளாற்பிரமபதமும்பெறுகென்றான். (௪0)

### முனிவர் அநுமனை உன்மத்தனுகெனச் சபித்தல்.

எனறுமலரோன்முதலாயவிமையோர்கொடுத்தவரச்செருக்கால்
நன்றுதீதென்றிங்குணராநன்மாமுனிவருறைவிடத்துச்
சென்றுதயிர்பாலெய்குடித்துச் § சீரைச் ০ சுருக்குச்சுருவமெலாம்
ஒன்றுவலியோன்கொண்டெழலுமூழித்தீயினுடன்றவர்கள். (௪௧)

பொன்மைநிறத்தவயன்வரத்தாற்புவனமூன்றும்பொடிபடுத்தித்
தன்மைப்பிரமதண்டினுற்சாதிப்பரியோனவன்பொல்லாக்

* ஆர்த்தல்-கட்டுதல். † கூற்றின்சூழல்-எமலோகம். ‡ ஆற்றல்-வலிமை. ¶ விளியா-இறவாத. § சீரை-மரவுரி. ০ சுருக்கு-சுருவம். மீமிசைச்சொல் அதுநெய்த் துடுப்பு.

கன்மத்தினையெம்மிடைச்செய்யுங்காற்றின்றனையன்கருத்தழிவுற்
றுன்மத்தனனுய்த்தன்வலிதானுணராதொழிகவெனவுரைத்தார். (சஉ)

சாபமுணர்ந்துகருத்தொழிந்துசாந்தனுகியநுமான்வெங்
கோபமொழிந்துமாதவர்க்குக்கூசிக்குறிக்கொண்டொழுகுநாள்
தீபமனையானுலகுக்குத்திறல்வாரணத்தோனரியிதயத்
தாபனிருத்தவிரசதனுந்தனிப்போர்வீரன்றன்மைந்தர். (சங)

**முனிவர் சாபத்தால் அநுமன் சுக்கிரீவனுட னடங்கியிருத்தல்.**

துன்னுர்காலனும்வாலிசுக்கிரீபன்றூன்றியபின்
மின்னுர்மருங்குங்குற்றிருவென்னவிளங்கு * முருமையவட்காக
இன்னுராகியிருவரும்போரெதிர்ப்பவிளையானிளைத்தோடித்
தன்னுற்செய்யுஞ்செயலற்றுத்தளர்ந்துமதங்கவனஞ்சார்ந்தான். (சச)

**அநுமனேக்கலைகளையு மோருநாளி லுணர்ந்தனனெனல்.**

அந்தமுனிவன்சாபத்துக்கஞ்சிவாலியவ்வனத்து
வந்துபுகுதாதொழிதலால்வாழ்நாள்பெறுஞ்சுக்கிரீவனெடும்
சிந்தைகலந்த † சகியாகச்சேர்ந்துதன்னையுணராதே
அந்தணாளர்சாபத்தாலநுமானடங்கியங்கிருந்தான். (சரு)

**வேறு.**

**அகத்தியன் அநுமனுக்கிணை யெவருமின்றெனல்.**

வேதமொருநாலுடன்விளங்கிய ‡ சடங்கமும்விரிந்தகலையும்
ஓ $ தநிலவீதியிசையேழுபரிபூணருணனுரவிரைதேர்
மீதுசெலும்வெங்கதிரவன்றனெடையிந்திரவியாகரணமும்
ஓதியொருநாளினினுணர்ந்தனனிம்மாருதியுயர்ந்தபுகழோய். (சசூ)

தண்ணளியினன்மிகுதயாவுடைமையால்வருதறுக்கறுதலால்
எண்ணுகருமங்களிவையாவுமிடையூறறவியற்றுமியல்பால்
நண்ணலரைவிண்ணவர்களாயினுநடுக்குறுமிடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின்மாருதியையொக்குமவர்யாருமிலையால். (சஎ)

அறந்தலையெடுத்தபுவி ¶ வானவர்களானவர்களாடினர்களுஉ
§ மறந்தலையிறக்கியதுவாலிமுதலானவர்கள்வாமநயனம்
சிறந்ததிரடோள்புருவமார்பிடைதுடித்தனசிறந்தபுகழான்
நிறைந்தகுணமாருதிநினைத்திருவடித்தொழுதுநின்றபொழுதே. (சஅ)

தனக்குவமையற்றவனைவெற்றிமிகுமாருதிதனைத்தடையிலாச்
சினத்தொடுமனத்திறலரக்கர்கள்செருப்புரிகளத்தமலநீ

---

* உருமை-சுக்கிரீவன் மனைவி. † சகி-சிநேகன்.

‡ சடங்கம்-ஆறங்கம். அது-சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம்.

$ அநிலம்-ஆகாயம். ¶ வானவர்களானவர்கள்-தேவரானோர்கள்.

§ மறம்-பாவம்.

நினைத்ததுமுடித்தொருகணத்தினினினைத்தொழுதுசிறப்பவனையான்
உனக்கினியுரைப்பதெதிலுத்தமவுனைப்பிரிவில்வித்தகனையே. (சகூ)

வாடைதருசேய்பிறவியுஞ்செயல்களும்பெருவரங்களுமிரிந்
தோடவினைமாதவர்சபிப்பவிடைதன்னையுணராதவகையும்
நீடுதவமாமுனியுரைத்திடவியந்து * நிருதேசர்மடியக்
கோடுவிலிராகவன்மகிழ்ந்தவனுமாருதிகுணம்புகழ்தலும். (ருO)

## முனிவரிராயனை வாழ்த்தி வனம்புகுதல்.

தேடுதனமாகுவரெனத்தெளியமாமுனிவர்சொற்களவைகேட்
டோடுமெதுகண்டுசினமாறரசனுக்கிவையுரைப்பவுணர்வால்
நீடுவரவெங்கணியமங்களுளவாகினினினைப்பிரிதலில்
கூடுகிலதெங்கண்மணமென்றலுமகண்டபதிகூறுமிவையே. (ருக)

## தன்னகர்வந்த சனகனை இராமன் தழுவி மகிழ்தல்.

உங்கணியமங்களிவைகுன்றுதலிலாதொழிகவுங்கள்பரமெங்களரசும்
இங்கிவைதிருந்திடுமிருந்தவமருந்தவவெனப்புகழ்தலும்
அங்கிவனையாரருளொடாசிகண்மொழிந்தினிதிருத்தியெனவாழ்
துங்கமறைமாமுனிவராச்சிரமமுன்னிநெறிதுன்னுபொழுதின். (ருஉ)

முடிச்சனகர்கோனுலகைமூடுபடையோடுவகையோடணுகிடத்
தடுப்பரியபேருவகையோடுமகிழ்தாசரதியைத்தழுவிமுன்
படைத்ததனமாபரணமாடைதிகழ்பாவையர்களாதிபலவும்
கொடுத்தபினிராவணகுலத்தினையறுத்தகதைகூறியிடலும். (ருஙு)

ஆனைபரியாபரணமாடைதனமாதியுபகாரமொடுமா
சேனைமுடிமன்னவர்கள்சென்றடிபணிந்தயலிருந்தபொழுதில்
மானகுலபூரணனிராகவன்மகிழ்ந்துமுடிமன்னவர்களுக்
கானவுபசாரமொழிகூறியவரோடளவளாவியபினே. (ருச)

## வேறு.

## இராமன் தன்னைக்காணவந்தாரனைவருக்கும் தானசன்மானங்களளித்தல்.

சனகவானுறுந்தன்னகரத்துவாழ்
சனகனீங்கிடத்தாபமடைந்தவன்
சனகன்மாமகளோடுந்தகாதவஞ்
சனகவான்வந்தவர்சபைவிட்டபின். (ருரு)

தாரணித்தனையாருந்தரியலர்த்
தாரணிப்பெருந்தாபம்பெருந்தவத்

* நிருதேசர் - இராட்சச சிரேட்டர்கள்.

தாரணிப்பரந்தீர்த்தவன் றன்னகர்த்
தாரணிப்புயமன்னன் றருந்தவம். (ருசு)

நூறுகோடிசுவண மூநுண்கலை
நூறுகோடியும்பூணுமுதவினுள்
நூறுகோடியிரத நூதற்கரி
நூறுகோடியசாப நண்ணூலர்க்கே. (ருஎ)

களமொழிந்திடச் * சாலகடங்கரைக்
களமொழிந்திடலங்கையிற்காதினன்
களமொழிந்துசீர்க்கையின்வழங்கினன்
களமொழிந்தறியாக்கதிராரமும். (ருஅ)

அங்கதன்றனளவறியாவசு
அங்கதந்திகழ்மொய்ம்பனருமறை
அங்கதன்னிவ்வகிலாண்டநாயகன்
அங்கதன்றனக்கீந்தானடியொடும். (ருகூ)

பன்னகத்துப்பணித்தகப்பண்டைநூல்
பன்னகப்பகவன்படர்வேலையைப்
† பன்னகத்தணைசெய்பரனீந்தனன்
பன்னகப்படைத்தரனைப்பதிகட்கே. (சு0)

அம்புயத்தயன்முதையணிதிகழ்
அம்புயத்தனரக்கன்படவடல்
அம்புயத்தொடையுய்த்தோனளித்தனன்
அம்புயத்தணைசெய்தோற்கருந்தனம். (சுக)

மானிலங்கைமன்மேற்றளராநதி
மானிலங்கையிருப்புமன்னுவெண
மானிலங்கையில்வாளியிலட்டகோ
மானிலங்கைமன்வாழவழங்கினன். (சுஉ)

அந்தவானரகாரியரக்கர்கோன்
அந்தவானரகேசரியாயினேன்
அந்தவானரவாணரமைப்பினன்
அந்தவானரமங்கையன்னார்களால். (சுங)

திங்கள்வெண்குடையோனரிச்சேனைக்குத்
திங்களோன்றொருநாள்போற்செலுத்தினன்
மங்கைபங்கன்வரையெடுத்தோன்சிர
மங்கைபங்கன்னறுசுவையுண்டியே. (சுச)

---

* சாலகடங்கர் - அசுரர்.
† பன்னகத்து - பலமலைகளால்.

கங்கையேந்திவெண்காரமணிந்துநற்
கங்கைதாங்கியவேணியன்கார்முகப்
பங்கனந்தப்பசுபதிதன்னெரு
பங்கன்செய்வினைபார்த்திதுசெய்தனன். (சுரு)

### வேறு.

வெங்கதிரோன்மைந்தனையவ்விளங்குபுகழ்க்காகுத்தன்விரும்பிநோக்கி
அங்கதனின்னடைக்கலமென்றடல்வாலியந்தியத்திலறைந்தவார்த்தை
தங்கியவென்சித்தத்தைத்தான்விட்டுப்போகாதுதடந்தோள்வீர [ன்.
இங்கிவனைக்குறிக்கொளென வினிதுரைத்துப்பின்னுமிவையியம்பும்வீர

தன்னுடையவலியறியாத்தடவரைத்தோண் மாருதியைக்குறிகொள்வா
ஞெர், மன்னுடையவமரர்பொன்றவாளரக்கன்றன்ஞேடுமேலேந்த நாளில்,
என்னுடையகாரணமாயின்னுயிரைவிட்டவீங்கிவர்களெல்லாம், உன்னு
டையகாவலெனவுரைத்தவனைமெய்யிறுகத்தழுவிக்கொண்டான். (சுஎ)

இரக்கமிலாவன்னெஞ்சத்திராவணன்ருன்முன்பிறந்தானென்றுபாரா
தரக்கர்குலப்பிறப்பறுத்துத்தனக்கடிமைப்பட்டானையண்ணஞேக்கித்
தருக்கறுநின்முன்ஞேஞெந்தனதெஞேடும்பகைகொள்ளேல்தருமசீல
திரைக்கடல்சூழிலங்கைநகரிருந்தரசுசெய்தியெனச்செப்புங்காலே. (சுஅ)

முனைப்புரிந்தவாளரக்கன்முடித்தலைகளறுத்துருட்டிமுனிவர்வாழ்வும்
அனைத்துலகுங்காத்தளிக்குமகிலாண்டநாயகநின்னடியேன்ருேயந்
தனைப்பிரிந்தமீனெனவுந்தாயிழந்தகன்றெனவுந்தரிப்பொன்றின்றி
உனைப்பிரிந்துவாழ்கிலேனுயிர்பிரிந்தவுடலென்னவுரவோயென்ருன். ()

ஆதலானின்னுடையவடிப்பிரியாதிடவேண்டுமெடியனேனென்
ருேதுமாருதிக்குரைக்குமுத்தமனீயித்தலையிலிருக்கின்வெய்ய
சோதியான்மகனயசுக்கிரீவன்றுணையிழக்குமதனுற்றூயோய்
போதுநீயவன்றஞெடுமென்றவனை யுயிர்பொருந்திப்புல்லிக்கொண்டான்.

இவ்வண்ணமிதமுரைத்துவிடைகொடுப்பவிரவிசேய்முதலோரந்த
மைவ்வண்ணனடிவணங்கிவார்ந்தகண்ணீராருகிவாடுநெஞ்சம்
எவ்வண்ணமெம்பெருமானுரைத்ததெமக்கிதமல்லாலகிதமாமோ [றே.
அவ்வண்ணஞ்செய்துமென வணிபொழில்சூழ்கிட்கிந்தை யடைந்தாரன்

வீடணன்வீடணைவோர்க்குத்தாள்சிறக்குந்தாளானைவெய்யோனேவக்
காடணைந்தகருங்கனிற்றைக்கழலிணைத்தாமரைவணங்கிக்கனகமேருக்
கோடணைந்ததோளாரக்கொண்டணிறத்தவனவனைப்புல்லிச்செம்பொன்
நாடணைந்தசுரர்போற்றநல்லரசுசெய்தியெனவிடுத்தானுதன். (எஉ)

கக - வது அநுமப்படலம் - முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-எ0க.

## கஉ - வது, சீதைவனப்புகுபடலம்.

தீங்கறுகுணத்தோரேகச் * சேடநின்சிரத்தின்பாரம்
நீங்கியதெனத்தான்போற்றிநெடுங்கடலவனிபாரம்
தாங்கியவீரனுச்சிச்சந்தியினியமந்தான்செய்
தாங்குயிர்த்தம்பிமாரோடமுதுசெய்திருந்தகாலை. (க)

**புட்பகம் அசரீரியாகநின்று தன்சரிதங்கூறி இராமனை விடைகேட்டல்.**

கனமிடைவானத்திந்தக் † கட்டுரையெழுந்ததோங்கிப்
புனைமணிப்பூணியுயான்புட்பகமெனக்குப்பண்டு
‡ தனபதியுரைத்தகேட்டிதசரதராமன்றன்னால்
கனைகழலரக்கர்கோமான்காலன்வாய்ப்படுதறிண்ணம். (உ)

ஆயவன்பொன்றநின்னாலாவதுசெய்தியந்தத்
தீயவன்பொன்றவேயென்சிந்தைநோய்தீருமென்று
தூயவனெனக்குமுன்புசொன்னதேமுடிந்ததின்று
போய $ வன்றன்னைக்கண்டுவெருகின்றேன்புவனநாத. (ங)

**இராமன் புட்பகத்தைப் பூசித்துப்போவென வதுபோதல்.**

என்றதுகூறக்கேட்டவிராகவன்வியந்துசால
நன்றெனவியந்துகந்தநறுமலர்கொடுபூசித்துப்
பொன்றிகழ்விமானந்தன்னைப்போவெனவிடுத்தலோடும்
சென்றதுதனக்குவேண்டுந்திசையின்மேற்சிந்தையென்ன. (ச)

**புட்பகம் போகக்கண்டபரதன் ஆச்சரிய முற்றுரைத்தல்.**

அந்தவற்புதத்தைக்கண்டபரதனுச்சரியமெய்திச்
சுந்தரவில்லிதன்னைத்தொழுதிவைசொல்லுந்தூயோய்
இந்தமாநிலத்தைக்காக்குமிறைவனீயிசைந்தபின்பு
வந்தவற்புதங்களெண்ணில்வரம்பிலையென்றுகூறி. (ரு)

அத்திராதிகளாற்சாக்காடில்லைவாளரியால்யானைச்
சத்துருவில்லைவேங்கையாவொடுமானைச்சார்ந்து
மித்திரமாகுநீராளெருப்பினுல்வீவோரில்லை
புத்திரர்மரணங்காண்பாரில்லையிப்புவனத்தெங்கும். (சு)

நோயுறுவார்களில்லைநோயுறாமூத்தோருக்குக்
காயும்வெங்கூற்றமில்லைக்கணவனையிழப்போரில்லை
வாயுவுமுடலுக்கின்பமாகவந்தசையாநிற்கும்
ஆயிழையார்களெல்லாமாண்மகப்பெறுகின்றார்கள். (எ)

---

* சேட - அண்மைவிளி. † கட்டுரை - பொருள்பொலிந்தஉரை.
‡ தனபதி - குபேரன். $ அவன்றன்னை - அக்குபேரனை.

மண்ணுலகுள்ளமன்னர்மைந்தர்கண்மங்கைமார்கள்
எண்ணிடுமெண்ணமெல்லாமிராமனேயரசுசெய்திக்
கண்ணகன்ஞாலங்காப்பானென்றுகட்டுரைப்பரென்ன
அண்ணலுமதனைக்கேட்டாங்ககமகிழ்ந்திருந்தகாலை. (அ)

### இராமன் சந்திவந்தனைக்காக நிலவிற்போதல்.

சரிந்தவெங்கதிரோன்வீழத்தராபதிசந்திசெய்யப்
புரிந்தசிந்தையனுய்ப்போகப்பூங்குழன்மடவார்தம்மைப்
பிரிந்தவர்க்காலமாகிப்பிரிவிலோர்க்கமிழ்தமாகி
விரிந்தவெண்ணிலவைவீசிவெண்மதிதோன்றிற்றன்றே. (கூ)

### வேறு.

பிரிந்தகாளையரைமாதரைக்கொல்வான்பேரவோர்வழியிலாவண்ணம்
விரிந்தவெண்ணிலவாம்வலையினல்வீசிவெண்கதிர்த்திங்களையேவிப்
புரிந்துவெங்கொலைசெய்தென்றனுய்விட்டுப்பூங்கணைவேடன்வாயம்பு
தெரிந்தவனன்றிற்பெடையினையெட்டுத்திசையொடுங்கூப்பிடச்செய்து.

அங்கவைநிகழுங்காலையிலாழியண்ணலுமவனியிற்பிறந்த
மங்கையுமாறிக்கண்வலைப்பட்டுமனங்களின்மாறினர்புகுந்து
கங்குலும்பகலும்பிரிவிலராகிக்காதல்வெள்ளத்திடையழுந்திப்
பங்கமில்போகநுகருநாள்வந்துபுகுந்ததுபங்குனித்திங்கள். (கக)

### வசந்தாரம்பம்.

கழிந்துவீழ்பழுத்தவிலையினவாகிக் காண்டொறுங்கவினுறத் தழைத்த, பழம்படாநீக்கிப்புதுப்படாம்போர்த்த பான்மைபோற்பாதவமெல்லாம், பொழிந்தெனமலராற்பொன்னிறவாடைபோர்த்தன போன்றனகோங்கும், செழும்படாஞ்சிவந்தபோர்த்தனவொப்பத்திகழ்ந்தன செம்மலர்ப்பலாசம். (கஉ)

பொன்னரிமாலைதூக்கினகொன்றைபுன்னைகள்பொரிமலர்பூத்த
நன்னுதலாரைநெடும்பகற்பிரிந்துநாடொறுநினைந்தநாயகர்தாம்
மன்னவரோடுகூடினகலவியமிழ்தினையருந்துமாபோலப்
பன்மலர்தொறுமங்குறைந்துதேனினங்கள்பருகினபசுநறுந்தேறல். ()

### இராமனுஞ் சனகியும் ஸ்ரீராமரக்காவிலின்ப நுகநுதல்.

அண்ணலுமமிழ்திற்பிறந்தவாயிழையுமணிகொள்பூம்பொழிலிடையடைந்
தண்ணறும்புன்னைசண்பகஞ்செருந்திசாதிபூஞ்சண்பகம்தாழை [தார்
எண்ணருங்குருந்துபாடலமாதியெழின்மரமிடைநெருங்கியதை
விண்ணவர்கோமான்கற்பகச்சோலைமேதினியிழிந்ததொத்துளதை. (கச)

தாவுமேழ்புரவிபூணுமோராழித்தேரவன்சார்வருமதனைக்
காவியுஞ்செய்யகமலமுந்தங்கள்கண்களுக்கஞ்சிநீரொளிப்பத்

தேவியுந்தானுஞ்சேயிழையாருஞ்செழுந்துறைபடிந்துநீராடும்
வாவியும்வாவிக்கரைதொறும்விளங்குமணியுறைமண்டபத்தினதை. (௧௫)

இன்னதன்மையதாமிளமரக்காவினெழிலெலாமிரவிதன்குலத்து
மன்னவனிராமன்மலர்க்கணுேக்கிவனப்பெலாமனமுறக்கண்டு
அன்னமென்னடைநூன்மின்னிடைமருங்குலணிதிகழ்மேகலையல்குல்
கன்னலுந்தேனுங்கலந்தநன்மொழியாய்காணெனக் காட்டினனெல்லாம்.

மென்னடையன்னநின்னடைக்கஞ்சிவெளியிடைநின்றிடவெள்கித்
துன்னிடைமலர்பூஞ்சோலையின்மறையத்தோகைநின்சாயலுக்குடைந்து
தன்னடைகெட்டேயினியுயிர்தாங்கோமெனத்தழன்முழுகுவபோல
மின்னிடைப்பூணுய்விரிமலரசோகின்மேற்சென்றுவீழ்வனகாணுய். (௧௭)

உள்ளபோதினிதுண்டிலாதபோதவரோடுறவுவிட்டுறுமிடந்தேடும்
ஒள்ளியரல்லாருறவுபோனெடுநாளுயர்தருமலர்மதுவுண்டு
மெள்ளவம்மரம்பூமாறிடவிட்டுவேறொருபூமரந்தேடிக்
கள்ளவிழ்கோதைகமழ்குழலணங்கேகளிவண்டுபோவனகாணுய். (௧௮)

ஐங்கணையானைவிட்டதிவிரூபனருநிதியுடையனேவலுக்கும்
மங்கைமார்மனம்போல்வாழைதன்மருங்குவந்துறமரகதமாகிப்
பொங்கியசெருந்திப்பூவுறப்பொன்னுய்நீலமாய்ப்பூவைவீபொருந்தப்
பங்கயமடுப்பச்செம்மணியாகும்பளிக்கறைபைந்தொடிபாராய். (௧௯)

பொருகயனயனப்புரிகுழலாளேபொய்த்தவவேடத்தின்மறைந்து
விரிகடலுலகில்வேண்டியவண்ணம்வெவ்வினைசெய்பவரென்னத்
திரிதருமீனைத்தப்பறக்கொத்தித்தின்றிடுமுபாயமீதெண்ணிக்
கருதியகொக்குமெய்சலியாதுகண்முகிழ்த்திருப்பனகாணுய். (௨௦)

அடிமலரரம்பைகுறங்ககலல்குலரவுமின்னிடையணியமைத்தோள்
இடைநிரைதரளப்பவளவாய்வேற்கணெழிலுதல்விரைகமழோதி
வடிவினிற்செய்யமங்கையன்னுளேவண்டுகண்மொய்த்தசெங்கமலம்
கடுவினைக்கொல்லனுலைக்கரிமூடுங்கனலினைநிகர்ப்பனகாணுய். (௨௧)

### இராமன் பளிக்குமண்டபத்தமர்தல்.

வெங்கதிர்நுழையாவிரிபொழிலுள்ளவேறுவேறுகியவிசேடம்
செங்கயற்கண்ணுய்காணெனக்காட்டச்செறிகழற்சேவடியிராமன்
பங்கயவாவிப்பளிக்குமண்டபத்துப்பசுநறுந்தென்றல்சேவிப்ப
மங்கையர்வாழ்த்தமாகதரேத்தமடந்தையோடினிதுவீற்றிருந்தார். (௨௨)

பொன்னிறமேனிப்பூமகளோடும்பொருதிரைப்பாற்கடனடுவண்
பன்னகவணைமேற்பண்டுதானிருந்தபடியெனத்தோன்றிமாய்ந்திடாத
மின்னெடுங்கூடிமேதினிபடிந்துவிளங்குகார்மேகமாமென்னச்
செந்நிறமேனிச்சீதையைத்தனதுசெம்மலர்த்திருக்கையாலணைத்து. (௨௩)

செய்வகையறியார்கண்டனர்திகைப்பத்திருந்தியதாளவாத்தியங்கள்
தய்வரும்வண்ணமூவகைச்சதியுந்தப்பறத்தனித்தனிகாட்டிக்
கய்வழிகண்ணுங்கண்வழிமனமுங்கலந்திடக்கற்பகநாட்டுத்
தெய்வமங்கையர்கணுணினர்நிற்பச்சேயிழையார்நடமாட. (உச)

எழுவகையிசைக்காரணமுடைப்பண்ணுக்கிசைந்தன தாளவாத்தியங்கள்
தழுவிடவைத்துச்சராசரமுருகத்தாளத்தின்வழியுருவெடுத்து
விழிபுருவந்தோண்மிடறுகள்சலித்துவேறுபாடுருவகையிசைநூல்
வழுவுதலின்றிவயங்கியம்வீணைமயங்கிடமாகதர்பாட. (உரு)

அன்னசங்கீதமினிதுகொண்டாடியருநிதியாடையாபரணம்
மன்னவனிராமன்மாகதர்க்களித்துமாதொடுங்கோயிலின்வைகிப்
பன்மலர்பறித்துநீர்விளையாட்டிற்பரிந்துபின்னமுதினிதுண்டு
நன்னுதலாருந்தானும்மப்பொழிலினுடொறுமாடுறுநாளில். (உசு)

### சீதை கருப்பவதியாதல்.

விழிபெரும்பசலைபூத்தனமேனிவெளுத்ததுமெல்லியன்முன்கை
தழுவியசரிகள்சரிந்தனகர்ப்பந்தரித்ததுசான்றவர்க்கெல்லாம்
மொழிவனபோலமுலைகள்பால்பாயவைமுகங்கறுத்தனவாக
எழுதருஞ்சீதைக்கிவ்வகையாயவிலக்கணம்பலவுமுண்டாக. (உஎ)

### இராமன்சீதையைநின்விருப்பம் எதனிலெனல்.

அன்னவள்கர்ப்பவிலக்கணமெல்லாமமைவுறநோக்கியவ்வழியே
மன்னவனிராமன்மங்கையைநோக்கிமனத்திடைவேண்டிநீயிருப்ப
தென்னெனவியம்பநாணினள்சிரிப்பவிராகவன்பின்னையும்பலகாற்
சொன்னபின்வேண்டியிருப்பதீதென்றுதூய்மொழியாளிவைசொல்லும்.

### சீதை முனிவராசிரமத்தில் தங்கவிருப்பமெனல்.

துங்கமாதவத்தோர்கங்கையாதீர்த்தத்துறையிடைக்குளித்தந்திதொழு
பொங்குநூல்புரளுமார்பினர்புனைந்தவற்கலைபுரிந்தசெஞ்சடையர் [வோர்
அங்கவர்வாழுமாச்சிரமத்தையடைந்தவர்க்கேவல்செய்தொருநாள்
தங்குறவேண்டியிருப்பனென்றுரைக்கத்தசரதராமனீதுரைத்தான். ()

### சீதைக்கு முனிவராசிரமங்களை நாளைக்காட்டுவேமென விராமன் கூறுதல்.

நாளைநாமுனக்குநற்றவத்தோர்களிருப்பிடங்காட்டுதுமென்று
நீள்குழலாளைக்கோயிலில்விடுத்துநீலமாமுகில்புரைநிறத்தோன்
வாளினில்விசயபத்திரன்றந்தவத்திரன்சுமாதகன்சுராஞ்சி
காளியர்முதலோர்நீடுசொற்பரியாகாதைகொண்டாடியங்கிருந்தான். ()

### இராமனுலகவதந்தி யென்னெனல்.

இக்கதைகிடக்கவிறைவர்களென்று மிடைவிடாதிராப் பகல்கேட்பத், தக்கதனுட்டினகரியிற்சனங்கடம்மி லிப்பொழுதுதானுரைக்கும், அக்க

தையுரைமினென்றுவாள்சங்கோடாழிவிற்கதையிவையொழிந்து, மொய்க்குமாபுகழோடயோத்திவீற்றிருந்தோன்மொழிந்திடவவரிவைமொழிவார்.

**நினக்கெதிரிலையெனச் சனங்கள் கூறுகின்றனரெனல்.**

வங்கெதறிகடலைமலைகளாலடைத்துமதினிலங்காபுரியழித்து
வெந்திறலரக்கர்குலத்தைவேரறுத்துவிண்ணவர்கோன்றலையெடுப்ப
இந்திரசித்தைக்கொன்றிராவணனையீரைந்துதலையறுத்துருட்டும்
சுந்தரவில்லிக்கெதிரிலையென்றுசொல்லுவார்தொல்லுலகுள்ளோர். ()

**இராமனுள்ள வாறுரைத்திரெனல்.**

ஆங்கவரிவ்வாறுரைத்திடக்கேட்டவரசர்கோனவர்களைநோக்கி
நாங்களிந்நகரினாட்டினிற்பிறக்குநன்மையுந்தீமையுங்கேட்டுத்
தீங்கவையகற்றிச்சிந்தனைசெய்துஞ்செப்புமிவ்விரண்டுநீர்கேட்ட
நீங்களொன்றுக்குங்கூசலீரென்னநின்மலகேட்டியென்றுரைப்பார். ()

**இராவணனபகரித்த மனைவியுடன் மானமின்றி இராமன்**
**வாழ்கின்றன னென்றனர்.**

மன்னவனிராமன்மானபங்கத்தைமனத்தினைவைத்திலன்வானோர்க்
கின்னல்செய்தொழுகுமிராவணன்கொடுபோந்திடைவிடாதீரறுதிங்கள்
தன்னெடுநகரிதனிற்சிறைவைத்ததையலைத்தாரமாய்க்கொண்டு
பின்னையும்வாழ்க்கைபேரிழுக்கென்றுபேசுவார்பெருநிலத்துள்ளோர். ()

**இராமன் பாதாதியர்க் குரைத்தல்.**

ஒத்தவரிவ்வாறுரைத்திடும்வெஞ்சொலுள்ளுறநிறத்தினிலொளிவேல்
தைத்ததுபோலவுளைந்துதன்சிந்தைதளர்ந்தபின்மானபங்கத்தன்
வித்தகராயதம்பியர்க்கூவிவேறிடத்திருந்தனன்கேட்ட
உத்தமனெல்லாந்தெரிவுறவுரைப்பானவர்தமக்கிவையிவைகூறும். (௩௫)

என்னுயிர்நீங்களென்வலிநீங்களென்னுறுதுணைவருநீங்கள்
என்னெழினீங்களென்றவநீங்களென்பிராதாக்களுநீங்கள்
என்னரசின்பநீங்களேயாறலென்பழியும்பழிபுகழும்
அன்னதேயாகுமானபின்யானிங்கறைவனீரனைவருங்கேண்மின். (௩௬)

**இராமன் தம்பியருக்குச் சீதை தூயவளாயினும் உலகினர்**
**பழிக்கின்ற ரெனல்.**

தீயவாளரக்கன்சிறையிடையிருந்து செங்நெறித்தீயிடைமூழ்கி, ஏயுமாதவர்க்குமிமையவரானோரியாவர்க்குமென்மனத்துக்கும், தூயளாயிருந்தாளாயினுமுலகோர்சொல்லுறுபெரும்பழிதனைக்கேட், டோயுமென்னுள்ளமுண்மைபார்பயனென்னுலகுளோர்க்கொத்திடாதொழியின். (௩௭)

**இராமன் சீதையை முனிவராசிமத்துவிட யான்துணிந்தேனெனல்.**

ஓதநீர்வேலையுலகுளோரில்லதுளதெனினுள்ளதாமுள்ள
தியாதொருபொருளையில்லையென்றுரைக்கினில்லையாமிதுவுலகியற்கை

ஆதலாலவளையருந்தவத்தோர்களாச்சிரமத்தயல்விடுத்து
மீதுநான்றுணிந்தகாரியமினிவேறெண்ணுவதொருபொருளில்லை. (௩அ)

## இராமன்மொழிகேட்ட இளையோர் வருந்துதல்.

இவ்வகையிராமனியம்பிடக்கேட்டவின்னுயிர்த்தம்பிமாரென்றும்
செய்வகையறியார்தீயகைகேசிசீதையுமிராமனும்வனம்போம்
அவ்வகையுற்றவன்றையிற்கலங்கியகத்தெழுந்துயரினராகி
எவ்வகையாலுமிதுவிலக்கரிதென்றிருந்தனரிடிவிழுந்தென்ன. (௩௯)

## இலக்குமணனுக் கிராமன் சீதையை வனத்தில்விட ஆணையளித்தல்.

கலக்குவனுலகமூன்றையுமொன்றுகருதுமேற்கணத்திடைமுடிக்கும்
இலக்குவன்றன்னையிராகவனோக்கியிங்கியான்றுணிந்தகாரியத்தை
விலக்குவனென்னுஞ்சிந்தையைவிட்டுவெவ்வினைவேறொடும்பறிய
மலக்குவன்றவத்துமுனிவர்வாழ்வனத்து மடந்தையைவிடுதிகேளின்னும்.

## சீதையை வான்மீகிவனத்து விடுதியெனல்.

கல்விசேர்முனிவர்தவவனமடங்கக்காட்டுவானிசைந்தனெனவளும்
சொல்லியவண்ணஞ்செய்குவெனென்றேயுவந்திடுஞ்சுமந்திரற்குணர்த்தி
சில்லுளைப்புரவித்தேர்மிசையேற்றிச்சீதையைச்செறிபுகழைய [ச்
* நல்லுயிர்த்தோழனுயவான்மீகிநற்றவஞ்செறிவனத்துய்த்தி. (௪௧)

என்றடவிராமனியம்பிடக்கேட்டவிலக்குவனெழுந்துவெந்துயரால்
தன்றுணையில்லாச்சுமந்திரற்குணர்த்தித்தடமணித்தேர்பணிவியற்றிப்
பொன்றிகழ்மணிப்பூண்சீதைமாளிகையின்புனைமணிவாயிலிற்புகுத
இன்றொருப்பாடிதேதெனவினவுமேவலோர்க்கிலக்குவனியம்பும். (௪௨)

## சீதை வனம்புதுவான் தேரேறுதல்.

மன்னவன்பெரியோர் மலர்ப்பதந்தன்னை வணங்கிடக்காட்டெனவுரைத்தான், என்னனுமவர்போயுரைத்தலு மெழுந்தவுவகையாலின்னுயிர் தளிர்த்தே, மின்னொளியாரமுதலவாபரணம்விளங்குசீர் நவமணியாடை, இன்னவைபிறவுந்தெரிந்துகொண்டிளையோனியம்பிடவேறினளிரதம். ()

## சீதை துன்னிமித்தங் காண்டல்.

சலக்கடல்கிழியச்சென்றிடுங்கலம்போற்றடமணித்தேர்செலத்தையல்
வலக்கணுந்துடித்துவயிறெரிவுற்றுமனமுந்தன்மேனியுநடுங்க
இலக்குவவெனக்குத்துர்க்குறியிதனுலென்வினைவென்றுநானறியேன்
விலக்கரிதாயவிதியினுல்வினைக்கும்வினைவையார்மேதினியறிவார். (௪௪)

---

* இராமவான்மீகர்கள் ஒருவரையொருவர் முன்னரே யறிந்தவரெனவும் பிராணசினேகிதர்களெனவும் விளக்குதற்கே நல்லுயிர்த் தோழனுய வான்மீகி என்றனர் ஆசிரியர்.

தாமுறு துயரங்தையலரறியார்சார்ந்தவித்தூர்க்குறியதனல்
தூமனமுடையவென் சுவாமிக்குந்துணைவிலென்கொழுந்தமாருக்கும்
மாமியர் தமக்கும்வான்கிளை தனக்கும் * வடநகரத்துள்வாழ்வோர்க்கும்
தீமையொன்றின்றிநன்மையாய்விடுகதெய்வமேயென் றுகைதொழுதாள்.

**இலக்குமணனிந்நிமித்தங்களால் தீங்குவராதெனல்.**

அன்னவக்குறிகளாயிழைகூறவகத்தெழுந்துயரனையிளையோன்
சொன்னவிக்குறியானங்கிளையானோர் துயரின்றிச்சுகத்தினிதிருப்பார்
என்னலுமெழுந்தவுவகையளாகியிருந்துயரொழித்தவணிருப்பப்
பொன்மணிநெடுந்தேர்தென்றிசைநோக்கிப்போயது தூயவர்பொறுத்து.

**அந்தியிற்சீதை கங்கையைக்காண்டல்.**

மாமதிமுகத்தின்மறுவறுகற்பின்மங்கையும்வருவனவெண்ணும்
தூமதியமைச்சன்சுமந்திரன்றானுந்துயருறுமனத்திளையோனும்
கோமதியென்னுநதியினைக்குறுகிக்கொடுங்கதிர்மேல்கடல்குறுகத்
தாமதில்வைகிப்பிற்றைநாளுச்சிதடம்புனற்கங்கையைச்சார்ந்தார். (சஎ)

**துக்கமுற்றவிலக்குமணனைச் சீதைகாரணம் வினுதல்.**

கங்கையைச்சென்றுகாண்டலுமிளையோன்கண்கணீரரும்பிடக்காந்திப்
பொங்கியதுயரம்புறப்படாவண்ணமடக்கிடவுண்ணின்றுபொரும
இங்குநீயிங்ஙனிடருறுவானேனிலக்குவவியம்புதியென்று
மங்கையீதுரைப்பமறுமொழிகொடாதுவாய்விட்டுக்கதறிடுங்காலை. (சஅ)

**இலக்குமணனிராமன் பிரிவால் வருந்துகின்றேனெனல்.**

தூயவிந்நதியைக்கண்டவரெல்லாந்தொழுதுவந்தாடுவர்தூயோய்
நீயிடருறுவதென்னுலகத்தினினையிடர்செய்பவரில்லை
நாயகன்றன்னைப்பிரிந்தறியாதேனளிரண்டுண்டுநான்பிரிந்தேன்
ஆயவன்றன்னைநினைந்துறுதுயரென்றறைந்திடைவாயிழையுரைப்பாள். ()

**சீதை இலக்குமணனுக்கு ஆறுதல் கூறுதல்.**

நன்றிவித்தாகுநல்லொழுக்குடையநற்றவமுனிவரையெல்லாம்
சென்றடிபணிந்து தீவினையறுத்துத்திகழொளியாடையாபரணம்
என்றுணைத்தோழிமார்கட்குமவரையீன்றெடுத்தோர்கட்குமுதவ
இன்றொருநாளுமிருந்துநாமீடுமிலக்குவவிடருறலென்றாள். (ருo)

**இலக்குமணன் சீதையைவணங்கி இதுகேளென் றுற்றதுரைத்தல்.**

இன்னவாசகங்களேந்திழையியம்பவிலக்குவனிடரையுள்ளடக்கி
நன்னதிதனைநாவாயினிற்கடத்திநடந்துபோய்த்தென்கரைநண்ணி
மன்னவனிராமன்றேவியைமுறையால்வலஞ்செய்துமலரடிவணங்கி
என்னுரைகேட்டியேழுலகுடையாயெனவவளியம்பெனவியம்பும். (ருக)

---

* வடநகரம் - மிதிலாபுரி.

### வேறு.

கடுந்துயர்மேற்கொண்டேறக்கண்ணினீர்வெள்ளஞ்சோர
ஒடுங்கியவலியினீரற்றுலர்ந்திடுமுகத்தனஞ்சி
நடுங்கியமனத்துநீரினாத்தழுதழுத்துமெல்லப்
பிடுங்கியமொழியன்மங்கைக்கிவையிவைபேசலுற்றான். (௫௨)

உத்தமகுணத்தோய்கேட்டியுலகமாதாவேகேட்டி
சுத்தனாஞ்சனகன்வேள்விதோன்றியதூயோய்கேட்டி
வித்தகனிராமனேவிவிட்டகாரியங்களெல்லாம்
தத்துவமானவண்ணஞ்சாற்றுவெனென்றுசாற்றும். (௫௩)

வாடியமுகத்தன்வெய்யமானவேன்மருமத்தூன்ற
நீடியவுயிர்ப்பன்றான்முன்னினைத்தகாரியத்தின்மேலே
ஓடியமனக்காகுத்தனொல்லையினழைப்பவந்து
கூடியதம்பிமாரினெனைக்குறித்தினையகூறும். (௫௪)

உலகத்தாருள்ளதென்றதுள்ளதாமொலிநீர்வேலை
உலகத்தாரில்லையென்றதில்லையாமுணருங்காலை
உலகத்தாருள்ளதென்றதில்லையென்றுரைக்குமாகின்
உவகத்துக்கவன்பேயாகுமுண்மையாற்பயனொன்றில்லை. (௫௫)

சீதையைக்கொடுபோய்வெய்யோன்சிறையிடைவைப்பமீட்டும்
காதலாலவளைக்கொண்டுகாகுத்தன்வாழும்வாழ்விற்
சாதலேயழகிதென்றுசாற்றுவர்தரணியுள்ளோர்
ஆதலாலசுத்தையென்றேயறிந்துவைத்தவளைநீத்தோம். (௫௬)

என்றவனியம்பவெல்லோமெதிர்மொழிகொடுக்கவஞ்சி
நின்றவணடுங்கவந்தநெடுந்தகையென்னைநோக்கித்
துன்றியமணித்தேர்தன்னைச்சுமந்திரற்பண்ணச்சொல்லி
இன்றிவனோடுநீயவ்வேந்திழைதனைத்தேரேற்றி. (௫௭)

### இராமன் வான்மீகியினாச்சிரமத்தருகில் சீதையைவிடச் சொன்னானென இலக்ஷ்மணனுரைத்தல்.

நன்னெறிநகருநாடுங்கடந்துபோயடவிநண்ணித்
தன்னுயிர்தன்னைவிட்டுத்தடம்புகழ்கொண்டவையன்
இன்னுயிர்த்தோழனாயவெழில்கொள்வான்மீகிவைகும்
பன்னகசாலையின்பாற்பாவையைவிடுதியென்றான். (௫௮)

### இலக்ஷ்மணன் சொற்கேட்ட சீதைமயங்கிவிழுதல்.

என்றவனியம்பவண்ணலேவலைமறுக்கவஞ்சி
இன்றுனைக்கொண்டுபோந்தேனென்றிவையிளையோன்சொல்லாம்

கன்றியகனலினூடுதோய்ந்தநாராசஞ்சீதை
தன்றுணைச்செவியிலேறத்தரணியிற்றளர்ந்துவீழ்ந்தாள். (ருக)

விழுந்தனள்புரளுமந்தவெந்துயர்பொறுக்கமாட்டா
தெழுந்தனடிரியவீழுமிருகையால்வயிற்றைறயெற்றும்
அழுந்திடுதுயரவெள்ளத்தழிவுறுமருவிக்கண்ணுள்
கழிந்தனள்சீதையென்றுகலங்கினர்கடவுளோர்கள். (சு0)

அன்னவளவத்தைகண்டாங்கிளையவனலறிவீழ்ந்தான்
பின்னையும்பாடுசொலப்பெருகவுண்டாதலாலே
இன்னுயிரரிதிற்பெற்றுங்கிருகணும்விழித்துமன்னர்
மன்னவனிராமன்றேவிவாய்விட்டுப்புலம்பலுற்றாள். (சுக)

## வேறு.

## சீதை புலம்புதல்.

அன்னேயோவையாவோவாருயிர்த்தோழிமீர்காள்
தன்னேரிலாதவென்றித்தாசரதியார்செய்த
இன்னாதவிச்செயலைக்கேட்டபோதென்படுதீர்
என்னேரிவ்வுலகத்தில்யாரேனுவிங்கிவைபடுவேன். (சுஉ)

பய்யார்வெம்பணத்துலகிற்பழியாலேபழிமறைத்து
நெய்யாலேநெருப்பவிக்கநீணிலத்திற்கண்டறியேன்
கய்யார்வெஞ்சிலைதரித்தகாகுத்தனிடைக்கண்டேன்
உய்யாரென்மாமிமாரிவ்வுரைதஞ்செவியுறவே. (சுந)

கன்னெஞ்சராயென்னைக்காட்டில்விடச்சொன்னவரோ
வன்னெஞ்சராயதனுக்கிசைந்துவிடவந்தவரோ
நன்னஞ்சம்விழிக்கணிந்தநங்கைமார்நகைசெய்ய
இன்னஞ்சாகாதிருந்தயானேநெஞ்சார்வலியார். (சுச)

* பண்பிறந்தசொன்மடவார்பழித்தென்னைநகைப்பர்களோ
எண்பிறந்தவன்னெஞ்சனிராகவனென்றியம்புவரோ
மண்பிறந்தபின்பிறந்தமறிகடல்சூழ்வையகத்தும்
பெண்பிறந்தார்யான்பட்டபெருந்துயரமார்பட்டார். (சுரு)

கனிமனத்துக்காகுத்தன்கடலுலகிற்பழிக்கஞ்சித்
தனியொருத்தியான்கதறத்தனிக்காட்டில்விடுவித்தான்
பனியகற்றுமாதித்தன்பயந்தெடுத்துப்பழிப்பற்ற
மனுகுலத்திற்பிறந்தார்கட்கிவையோதான்மனுநெறியே. (சுசு)

கய்கேசிமனந்திரியக்கற்பித்தகூனியைப்போல்
மய்யார்கண்மடவாரோமைந்தரோமண்ணுலகில்

---

* பண்பிறந்த-இசைதோன்றிய, அல்லது முறைகெட்ட.

அய்யாவென்காதலனையாரோவிக்காரியத்தைச்
செய்வாயென்றிப்பொழுதுசிந்தையுறக்கற்பித்தார். (௬எ)

என்றினையபலபன்னியிருகண்ணீர்நதிபெருகக்
குன்றுகளுமரங்களுமக்கொடுமிருகங்களுங்குலைந்து
நின்றுருகவனதெய்வநெஞ்சழிந்துகண்பனிப்பக்
கன்றியநெஞ்சுடைச்சீதைகதறுகின்றவக்காலை. (௬அ)

இளையவனுமொருவண்ணமிடர்க்கடலைக்கடந்தேறி
உளைவுறுசிந்தையினுளுக்குத்தமிகேளெனவுரைக்கும்
விளைவுறுவல்வினைப்பயனைவிண்ணவற்கும்வெலற்கரிதால்
வளைபயில்சூழ்கடலுலகின்மானுடரார்விலக்குவார். (௬௯)

### இலக்குமணன் நளன் சரிதவுவமைகூறுதல்.

உலகுக்குநாயகனுயோராழிதனைநடத்தி
மலையொக்குமதகளிற்றின்மதிக்குடைக்கீழ்வாழ்ந்தநளன்
நிலைகெட்டுநேரிழையைநெடுங்கானத்திடைவிட்டு
மலையொத்தவினைப்பயனுன் * மடையனுய்வருந்தினனே. (எo)

### இலக்குமணன் அரிச்சந்திரன் சரிதம் உவமைகூறுதல்.

தன்னேரிலாதவரிச்சந்திரன்றன்மைந்தனையும்
மின்னேரிலாதவிடைமெல்லியலையும்விட்டு
முன்னேசெய்விதியாலேமுடைப்பறையற்காளாகி
என்னேதானிடுகாடுகாத்துநிலையிருந்தான். (எக)

இன்பத்திலிறுமாந்துதோஞேக்கியீன்றமத
துன்பத்திலழுந்துவார்தொல்லுலகிலறியாதார்
இன்பத்துன்பங்களேயெய்தியபோதிவையெல்லாம்
முன்பற்றுவிடாதவினைப்பயனென்பார்முழுதுணர்ந்தோர். (எஉ)

### சீதையை இலக்குமணன் நின் நல்வினை தீவினைகள் நின்னை இராமனிற்கூட்டிப் பிரித்தனவெனல்.

முன்செய்தவல்வினையான்முகில்வண்ணன்றனைப்பெற்றுப்
பின்செய்ததீவினையாலவனைநீபிரிவுற்றுய்
என்செய்யாவிருவினைகளிவ்விடர்நீயுருவண்ணம்
நின்செய்யுஞ்செயலெலாநெடுந்தவமேசெய்யென்ருன். (எ௩)

### சீதை இலக்குமணனுக்கு மறுமொழி கூறுதல்.

மாதவர்களடிபேணிமற்றவர்கள்விதிமுறையே
ஓதியநல்வழிவழுவாதுபவசித்தங்குன்னுடைய
காதலனையெப்போழ்துங்கருத்திடைவைத்துயர்தவஞ்செய்
ஈதுனக்குக்கருமமெனவிளையோனுக்கவளுரைப்பாள். (எச)

* மடையனுய்-சமையற்காரனுய்.

நின்னுடையதமையனைநானிழல்போலப்பிரியாதேன்
அன்னவனுநானுஞ்சென்றடிபணிந்தவருந்தவர்கள்
உன்னுடையகாதலனென்றுனைப்பிரிந்தகாரணந்தான்
என்னுரைநீயென்றபொழுதியானவருக்கென்னுரைப்பேன். (எரு)

**சீதைதன்வினையாற்றனக் கிவ்வாறு நேர்ந்ததெனல்.**

பின்னுமவள்கூறுவாள்பேருலகமுழுதுடையான்
தன்னுடையபிழையல்லதாரணியோர்தப்பல்ல
என்னுடையவினையாலேயிச்செயல்கள்விளைந்ததென்றாள்
உன்னுடையதமையனுக்கின்றிளையானேயுணர்த்துதியால். (எசு)

நிறைந்தகடலுலகுரைக்குநெடும்பழிக்குத்தானஞ்சித்
துறந்தனன்வெங்கனற்குளித்துத்தூயோளாயிருந்தேனைப்
பிறந்தபழியெனத்துறக்கப்பேருமாலிடியெனக்குச்
சிறந்ததுதற்பிரிவென்றுசெப்பினளெனவுரைத்தி. (எஎ)

இளையோனேயிருதுவாயீரிரண்டுதிங்களுள
வளையாழியுலகத்தைவாய்மூடவொண்ணாது
விளைவேதாய்முடியுமெனவறியேனுன்மேனியினை
உளையாதசிந்தையனாயுற்றதுநோக்கெனவுரைத்தாள். (எஅ)

என்றினையவவள்கூறவிருகண்கணீர்சொரிய
வன்றிறலோன்மனமயங்கிவாய்விட்டுக்கதறுதலோ
டின்றிந்தவுரைகேட்கவென்னகுறைசெய்தேனென்
றொன்றியவெந்துயரிளையோனுறுதுயராட்கிவையுரைத்தான். (எகூ)

கன்றியசிந்தையினாயுன்கணவனுனைக்கைப்பிடித்த
அன்றுமுதலின்றளவுமுன்னுடையவடிபணிந்தே
நின்றபொழுதினுந்தூயோய்நின்மேனிகண்டறியேன்
இன்றுதானுனைக்காணவல்லேனோவெனவுரைத்தான். (அ0)

**இலக்குமணன் சீதையைவிடுத்து அயோத்திக்கேகுதல்.**

வருதுயரந்தனைநோக்கிமங்கைமலரடிபணிந்து
கருதிவினையறவுலகோர்சென்றாடுங்கங்கையெனும்
பெருநதியைக்கடந்தவளைப்பின்பார்த்துப்பின்பார்த்துப்
பொருமியவெந்துயரினனாய்ப்போயினனகர்நோக்கி. (அக)

**சனகி புலம்புதல்.**

இன்னமிவர்போவாரோமீள்வாரோவெனநினைந்து
தன்னுடையகண்பறியாச்சானகிதான்பார்த்திருந்து
பொன்மணித்தேரோகாணேன்போய்மறைந்தானிளையோனும்
என்னையறக்கைவிட்டாரெனக்கதறத்தொடங்கினாள். (அஉ)

இலங்கையிலேநெடுங்காலமிருஞ்சிறையிலேயிருந்து
புலம்பியழுதியான்பட்டபுல்லனவும்போதாமல்
தலங்குலவுபழிபூட்டித்தனிக்கானில்விடுவித்து
விலங்கரியதுயர்விளைத்தவிதியேயோவிதியேயோ. (௮௩)

ஏதமுறுபழியூட்டியிப்பிறப்பிலெனையொழிய
மாதரையென்மனத்தாலுந்தொடேனென்றுவரந்தந்த
காதலனைமனங்கலக்கிக்காட்டிலெனைவிடுவித்து
வேதனைநோய்செய்வித்தவிதியேயோவிதியேயோ. (௮௪)

கண்ணறக்காகுத்தனெனைக்காட்டில்விடக்கண்டிருந்து
மண்ணகத்தார்வன்கொடுமைவாய்திறவாமானமிலாப்
பண்ணறைச்சியென்றெனைப்பழிதூற்றப்பண்ணுவித்தாய்
விண்ணவர்க்கும்வெலற்கரியவிதியேயோவிதியேயோ. (௮௫)

தாளார்செந்தாமரைத்தாட்டாசரதியார்மனத்தைக்
கேளாளுளுரையென்றுங்கேளாதவகைகலக்கிக்
கோளானதிடையருக்கொடுவினையேனுக்கொருநாள்
மீளாதவனந்தந்தவிதியேயோவிதியேயோ. (௮௬)

தக்ககணவன்சீறத்தன்னைக்கைவிட்டகன்ற
புக்ககத்தார்கைவிடுவர்பிறந்தகத்தார்போற்றார்கள்
அக்கணமேபழியிடுவரன்னியர்களருவினையேன்
மிக்கொரிடங்காண்கிலேன்விதியேயோவிதியேயோ. (௮௭)

**வான்மீகியின்சீடர் சீதையைக்காண்டல்.**

இன்னபலவும்பன்னியிடருறுவாளிடர்தீர
என்னுயிர்தான்போகாதோவெனக்கதறுமக்காலை
வன்னியினுந்தூயளும்வான்மீகி * மைந்தர்கடாம்
நன்னுதலாளழுமோசைவழிவந்துநண்ணுற்றார். (௮௮)

**மாணவர் வான்மீகிக்கு சீதையழுது புலம்புதலைக் கூறுதல்.**

அழுமவளைக்கண்டிரங்கியருந்தவனைக்கடிதணுகித்
தொழுதவர்கள்சொல்லுவார்சுரருலகுதனினின்றும்
வழுவியவள்விழுந்தாளோமண்ணுலகிலுள்ளாளோ
எழுதரியமேனியாள்யாவளோவென்றறியோம். (௮௯)

ஒருவரில்லாக்காட்டிலேயுள்ளுறுசோகத்தாளோர்
தெரிவையோர்துணையின்றித்தெய்வமேதுணையாகி
இருகணினீர்நதிபெருகவிழிந்துவிழுந்தழுகின்றாட்
கருள்புரியவுனக்கடுக்குமருந்தவத்தோயெனவுரைத்தார். (௯௦)

* மைந்தர் - சீடர்.

### வேறு.

### வான்மீகி சீதைக்குச்சமாதானமுரைத்தல்

அங்கவரோடும்போய்ச்சென் றழுகையாயோதுநெஞ்சில்
தங்கியசோகமாறச்சானகி தன்னைத்தேற்றி
இங்குநீயிருந்துசோகித்தென்பயனிடரைவிட்டு
மங்கைநீகேட்டியென் னுமாதவனுரைப்பதானான். (௬௧)

அநகனாமிராமன்றேவியென் றுநீயமலையென்றும்
சநகன்மாமகளீயென் றுஞ்சமாதியிலுணர்ந்தேன்றக்க
உனையவன்காட்டில்விட்டானல்லனென் னுழையேவிட்டான்
எனநினையாங்கள்வைகுமிடத்திலெம்மோடும்போதி. (௬௨)

எங்களாச்சிரமத்தெல்லையிவ்விடத்தெல்லையில்லா
மங்கையர்தவவேடத்தைத்தாங்கிமாதவஞ்செய்தோர்கள்
அங்கவருனைக்கண்டாலகமகிழ்ந்துடனேகொண்டு
தங்களாச்சிரமத்தேபோய்த்தாங்குவர்தளரலென்றான். (௬௩)

### வான்மீகி சீதையைத் தன்னிருப்பிடத்துக் கழைத்துச்செல்லுதல்.

துங்கமாதவனிவ்வாறுசொல்லிடத்தூயளாகி
அங்கவனல்லறீர்க்குமடியிணைவணங்கிநிற்ப
மங்கையையுடனேகொண்டம்மாதவனேமதாபம்
தங்கியமுகட்டுப்பன்னசாலையைவந்துசார்ந்தான். (௬௪)

### தவமாதருக்கு வான்மீகி சீதைவரலாறுகூறுதல்.

சீதையைக்கண்டமாதர்தெரித்திரராகியுள்ளோர்
மாதனம்பெற்றாற்போலமகிழ்ந்தவள்வடிவைக்கண்டு
தீதறுமனத்தின்மிக்கதிருமகளிவளோவென்பார்
வேதனையுள்ளேயுண்டிம்மெல்லியலாளுக்கென்பார். (௬௫)

தாங்கருசினத்தால்விண்ணோர்சபிப்பவீழ்ந்தாளோவென்பார்
ஆங்கவரிந்தவண்ணமையுறுகின்றகாலை
ஈங்கிவள்பிறப்பும்பேருமிவள்கணவன்றன்பேரும்
நீங்கள்கேண்மின்களென்னநெடுந்தவமுனிவன்கூறும். (௬௬)

மனுகுலம்விளங்கத்தோன்றிமறிகடலணையாற்கட்டித்
தனுவினாலிலங்கைசெற்றதசரதராமன்றேவி
துனியறுசனகன்பெற்றதூயவள்சீதையென்பாள்
இனையவள்கணவனானேன்றுறந்திடவிங்குவந்தாள். (௬௭)

### வேறு.

மாதவத்தோனங்கிவ்வகையுரைப்பமங்கையரனைவருமகிழ்ந்து
சீதையைப்போற்றச்சுமந்திரனோடுமிளையவன்றிருநகர்புகுந்து

நாதனைப்பணிந்துசெய்ததையுரைப்பநாட்டுளோர்சொல்வழிகேட்டு
வேதனையுற்றவன்றினுமிக்கவேதனைப்பட்டனன்வீரன். (கூஅ)

### இராமனுக்கிலக்குமணன் சயாதானங்கூறுதலி னிராமனுணர்தல்.

துதிபழியிரண்டுங்கேட்டதுசொல்லுமுலகையுமதன்வழியொழுகும்
மதியையுநோவவடாதுமாசனகன்மகளையுநோவவங்கடாதால்
அதிகுணவதியாயழலினுந்துய்யவவளையுமுன்னையும்விதித்த
விதியினைநோவவடுக்குமென்றிளையோன் விளம்பிடத்தெளிந்தனன்வீரன்

கஉ - வது சீதைவனம்புகுபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அ00.

## கங - வது, இலவணன்வதைப்படலம்.

### இராமனரச நீதிகூறுதல்.

நிறைகடலவனிபாரநீக்கியநெடும்பொற்றிண்டோள்
இறையவனிராமனன்போடிளவலையெய்தநோக்கி
அறைகழற்றூரோய்நாட்டிலன்புநாடோறுநாடி
முறைசெய்கையிராசதன்மமதனினுமுயறுமென்றான். (க)

சீறியமனத்தனாகிச்சிறந்தசெங்கோலைவிட்டுக்
கூறுவெம்பழியைநாடிக்குலைந்திடக்கொடுங்கோலோச்சி
ஆறிலொன்றிறைகொள்கின்றதல்லவையகற்றிடாதே
* ஏறிறைகொள்வோனாட்டிலிருப்பவர்மூடரென்றான். (உ)

தண்டிக்கப்படுவோர்தம்மைத்தண்டியாதொழிந்துவிட்டுத்
தண்டிக்கப்படாதோர்தம்மைத்தண்டிக்குந்தரணிமன்னன்
எண்டிக்கும்பரந்துமூடுமிரும்பழியெய்தித்தீயோத்
தண்டிக்குந்தருமனாலேதண்டிக்கப்படும்பினென்றான். (ந)

அடற்பெருங்களிறுதிண்டேரடுபரிகாலாடென்று
கடற்படையுடையோன்மிக்ககருணையோன்காதலோடும்
இடர்க்கடல்வறியோரேறவிருநிதியீவோனாட்டில்
நடப்பறியாதுகெட்டநரபதியுளன்கொலென்றான். (ச)

---

* ஏறிறை-அதிகவரி.

## இராமனிருகன் சரிதமுரைத்தல்.

கொற்றவனிருகன்கோடிகோடியாய்க்கொடுக்குங்காலை
நற்றவமறையோனுக்குநல்லதோர்பசுவைநல்க
மற்றதுதப்பிமன்னன்மாநிரைவந்துகூட
உற்றதையறியான்மற்றோருயர்மறையோனுக்கீந்தான். (ரு)

முன்பதுதானம்பெற்றமுப்புரிநூலன்கேட்டுத்
தன்பசுத்தன்னைக்காணான்றரணியிலெங்குந்தேடிப்
பின்பதுதானம்பெற்றபெருந்தவன்மனையிற்கொண்டு
தென்பசுவென்னவோடுமிருவரும்விவாதம்பண்ணி. (சு)

மன்னவன்கோயிறன்னின்மறையவர்விரைந்துவந்து
பன்னெடுங்காலநின்றுமுறையிடப்பார்த்துவேந்தன்
என்னகாரணநீர்வந்துமுறையிட்டதென்னக்கேளா
வன்னவன்றன்னைக் * கோம்பியாகெனச்சபித்தாரன்றே. (எ)

தாங்கருந்துயரமிக்கார்கூபத்திற்றலைகீழாகத்
தூங்கியீருகங்கள்சென்றதுவாபரந்தன்னிற்றோன்றும்
சார்ங்கபாணியன்றன்செய்யதாமரைக்கண்ணாற்பார்க்க
நீங்கிடுஞ்சாபமென்றுநெடுந்தவமுனிவர்போனார். (அ)

போயிருவருமக்சோவைப்புரையறுதவத்தின்மிக்க
தூயமாமுனிவற்கீந்துதொன்றுகாரியத்திற்போனார்
ஆயமன்னவனுங்கோம்பியாகியாழ்கிணற்றில்வீழ்ந்தான்
தேயநாடோறுநாடாத்திறன்மன்னன்கேடிதென்றான். (கூ)

தன்னிகரிலாதவென்றித்தசரதராமனாட்டில்
சொன்னவக்கதையையுன்னுந்தோறுமாச்சரியமெய்தி
என்னவற்புதமோவென்றுங்கிளையவனியம்பத்தூயோன்
இன்னவற்புதமாயுள்ளதொருகதையியம்பக்கேணீ. (க0)

## இராமன் நிமிசரித முரைத்தல்.

மன்னவனிமியென்பான்சீர்மனுகுலம்விளங்கத்தோன்றிப்
பன்னெடுங்காலமிந்தப்பாரினையாண்டபொழுரைப்
பின்னவன்துறந்துசென்றுபெறுவனங்குறுகிக்கானம்
அன்னவல்வினைகள்பாறவருந்தவஞ்செய்யுநாளில். (கக)

சத்துருகாலனாகித்தரணியைக்காத்தோன்றீர்க்க
சத்திரயாகஞ்செய்யச்சமைந்துமாதவருண்மிக்க
அத்திரிபிருகுதூயவங்கிராவசிட்டனென்னும்
இத்திறன்முனிவர்தம்மைவரித்திடவியம்புமன்றே. (கஉ)

* கோம்பி - பச்சோந்தி.

என்னைமன்னவனேவானோரிறைமகஞ்செய்யவெண்ணி
முன்னமேவரித்தானந்தவேள்வியைமுடித்துநின்பால்
பின்னையான்வருகின்றேனென்றம்முனிபோகப்பேணி
மன்னுகோதமனைக்கொண்டுமகத்தினைநடத்துங்காலை. (கந)

மாறிலாவானோர்மன்னன்மகத்தினைமுடித்துஞானம்
தேறுகோதமனைக்கொண்டுசெய்கின்றவேள்விகண்டு
சீறியேவசிட்டனந்தத்திறத்தினைக்காண்பான்செல்ல
மாறிலாத்துயிலனாகிமாமுனிசீற்றமிக்காய். (கச)

என்னைமுன்வரித்துப்போனயான்வருவதற்குமுன்போர்
அன்னியன்றன்னைக்கொண்டாங்கருமகநடாத்துகின்ற
மன்னவன்காணநான்றான்வந்திடப்புறப்படாதோன்
தன்னுடல்விடுகவாவியெனமுனிசபித்தானன்றே. (கரு)

அன்னவன்சபிக்கக்கேட்டவரசர்கோனழலிற்பொங்கித்
தன்வரவறியேன்பாயல்சார்ந்துநித்திரைநான்பண்ண
என்னையந்நியாயத்தாலேயெரிவித்தசாபமன்னோன்
தன்னையுஞ்சார்கவென்றுசபித்தனன்றவத்தின்மிக்கான். (கசு)

இருவரும்விரோதராகியங்குநாள்வசிட்டனாவி
தெரிவரும்பெருமைமிக்கதிசைமுகன்றன்னைநண்ணி
ஒருவருந்தன்னையொவ்வாயுயர்தருமுனிசாபத்தின்
பிருவருமுடலம்விட்டேன்பெறும்படியருணீயென்றான். (கஎ)

ஒத்தவர்தம்மையில்லாவுருப்பசிநிமித்தமாய
மித்திரவருணன்விட்டவீரியந்தன்னையெய்தி
குத்திரயோனியில்லாக்கும்பமாந்தெய்வயோனி
புத்திரனாகவந்துதோன்றுநீபோதியென்று. (கஅ)

## வேறு.

மலரயன்விடுப்பமாமுனியாவிமறிகடலெய்திடவருணன்
நிலையிடைநின்றுமித்திரன்செலுத்தநீள்குழலரம்பையரோடு
சலவிளையாட்டிற்றாழ்ந்தநெஞ்சினளாமுருப்பசிதடநெடுங்கண்ணும்
வலையிடைப்பட்டுமயங்கியமனத்தன்வருணன்மற்றவட்கிவையுரைத்தான்

உன்னையான்வரித்தேனென்றவனுரைப்பவுருப்பசிகூறுவாளுயர்ந்தோய்
முன்னமேயென்னைமித்திரன்கண்டுவரித்தனன்முறைகெடவந்து
பின்னைநீவரித்தல்பிழையெனவுரைப்பப்பெருகியகாமவெங்கனலால்
தன்னுடலுருகிவீரியம்வீழத்தையலுக்கவனிவையுரைத்தான். (உ௦)

மின்னிடைமடவாயென்னுடலுருகிவீழ்ந்தவீரியத்தினைக்கும்பம்
தன்னிடையிடுகின்றேனெனமகிழ்ந்துவருணன்மேற்றாழ்ந்தசிந்தையளாய்

அன்னமென்னடையாண் மித்திரன் றன்னையணுகிடவாலமதென்ன
வன்னியாமென்னக்கனன் றசீற்றத்தான்மற்றவளுக்கிவையுரைத்தான். ()

முன்னமேகண்டுநின்னையான்வரிக்கமுறைமையீதன்றெனவுணராய்
அன்னியன்றனைக்கண்டன்பு * பட்டனைநீயாதலாலறிவிலாதாளே
பொன்னுலகிழிந்துபூவிடைநீபோய்ப்புதன்மகன்புரூரவாவென்னும்
மன்னவன்றனக்குமனைவியாய்நெடுநாள்வைகுதியென்றவன்சபித்தான்.()

### மித்திராவருணவீரியங்களில் அகத்தியவசிட்டர்கள் பிறந்தாரெனல்.

அன்னவீரியத்தையமரர்கள்வகுத்தகுடைத்திடைவருணனுங்கிடவும்
மின்னிடையாளைக்கண்டுமெய்யுருகிமித்திரன்வீழ்த்தவீரியத்தை
முன்னமேகும்பத்திடுகையான்முன்புமுழுதுணரகத்தியன்பிறந்தான்
பின்னைவாருணத்தையிடுகையாற்பின்புபிறந்தனன்பெருந்தவவசிட்டன்.

என்றுலகேழுமுடையவனெறிந்தவிராக்கதர்குலத்தைவேரறுத்த
வென்றிகொள்வீரன்விளம்பியகதையைக்கேட்டலுமிகவியப்பெய்தி
அன்றுடல்பிரிந்தவந்நிமியாவியானதும்வேள்வியானதுவும்
ஒன்றொளியாமலுரைத்தியென்றிளையோனுரைத்திடவுத்தமனுரைக்கும்

தீயசாபத்தாற் † சேதனம்பிரிந்தநிமியுடல்சிறந்தநல்லடியார்
ஆயவராலேயாடையாபரணமுதலகொண்டலங்கரிப்பித்துச்
சேயவாகியவையாயிரத்தாண்டுசேதியிற்குறைபடாவண்ணம்
தூயமாமுனிவரந்நிமிமுன்னாட்டொடங்கியவேள்வியைமுடித்தார். (௨௫)

அந்தவேலையில்வந்தமரர்கள்கூடியந்நிலையாவியையழைத்துச்
சிந்தையாலுவந்தோமுருவமாம்வேண்டிக்கொள்ளெனத்தேவர்கள்செப்ப
இந்தமாநிலத்தோர்கண்களில்யானின் ‡ றியங்கிடவிவ்வரமெனக்குத்
தந்திடவேண்டுமெனவரந்தந்தோமென்றுதாமுறைவிடஞ்சார்ந்தார். ()

### சனகன் பிறப்பு.

முனித்தலைவோர்களந்நிமியுடலைமுரணுடையரணியாற்கடையச்
சனித்தவன்றன்னைச்சனிக்கையினலேசனகனென்றவர்பெயர்சாற்றி
இனித்தரணியைத்தாங்கென்றவர்கூறவிவ்வுலகாண்டனனென்றே [ம்.
தனிச்சிலைதரித்தோனுரைசெய்துபின்னுந்தம்பியைக்குறித்திவைசாற்று

ஒள்ளியதவத்தாற்கல்வியாலுணர்வாலுண்மையாலுணர்ந்தவருயர்ந்தோர்
எள்ளியகுற்றமில்லவரெய்தும்வெகுளியாலிப்படிப்பட்டார்
தெள்ளியவீரச்சிலையினய்புறத்துத்திறற்பகைவெல்லலாஞ்சினமாம்
உள்ளுறுபகையையறிந்தவருலகத்தொருவரும்வென்றவரில்லை. (௨௮)

---

* பட்டனை-உடையையாயினய்.

† சேதனம்-ஆன்மா. ‡ இயங்கிட-சஞ்சரிக்க.

மூங்கிலிற்பிறந்தமுழங்குதீங்கின்முதலறமுருக்குமாபோல
தாங்கருஞ்சினத்தீதன்னுளேபிறந்துதன்னுறுகிளேயெலாஞ்சயிக்கும்
ஆங்கதன்வெம்மையறிந்தவர்கமையாலதனையுள்ளடக்கவுமடங்கா
தோங்கியகோபத்தீயினையொக்குமுட்பகையுலகில்வேறுண்டோ. (உகூ)

## வேறு.

மனத்தினுல்வாக்கால்வாய்ந்தசெய்கையான்மாசிலாதோய்
சினத்தினுன்மிக்கோர்பண்டுசெய்தவக்கதையையெல்லாம்
உனக்கியானுரைப்பென்யாவுமுணர்ந்துகேளென்றுவாசப்
புனத்துழாய்மாலைமார்பனிக்கதைபுகலலுற்ருன். (௩௦)

## இராமன் நகுடயயாதி சரிதமுரைத்தல்.

மன்னவனகுடனென்பான் * வாசவன்மகமுஞ்செய்தோன்
அன்னவன்புதல்வன்ருதையனையவன்றவத்தின்மிக்கோன்
பன்னெடுங்காலந்தன்னைப்பார்மன்னர்முறைறசேவிப்ப
இந்நகர்க்கிறைவனுகியிருந்தவன்யயாதியென்போன். (௩௧)

பார்க்கவன்கண்ணுயுள்ளோன்பகையறக்களைந்துகாத்தோன்
பார்க்கவன்றவத்தையென்றும்பண்ணுவான்விண்ணோர்தன்கை
பார்க்கவன்றந்தயாகம்பண்ணுவோன்சன்மிட்டைக்குப்
† பார்க்கவன்பயந்ததெய்வயானிக்குப்பதியாயுள்ளோன். (௩௨)

தன்மிட்டனுயவந்தயயாதிக்குத்தடமென்கொங்கைச்
சன்மிட்டைவயிற்றிற்பூருச்சனித்தனன்றயித்தியர்க்குத்
தன்மிட்டனுகிக்காக்குங்கவிமகள்வயிற்றிற்காசில்
பொன்விட்டுவிளங்கும்பூணுயதுவெனும்புதல்வன்வந்தான். (௩௩)

இருவரும்வளருங்காலையதுவெனும்பேரோன்வெள்ளம்
சொரிதருகண்ணினீரிற்ருேன்றியகோபத்தீயின்
வருபெருந்துயரமாருவல்விரைந்தெய்தியந்தத்
தெரிவையர்திலகமானசேயிழைக்கினையசெப்பும். (௩௪)

தன்மமொன்றிலாதசிந்தைத்தயித்தியர்தலைவனுனேன்
தன்மகடனைக்கொண்டாடியவண்மகன்றனையேபோற்றி
உன்மகனென்னுங்கோபத்தாலெனையுரப்பாநிற்கும்
துன்மதிமன்னன்றாயோய்கேளெனப்பின்னுஞ்சொல்லும். (௩௫)

போதமில்யயாதிக்குற்றுப்புகுந்தவப்பாவந்தீரத்
தூயதானீயுநானுமிருந்தருத்துயரந்துய்த்தோம்
ஆதலாலென்றுமென்றுமானத்தாற்கவரிமாக்கள
சாதலைக்கண்டுதேருய்தளர்ந்தொருமயிருக்காக. (௩௬)

---

* வாசவன்மகம்-இந்திரபதவியைத் தருஞ்சதபரிவேள்வி.
† பார்க்கவன்-சுக்கிரன்.

ஆயவனிணையகூறவாயிழையழன்றுபொங்கித்
தூயநற்பவளச்செவ்வாய்துடித்திடக்கண்ணீர்சோரச்
சேயினையுடனேகொண்டுசெறிபுகழ்த்தந்தைதன்பாற்
போயவனடியில்வீழ்ந்துபொருமிநின்றழுதுசொல்லும். (௩௭)

சிந்தைசன்மிட்டைமேலேசெல்கையான்மன்னனன்றாள்
மைந்தனைக்கண்டார்கையால்வரவணைத்திறுகப்புல்லி
எந்தைகேளென்னைக்கண்டாலென்னவென்மகனைக்காயும்
இந்தவெந்துயருக்காற்றேனெரியிடைவீழ்துமென்றாள். (௩௮)

குழன்றபூங்குழலாணெஞ்சுகோபத்திற்கூறவெள்ளிக்
கழன்றதுசிந்தைபோக்குமழிந்ததுசிவந்தகண்கள்
சுழன்றனபுருவநின்றுதுடித்தனதூயநல்லோர்க்
கெழுந்தனகோபமென்றால்யாரிதுதடுக்கவல்லார். (௩௯)

அவ்வழிவெள்ளிகோபித்தந்தமாற்றுட்டிக்கன்பாய்ச்
செய்வதையறியான்சிந்தைகலங்கவித்தெய்வயானி
இவ்வகையிடரைச்செய்தயயாதிதனிளமைநீங்கி
நைவ்வளமொழியார்கண்டுநகைசெய்மூப்படைகவென்றான். (௪௦)

தளர்ந்துதான்பிணங்கிவெள்ளிசாபத்தாற் * சாபம்போல
வளைந்துமெய்திரைந்துகேசம்பஞ்சுபோல்வெளுத்துநெஞ்சம்
உளைந்திழைந்திருமிக்கண்ணீரொழுகநாக்குளறிப்பற்கள்
துளங்கிடுங்கட்டமூப்புத்தோன்றிற்றியயாதிக்கன்றே. (௪௧)

இந்தமூப்பால்யயாதியதுவினைநோக்கியென்பால்
வந்தவிம்மூப்பைக்கொண்டேவருந்திநோய்தீர்த்தியேலென்
சிந்தையினெண்ணமெல்லாந்தீர்த்துநல்லறங்கள்செய்து
மைந்தனீகாணமூப்பைமறித்துநான்கொள்வேனென்றான். (௪௨)

நைந்தடியற்றவாலநடுங்கிவீழ்கின்றதென்று
வந்தவீழூன்றிவீழாவகைநிலைவிளக்குமாபோல்
மைந்தர்கடமக்குநல்லவறிவினுன்மகிழ்ந்துசேர்ந்து
தந்தையைத்தளராவண்ணந்தாங்குவர்தவத்தினென்றான். (௪௩)

புத்திரனுவோனீதிபொருந்திதன்குலத்தினுள்ளோர்
அத்தனைவரையுந்தீயவருநரகுறுமற்காத்துச்
சுத்தமாங்கதியினுய்ப்பானென்றுசொல்வார்கடேயோய்
இத்தைநீயுணர்ந்தென்மூப்பாமிடும்பையைத்தீர்த்தியென்றான். (௪௪)

என்றவன்விளம்பக்கேட்டயதுவிதுவிளம்புமெந்தாய்
உன்றனக்கரியமைந்தன்றன்னைநீயுடன்கொண்டுண்ணும்

* சாபம்போல - விற்போல.

அன்றெனக்குரிமையில்லையாகுலத்துடனேயுண்ண
இன்றெனக்குரிமையுண்டேலிவ்விடர்நீக்கவென்றான். (சரு)

ஈதவனியம்பித்தன்சொன்மறுத்திடயயாதிபோய்நற்
போதவனுயமைந்தன்பூருவையழைத்துக்கண்டு
கோதறுகுணத்தோய்நீயிக்கொடியமூப்பதனைக்கொண்டென்
வாதையைமைந்ததீர்க்கவல்லையோவென்னச்சொன்னான். (ச௬)

இன்னவையியம்பப்பூருவென்னிடர்தீர்த்தியென்று
மன்னவன்கூறப்பெற்றுவாழ்ந்தனனென்றேமண்ணில்
என்னையொப்பவராரென்னுயயாதிதன்மூப்பைகொள்ளத்
தன்னிளமையினைப்பெற்றதராபதியதுவைநோக்கி. (சஎ)

நீசுரரோடுவிண்ணோர்திகழநின்மைந்தனோடும்
ஆசுரபாவஞ்சார்வாயாகெனச்சபித்துச்செற்றாக்
கூசுரமுடையகோமான்கொடுவினையறுப்பான்கோலி
மாசுரமடைந்தான்மற்றைமைந்தனைமகுடஞ்சூட்டி. (சஅ)

ஒன்றியகோபத்தோர்களிவ்வகைகெடுதலுண்மை
என்றுகார்வண்ணன்கூறவிளையவன்வியந்துசால
நன்றிதுவெனக்கொண்டாடிநாயிறுகடலின்மூழ்க
வென்றிகொள்வீரன்சந்திவிதிமுறைமுடித்தபின்பு. (சக)

அவ்விரவமளிநண்ணியாசையுமண்ணுவிண்ணும்
கவ்விரவியமைவண்ணக்காரிருள்கலங்கியோட
வெவ்விரவியுமவ்வேலைமிசைவரவேதமென்னப்
பொய்வ்விரவியசொல்லில்லாப்புரவலன்பள்ளிநீங்கி. (ரு0)

## முனிவர் இலவணசரித மூரைத்தல்.

சந்திகாரியங்களெல்லாஞ்சமைந்தபின்றழைப்பச்சார்ந்த
அந்தணர்க்கம்பொன்பூரியானிரையாதியாய
இந்திரைகொழுநனீந்தாண்டிருந்தபின்முனிவரெல்லாம்
வந்தனரென்னச்சொல்லவாயிலோய்கொணர்தியென்றான். (ருக)

## இராமனைக்காண முனிவர்வருதல்.

பொருந்திகழ்வாயில்காப்போன்போயவண்விடுப்பப்புக்க
விருத்தராமுனிவர்தம்மைவிதிமுறையருச்சித்தேதும்
* அருத்திமாதவத்துக்கிப்போழ்தழிவொன்றுமிலையேயென்று
திருத்திகழ்மார்பன்கூறச்சிதைவிலாதவர்கள்சொல்வார். (ரு௨)

மன்னவர்மன்னுமுன்னுண்மதுவெனுந்தானவேந்தன்
தன்னெதிரிலாதவீரன்றருமமுந்தயாவுமிக்கோன்

---

* அருத்திமாதவம்-அன்புள்ள தவச்செயல்.

பிஞ்ஞகனருளாற்பெற்றபெருவலித்திரிசூலத்தன்
அன்னதுகையதாகவிளிவிலாவாயுப்பெற்றான். (ருங)

ஆயவன்றனக்குக்கும்பிநசிவயிற்றவதாரஞ்செய்
தீயவன்றேவராதிதிரிபுவனத்துள்ளோர்க்கும்
சாய்விலாவென்றிவீரன்றயாவொடுந்தருமத்தோடும்
ஏய்விலாவஞ்சநெஞ்சனிலவணனென்னும்பேரோன். (ருச)

அன்னவன்கொடுமைகண்டுமெதுமுன்னரரன்பாற்பெற்ற
இந்நெடுஞ்சூலநின்கையிருக்கவேயிமையோரேனு
முன்னொடும்பொருவான்மூளிலுலைவரென்றுரைத்துப்போற்றித்
தன்னைதிரிலாததந்தைகொடுத்திடத்தன்கைக்கொண்டான். (ருரு)

அங்கதுகைக்கொண்டந்தவவனியையடங்கநூறித்
தங்குமாதவத்தோர்தம்மைத்தவஞ்செயாவண்ணங்காத்தோன்
இங்கெமக்கிடையூறுற்றாலிந்நகர்வருவதன்றிப்
பொங்கரவணையாய்வேறுபுகலிடமுண்டோவென்றார். (ருசு)

ஆங்கவருரைத்தசொற்கேட்டருந்தவமுனிவர்க்கெல்லாம்
தீங்குசெய்தீயோன்றன்னைத்தென்புலத்துய்ப்பென்றிண்ணம்
நீங்கள்போயஞ்சாதுங்கணிலைகளினின்மினென்று
தேங்கமழ்தாரோன்றீயோன்றனைக்கொலுந்திறஞ்சிந்தித்தான். (ருஎ)

**இலக்குமணன் நான் இலவணனைக் கொல்வேனெனல்.**

இன்னுயிர்த்தம்பிமாரையிருகணுலினிதுநோக்கி
மன்னுயிரடங்கக்கொன்றுமாதவர்க்கிடரைச்செய்தோன்
தன்னுயிர்தன்னைவாங்கித்தருமவர்யாரோவென்ன
என்னுரைகேட்டியென்றுவிலக்குவனினையசொன்னான். (ருஅ)

மூவகையுலகிலுள்ளமுனிவர்தானவர்களாதி
யாவருமவனுக்காகியென்னொடும்பொருவரேனும்
ஏவினையாகிலென்னையிலவணனென்னுமந்தப்
பாவகாரியையான்கொல்வெனன்றலும்பரதன்கூறும். (ருகூ)

**பரதனிலவணனைக்கொல்லத் தன்னையனுப்ப வேண்டுதல்.**

துங்கமாமுடியாய்நாயேன்சொல்லுவதுண்டுகேட்டி
வெங்கடுங்கானத்தேபோய்மென்கனிசருகுமூலம்
அங்கவையமுதுசெய்தற்காய்ந்தனனுண்டீரேழும்
கங்குலும்பகலுமுன்னைக்கண்ணுறங்காதேகாத்து. (சுo)

வந்தெதிர்பொருதமாயவரக்கரைமடியநூறி
அந்தகபுரத்திலேற்றியடலதிகாயனோடும்

இந்திரசித்தைக்கொன்றங்கிராவணற்கிடரைச்செய்து
நொந்தனனிளையோனந்தநோவைநீநோக்கல்வேண்டும். (சுக)

பலபலவுரைத்தென்வெய்யபாதகவரக்கன்பத்துத்
தலைகளுமிரட்டிதோளுஞ்சரந்தனாற்றடிந்தவீரச்
சிலைவலோயென்னையேவிற்றீவினைகளையேசெய்யும்
இலவணன்றன்னைநான்கொன்றிவ்விடர்தீர்ப்பெனென்றான். (சுஉ)

## சத்துருக்கனிலவணனை நான்கொல்வேனெனல்.

இன்னவைபரதன்கூறவிளையசத்துருக்கன்சொல்லும்
மன்னவர்மன்னனீபோய்வனம்புகுவார்த்தைகேட்டு
நின்னையிவ்வரசுசெய்யப்பணித்துநீமறுப்பநின்றன்
பொன்னடிநிலையைக்கொண்டுபோந்தனன்சிரத்துவைத்து. (சுங)

அரசிலாவயோத்தியெய்தினரசுநாஞ்செய்தோமென்றே
நரர்பழியிடுவாரென்றுநந்திநற்கிராமநண்ணி
மரவுரியுடுத்துவார்ந்தசடையனாய்க்கண்ணீர்மாறாப்
பரதனையேவலாமோபார்புகழ்பைம்பொற்பூணாய். (சுச)

எஞ்சலில்கீர்த்திபூண்டவிளையவனியம்பும்பின்னும்
அஞ்சனவரைபோன்மேனியழகனையருளிலாத
வஞ்சன்மேலென்னையேவின்வானுலகவனையேற்றி
நெஞ்சிடர்முனிவர்நீங்கநிறுத்துவென்றவத்தையென்றான். (சுரு)

வளைதனுக்கையன்வாங்கிவானவரெனினும்வெம்போர்
விளைகளத்தெதிர்ப்பாராயின்வெற்றிகொள்வீரப்பொற்றோள்
இளையசத்துருக்கனிவ்வாறியம்பிடவிராமன்கேட்டுக்
கிளரொளிப்பவளச்செவ்வாய்கிளர்ந்திவைகிளத்தலுற்றான். (சுசு)

## இராமன் சத்துருக்கனை நீயேஇலவணனைக் கொல்லுதியெனல்.

முனைக்களத்தெதிர்ப்பினிந்தமூவுலகத்தினுள்ளோர்
உனக்கெதிர்நிற்குமாற்றலுடையரோவுயர்பொற்றோளாய்
சினத்திறலசுரன்றன்னைத்தென்புலத்தேற்றித்தூயோர்
மனத்திடர்தீர்த்தியென்றான்மனுகுலத்துற்றவள்ளல். (சுஎ)

இன்னவையிராமன்கூறவிலவணன்றன்னைக்கொல்ல
என்னையேயேவப்பெற்றேனெனவெழுந்துவகையோடும்
மன்னவன்றன்னைமும்மைவலஞ்செய்துவணங்கிநிற்பத்
தன்னிருதோள்களாரத்தழுவினன்சகலநாதன். (சுஅ)

அலகிலாமாவுந்தேருமடுகளிற்றினமுமாற்றல்
தொலைவிலாப்பெரும்பதாதித்தொகுதியுஞ்சூழவேலி

விலையிலாமணியுமுத்துமென்னுரைத்துகிலும்பூணும்
மலைகுலாவியதோளாற்குவழங்கினன்கருணைவள்ளல். (சுக)

### இலவணன்மீது படையெடுத்துச் சத்துருக்கன்போதல்.

பரதனைப்பதிஞலாண்டுபெரமனைக்காவல்பூண்ட
விரதனைவிளங்குசோதிவெய்யவன்குலத்தோர்க்கென்றும்
வரதனும்வசிட்டன்றன்னைவணங்கியவ்வஞ்சன்றன்னைச்
சரதநான்கொல்வேனென்றுசமைந்தசத்துருக்கன்போனான். (எ0)

### வேறு

எண்ணிலாக்கரிபரிதேரிடைநெருங்கும்படையிவற்றையெழுகென்றேவி
தண்ணிலாவிடுமுறுவற்றையலர்ப்பல்லாண்டிசைப்பத்தனதுமேனி [த்
வெண்ணிலாவொளிவீசவெள்ளிமலைபொன்மலைமேல்விளங்கல்போல
மண்ணுளாவியபுகழான்மாமணித்தேரேறினான்வானோர்வாழ்த்த. (எக)

### சத்துருக்கன் வான்மீகிவனமடைதல்.

ஆனகதுந்துபிமுழங்கவணிமுரசமுகிலனைய * வமலைபொங்க
வானகமுமண்ணகமும்வளர்பெருந்தூளியின்மறையமலர்பூஞ்சோலைத்
தேனகுபங்கயப்பழனத்திருநாடுகடந்துபோய்த்தேவதேவன்
கானதியிற்களித்தாடிக்கலைமுனிவான்மீகிதவக்கானங்கண்டான். (எஉ)

### சத்துருக்கன்வான்மீகாச்சிரமத்துறுமன்றேசனகி புதல்வரைப் பெறுதல்.

அங்கமுனியடிவணக்கியவன்செய்தபூசனைகொண்டன்றுதங்கி
மங்கைசனகன்பயந்தமடப்பாவையவ்விரவில்வயிறுவாய்ப்பச்
செங்கமலவிழிசெவ்வாய்ச்சிறுவர்பிறந்தாரிருவரென்றுசெப்பப்
பங்கமிலாமுனியெழுந்துபரிவோடுபிள்ளைகளைப்பற்றிப்பார்த்தான். (எ௩)

### சீதைபுதல்வர் இராமனையோத்திருத்தல் கண்டுமுனிமகிழுதல்.

மைவண்ணத்தாமரைக்கண்மன்னனிராமன்றன்னைவந்துகண்டோர்க்
கெவ்வண்ணமவனிருக்குமிலக்கணங்களவைபலவுமிலங்கித்தோன்ற
அவ்வண்ணத்தவ்வுருவாயவதரித்தபிள்ளைகளையருளினோக்கிச்
செய்வண்ணமறியாதுசிந்தைமகிழ்ந்தவதரித்தோர்க்கினையசெய்தான். ()

### இராமன் மக்கள்குசலவரெனப்பெயரெய்துதல்.

சீதைதன்திருவயிற்றிற்றிருவவதாரஞ்செய்தசிறுவர்தம்மைப், பூத பசாசுகண்முதலானவைவந்துபொருந்தாமற்புரைதீர்காட்சிக், கோதறுமந் திரங்கள்சொலிக்குசலவங்களாற்றுடைத்துக்குறிக்கொண்டார்கள், ஆத லாலம்மைந்தர்குசலவர்களென்றுபேராயினரே. (எ௫)

* அமலை-ஓசை.

### சீதைபுதல்வரையீன்றமைகேட்டசத்துருக்கன்பலவாறுநினைத்தல்.

பிள்ளைகள்சானகியெயற்றிறப்பிறந்தார்களெனமுனிவர்பேசக்கேட்டாங்
குள்ளமகிழ்சத்துருக்கனுன்னுவானுயர்மாட்த்தயோத்தியென்னும்
ஒள்ளியமாநகரியிடையுற்பவிக்கப்பெறுதுவகையொலியொன்றின்றிப்
புள்ளொலியேமிகுகாட்டிற்பிறந்தார்கள்பொன்னகரிற்பிறந்தாராயின். ()

பொய்யாதவேதியர்க்குப்பூதானங்கோதானமுதலபண்ணிக்
கய்யாரநிதிவீசிக்காகுத்தன்காளையர்கள்பிறந்தாரென்று
மய்யார்பூம்பொழினகரிமகிழ்வெய்திமணிமுரசமறைந்துநின்று
நெய்யாடலாற்சனங்களென்படுமோவின்றென்றுநினைந்துநைந்தான். ()

### சூரியோதயத்தில் சத்துருக்கன் வான்மீகரிடத்து விடைபெற்றுப் போதல்.

ஏதமிலாக்குணத்திஞனிவ்வண்ணஞ்சிந்திப்பவிருள்கைவாங்கிப்
போதுவிடிந்தறியாமற்புறப்பட்டாங்குதயத்திற்பொலிந்துதோன்ற
மாதவரையடிபணிந்துமன்னவனையடிவணங்கிமணிப்பொற்றேரின்
மீதுவந்துமேற்றிசையைக்குறித்துவழிமேற்கொண்டுவிரைந்துபோனுன்.

ஏறுபுகழ்ச்சத்துருக்கனேழுநாளிடைதங்கியமுனையென்னும்
ஆறுகடந்தக்கரையினருந்தவரையடிவணங்கியவர்கணெஞ்சம்
ஊறியவன்பொடுசெய்தபூசனைகொண்டுணமகிழ்ந்தங்குவந்துநல்லோர்
கூறியமாக்கதையிரவுகொண்டாடியவரோடுங்கூடத்தங்கி. (எக)

சந்தியவந்தனைசெய்துதபோதனரோடினிதிருந்தசமயத்தந்த
அந்தணரையடிவணங்கியடலரக்கர்குலத்தினைவேரறுத்துவந்த
சுந்தரவில்லிக்கிளையான்சொல்லுவானிலவணன்கைச்சூலஞ்செய்யும்
வெந்தொழிலுமவன்வலியும்விரித்துரைமினெனவவரும்விளம்பலுற்றார்.

### முனிவர் மாந்தாதாசரிதவழிஇலவண சரிதமுரைத்தல்.

மனுகுலமா நுங்குலத்து வந்துதித்தோன் மாந்தாதா வென்னுமன்
னன், குனிசிலையைக்கைவாங்கிக்குரைகடல்சூழ்குவலயத்திற்கூர்வேன்
மன்னர், இனியொருவர்பிழைத்தோர்களிலையென்னக்குலத்தோடுந்தொ
லைத்துப்பின்னை, தனியொருசக்கரநடத்தித்தரணிமுழுதுங்காத்ததனித்
தோள்வீரன். (அக)

செறிமணிமாமுடிமன்னர்திறைகொணர்ந்துசென்றுபுகப்பெறுதுதூங்கும்
குறுகரியபெருங்காவற்கோபுரவாயிலையுடையகுலவுசெல்வன்
தறுகணுடைவன்னெஞ்சன்றரியலர்பாற்போராற்றிற்றண்ணீர்தாகத்
துறுபுலியும்புல்வாயுமொருதுறைமினீருண்ணவுலகமாண்டான். (அஉ)

இன்னபெருவலியுடையோனிந்திரனைப்போர்வெல்வானெழுந்துசெல்ல
அன்னவன்றன்கருத்தறிந்தவமரர்கோனுரைசெய்வானளவிலாற்றல்
மன்னவமண்ணுலகத்துன்வழியொழுகாவலியோன்மேற்செல்லமாட்டாய்
என்னையமர்வென்றுநீயென்னுலகங்கோடலுனக்கியல்பேயென்றான். ()

தேவர்கோனிவைசெப்பத்திரைக்கடல்சூழவனிதனைத்திருத்தியாண்ட
மாவலித்தோண்மணிமவுலிமாந்தாதாவிவையுரைக்குமண்ணின்மன்னர்
யாவருமென்வழியொழுகவெனக்கெதிராயென்வழிவாராததீயோன்
பூவலயத்தெவனவன்பேர் * புகறியெனப்புரந்தரனும்புகறலுற்றான். ()

மண்ணுலகில்வலிமிக்க மதுவென்னுந்தானவர்கோன் பயந்தமைந்தன், நண்ணரியவரனுடைய மதுபுரியையாள்கின்றான் ஞாலமொன்றிப், † பண்ணரியபாதகத்தோன் பாருலகிற்பல்லுயிர்கள் பதைப்பக்கொன்றான், எண்ணுறுதிண் படையுடையோ னிலவணனெனன்பவனுலகி னெதிரிலாதோன். (அ௫)

சீரார்தேவருக்கரசனென்றினையசெப்பியசொல்செவியிற்காய்ந்த
நாராசமெனநுழையநன்னிறத்துமானனவேனடுங்கத்தைத்துப்
பாராளுமன்னன்மனம்பதைபதைப்பப்போர்க்கொழிந்துபாரின்மீண்டு
பேராததழற்றறுகட்பெருங்கோபன்றாதுவனுக்கினையபேசும். (அ௬)

இன்னுயிருக்கிடர்செய்யு மிலவணனுக்கிவ்வண்ண முரைத்தியென்ன, உன்னுயிர்நீவேண்டுதியே லுயர்தவத்தோர்க்கிடர்செய்யா தொழிகவென்று, மன்னுயிரைக்கோடலினித் தவிர்கென்றுமதுபுரம்புக் கவனவ்வண்ணம், சொன்னபொழு ‡ தவனைத்தன் சுடர்வாளிலெறிந்தான் றுன்று தோளான். (அஎ)

தூதன்வரக்காணுதுதோன்றியவெங்கோபத்தாற்றுடித்தநெஞ்சன்
மாதவருக்கிடர்செய்துமண்ணுலகினுயிரெல்லாம்வாரித்தின்னும்
பாதகன்கைச்சுடர்வாளாற்பட்டானேவென்றுபலநினைந்துபார்க்கும்
§ நாதனடற்படைசூழநன்மாடமதுபுரத்தைநண்ணுங்காலே. (அஅ)

ஆங்கவனுநம்மிடத்திலஞ்சாதேவந்தடைந்தானேரோவென்று
தாங்கரியபகைச்சூலத்தானையொடுதலைப்படலுந்தரைக்குமன்னன்
பூங்கணைமாமழைபொழியப்புன்முறுவல்செய்தவனும்பொருமையெய்தித்
தேங்கமழ்தார்மன்னன்மிசைச்சிவனளித்ததிருச்சூலந்திரித்திவிட்டான்.

ஏழிற்பேருலகமெல்லாமிப்பொழுதேமுடியுமெனவிமையோரஞ்ச
ஊழித்தீக்கிளர்ந்ததெனவுலகமெலாமெரிபரப்பியோடச்சென்றங்
காழித்தேர்மன்னவனையவன்சேனையொடு ¶ முருக்கியளவிலாற்றற்
பாழித்தோளிலவணன்றன்பாணிமிசைப்பண்டுபோலிருந்ததன்றே. ()

பொய்யிருக்குமனத்தவுணன் போர்வலியீதென்றுரைத்துப் புகல்வார் பின்னும், மெய்யிருக்குஞ்சொன்முனிவர் விரிசடையோனிடைப்பெற்ற வெய்யசூலம், கய்யிருக்கின்வெலற்கரியான் கையிலிராக்காலத்தை யறிந்துகாதில், நெய்யிருக்குஞ்சுடர்வேலாய் நிச்சயநினைகைப்படுவ னீசனென்றார். (௯௧)

---

* புகறியென-உரையென்றுரைக்க. † நண்ணரிய-பகைவரடைதற்கியலாத. ‡ அவனை-அத்தூதனை. § காதன்-தலைவனாகிய மாந்தாதா. ¶ முருக்கி-கொன்று.

என்றுதிருமறைமுனிவரிலவணன்றன்வலியெல்லாமியம்பக்கேட்டு
வன்றிறற்போர்ச்சத்துருக்கன்மதுபுரமாமாநகரம்வழிக்கொண்டந்தக்
குன்றனையோனுயிரலைப்பப்புறப்பட்டானெனச்சாரர்கூறக்கேட்டுச்
சென்றனனந்நகரெய்திச்செழுமதில்வாயிலினின்றான்சேனைசூழ. (கஉ)

மன்னுயிர்க்குக்காலனாய் மண்ணுலகினுயிரெலாம் வளைந்துகொன்று,
மின்னுயிர்க்கும்விரிசடைவெள் விடையுடையோனருஞ்சூல மென்கைத்
தாக, என்னுயிர்க்கோரீறுமிலை யெனநினையுமிலவணன்ற னகரியெய்தித்,
தன்னுயிர்க்குக்காலனாய்நின்றவிறற்சத்துருக்கன்றன்னைக்கண்டான். ()

தன்னுடையநகர்வாயிற்றனுதரனாய்ப்போர்செய்யச் * சமைந்துநிற்கும்
மன்னுடையமகனின்றவலிகண்டுவாய்மடித்துவஞ்சன்கூறும்
என்னுடையகாவலழித்தஞ்சாதேயென்னகரில்வந்தாய்யாரை
உன்னுடையபேரேதுநீவந்தகாரணமெற்குரைத்தியென்றான். (கச)

தயரதன்றன்றனயன்யான்சத்துருக்கனெனும்பெயராமிராமன்றம்பி
புயலனையகருமனத்தோய்போர்வேண்டிவந்தனென்யான்போர்தராது
பெயர்வரிதிங்குனக்கென்னப்பெருகியவெங்கோபத்தாற்பெயராதோங்க
மயல்புரியுமனத்தவுணன்மற்றவனைக்குறித்தினையமாற்றஞ்சொன்னான்.

என்னுடைய † தமையனாமிராவணனையிருங்கிளையோடேன்றுகொன்ற
உன்னுடையதமையனாவிராகவனெனன்றிருந்தவனையுணர்ந்திலாதேன்
என்னுடையபழம்பகைவன்றம்பிநீயென்னிடைவந்தகப்பட்டாயின்
றுன்னுடையவுயிர்கொள்வ லெனவுரைத்துப்பின்னுமீதுரைக்கலுற்றான்.

‡ தெவ்வழிக்குஞ்சிலைதரித்ததிறலுடையமாந்தாதாசேனையோடென்
கைவ்வழிவந்தகப்பட்டுக்கனலாகியொழிந்தமைநீகழறக்கேட்டும் [றாய்
உய்வ்வழியொன்றிலையின்றுன்னுயர்சேனையதனொடுமென்னுழைவந்துற்
அவ்வழியிற்பிறந்தோருக்கறியாமல்வரவந்தவழகேதென்றான். (கஎ)

திண்ணசுரனிவ்வண்ணஞ்செப்பியசொற்செவிநுழைவச்சீற்றம்பொங்கக்
கண்ணெரிகான்றிடவூழிக்கடலென்னக்கடலாலகாலமென்ன
மண்ணதிரமண்சுமந்தமாநாகந்தலையதிரவஞ்சனெஞ்சத்
தெண்ணதிரவிண்ணதிரவிருஞ்சிலையைநாணெறிந்தானிராமன்றம்பி. ()

இவ்வண்ணநாணெறியவெயிறுகடித்திருகையோடொருகையெற்றி
மைவ்வண்ணமனத்தவுணன்மலையனையமராமரமண்குலையவாங்கி
உய்வ்வண்ணமரிதிவற்கென்றும்பர்நடுங்கிடவுரவோடுருத்துவீசக் [டான்.
கைவ்வண்ணச்சிலையிளையோன்கணைகளான்மராமரத்தைக்கண்டங்கண்

---

* சமைந்து-ஒருப்பட்டு. † இலவணன் மாதாவான கும்பிநசி இரா வணன் சிற்றன்னையாதலின் இராவணனைத் தமையன் என்றான்.

‡ தெவ்வழிக்கும்-பகையைக் கெடுக்கின்ற.

உற்றபெருவெகுளித்தீயுடன்றெழுந்தவாளரக்க *னோங்கலென்ன
மற்றொருமாமரம்பிடுங்கிமண்ணடுங்கவிண்ணடுங்கவலியின்வீசக் [செய்து
கொற்றவன்வெஞ்சிலையிளையோன் கொடுங்கணையான்மராமரத்தைக்கூறு
செற்றமிகுமவனுரத்துச்செழுங்கணைகள்பலசொரிந்தான்றேவர்வாழ்த்த.

குன்றனையவாளவுணன்குருதிநீருடல்சொரியக்கொதித்துமண்டி
ஒன்றின்மேலொன்றோங்கியுயர்மரங்களொவ்வாதுசெல்லவீச
வன்றிறலோன்விற்கையில்வளைத்தபடியேநிற்கவயிரவாளி [ன்.
துன்றுமழைபொழிந்தவுணன் றுரந்தமராமரமடங்கத் துணித்துவீழ்த்தா

அராவணைமேற்றுயினீங்கியயோத்திமாநகரெய்தியதனைக்காத்த
இராகவன்றன்றிருச்சரத்தாலிரவிமாமகன்றேறற்கெய்தவேழு
மராமரமொன்றொப்பதனைமந்தரமாமன்னதனைவஞ்சன்வாங்கித்
தராதலஞ்சேருயிர்நடுங்கச்சத்துருக்கன்மிசையெறியத்தளர்ந்துவீழ்ந்தான்

இறந்தனனீங்கிவனென்னாவிலவணனென்பகையறுத்தேனென்றுநின்றா
சிறந்தவலித்தன்சூலஞ்சென்றுவாங்கிடவேதுஞ்சிந்தைசெய்யான் [ன்
† அறங்கைகொடுத்தெடுத்தளிப்பவாதிநாயகன்றம்பியமளிநீங்கி
உறங்கியெழுந்தானென்னவுணர்ந்தெழுந்தானுயர்வானத்தும்பர்வாழ்த்த.

சினச்சிங்கமெனவெழுந்தங்கினித்தெய்வக்கணைதொடுப்பேனெனச்சிந்தி
புனற்சந்தமலர்கந்தப்புகைதீபமுதலாயவுபசாரங்கள் [த்துப்
மனத்தாலேவகுத்திந்தவஞ்சனுயிர்கொண்டென்பால்வருதியென்று
வினைப்பாவிமேற்றெய்வவெங்கணையைவின்னாணிற்றொடுத்துவிட்டான்.

விட்டபடையாலமெனவெவ்வூழித்தீயென்னவிரிந்துபொங்கி
அட்டதிசையும்பாருமருவரையுமம்பரமும் ‡ நந்தனாடும்
நட்டமுறுமன்றோநாமினிப்போகவிடங்காணோமென்றுநாகர்
கெட்டவர்களுண்ணடுங்கிக்கேடினான்முகற்கினையகிளத்தலுற்றார். ()

ஊழிக்காற்றொடுங்கூடியூழித்தீப்பரந்ததுலகெங்குமென்ன
எழிற்பேருலகமெலாமீன்றவிறையிவைவிளம்புமெதிரிலாத
ஆழித்தேரிலவணன்றனாருயிர்கொள்வானாழியண்ணறம்பி
பாழித்தோட்சத்துருக்கன்விடுதெய்வப்படையிதுநீர்பதறலென்றான். ()

பெண்ணுருவிற்பாகன்பாற்பெறுசூலப்பெருவலியாற்பெருகும்பாவம்
உண்ணிருமியாவவுணனுரமுருவியுயர்வரைகளுருவியோடி
மண்ணுருவிமண்ணின்கீழ்மாநாகருலகுருவிமறித்துமீண்டு
திண்ணியதோட்சத்துருக்கன்செங்கையில்வந்திருந்ததந்தத்தெய்வவாளி.

---

* ஓங்கலென்ன-மலைபோல.

† அறங்கைகொடுத்து-தருமதேவதைதாங்கி.

‡ அனந்தநாடும்-நாகலோகமும்.

விண்ணவர்பூமழைபொழியவேதியராசிகள்கூறவேலைசூழ்ந்த
மண்ணவர்கண்மகிழ்ந்தாடவள்ளலிராமன்றம்பி * மதுகையென்னும்
ஒண்ணகரியுள்புக்காங்கொளிபெறுமாமணிச்சோதியொன்றுயோங்கும்
திண்ணிலையபொன்மாடகூடகோபுரமெல்லாந்தெரியக்கண்டான். ()

இலங்கைமாநகருக்குமிந்திரன்றனகருக்குமெழில்கொள்சோதி
அலங்கன்மாமுடித்தன தனணிந ர்க்குமிந்நகர்போலழகுண்டாமோ
நலங்குலாவியவிந்தநகரியினைநாம்புகழ்வதெங்ஙனென்று
தலங்குலாவியசீர்த்திச்சத்துருக்கனொளிமணிமண்டபத்தைச்சார்ந்தான்.

தய்யலர்பலாண்டிசைப்பச்சாமரைகள்பணிமாறத்தாளமோங்கும்
தெய்வமாவின்னிசைகள்செவிநுழையமாகதர்கடிரண்டுபோற்ற
மெய்யெலாயாபரணம்விரிசோதியால்விளங்கவிண்ணோர்வாழ்த்தப்
பொய்யிலாவுள்ளத்தான்பொங்கணைமேல்வீற்றிருந்தான்புலவர்போற்ற. ()

கரு - வது இலணவன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கூகo.

## கசு - வது, சம்புவன்வதைப்படலம்.

அன்னதன்மையனுயாறிரண்டாண்டவ்வணிநகரரசுவீற்றிருந்து
தன்னெடும்படையையங்குவைத்ததற்பின்றுனையுந்தலைவருந்தானும்
மன்னவனிராமன்மலரடிபணிவான்வல்வினையெனும் † விலங்கறுத்து
நன்னெறிகண்டகாட்சிவான்மீகிநலங்கொளாச்சிரமத்தைநண்ணி. (க)

வண்ணவொண்சிலைக்கையிளையவன்றன்னைவரன்முறைபூசித்துநாங்கள்
எண்ணியவெண்ணமுடித்தனையென்னவெழின்முனியியம்பியவிரவில்
புண்ணியகதைகளுரைத்தனகேட்டுப்புலர்ந்தபின்பூம்பொழிலயோத்தி
நண்ணிநன்னகரியெதிர்கொளப்புகுந்துநாயகன்றிருவடிபணிந்தான். (உ)

தன்றிருவடிதாழ்தம்பியையெடுத்துத்தடக்கையாலுயிருறத்தழுவி
வென்றிகொள்வீரன்விளம்புவானுறங்காவில்லிதன்றனுவலியாலே
அன்றிராவணற்கொன்றப்பகையறுத்தெனலைகடல்சூழுலகுய்ய
இன்றிலவணற்கொன்றிப்பகையுன்றலிறுத்தனெனினிப்பகையிலையே. ()

இன்னனபலவுமிளையவன்வலியேயிராப்பகலினிதுகொண்டாடித்
தன்னருள்பொழியுந்தாமரைக்கண்ணற்றம்பிசத்துருக்கனைநோக்கி

---

* மதுகை-இலவணன் பட்டினம்.

† விலங்கு-தடை.

நின்னெடும்படையுமளவிலாநிதியுமங்குவைத்திங்குநீயிருத்தல்
நன்னெறியன்றின்றென்றுலகெவைக்குநாயகன்போகென்னநவின்றான்.
தேனகு * துளபத்தார்திகழண்ணல்செப்பியசென்னிமேற்சேர்த்தி
மானபூடணனவலஞ்செய்துபணிந்துமற்றுமுன்னோரையும்வணங்கி
ஆனகமுரசமாதியமுழங்கவடற்பெருந்தானைதற்சூழ
வானவர்கோமான்மாநகரொக்குமதுகைமாநகரியுட்புக்கான். (௫)

இளையவனேகவிராகவனயோத்தியிருந்தரசாள்கின்ற † வேல்லை
விளைபெருமூப்புவெண்ணரைத்தலையோர்வேதியன்றுரத்திஞேடும்
வளர்தருந்துயரான்மரித்ததன்மகனைமடியிலேவைத்துயிர்க்கெல்லாம்
களைகணுயுள்ளகாவலன்கோயில்வாயிலிற்கதறிடுங்காலே. (சு)

மைந்தனையிழந்துமன ‡ மறுக்குற்றுமயங்கியமறையவன்பாரி
இந்தியமுதலதன்னிலைகலங்கியிறந்தனளிவனெனமடவாள்
சிந்தைவெந்துயராலெஞ்துகைகுலைப்பச்சேயிழையொருவகைதெளிந்து
வெந்துயராற்றுதேயுடல்வெதும்பிவெய்துயிர்த்திவையிவைவிளம்பும். (எ)

## வேறு.

மணியேயென்றன்மாசறுசோதிவடிவுக்கோர்
அணியேயென்றனுருயிரேயாரமிழ்தேவன்
பணியேதிந்நாளேகவுனக்குப்பணிபாராப்
பிணியேதந்தாயீங்கிதுவோநான்பெறுபேறே. (அ)

முன்னைச்சன்மத்திட்டுடையேனுதலின்மோகத்
துன்னைப்பெற்றுப்போற்றிவளர்த்தின்றுனைவிட்டேன்
என்னைப்போலப்பாவிகளுண்டோவினையில்லாப்
பொன்னைப்பெற்றுத்தப்பமுடிந்தேன் $ பொறியற்றேன். (கூ)

பதங்களிலார்க்கும்பன்மணியார்க்கும்படியில்லாச்
சதங்கையுமொண்பொற்றண்டையுமம்பொன்னரைஞாணும்
பதம்பலவாகுமைம்படையும்மெய்யழகெல்லாம்
பொதிந்தகழுத்துங்காறையுமம்பொற்புனைபூணும். (௧௦)

பட்டமுநெற்றிப்பன்மணிமுத்தின்படர்சோதிச்
சுட்டியுமம்பொற்றோடுமிலங்கென்றுனேயேயோ
எட்டனையுஞ்சார்பில்லவனுட்டினிடைவந்தாய்
கட்டியசுற்றிக்காப்பிடவாராய்களிறேயோ. (கக)

மண்ணனுசீருமானமுமங்கவசைபூண்டோன்
கண்ணறையன்காகுத்தனெனுதிக்கடன்ஞாலம்

* தேனகு-தேன்விளங்குகின்ற.
† ஏல்லை-சமயத்தில்.
‡ மறுக்குற்று-சுழற்சியுற்று.
$ பொறியற்றேன்-அறிவில்லாதவளானேன்.

புண்ணுறுதீயிற்புத்திரசோபந்தனைமாற்றிப்
பண்ணிறைநாய்தாய்செத்திலளென்றேபழிதூற்றும். (க௨)

என்னைக்கைவிட்டேகியநீயோவெழின்மைந்தா
உன்னைக்கைவிட்டொன்றுவோராதுழல்வேனோ
தன்னைச்சொல்லிக்கூப்பிடவேதுந்தகவில்லா
மன்னர்க்கல்லாமன்னவனோவுன்வலியாரர். (க௩)

ஒன்றுந்துன்பக் * கொள்கலமானேனுயிரெல்லாம்
கொன்றுண்பாவிக்கூற்றுவனென்னைக்கொடுப்போகான்
வன்றிண்சிந்தைமன்னவனுமென்வினைதேரான்
என்றென்றிவ்வாறேந்திழையாளுவிடருற்றாள். (க௪)

## வேறு.

வேதியனுந்தன்பாரிமேதினியில்வீழ்ந்துகிடந்தலறுமந்த
மாதுயர்கண்டாற்றாதுமறுகியநெஞ்சினனாகிமாண்டமைந்தன்
மீதுவிழுந்துரைமறந்துவெய்துயிர்ப்பொன்றில்லாதுமிகவுமிக்குப்
போதொடுகூடத்தெளிந்துபொருமித்தன்வாய்விட்டுப்புலம்பலுற்றான். ()

கன்னெஞ்சராயுள்ளோர்காளையரைத்தாமிழந்துகதறாநிற்பர்
மென்னெஞ்சராயுள்ளோர்வெந்துயரம்பொறுக்கலாவிடுவராவி
என்னெஞ்சிலெரிமூட்டியென்னையறக்கைவிட்டவுன்னைப்போல
வன்னெஞ்சனேயானுமைந்தனேயுனைத்தொடர்ந்துவருகின்றேனே. ()

தனக்குநோய்வேண்டாதான்சந்ததிபெற்றிடாதொழிகதளர்வுமிக்கு
மனத்துநோய்தான்பெருகமலடனுக்கின்றியாம்படுமிம்மறுக்கமில்லை
எனக்குநீசெயவிருந்த † நீர்க்கடனுனின்னிற்பினிருந்துபிள்ளாய் [னே.
உனக்குநான்செய்வெனோசெய்யேன்காணுனைத்தொடர்ந்துவருகின்றே

கண்ணிலான்பெற்றிழந்தானெனவுன்னைப்பெற்றிழந்துகாந்திப்பொங்கும்
புண்ணுளேநாராசம்புடைத்தனையபொறுக்கலாதாற்றேமாகி
மண்ணிலாப்பெரும்பாவத்தெங்களுக்குமகனாகவென்னபாவம்
பண்ணினாய்மகனேயென்பழிப்பற்றபேரழகாபகர்ந்திடாயே. (க௮)

தேசற்றதீவினையேன்றிருவுடையோர்பிள்ளைகளைப்பெற்றுவாழ
ஆசைப்பட்டாவிதளர்ந்தருந்தவங்கள்செய்துநானனேகங்காலம்
ஏசற்றேனேசறவுகெடவந்தாயென்றிருந்தேனெங்கேபோனாய்
மாசற்றமணியேயென்மறுவற்றவடிவுடையமைந்தரேறே. (க௯)

தள்ளாடுமேனியனாய்த்தனயனைநானிழந்தாவிதளர்கின்றேனைக்
கொள்ளாதுகூற்றுமென்னைக்கொடுபோகாதினியுனக்குத்தோழராகி

---

* கொள்கலம்-இருப்பிடம்.
† நீர்க்கடன்-சலதருப்பணம்.

உள்ளார்களோடுதெருவில்விளையாடியுடம் * பலசியுறங்கினுயோ
பிள்ளாய்நீயெழுந்திராயிதுவென்னபேருறக்கம்பேசிடாயே. (உ௦)

கொஞ்சியவுன்சொற்கேட்டுக்குடுமியுஞ்சுட்டியுமழகுங்குறித்துச்சால
செஞ்சுகளித்தினிதிருந்தநெடுந்தவத்தால்விதிமுறைநின்னரையிற்கட்டும்
முஞ்சியுநற்கோவணமுமுப்புரிநூலுந்தோளும்விளங்கித்தோன்ற
வஞ்சனேன்மைந்தாநீமறையோதிவரக்காணப்பெற்றிலேனே. (உக)

தராதலத்திலிதற்குமுற்றந்தையர்க்குமுனந்தனயர்மரித்தாரில்லை
† புராதனத்தாலல்லாதிப்புத்திரசோகத்தாலேபுலம்புமிந்தப்
பிராமணிக்குப்பிழைப்பரிதுபெரும்பீடையால்யானும் பிழைக்கமாட்டேன்
இராமனுக்கேபழியாகவிறக்கின்றோமிருவருமேயென்னுங்காலை. (உஉ)

விழுகண்ணீர்மெய்நனைப்பவேதியன்றன்பாரியொடும்விம்மிவாய்விட்
டழுகின்றகாரணமுமருமகனையிழந்ததுவும்பொறுக்கலாற்ரு
மொழிகின்றவாசகத்தின்கொடுமைகளுமருந்துயருமுழுதுங்கேட்டுக்
கழிகின்றநெஞ்சினனுய்க் ‡ கையறவுகொண்டிருந்தான்கருணைநாதன். ()

மந்திரிகடமைக்கூவிமற்றவருந்தம்பியருந்தானும்வாயில்
வந்திருந்துபுலம்புகின்றமறையவற்குமறுமாற்றஞ்சொலமாட்டாது
நொந்திருந்தவேலைமறைநுண்பொருடேர்நாரதனேமுதலாவுள்ள
$ இந்திரியசித்தராமிருடிகணமிறைவன்முனமிமைப்பின்வந்தார். (உச)

வந்தவரையடிவணங்கிவரன்முறையாற்பூசித்தங்கிருந்தமன்னன்
சிந்தையில்வெந்துயரறிந்துசெழுமறைநாரதமுனிவனிவையசெப்பும் [வ
இந்தவுன்றனிராச்சியத்திலிதற்குமுன்னிலாததிதொன்றுண்டாய்த்தெய்
அந்தணன்புத்திரன்மாளவதுவந்தகாரணத்தையறிவாயென்றுன். (உரு)

மாசில்பெரும்புகழிறேய்தருமத்தின்வகைகேட்டி ¶ வருணதன்மம்
ஆசிரியதன்மம்வருணச்சிரமதன்மமெனவருமித்தன்மம்
காசில்குணத்தன்மமொடுகெழறிஞேர்பலரிவைகள்கற்றோரின்று
பேசியவித்தன்மத்தின்முதல்வருணதன்மத்தைப்பேசக்கேட்டி. (உசு)

புண்ணியசன்மத்தராம்பூசுரர்தன் மஞ்சுருதிபுகன்றயாகம்
பண்ணுதல்பண்ணுவித்தல் பழமறையோதலோதுவித்தல்பாந்தநன்னூல்
கண்ணியதானங்கோடல்கொடுத்தலெனக்கட்டுரைப்பர்காவல்வேந்தர்க்
கெண்ணியதானங்கொடுத்தல்யாகமதுபண்ணுவித்தலென்னச்சொன்னர்.

கோத்திரத்திற்கொள்ளல்விற்றல்கோக்காத்தலுழல்வேட்டல்வசியர்தன்ம
சூத்திரர்க்குத்தன்மமவர் § சிச்சுருடையெனவுரைப்பரதுசெய்யாது [ம்

* அலசி-இளைப்புற்று. † புராதனத்திலல்லாது-இப்பொழுது நூதனமாக. ‡ கையறவு-துன்பம். $ இந்திரியசித்தர்-இந்திரியங்களை வென்றவர்கள். ¶ வருணதன்மம்-சாதிஒழுக்கம். § சிச்சுருடை-ஊழியம்.

காத்திரத்தையறவுலர்த்தித்தலைகீழாய்க்கான்மேலாய்த்தனக்குவாய்த்த
சாத்திரத்திற்சொல்லாததவஞ்செய்வானல்வருமித்தவறெனென்றான். ()

அக்கிரமஞ்செய்தாரைவிதிமுறையேதண்டியாவரசனாட்டில்
எக்கிரமங்களுங்கலங்கிமழைகுன்றுமிருந்தவத்துக் * கருகனல்லன்
உக்கிரமாந்தவஞ்செய்கைகாரணமாயிம்மரணமுண்டாய்த்தென்ன
விக்கிரமவான்மனத்தில்வெந்துயரம்விட்டிளையோற்கிளையசொன்னான்.()

நெஞ்சிடைவெந்துயராற்றுப்பாரியொடுமறையோனைநீபோய்த்தேற்றித்
† துஞ்சியமைந்தனைத்தயிலத்தோணியினிலிடுவித்தியென்னச்சொல்லிக்
கஞ்சநயனக்கனிவாய்க்கார்வண்ணன்கதிரவன்றனொளியிற்காட்டி
விஞ்சொளியபுட்பகத்தின்மீதேறிமேற்றிசையின்விரைவிற்போனான். ()

‡ குடதிசையும்வடதிசையும் $ குணதிசையுங்குறிக்கொண்டுநாடிப்பின்பு
திடமிசையுங்காகுத்தன்தென்றிசைமேன்மாதவனைத்தேடிச்செல்வான்
புடைபரந்தபுண்டரிகப்பூவணைமேற்பேடையொடுமன்னம்வைகும் [ன்
தடமருங்குகான்மேலாய்த்தலைகீழாய்த்தவஞ்செய்வான்றன்னைக்கண்டா

சிறை ¶ வாவறாங்குகின்றசேதியென்னத்தூங்குமவன்றன்னைச்சேர்ந்து
குறையாதபேரழகுக்கொண்டனிறக்கருணைநெடுங்கோமான்கூறும்
மறையவனோமன்னவனோவைசியனோசூத்திரனோவாக்காற்பொய்ம்மை
அறையாதிங்குனையுள்ளபடியெல்லாம்பகர்தியெனவவனும்பன்னும். ()

தும்பைமலர்த்தொடையலினய்சூத்திரயோனியில்வந்துதோன்றியுள்ளே
சம்புவனென்பவனென்பேர்தவஞ்செய்யுங்காரணமிச்சரீரத்தோடும் [ன்
உம்பருறைபொன்னுலகமுறவென்றானுறைவாளையுருவியோச்சிக்
கம்படியில்விழவெறிந்தான்கருமுகிற்போற்றிருமேனிக்கமலநாபன். ()

விண்ணவர்பூமழைபொழியவேதியராசிகள்கூறவேலைசூழ்ந்த, மண்ண
தனினிகழ்வருணதன்மத்தைவரம் பழித்துநின்கைமாண்டேன், புண்ணி
யஞ்செய்தோரெண்ணும்பொன்னுலகும்புகலரிதுபுரைதீர்நின்னுள், கண்
ணியதோர்வரம்வேண்டிக்கொள்ளென்னக்கார்மேனிக்கண்ணன்கூறும்.()

மறுகுபெருந்துயருடையமறையவன்சேயத்தலத்தின்மாண்டோனவி
பெறுவகைவேண்டுமெனென்னப்பெருந்தவனுமவனுவிபெற்றுனென்று
செறிவலியிந்திரனாதிதேவர்களுஞ் § சீதரனுந்தீயபாவம் [ன்
குறுகரியமாதவருங்குறுமுனிவாழ்தவவனத்தைக்குறுகினரால். (௩௫)

மறைமிகநல்லறந்தழைக்கவாளவுணர்குலமுழுதுமறைந்துநாசம்
உறவெழுஞாலம்பிழைக்கவொருகுடங்கையால்வேலையேழுமுண்ட

* அருகனல்லன்-அதிகாரியல்லாதவன். † துஞ்சியமைந்தனை-இற
ந்தபார்ப்பனச் சிறுவனை. ‡ குடதிசை-மேற்றிசை. $ குணதிசை-கிழக்கு
த்திசை. ¶ வாவல்-வவ்வால் பறவை. § சீதரன்-திருமறுமார்பன்.

அறமுனிவனுச்சிரவமணிகினராலடவரக்கன்றலையீரைந்தும்
* இறமுனியுஞ்சிலையோனுமிந்திரனேமுதலானவிமையோர்யாரும். ()

வாசவனேமுதலானோர்மாதவத்தோர்விதிமுறையோர்மகிழ்ந்துசெய்த
பூசனைகொண்டாங்கவர்கள்பொன்னுலகிற்போயினபின் † புரைதீருள்ள
கோசலைநாடன்காணக்கொண்டாடிப்பூசித்துக் ‡ குசலவார்த்தை [க்
பேசியினிதிருந்ததற்பின்பெருந்தவத்தோனிவையிவையேபின்புபேசும்.

### வேறு.

கொற்றவில்லிதனதுகொடுத்தலின்
மற்றொருத்தர்மகிழ்ந்துகொடுத்திடப்
பெற்றதீதிபெறும்பலபாத்திரம்
உற்றபோதெனவோதினர்வேதியர். (௩௮)

வானவர்க்கன்றிமண்ணுலகத்தில்வாழ்
மானவர்க்கும்வகுக்கவொண்ணாதது
தானவப்பகையாகியசார்ங்கிநீ
ஆனதற்பினினக்கணியாவது. (௩௯)

நீடுமாநிலத்தில்லதுநீண்மறை
பாடுபங்கயத்தோனுலகுள்ளது
தேடருஞ்சுடர்ச்செம்மணிப்பூணிது
கோடியென்றுகொடுத்தனன்கோதிலான். (௪௦)

அந்தவாபரணங்கண்டவாழியான்
உந்துதீவினையோர்முன்புனக்கிது
தந்துளோன்றனைச்சாற்றெனத்தன்னிடை
வந்தகாரணமாமுனிகூறுவான். (௪௧)

விரிந்ததானைவிறலரக்கன்றலை
பருந்துநாயும்பகுந்துணப்பண்டுபோர்
புரிந்துளாய்முன்புகுந்ததுகேட்டியான்
அருந்தவஞ்செயவாமிடந்தேடுவென். (௪௨)

சிங்கமாதிதிரியக்கியோனிகள்
தங்கிடாததுசார்புள்ளகன்றது
துங்கமானுடர்தோற்றமிலாததோர்
$ கொங்குலாமலர்ச்சோலையைக்கூடினேன். (௪௩)

அன்னகானகத்தம்புயப்பூவணை
அன்னம்பேடையொடன்போடுறங்குவ

---

* இற - அற்றுவிழ. † புரைதீர் - குற்றமற்ற.
‡ குசலவார்த்தை - சேமவசனம்.
$ கொங்குலாம் - மணந்தங்கிய.

தன்னகங்கடமுவியதாழ்கடல்
அன்னபூந்தடவாவிகண்டேனரோ. (சுச)

ஆயவாவிமருங்கிடையாருமில்
தூயவாச்சிரமங்கண்டுதுன்னிருள்
மேயவல்லதிற்றங்கிவிடிந்தபின்
காயமாகவொருசவங்கண்டனென். (சுரு)

அன்னகாலேயரம்பையராடிட
மன்னுமாதவர்சூழ்தரமாகதர்
துன்னியேத்திடத்தும்புருநாரதர்
என்னபோவெனவெங்கணும்பாடிட. (சுசு)

இந்திராதியிமையவர்போற்றிட
வந்துதோன்றினன்மாமணித்தேரின்மேல்
அந்தரார்விமானத்தடந்தேரினன்
றிந்தமன்னனிழிந்திதுசெய்தனன். (சுஎ)

சாரவந்தச் * சவத்தினைத்தன்வயி
றூரவுண்டுபெயர்த்தணிபொய்கையில்
வாரிமொண்டுகுடித்துவாய்பூசிநற்
றேரிலேறிப்புகுதலுஞ்சென்றியான். (சுஅ)

தேவவிச்சவந்தின்றிடக்காரணம்
நீவிளம்புதிநின்பெயரேதுநீ
யாவனென்னவெழின்மணிப்பூணிஞேன்
பாவநாசவெனக்கிவைபண்ணினேன். (சுகூ)

வேறு.

துங்கவரைத்தோள்வெற்பன்னசுவேதனென்போன்றொல்லுலகோர்
தங்குபுவனமீன்றெடுத்தாய்போகம்வளர்த்தோன்றனக்குரிய
மங்கைமாரின்மூத்தவடன்வயிற்றிலுதித்தேன்சுவேதையென
எங்குநிகழ்பேர்பின்னையானீன்றுள்சுவேதனென்போனே. (ரு0)

எந்தைவானமெய்தியபினீரைஞ்ஞூறன் † டெறிகடல்சூழ்
அந்தஞாலமினிதாண்டிங்கெல்லாப்பகையுமறுத்தென்பின்
வந்தசுவேதற்கரசளித்துவருந்திமூவாயிரத்தாண்டு
சிந்தையொருங்கியருந்தவங்கள்செய்தகாலத்தினையடைந்தேன். (ருக)

இந்தவனத்தினெடுங்காலம்யான்செய்தவத்தாலெய்தரிய
‡ அந்தணனேன்பேருலகமடைந்துமருந்தாகமும்பசியும்

---

* சவம் - பிணம். † எறி - அலைவீசுகின்ற.
‡ அந்தணன் - பிரமதேவன்.

வந்தநலியமழைவண்ணமாயோன் றனதுதிருவுந்தி
தந்தமலரோன் றன்னுடையதாளில்வணங்கியிவைசொன்னேன். (ருஉ)

பெறுதற்கரியவிவ்வுலகம்பெற்றும்பெருந்தாகமும்பசியும்
உறுதற்கென்காரணமினியானுண்பதேதென்றிடநெஞ்சில்
இறுகத்தனத்தாலிரப்போருக்கிட்டுண்டேயுன்வயிறும்
* பறியைத்தூர்த்துவளர்த்ததனுற்பசிநோய்நின்னைப்பற்றியதால். (ருங)

பன்னுமறையின்பொருடெறிந்துபடைத்தோன்பின்னுமிவைபகரும்
பின்னுந்தருவாரவ்வனத்துன்பிணத்தைநீயேபசிதீரத்
தின்னமாளாதுவளருஞ்சென்றுதின்னிற்குண்டமுனி
தன்னைக்கண்டானின்பசியுந்தாகமும்போமெனவுரைத்தான். (ருச)

அன்றுதொடங்கியின்றளவுஞ்சுமந்தமாயவிப்பிணத்தைத்
தின்றுதிரிந்தேனென்பசியைத்தீர்த்தியென்றானதுதீர
நன்றுபிழைத்தேனெனவுவந்திந்நல்லாபரணமெனக்கீந்து
வென்றிவீரன்விமானத்துவிண்ணோர்சூழவவன்போனான். (ருரு)

இன்னதாமிவ்வாபரணமென்பால்வந்தவழியென்று
பன்னுவேதமாமுனிவன்பகரப்பரமன்வியப்பெய்தி
மன்னுமிருகம்பறவைநரர்வழங்காதொழிதலிவ்வனத்தில்
என்ன † நிமித்தத்தாலிதுநீயியம்பென்றியம்பமுனியியம்பும். (ருசு)

தண்டனென்போன்மனுகுலத்தோன் றருமந்தயாவொன்றில்லாத
‡ மிண்டனவன் றன்புரோகிதனும்வெள்ளிதவஞ்செய்வனநண்ணி
வண்டுபடும்பூம்பொழிலிடத்துவளர்சீரந்தமுனிமகளைக்
கண்டுகாமபரவசனாய்க்கலங்குநெஞ்சன்கருதுவான். (ருஎ)

செந்தாமரைமேற்றிருமகளோதேவருலகினிழிந்துபுவி
வந்ததெய்வமடமாதோமண்ணிற்பிறந்தமணிவிளக்கோ
அந்தாமரையின்முகத்தினளாரோவறிகிலேனென்று
சிந்தாகுலமாய்த்தேர்மன்னன்பின்னுமிவையசிந்தித்தான். (ருஅ)

பஞ்சினடியோவணிகுறங்கோபழிப்பில்பணத்தேரல்குலோ
வஞ்சியிடையோவனமுலையோதோளோகழுத்தோமதிமுகமோ
நெஞ்சுகவர்ந்ததெனைத்தரளநிரைத்தபவளச்செவ்வாயோ
நஞ்சுகலந்தவேல்விழியோநறுமென்குழலோவறியேனே. (ருகூ)

என்றுகலங்கியவள்பால்வந்தெழுதவரியவெழிலுடையோய்
ஒன்றுதவத்தாலுனைப்பெற்றோன்பேரோடுன்பேருரையென்ன
வென்றிவேற்கணிவள்விளம்பும்வெள்ளிமகளுன்மேதினியில்
நின்றபுகழோய்சரையென்னநிகழ்பேரென்பேர்நிலத்தென்றாள். (சுo)

* பறியை - வெட்டுகுளத்தினை.
† நிமித்தத்தால் - காரணத்தினால். ‡ மிண்டன் - தடியன்.

கல்லிற்செறிதிண்புயவேந்தன்காமசரத்தாலேவுண்டு
புல்லுக்கவ்விமான்ரூறக்பொருவேல்விழியைப்பொதுப்புகழிற்
சொல்லுக்கஞ்சிக்கிளியொளிக்குந்துடிநேரிடையைத்தொழுதிரந்து
புல்லச்சென்றுபுகுமவனைப்பூவைகண்டிங்கிவைபுகன்ருள். (சுக)

எந்தைசீறிலேழுலகுமிமைப்பிற்பொடியாமென்னுரைகொண்
டிந்தவிடத்துநில்லாதேயிப்போதேநீயேகென்ன
அந்தவவள்சொற்கொள்ளாதேயநங்கசரத்தா * லறநொந்து
வந்துமடவாள்குழல்பற்றிவலிதிற்புணர்ந்தாங்கவன்போனன். (சுஉ)

அன்னதீயோனேகவவ † ளலக்கணுடுமாச்சிரமந்
தன்னின்மன்னிப்புகுந்தபடிதந்தைக்குரைக்கத்தாழ்குழலே
உன்னையிடர்செய்தவனைநீயுரைத்தியென்னவொளிதிகழும்
பொன்னின்மணிகள்பொலிந்திலங்கும்பூணுள்புகுந்தபடிபுகன்ருள். ()

அந்தவெள்ளியனலென்னவாலகாலவிடமென்னச்
சிந்தையெழுந்தபெருங்கோபந்தீராவிடும்பையென்மகட்குத்
தந்ததண்டன்வளநாடுந்தானுங்கிளையுந்தந்திரமும்
வெந்துபொடியாய்வீழ்கவெனவெல்லாம்பொடியாய்வீழ்ந்தனவே. (சுச)

அவன்றன்னுட்டிற்றண்டகமாமடவியாகியாரழலிற்
‡ சிவந்தவெள்ளிசாபத்தானரர்புண்மிருகஞ்சேர்வின்றித்
தவஞ்செய்முனிவர்நெருங்குதலாற்சன்மத்தானமெனபேராய்
உவந்தகருணைபொழிவிழியாயுற்றதிதுமுன்பெனவுரைத்தான். (சுரு)

$ குண்டமுனியிவ்வகைகூறவெய்யோன்குடபாற்கடற்குளிப்ப
பண்டைமறைநூல்விதித்தவிதிப்படியேசந்தித்தொழின்முடித்து
வண்டுமுரலுந்துழாய்முடியான்வாய்த்தவத்தோனுடுந்துயில்கொண்
டெண்டிசாமண்டலமூடுமிருணீங்கியபின்னியைந்தெழுந்து. (சுசு)

சந்திதொழுதுதவத்தோன்றன்சரணவிணைகடாழ்ந்திறைஞ்சி
அந்தமுனியாசிகள்கூறவம்பொற்றேரின்மிசையேறிச்
சிந்தையுவந்துகொடிக்கட்டித்தெருவுதோறுமலங்கரித்து
வந்தநகரியெதிர்கொள்ளவள்ளலயோத்திநகர்புகுந்தான். (சுஎ)

கஅ-வது, சம்புவன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஎஎ.

---

* அறநொந்து - மிகவருந்தி. † அலக்கண் - துன்பம்.
‡ சிவந்த - கோபித்த. $ குண்டமுனி - அகத்தியன்.

# ௧௫ - வது, அசுவமேதயாகப்படலம்.

* மாத்திரைக்கடன்மண்ணோரைமனுமுதலாயதன்மம்
சாத்திரப்படிதப்பாமற்சரிப்பித்துச்சகலத்துக்கும்
நேத்திரமாகிநின்றோனெடுநிலைவாயில்காக்கும்
வேத்திரக்கரத்தோன்றன்னைவிளித்திவைவிளம்பலுற்றான். (௧)

எம்பியர்தம்மையின்னேகொணர்கெனவியம்பவந்த
அம்புயக்கண்ணனேவவாங்கவன்றலைமேற்சூட்டி
எம்பிரானிராமனும்மையழைத்தனனென்னவந்தத்
தம்பியர்தவிசினின்றுந்தாம்விரைந்தெழுந்துபோந்தார். (௨)

தாமரைப்பெருங்கானத்துத்தையலோடுறைந்தசெய்ய
தாமரைத்தடங்கணானைத்தண்ணுறுஞ்சுரும்புசார்ந்த
† தாமரைக்காணுமாசைதள்ளுறத்தம்பிமார்கள்
தாமரைக்கணத்தின்வந்துதாழ்ந்தினிதிருந்தகாலை. (௩)

அன்னதம்பியரையண்ணலருட்கண்ணாற்குளிரநோக்கி
என்னுயிரனையவும்மாலிராசசூயந்தான்செய்ய
உன்னினனென்னவேலோடுமுறக்கநீத்திரேழாண்டு
தன்னைமுன்காத்தவென்றித்தடஞ்சிலைத்தம்பிகூறும். (௪)

சொற்பொருடெரியாமைந்தன்சொல்லியகுதலைச்சொற்கள்
பெற்றதாய்க்கினியவாகும்பெற்றிபோற்பெருஞ்சொனன்னூல்
கற்றறிவொன்றுமில்லேன்கழறிடுமிந்தப்புன்சொல்
கொற்றவாவின்சொல்லாகக்கொள்ளுதியென்றுகூறும். (௫)

பொன்னையேநோக்கிநிற்பர்பொதுவிலைமகளிர்மாரி
தன்னையேநோக்கிநிற்குந்தரணியிற்பைங்கூழ்தந்த
அன்னையேநோக்கிநிற்குமரும்பெறற்குழவியன்ன
நின்னையேநோக்கிநிற்குநீணிலத்துயிர்களெல்லாம். (௬)

அன்றியுமரசர்க்கெல்லாமாவிநீயவர்களோடு
கன்றியேபொருதுவென்றுகாவலர்தனங்கள்வாரி
இன்றுநீயிராயசூயஞ்செய்வதிலிறைவசால
நன்றயமேதஞ்செய்கையதனையானவிலக்கேட்டி. (௭)

சத்தியைம்புலன்கள்வென்றதபோதனனுந்ததீசி
அத்தியாங்குலிசத்தாலேயடல்விருத்திரனைக்கொல்லத்

* மாத்திரைக்கடல் - பெரிய அலைகளையுடைய சமுத்திரம்.
† தாமரை - மாலையினையுடைய விராமபிரானை.

தொத்தியபாவந்தன்னூற்றுளங்கியசுரேசன்பண்டு
சுத்தனை துதான்பண்ணும் * துரகமேதத்தாலென்றான். (அ)

கொற்றவன்பாலிசூலிகோமகன்கொம்பனாளாய்
மற்றவன்றேவிசொன்னவாக்கினான்மைந்தனூழ
பொற்றொடியாயதிங்கள்புதனுக்குப்புரூரவாவைப்
பெற்றபின்சாபநீங்கப்பெற்றதிப்பரிமேதத்தால். (கூ)

ஆதலாலயமேதத்தையழகிதென்றிருந்தேன்செய்கை
தீதிலாக்குணத்தோயென்றுசெப்பவுண்மகிழ்ந்துசெப்பும்
ஆதியாயநந்தகோடிமுட்டையிட்டளவில்வேதம்
ஓதியவண்ணமான தன்னைத்தானுணர்கலாதான். (கய)

† வளைபயில்கடல்சூழ்மண்ணின்மன்னரைச்செருவிலோட்டி
உளைவனசெய்யும்வேள்வியொழிந்தனமென்றுஞ்செப்பி
விளைபொருளுணரவல்லோய்விளம்பியவயமேதத்தின்
அளவறுபெருமைகேட்டமதனையேசெய்துமென்றான். (கக)

சந்திரனனையகொற்றத்தனிக்குடைநிழற்றப்பாரான்
இந்திரைகொழுநனெல்லாவிலக்கணமுடையமாவை
மந்திரவிதித்தோர்தம்மான்மந்திரிப்பித்தமாவைத்
‡ தந்திரந்தாங்கவேவித்தரணியிற்போகவிட்டான். (கஉ)

சிந்தையாலயமேதத்தைச்செய்வதாகினைந்தேன்சீரார்
அந்தணரெனக்குத்தெய்வமாதலாலகத்தியாதி
¶ நந்தலிறவத்தோரெல்லாநைமிசாரணியந்தன்னில்
வந்ததுமுடித்துப்போகவருகவென்றழைத்துவிட்டான். (கங)

நன்னெறிவேள்விகாணநைமிசாரணியந்தன்னில்
இன்னநாள்வருகவென்றாங்கிலங்கைமன்னவற்குமாவி
அன்னசுக்கிரீவனுக்குமநுமாற்குமடன்மன்னர்க்கும்
செந்நெறிக்குகற்குமண்ணறிருமுகஞ்செல்லவிட்டான். (கச)

வேறு.

$ வரமுனமுனிவரைவானரேசனை
அரனுடையநுமனையங்கதன்றனைத்
தருநிகர்சத்துருக்கினனைத்தாவெனச்
சுரமலியவ்விடைத்தூதர்ப்போக்கினான். (கரு)

துனிபரிநெடும்பரித்தூதர்கூறலும்
முனிவருமமரருமூரித்தானையும்

* துரகமேதத்தால்-அசுவமேதத்தால். † வளைபயில்-சங்குதங்கிய.

‡ தந்திரந்தாங்க-சேனைகாக்க. ¶ நந்தலில்-கெடாத.

$ வரமுனிவரை-வரந்தருந்தவமுடைய முனிவர்களைவரம் - சிரேட்டமுமாம்.

வனைகழலிளவலும்வானரேசனும்
அனுமனுமரக்கனுமயோத்திமேவினர். (கசு)

**வேறு.**

பொருதிரைக்கடற்கணீரும்புண்ணியநதிகணீரும்
தருகநீரென்றுசெய்யதாமரைத்தடங்கணுதன்
துரகமேதப்பேர்வேள்விதொடங்குநாளின்றேடேழு
சரதமாமென்றுநாடூெகரமுஞ்சாற்றச்சொன்னன். (கஎ)

மந்தரமலைமத்தாகவாசுகிகயிறதாகச்
சந்திரன்றூணதாகத்தடங்கடறுழியாகச்
சுந்தரத்தோள்களாலே * சுதையெழக்கடைந்ததூயோன்
இந்திரன்பகைவற்கொன்றவிளவலுக்கினையசொன்னன். (கஅ)

சீலமாதவரும்யாமுஞ்சிறந்தவோமஞ்செய்யாக
சாலையுமநுமானுக்குந்தபனன்மைந்தற்குந்தாழ்ந்த
மாலைதாழ்முடிமன்னர்க்கும்வானரப்படைவேந்தற்கும்
கோலவீடணற்குமாடங்குறைவறச்சமைப்பியென்றான். (ககூ)

நன்றெனவவன்போந்தந்தநைமிசாரணியநண்ணி
ஒன்றியபலவேர்பூட்டியுழுதொக்கநிலஞ்செய்வித்துத்
தன் † றுணையற்றவேள்விச்சாலையுஞ்சமைப்பித்தோங்கும்
குன்றுறழ்மாடகூடகோபுரஞ்சமைத்துப்பின்னும். (உ0)

மணிமுடிமன்னர்க்கெல்லாமாடகூடங்கள்செய்வித்
தணியுடைச்சேனைக்கெல்லாமகஞ்சமைப்பித்துவந்தோர்
தணிபெருஞ்சோற்றுச்சாலைசார்ந்தவர்விடாயுங்கூடப்
பணிநறுந்தண்ணீர்ப்பந்தர்முதலெலாஞ்சமையப்பண்ணி. (உக)

ஆவணவீதிதோறுமணிபெறுகதலிபூகம்
தூவணக்கொடிநாட்டித்தோன்றுதோன்றிடங்களெல்லாம்
காவணம்பரப்பிவெள்ளைமணலிட்டுக்கலங்காவாற்றல்
ஏவணச்சிலையோன்வந்தங்கிராமனுக்கினையசொன்னன். (உஉ)

அமைந்ததுவேள்விச்சாலையண்ணலேயுனக்குக்கோயில்
சமைந்ததுமன்னர்க்கெல்லாந்தாவளஞ்சமைந்ததென்ன
நமைந்தெமரிடத்துநண்ணார்நண்ணிடனுகநாளும்
சுமந்தபூபாரந்தீர்த்ததூயவனீதுசெய்தான். (உங)

ஆயிரகோடிபொன்னுமத்தொகையமைந்தகோவும்
ஆயிரகோடிபாரமரிசியும்பயறுமெள்ளும்

---

* சுதை - அமுதம்.

† துணையற்ற-ஒப்பற்ற.

ஆயிரகோடிபண்டிகறிகளுமிளகுநெய்யும்
ஆயிரகோடிபொன்செய்பாவையுமடங்கக்கொண்டு. (உச)

பரதனும்பதினுலாண்டுபகலிராவுறக்கநீத்த
விரதனுமுன்னர்ப்போகவிடைகொடுத்தருளிப்பின்னர்ச்
* சுரதனமாயவேள்விதொடங்குநாளின்றேடேழு
சரதமென்றெழில்கொணுநகரமுஞ்சாற்றச்சொன்னுன். (உரு)

வென்றிகொளிராமன்வேள்விதொடங்கிடவிதித்தநன்னுள்
இன்றுடனேழுநாளென்றெறிபறையறையக்கேட்டுக்
குன்றுயர்செம்பொன்மாடங்குலவியநகருநாடுமே
ஒன்றியவேலையென்னவொலியதுபெருகிற்றன்றே. (உசா)

## வேறு.

குறைவொன்றில்லாக்கோசலநாட்டிற்சனமெல்லாம்
இறைவன்வேள்விகாணவிசைந்தோரெங்கெங்கும்
நிறைபொற்கும்பமுடனெய்விளக்குநின்றேந்தி
உறைசீர்மாடத்தொண்ணகரஞ்சென்றுறுருவாரும். (உஎ)

கேதுவிளங்குங்கேழ்கிளர்செம்பொற்குலைவாழை
சோதிவிளங்குந்தோரணமெங்குநடுவாரும்
வீதிகடோறும்வெண்மணலெங்கும்விடுவாரும்
வேதிகைமாடவாயில்விதானமிடுவாரும். (உஅ)

காலையுதித்தஞாயிறுபோலக்கனகத்தால்
கோலநிரைத்தமாளிகைதோறுங்குடம்வைத்து
மேலொளிமுத்தின்றமநிரைத்ததுமிகுபைம்பூ
மாலைநிரைத்தே † காவணமிட்டேமகிழ்வாரும். (உகூ)

சாலைகடோறுங்கோவலர்நெய்பாறயிர்வெண்ணெய்
கோலநெடுங்காவிற்கொணர்வாருங்குறைவற்ற
வாலரிசித்திண்பண்டிகள்கொண்டுவருவாரும்
மூலபலங்காயங்குள ‡ மூற்கந்தருவாரும். (ந0)

வண்டாரைம்பான்மங்கையர்கண்ணுமனமுந்தாழ்
தண்டார்நாதன்சாலைகடோறுஞ்சபைவந்தங்
குண்டாருண்டுமிக்கநல்சோறுமுயற்வெற்பின்
கண்டார்கண்டகண்டிடமெங்குஞ்சொரிவாரும். (நக)

வந்தவரைச்சீர்மாநகருள்ளோர்மகிழ்வுற்றுத்
தந்தமனைக்கேகொண்டுபுகுநதார்சனமெல்லாம்

---

* சுரதனமாய - தேவர்களின்செல்வமான.

† காவணம் - நடைபந்தல்.

‡ மூற்கம் - பயறு.

சிந்தையுவப்பவின்னமிழ்தாயதினிதூட்டிச்
சந்தனமப்பித்தண்ணுறுமென்பூத்தருவாரும். (ஙஉ)

* சூதனகொங்கைச்சோருமிடைச்செந்துவர்வாயொண்
பேதையர்நெஞ்சம்பின்செலவன்பிற்பிரிவாரை
வாதைசெயும்போர்மாரனுமஞ்சும்வடிவோர்மா
வீதிகடோறும்வீரர்விளேதம்பயில்வாரும். (ஙங)

கோழிப்போருங்கொண்டசினப்போர்த்தகர்முட்டும்
பூழிப்போருமஞ்சுதலின்றிப்பொருவோரும்
† பாழித்திண்டோள்வீரர்பகற்கண்டிரவெல்லாம்
வீழிச்செவ்வாயார்கலவிப்போர்மிகுவாரும். (ஙச)

கொஞ்சுகிளிச்சொற்கோபவிதழ்த்தாழ்குழலார்தம்
கஞ்சமுலைக்கோலஞ்செய்வகண்டாவர்தாழ
விஞ்சொலிநற்பூண்மேனிவிளங்கப்புனையாமென்
பஞ்சியடிக்குப்பல்லணியெல்லாமணிவாரும். (ஙரு)

படர்ந்திருள்கேசபாரமதிற்பன்மலர்பெய்தும்
தடந்திகழ்கொங்கைசந்தமணிந்துந்தகவில்லோர்
வடந்திகழ்முத்தின்கோவையணிந்தும்வலியின்றி
நுடங்குமிடைக்குண்ணேவுகளேசெய்திடுவாரும். (ஙசு)

ஆளியனூர்தம்மாருயிர்கொள்வாரணிநாகக்
கோளறுமுத்தங்கோவைகுலைத்துத்தெரிவாரும்
காளையர்நெஞ்சங்கொள்ளவனத்திற்கருவிக்கண்
வாளிகளுள்ளேமையெனுநஞ்சமிடுவாரும். (ஙஎ)

மென்னுரைநுண்பட்டாடையின்மெள்ளவிரைசோதிக்
‡ கன்னிரைபைம்பொற்காஞ்சியரைக்குப்புனைவாரும்
பொன்னுரைகல்லிற்பொற்புரையென்னப்புனையாடி
இன்னுரைநல்லோர்தம்மெழில்கண்டெண்மகிழ்வாரும். (ஙஅ)

வள்ளலிராமன்வந்திலனேவந்தனனேவென்
றொள்ளிழையாரைவீதியிலோடவிடுவாரும்
கள்ளவிழ்கோதைக்காரிகையாரிவ்வழிநண்ணப்
பள்ளிகொளாழிப்பைவிரிநாகப்பாணிப்பால். (ஙகு)

## வே று.

அரக்கர்கள்குலத்தினையறுத்தவடல்வீரன்
நெருக்கினினடப்பரிதெமக்கெனநினைத்துச்

* சூதன-சொக்கட்டான் காய்போன்ற. † பாழித்திண்டோள்-பரிய திண்ணியபுயங்களையுடைய. ‡ கன்னிரை-அரதனமிழைத்த.

செருப்புரியெதிர்ப்படைபடச்சினவுவாளால்
முருக்கியகடற்படையைமுற்செலவுரைத்தான். (சo)

குன்றனையதேர்புரவி * கும்பியொடுகாவல்
வென்றிபுனைவீரர்நெடுவீதிதொறும்விம்மிப்
பின்றுமெனமுன்பிலவர்பேரவழிகாணார்
நின்றபடியேயவர்கணின்றனர்நெருக்கால். (சக)

ஒன்றியபெரும்படைகருங்கடலுடைந்த
தென்றுசொலலாகும்வகைவாயிறொறுமேகித்
துன்றியெழுதூளிபடலந்திசையைமூடித்
தென்றிசையின்மேலினிதுசென்றதுபரந்து. (சஉ)

ஒய்வில்விசையோடுகடலோலிடுகலம்போல்
மேயமதிவெண்குடைநுரைச்சுழிகள்பாய
பாய்திரையுடைப்படர்படைக்கடலினுள்ளே
போயினவிசும்புறுபொருங்கொடியபொற்றேர். (சங)

வெம்பியமனத்தனவிழித்துணைமுகக்கார்
அம்புறநிறத்தனமுழக்கெனவசைக்கும்
கம்பமுறழ்கைக்கறையடிப்பிறைமருப்பின்
கும்பிகளிருட்குவடெனக்கடிதுபோன. (சச)

கலன்கலனெனுங்கவின்விளங்குகனகத்தால்
பொலன்கொள்புனைபூண்கள்புரைதீர்குரவனேவம்
விலங்குதவிலாதவரின்மேல்வருதநாதன்
புலன்செல்வழியாகவழிபோம்பரிகள்போன. (சரு)

எடுத்த † தழை ‡ சத்திரமிடத்தவடையாளக்
கொடித்திகழ்தரக்கொலையயிற்கொலைஞர்சுற்றக்
கடற்படைசெருப்புரிகளத்தவியவொன்னார்
படச்சிலைவளைத்தவர்படைத்தலைவர்போனார். (சசா)

¶ இறந்தகருமங்கொடுவருங்கருமமெண்ணிச்
சிறந்தவரசன்கருமநாடியதுசெய்வோர்
அறந்தழுவுநெஞ்சினரசஞ்சலர்பிழைச்சொல்
மறந்துமொழியாதவர்கண்மந்திரிகள்போனார். (சஎ)

பூசுகமழ்சாந்தினர்புனைந்ததிகழ்பூணோர்
மாசறவிளங்குமணியாரமணிமார்பர்

---

* கும்பி-யானை. † தழை-பீலிக்குடை. ‡ சத்திரம்-வெள்ளைக்குடை.
¶ இறந்தகருமம்-சென்றகாலச்செயல்.

தேசுடையவில்லிதிருவேள்வியதுகாணும்
ஆசையினராய்விரைவினுடவர்நடந்தார். (சஅ)

கஞ்சமலர்விஞ்சுகவினஞ்சியமுகத்தோர்
கொஞ்சுகிளிமென்சொலியர்கொங்கைகள்சுமந்தே
வஞ்சிபுரைநுண்ணிடைவருந்தவழிகாணு
* மஞ்சர்கண்மனந்தொடரமங்கையர்கள்போனார். (சகூ)

தங்கள்விழியஞ்சியுழைதன்னினமொடோடப்
பைங்கிளிசொலஞ்சியினமோடவைபறப்ப
அங்கண்மயில்சாயலவையஞ்சியகலச்சீர்
பொங்குபுணர்பூண்முலையினார்கள்சிலர்போனார். (ருo)

மத்தளமுடுக்கைதமருங்குவரவானத்
துத்தமையுருப்பசியுமுட்குமுருவத்தோர்
சித்திரமணிச்சிவிகையோரரசசைத்த
மத்திரவிழிக்கொலைகள்செய்யுமவர்போனார். (ருக)

மண்ணின்மறுவற்றொளிர்மணிச்சிவிகைமீதே
நுண்ணிசையிலேமனநுழைந்திசையினுண்ணூல்
நண்ணினவர்தும்புருவுநாரதனுநாணப்
பண்ணிசைகலந்தவழிபாடுமவர்போனார். (ருஉ)

குண்டிகையர் † குந்துநடையோர்கள்குடையோர்கள்
தண்டினர்திரித்தகுடுமித்தலையர்சாரப்
பெண்டுகெண்டக்கைபிரமாதமெனவஞ்சிப்
புண்டரிகவள்ளலனபூசுரர்கள்போனார். (ருங)

மூலமெனவாயவொருமூன்றுதொகையாலே
காலமொடுகோணிலையறிந்துகடிதாகிச்
சால்புடையசாயைசலசாதனமதாகக்
கோலியறிசோதிடவர்கூடியவர்போனார். (ருச)

இணைக்கருவிவித்தகரிசைத்தவழிநான்கும்
குணக்கிரியையெட்டுமறிகோதறுகுணத்தோர்
அணுத்தொகைமலைச்செய்தசலத்தையணுவாக்கும்
கணக்கர்கண்மணிச்சிவிகையிற்கடிதுபோனார். (ருரு)

ஊனவுடல்கொண்டவர்களோடுவதுகண்டோர்
தேனனையவின்சொன்மடமங்கையர்சிரிப்ப

---

* மஞ்சர்-மைந்தரென்பதன்போலி ஆடவரென்றுபொருள்.

† குந்துநடையோர்-பிராணிகள் படாவண்ணம் தாண்டிக்குதித்துச் செல்லுஞ் செய்கையோர்.

ஆனைபரிதேர்வரிலகப்படுதுமென்னுக்
கூனருமருங் * குறளருங்கடிதுபோனார். (௫௬)

மண்டலமதிர்ந்திடவழங்குவழியிற்கண்
நுண்டுகெள்படச்சிகரிநூறுபடவெண்ணும்
எண்டிசைகளுங்கடகடென்னுமொலியெய்தப்
பண்டமவைபெய்தவுயர்பண்டிகள்பரந்த. (௫௭)

கரிக்கொடு † திரட்டியதெனக்கரியமெய்யர்
பெருத்தயருதட்டையறவிட்டபெருவாயர்
சுருக்கமில்சரக்கைமலையிற்பெரிதுதுற்றுப்
பரித்தவளைசிக்கமொடுபப்பரவர்போனார். (௫௮)

நன்றெனவிளங்கிடநடந்துசெலுமம்பொற்
குன்றின்மிசையேறுசிலகோலமயில்போலப்
பொன்றிகழ்மணிப்புரவிபூண்டபுனைதேர்மேல்
மன்றல்கமழ்வார்குழலினார்கள்சிலர்போனார். (௫௯)

மேகநிறவண்ணல்பெருவேள்வியதுகாணும்
ஓகைதமையுந்தவணிபூணொளிபரக்க
வேகமொடுபோகுமுகின்மின்னினமெனக் ‡ கை
நாகவெரிந்மீதுசிலநாரியர்கள்போனார். (௬௦)

தாவிநிரையேவருதடந்திரைவிளங்கும்
தூவியிளவன்னவினமென்றுவமைசொல்லக்
கூவுகுயின்மென்சொலணிகோவைநிகர்வாயார்
வாவுபரிமீதுதிகழ்மாதர்சிலர்போனார். (௬௧)

மூடுசிவிகைச்செலுமொருத்திமுகமுன்பே
வாடைகதுவித்திரையெடுப்பமழைமஞ்சின்
மாடுறவிளக்குமதியொத்தவெழின்மஞ்சு
கூடுமதியொத்ததுகுலைந்துதிரைவீழ. (௬௨)

ஒன்றுகருமங்கிடையிலொன்றொழியவொன்றே
வென்றிதிகழ்வில்லிபெருவேள்வியெழில்காணச்
சென்றகுமரர்க்குமணிதேமொழியினார்க்கும்
பின்றுறலிலாவகைவிளைந்ததுபெரும்போர். (௬௩)

வென்றவர்களோடுவர்கள்வேறொருநிலத்தே
என்றுகொளலாமெழில்கொ ¶ ளேழையர்கணம்பால்
சென்றுபகைவென்றதிறலாடவர்களேவுண்
டொன்றுமறியாதுவழிநின்றனருளைந்தே. (௬௪)

---

* குறளர்-குள்ளர். † திரட்டிய-செய்த.

‡ கைநாகவெரிந்மீது-துதிக்கையினையுடைய·யானையின்மீது.

¶ ஏழையர்-பெண்கள்.

கஞ்சமலராளனைய * காமினிகள்கண்ணால்
நெஞ்சுபறியுண்டுசிலவீரர்நெறிகாணார்
வஞ்சகமுமஞ்சமடமாதர்விழியென்னும்
வெஞ்சரமுநெஞ்சுற † வுளைந்தனர்கள்வீரர். (௬௫)

தூமதிமுகத்தியர்களாடவர்துளங்கிப்
போமதிபலத்தொடுபடைத்தலைவர்போய்நற்
கோமதிநதிக்கரையினைக்குறுகவிப்பால்
‡ மாமதிகொடெட்டரியமாயனிதுசெய்தான். (௬௬)

## வேறு.

செந்நிறநளினச்சேவடியிரண்டுஞ்செறிகழல்செறிந்திடச்சேர்த்திப்
பொன்னிறவாடைபொலிவுறச்சேர்த்திப்புனைமணிக்கச்சரைபொருத்தி
மின்னிறவுடைவாள்கச்சொடுவிசித்துவிளங்குசீருதரபந்தனத்துக்
கன்னிறச்சோதிகதிரவன்சோதிகாட்டிடக்கவின்பெறக்கட்டி. (௬௭)

அஞ்சனவரைபோலழகியமார்பத்தாரமும்பதக்கமுமணிந்து
மஞ்சணிவாகுவலயமதணிந்துமாமணிக்கடகமுஞ்சாத்திக்
கஞ்சநன்மலர்போற்கைவிரலாழிகடைச் § செறிகவினுறச்சாத்தி
வஞ்சிபோலிடையார்மாலுறக்கோலக்கழுத்தினின்மணிவடஞ்சாத்தி. ()

செந்துவர்வாயுந்தாமரைக்கண்ணும்புருவமுநெற்றியுந்திகழும்
சுந்தரவதனந்துலங்கிடவிலங்குஞ்சுடர்மணித்தோடுகள்சாத்தி
இந்திரநீலக்கற்றைறையைவிழுங்கியிரவிமண்டிலங்கருவரைமேல்
வந்துதோன்றியதுபோன்றிடத்திகழவளரொளிமணிமுடிசாத்தி. (௬௯)

திருமணிமார்பன்றன்றிருநெற்றிதிகழ்திருநாமமுஞ்சாத்தி
எரிமணிச்சோதியரியணைநின்றுமிழிந்திளையோர்கள்கைகொடுப்ப
வருமணியாரத்தவனியாண்மன்னனருள்வழிபுகுந்துபோவார்கள்
குருமணிமகுடகோடிகடேய்க்குங்கோபுரவாயிலைக்கடந்தான். (௭௦)

மத்தளமுடுக்கைபேரியொண்படகம்வளையொலிகொம்பொலிகாளம்
எத்திசைதோறுமூதொலிதாளத்தெழுமொலிதுடியொலியெங்கும்
வித்தகர்பாடும்பாட்டொலியாழின்விளையொலிசச்சரிதாளம்
ஒத்தொலியெல்லாமோரொலியாகியுவாக்கடல்கிளர்ந்தெனவோங்க. (௭௧)

மங்கையர்வாழ்த்தமாகதரேத்தமரையவராசிகள்கூறப்
பொங்கியகடலிற்புடைபரந்திரைத்துப் o பொன்னகர்ச்சனம்புடைசுற்றப்
பங்கமில்வீரன்பங்கயக்கண்ணாற்பார்த்தபார்த்திடமெலாஞ்சனங்கள்
செங்கரங்கூப்பத்தேவர்களுவப்பவேறினன்செழுமணித்திண்டேர். (௭௨)

---

* காமினிகள்-இச்சைக்கிசைந்தமாதர். † உளைந்தனர்-வருந்தினார்கள்
‡ மாமதிகொடு-சிறந்தபுத்தியினால். § செறி-ஓர் ஆபரணவிசேடம்.
o பொன்னகர்-அழகிய அயோத்தி.

## வேறு.

* கம்புவைத்தரித்தகையிற்கார்முகந்தரித்தான்வந்தான்
அம்புயக்கண்ணன்வந்தானன்பருக்கன்பன்வந்தான்
தம்பியர்க்கினியான்வந்தான்றசரதராமன்வந்தான்
உம்பருக்கமிழ்தமுன்னுளுதவியவொருவன்வந்தான். (எ௩)

மனுகுலம்விளங்கத்தோன்றிவரிசிலையிளையானோடும்
† முனியொடுபோனான்வந்தான்முப்புரமெரித்தவில்லி
தனுவினையிறுத்துச்சீதைதனைக்கரம்பிடித்தான்வந்தான்
அனையவளுடனேமீண்டுமயோத்தியிலடைந்தான்வந்தான். (எ௪)

தாயுரைதலைமேற்கொண்டுதையலையுடனேகொண்டு
தீயவெங்கானஞ்சேர்ந்த ‡ செருவலிவில்லிவந்தான்
தூயமாமுனிவன்முன்புதோன்றியதூயோன்வந்தான்
மாயமாரீசன்மாளவரிசிலைவளைத்தோன்வந்தான். (எ௫)

அனுமனையடிமைகொண்டாங்காயிரங்கதிரோன்மைந்தற்
கினியனாய்வாலிமாளவெரிசரந்துரந்தான்வந்தான்
நினைவதன்முன்னமாழிநீரெலாநெருப்பதாகக்
குனிசிலைவளைத்தான்வந்தான்கோசலைநாடன்வந்தான். (எ௬)

குன்றினாலாழிகட்டிக்கொடுந்திறற்சேனையோடு
சென்றிராக்கதரையெல்லாஞ்செருக்களத்தவியநூறித்
தன்றிறலழிந்துநின்றதசமுகன்வலிமைகண்டங்
கின்றுபோய்நாளைவாவென்றியம்பியவிறைவன்வந்தான். (எஎ)

முன்னநாஞ்சொன்னநாளின்முடுகிநாஞ்செல்லோமாயின்
வன்னியிற்பரதன்வீழுமென்றுதன்மனத்திலெண்ணி
அன்னவனெறிவிழாமலநுமனைமுன்னேயேவிப்
பொன்னகரடைந்தான்வந்தான்புவனமூன்றுடையான்வந்தான். (எ௮)

என்றுசின்னங்கடம்மிலிசைந்துடன்மாறியூதத்
தன்றுணையிலாதவென்றித்தசரதராமன்றேர்மேல்
பொன்றிகழ்மாடவீதிபுகுந்தனனென்னக்கேட்ட
வென்றிவேற்கண்ணினாற்கடாதிறம்விளம்பலுற்றேன். (எ௯)

இந்திரசாலமொக்குமிடையினாரெய்தல்பெற்றோர்க்
கிந்திரபோகமொக்குமெழின்முலைத்தடந்தேரல்குல்
$ இந்திரகோபமொக்குமிதழினாரெதிர்ப்பட்டோருக்
o கிந்திரசாபமொக்குமிருகுழையெறியுங்கண்ணார். (௮0)

---

* கம்புவை - சங்கத்தினை. † முனியோடும் - விசுவாமித்திரனுடன்
‡ செருவலி - போர்வன்மை.
$ இந்திரகோபம் - செந்நிறமுள்ள ஒருபூச்சி. பட்டுப்பூச்சியென்ப.
o இந்திரசாபம் - வானவில்.

இந்திரசாபமொக்கும்புருவத்தாரிருண்டுநெய்த்த
இந்திரநீலமொக்குங்குழலினரெழுதவொண்ணு
* இந்திரவடிவையொக்கும்வடிவினரெதிரிலாற்றல்
இந்திரதிருவற்காணவெழுந்தபேருவகைமிக்கார். (அக)

சிலம்புகள் † சிலம்பச்செம்பொற்சீறடிசிவப்பக் ‡ காஞ்சி
குலைந்திடமருங்குனோவக்குவிமுலையசையக்கூந்தல்
அலைந்திடவலம்புசோதியணிகளோடணிகடம்மின்
மலைந்திடவருந்தியோடிமங்கையர்மறுகின்மொய்த்தார். (அஉ)

§ பேதையராதியாகப் ¶ பேரிளம்பெண்களீறு
மாதர்கண்மாடந்தோறும்வாயில்கடோறுமாட
வீதிகடோறும்வீதி o வேதிகைதோறும்விம்மிக்
? காதலானதுமிக்கோங்கக்கண்ணனைத்தெரியக்கண்டார். (அங)

வண்ணமாமுகிலோமையோமரகதவடிவோவள்ளல்
ஒண்ணிறமிவையொன்றாகவுருக்கியவுருவோவென்பார்
கண்ணிணைசெவ்வாய்பாதங்கைத்தலங்கமலமென்பார்
புண்ணியஞ்செய்தாரிந்தப் ; புறக்கொடைதொழுவாரென்பார். (அச)

கள்ளமாமனக்கைகேசிகண்களாலிவனைக்கண்டும்
முள்ளழற்கானத்தேவமுயன்றனளென்னோவென்பார்
ஒள்ளழற்றூயகற்பாலுயர்ந்தகோசலையென்பாளிப்
பிள்ளையைப்பெறுதற்கென்னபெருந்தவஞ்செய்தாளென்பார். (அரு)

சிறந்தசீர்முகமுங்கண்ணும்புருவமுஞ்செய்யவாயும்
நிறைந்தபூண்மார்புமெங்கணெஞ்சுவிட்டகலாதென்பார்
அறம்புரிமனத்தளாகியருந்தவஞ்செய்துபெண்ணுப்
பிறந்திலளிவனைப்பெற்றும்பெற்றிலள்சீதையென்பார். (அசு)

பங்கயக்கண்ணற்பற்றிப்பார்த்தனனம்மையென்பார்
அங்கவை ! பொதுநோக்காகுமவனியில்வந்துதோன்றும்
செங்கயற்கருங்கட்செவ்வாய்ச்சீதையைப்பார்த்தகண்ணால்
நங்களைப்பார்க்குமோதான்ஞாலநாயகனின்றென்பார். (அஎ)

கயனெடுங்கண்ணாரிவ்வாறுரைத்திடச் [ சிலவர்காதல்
மயலுறக்கண்ணன்றன்மேல்வைத்தகண்வாங்கமாட்டார்

---

* இந்திரையெனற்பாலது-இந்திரவெனநின்றது இந்திரை-திருமகள். † சிலம்ப-முழங்க. ‡ காஞ்சி-ஒரிடையணி. § பேதையர்-எழாட்டைப்பெண்டிர். ¶ பேரிளம்பெண்-முதிரிளமாது. இவள்-முப்பானிரண்டிற்கு மேற்பட்ட வயதினள். o வேதிகை-மேடை. ? காதல்-ஆசை. ; புறக்கொடை-வெளிக்காட்டுங் காட்சி. ! பொதுநோக்கு ஒருவரையுஞ்சுட்டாதுபார்த்தல். [ சிலவரென்றது கற்பின்மகளிரை-அழகியானொருவனைக் கண்டு மயங்குமாதரைக்கற்பின்: மாதரென்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

துயலுறுமனத்தராகிவளைகலைசோரத்தங்கள்
செயலறச்சேட்டையற்றுச்சித்திரமென்னலானார். (௮௮)

கொங்கணைகுழலோர்மங்கை * கொண்டலைக்கண்டாள்காமன்
வெங்கணை † நிறத்திற்பாயமென்மயில்போலவீழ்ந்தாள்
அங்கணைபுடையோர்தாங்கியரிதினிற்கொடுபோய்மாதர்
பொங்கணைக்கிடத்திச்சீதப்புனன்முகந்தெளித்துந்தேறாள். (௮௯)

கனக்கருநிறத்தினானென்கண்வழியதனால்வந்தென்
மனத்திடைப்புகுந்தான்வந்தவழியவன்போகிற்பின்னை
எனக்கவன்பிடிக்கொடானென்றிமைக்கதவடைத்தாளேழை
நினைத்ததுமுடித்தேனென்றுநெடுநிலைமாடம்புக்காள். (௯௦)

பேதையங்கொருத்திதன்கைபெய்வளைகழலநின்றாள்
ஆதலாற்றொழுதேனென்கையணிவளைகொண்டானென்கண்
ஈதவன்கருணையான்சென்றிரந்திடத்தாரானேலென்
வாய்தலிலவனேவந்தால்வளைக்குநான் ‡ வளைப்பேனென்றாள். (௯௧)

$ புனமயிற்சாயற்பைம்பொற்பூண்முலையொருத்தியந்தச்
சனமுடைத்தெருவைவிட்டுத்தசரதராமனென்றன்
மனதிடைத்தனியேவந்துபுகுந்துநானுறங்கும்போழ்து
கனவிடைத்தோன்றுமேதான்கருத்தினைமுடிப்பேனென்றாள். (௯௨)

இவ்வண்ணமடவாரெல்லாமினவளைகலைகள்சோரச்
செய்வண்ணமறியார்தங்கள்சிந்தைமாலாகிநிற்ப
மய்வ்வண்ணமுகிறேய்மாடவளநகர்வாயினீங்கி
உய்வ்வண்ணமுலகையெல்லாமுண்டுமிழொருவன்போனான். (௯௩)

ஆனைதேர்புரவிகாலாளடியிடவிடம்பெறாத
சேனைமாகடல்தற்சூழச்சிறந்தவர்மருங்குசெல்ல
வானமுமண்ணுமெல்லாம்வளர்துகள்கதுவமன்னர்
கோனகர்நாதன்சென்றுகோமதிநதியையுற்றான். (௯௪)

### வேறு.

### இராமன் யாகசாலையை யடைந்திருத்தல்.

நாயகன்யாகசாலையினழகுநானிலமன்னவர்முதலோர்
ஆயவர்க்கெல்லாமமைந்ததோரிடமுமவரவர்க்கிட்டகாவணமும்
வாயிலுமறுகுமன்றமுங்கண்டுமகிழ்ந்தொளிதிகழுமால்வரையை
எயுமண்டபத்தினிளையவர்சூழவினிதிருந்தருளியகாலை. (௯௫)

---

* கொண்டலை - இராமனை, இஃதாகுபெயர்.
† நிறத்தில் - மார்பில்.
‡ வளைப்பேன் - தடைசெய்வேன்.
$ புனமயில் - வனத்திலுள்ளமயில்.

### வே று.
### பலதேய வேந்தர் வருகை.

காரைநெருங்குகொடையங்கர்வங்கர்கலிங்கர்காம்போசர்
வீரராயபாஞ்சாலர்விலாடரிலாடர்விறன்மிக்க
சூரர்சீனர்மகதேசர் * தோலாவென்றியாதவர்கள்
சேரசோழபாண்டியர்கள்சிந்துமன்னர்திரிகத்தர். (கசு)

காதுவைவேற்காம்பீரர்கங்கர்கொங்கர்கருநாடர்
சேதிமன்னர்குருமன்னர்சிங்களேசரவந்திகர்
சோதிமணிமாமுடிச்சனகர்துருக்கர்துளுவரெனவிவர்கள்
ஆதியாயமுடிமன்னரளவில்சேனையொடும்வந்தார். (கஎ)

தன்னில்வலியோரிலாவனலனணிலனரன்சீர்ச்சம்பாதி
என்னுமமைச்சர்புடைசூழவெதிரிலாதசேனையோடும்
மின்னுமணிமா † முடிச்சோதிவெய்யோனுதயவெயில்விரிப்ப
மன்னனிராமன்பொருவேள்விகாணவலிவீடணன்வந்தான். (கஅ)

சங்கன்குமுதன்சதவலிபோர்த்தாரன்சாம்பன்சரபன்போர்ப்
பங்கமிலாதவங்கதன்றன்சங்கன்பனசன்பாருலகில்
எங்கும்வலியேறியநீலனிடபன்கவயனெறிகடலைத்
தங்கவணைசெய்தவன்மயிந்தன்றுமிந்தன்றுசிரன்றன்மருடன். (கக)

ஊழிநெருப்புங்காற்றும்போலுடன்றுபொருகேசரியாதி
‡ பாழிமிக்கபடைத்தலைவர்பக்கஞ்சேவித்துடன்போத
எழுபத்தின்பெருவெள்ளமென்னுந்தகைவானரச்சேனை
சூழவென்றியநுமனுடன்சுக்கிரீவன்றோன்றினன். (க00)

### முனிவர் வருகை.

ஆசையற்றதூயநெஞ்சத்தாங்கீரவத்திரிமாயைக்
காசையற்றஞானக்கட்காசிபன்கோசிகன்விதனப்
பாசமற்றசமதக்கினிபரத்துவாசன்கோதமன்பூ
நேசமற்றோர்மற்றோரு $ நெடியதவத்துச்சாபாலி. (க0க)

¶ காயங்குறியநெடுந்தவத்தோன்கண்ணுவன்றௌமியன்கனலின்
தூயனுயபுலத்தியன்றன்சுவத்திதவத்தைத்துரந்தழிக்கும்
தீயபுலன்களைந்தடக்கித்தெளிந்தஞானப்பிருகுமுதல்
ஆயமாயப்பிறப்பறுத்தோரகண்டவேதங்கரைகண்டோர். (க0உ)

கய்யிற்றிகழும்பவித்திரர்கள்காதிற்றாங்குங்குண்டலத்தர்
மெய்யிற்றிகழ்ந்துதோன்றுளியர்விளங்குமரையின்மரவுரியர்

---

* தோலா - கெடாத. † முடிச்சோதிவெய்யோன் - முடியாகிய ஒளியினையுடைய சூரியன்.

‡ பாழி - வன்மை. $ நெடிய - மிகுந்த. ¶ காயங்குறிய நெடுந்தவத்தோன் - சிறியவுடலினையு நெடியதவத்தினையுமுடைய அகத்தியன்.

* பொய்யிற்புரளாநாவினர்நற்பொருளிற்செல்லுந்தியானத்தோர்
எய்விற்கரத்தோன்பெருவேள்விகாணவெழுந்தவுவகையினோர். (௧௦௩)

† சின்னூல்வழியாமறுசமயச்சிலுகில்வீழாதுலகுய்யத்
‡ தொன்னூலன்னமாயுரைத்ததூயோற்காணவச்சுருதி
நன்னூலெல்லாமுருக்கொண்டுநடந்துசெல்லுமாபோல
முன்னூறிகழுந்திருமார்பர்முனிவர்வேள்விவனம்புகுந்தார். (௧௦௪)

தேடுதனம்பூணுடைமுத $ லடங்ககொண்டுசேனையொடும்
கூடியடங்கவருதலினலந்தக்குலமன்னர்வாழும்
நாடுந்தூயநலமிக்கநைமிசாரணியமென்னும்
காடுநாடாயினதென்றற்சனத்தையாரேகணக்கிடுவார். (௧௦௫)

தொக்கமுனிவரானோரைத்தொழுதுதன்னைத்தொழுதோர்க்குத்
தக்கவுபசாரஞ்சொல்லித்தழுவித்தழுவிக்கொள்வோரை
மிக்கவுவகையொடுந்தழுவிவேந்தரொடுமாமுனிவரொடும்
ஒக்கவிருந்து ¶ வில்லியவற்குவகைசொல்லியுவந்திருப்ப. (௧௦௬)

படிமன்னியசீராமன்றாள்பணிந்துபரிதிகரந்ததென
முடிமன்னவர்க்குவிடைகொடுப்பமுன்னீஞ்சமைத்தவிடத்தவர்கள்
விடும்வண்ணஞ்செய்தெல்லோர்க்கும்வேறுவேறுசமைப்பித்த
கடிமன்னியசீரிடந்தோறுங்களிக்கவிடுவித்தானிளையோன். (௧௦௭)

## அன்னதானம்.

மூட்டுமுத்தீயந்தணர்கண்முதலாநீசர்கடையாக
ஈட்டுந்தனமார்பெருவேள்விக்கிளையோன்சமைவித்திடுமமுதம்
காட்டு o மடிசிறம்முடையகாதன்மடவாரன்பினொடும்
ஊட்டவுண்ணுமாபோலவுண்டுகளித்தாருறுசனங்கள். (௧௦௮)

வாட்டமில்லாவரையொருமாமந்தரத்தைமத்தாக
நாட்டிவெய்யவாசுகியாமாநாகத்தைநாணாகப்
பூட்டியாழிகடைந்தமிழ்தம்புகழவானோரானோரை
?? ஊட்டினாற்கிவ்வுலகுளளோர்க்கடிசிலூட்டலொருபொருளோ. (௧௦௯)

## வேறு.

பாலொடுதயிருநெய்யும்பலசுவைக்கறியுஞ்சோறும்
சாலைகடோறுமுண்டசனமெலாந்தருக்கிமிக்குக்
கோளநீள்வில்லிகோதில்குணங்களையெடுத்துக்கூறி
வேலைசூழுலகிலிந்தவேள்விபோற்காணோமென்றார். (௧௧௦)

---

* பொய்யில் - பொய்யின்வழியாக. † சின்னூல் - சாருவாகாதியரின் சிறியநூல்கள்.

‡ தொன்னூல்-வேதம். $ அடங்க-அனைத்தும். ¶ வில்லி-இராமன்
o அடிசில- அன்னம். ?? ஊட்டினார்க்கு-உண்பித்த இராமற்கு.

### அரசாதியோருக்குச் சன்மானம் அளித்தல்.

அரசருக்கமலன்பொன்னுமாடையும்பூணுநல்கி
இரவிசேய்தனக்குஞ் * சேய்க்குமிலங்கைமன்னவற்குமன்று
† பரிதிமேற்பாய்ந்தோனுக்கும்படைத்தலைவருக்கும்பைபொற்
குருமணிப்பொன்னும்பூணுமாடையுங்குகற்குமீந்தான். (கககக)

வறியவர்வேண்டிற்றெல்லாம்வழங்குவன்வள்ளலென்றுங்
கெறிபறையறைதலோடுமிரவலராஞேரெல்லாம்
பறையறையோசைகேட்டுப் ‡ பழுமரந்தன்னில்வீழும்
பறைவயுமதுவீழ்தேனிற்பலசனம்வந்துமொய்த்தார். (ககஉ)

பொன்னைவேண்டினர்க்குப்பொன்னும்பூமிவேண்டினர்க்குப்பூவும்
பன்மணிவேண்டினோர்க்குமணிகளும்பலவுமற்றும்
இன்னதுவேண்டுமென்றிங்கிரவலராஞேரெல்லாம்
சொன்னசொன்னவற்றையாங்கேதூமணிவண்ணனீந்தான். (ககங)

### வேறு.

### முனிவர்க்குத் தானமளித்தல்.

ஆசையற்றதூமனத்தினனஞ்சினனுகி
நேசமற்றுயிர்மேனியனீரிடைமூழ்கிப்
பாசிபற்றியநிறத்தினன்பல்லுயிர்க்காகக்
கூசியெய்த்தடியிடாதறக்குந்தியநடையான். (ககச)

அன்னமாமுனியண்ணலையடைந்தவனறைவான்
பொன்னும்பூமியும்பொருள்களுமெனக்கென்கொல்புகலாய்
உன்னைவேண்டுவதுண்டெனக்குடுக்கலாகுவதோர்
மன்னர்மன்னனேமரவுரிவழங்கெனவுரைத்தான். (ககரு)

கடுத்ததீவினைகடிந்தவன்கழறிடக்கேட்டுத்
தடுக்கவொண்கலாவுவகையன்றசரதராமன்
உடுக்கலாவனமரவுரியொருசகடுருட்டி
எடுத்துவிட்டவற்கினிதுரைத்திவராகவனிருப்ப. (ககசு)

ஓதவேதமோருருவுகொண்டனவெனுமொருவன்
பூதமைந்தொடுபொருந்தியவுயிரெலாந்தம்மில்
பேதமின்றியேகண்டிடும்பெருந்தவமுனிவன்
கோதினீதியான்கொடுத்தனன்கொள்கலான்கூறும். (ககஎ)

நெய்க்கும் ¶ பூவைவீநிறத்திஞேய்நீயெனக்கொள்கென்
றுய்க்கும்பல்பெருந்தனத்திஞெலொருபொருளில்லை

---

* சேய்க்கும்-அங்கதனுக்கும். † பரிதிமேற்பாய்ந்தோன்-அனுமன்.
‡ பழுமரம்-பழுத்தமரம். ¶ பூவைவீ-காயாமலர்.

வய்க்கும்போதுருளாததுவலியதூக்கினதாக்
கய்க்கு * நொய்யதோர்கமண்டலம்வேண்டுமென்றுரைத்தான். (௧௧௮)

பொருந்துமாமணிப்பொன்னினாற்றிகழ்வுறச்சமைத்துத்
திருந்துபேரெழிற்கமண்டலஞ்சீதரன்கொடுப்ப
அருந்தவன்பெரிதகமகிழ்ந்தவனொடுமினிதா
இருந்தவேலையினிருந்தவனொருவனீதியம்பும். (௧௧௯)

பன்னுசீர்த்தியாய்பாரியைத்தானதிபாலை
சொன்னவார்த்தையொன்றுண்டதுசொல்லுவென்கேட்டி
மன்னர்மன்னனைவள்ளலையிராமனைக்கண்டால்
பொன்னினம்மனைவேண்டுதியெனக்கெனப்புகன்றாள். (௧௨௦)

சோதிமாமணிதுன்றலிற்சுடர்விடுதொழில
வேதபாரகன்வியந்திடவாங்கவன்விரும்பும்
மாதராளிருகைதொறுமாறியாடிடவன்
றாதிநாயகனம்மனைவேண்டுவெளித்தான். (௧௨௧)

† மருடனைப்பெற்றமாதராள்சீறியபொழுது
கருடனைக்கண்டபாம்புபோற்கலங்குவோனவடன்
அருடனைப்பெற்றபோதறவாழ்ந்துவீற்றிருப்போன்
குருடனொப்பவக்கொடியவள்படுகுழிவீழ்ந்தோன். (௧௨௨)

தீதென்றுள்ளனவெவற்றினுஞ்சிந்தைசெல்லாதோன்
சாதுவேதியன்றன்மனைபுகுந்துதான்கொண்ட
மாதாராடனைவல்விரைந்தெய்தியான்மாதே
ஏதுவேண்டுவெனிராமனையெனவவளியம்பும். (௧௨௩)

நெஞ்சிற்றூயனாநிறைகுணத்திராமனைக்கண்டால்
அஞ்சிப்பல்லிளித்தடலையாயகலநில்லாதை
பஞ்சிப்பாழ்த்த ‡ நம்மிடிசொலிப்பலவும்வேண்டாதை
கஞ்சிக்குக்கலப்பயறுவேண்டுதிகடிதென்றாள். (௧௨௪)

என்றுகூறலுமிராமனைவேதியனெய்தி
நின்றபோதவன்வறுமையைநிமலனுநினைந்து
குன்றுபோற்றனங்கோநிரைகொடுத்திடவிவையான்
ஒன்றும்வேண்டலேன்காரணங்கேளெனவுரைக்கும். (௧௨௫)

மாரிகிட்டப்பெற்றும்பெறாவன்பயிரெனவென்
பாரிகஞ்சிக்குப்பயறுவேண்டினள்கலமொழிய

* நொய்யது-கனமற்றது. † மருடனை-மருள்தனை. அதாவதஞ்ஞான மயக்கத்தினை. ‡ நம்மிடி-நமதுவறுமை.

வீரர்வீரனேவேறொருபொருளேவேண்டுவெனேல்
சேரலாளவளென்னொடுஞ்சீறுமென்றுரைப்ப. (கஉசு)

அவாவில்வேதியனகத்தவள்கூறியவதவனைச்
சுவாவியாமறையாதுசொல்லினனிவனென்று
* தவாநெடுங்கொடைத்தசரதராமனுண்மகிழ்ந்து
† சவாசனங்களுந்தானுமேமகிழ்ந்துகொண்டாடி. (கஉஎ)

காயும்வெவ்வினைக்கலைவலோன்மனையினுள்கஞ்சிக்
காயநெல்லுநூறுயிரக்கலம்பெறவருளித்
தூயநற்பயறத்தொகைகொடுத்திடச்சொல்லி
நாயகன்றிகழ்நற்றவற்களித்திடுங்காலை. (கஉஅ)

‡ இஞ்சைபொய்ம்முதல்கடிந்ததோரிருபிறபாளன்
மஞ்சைவீசியதிறத்திஞெய்மாகதிதனக்கு
நஞ்சமாகியபொருளிலோர்நசையிலையெனக்குப்
பஞ்சகவ்வியங்கொள்ளவோர்பசுவருளென்றான். (கஉகூ)

## வேறு.

வேதநாயகனிவ்வாறுவேண்டினோர்வேண்டிற்றெல்லாம்
மாதனஞ் $ சுரபிபூமிமணிமுதல்வழங்காநின்று
போதுபோக்கிநாட்போயோராண்டையிற் ¶ புரவிமீட்டுக்
சாதுவேற்காவலாளர்கட்டியநாளில்வந்தார். (கநo)

பதியில்வாழ்பசுக்களோடுபெழுவத்துப்பசுக்கள்வேத
விதிமுறையவையும்வாரிவிளங்குநீர்க்கங்கையாதி
நதிகளிற்றீர்த்தநீருநாற்பெருங்கடலினீரும்
கதுமெனக்கொண்டுவந்தார்கால்கடியோர்களெல்லாம். (கநக)

ஏதமில் § லக்கணத்தவெழுமூன்றுசாணீளத்த
காதிரயூபமாறுங்காசிலபலாசமாறும்
வேதியர்விதியிற்சொன்னவில்லுவயூபமாறும்
தீதறுதேவதாரமிரண்டுதற்செல்லுவாறும். (கநஉ)

யூகமுவேழுமூன்றுமமைந்தனவாணிசூர்ப்பம்
சோகஞ்சோமியஞ்சுருக்குச்சுராவஞ்சூர்திகழுமான்றோல்
ஓகையாற்றகைவல்லோர்செய்கலமுதவாதியாக
யாகபாத்திரங்கள்வந்தபணித்தநன்முகூர்த்தமெய்த. (கநங)

## வேறு.

இன்னிசையீராகவற்கியாகசாலையுன்
பன்னியாங்கினிமையிற்படருழந்தபின்

---

* தவா-கெடாத. † சவா-சபை.

‡ இஞ்சை-இச்சை. $ சுரபி-பாற்பசு.

¶ புரவி-யாகக்குதிரை. § லக்கணத்த-இலக்கணத்தினையுடையன.

மின்னியநுண்ணிடைமிதிலைவல்லியாம்
பொன்னியல்பாவையும்புனைந்துசேர்த்தினர். (கருச)

மாதிரநான்கினுள்வழங்குவான்புகை
மீதெழுந்தண்டகோளகையின்வீங்குற
வேதியரருமறைவேதநூலினில்
ஒதியதருவினல்யூபநாட்டினர். (கருரு)

எழுகதிரவன்பரியென்னவெண்ணிரு
செழுபரிகொணர்ந்தபின்றேவர்யாவரும்
தொழுபரிசுலகெலாஞ்சுருங்கவோடிடக்
கொழுகனகத்திறற்குளம்புகட்டினர். (கருசு)

* நீடியபதினறுமுனிவர்நீள்கடல்
† கோடியவுலகெலாங் ‡ குறையக்கூர்மறை
பாடியபதினறுபவ'ளப்பச்சைமா
ஓடியவடிதொறுமோமம்பண்ணினர். (கருஎ)

நலங்கிளர்புவியெலாநடவிமீண்டபின்
உலங்கிளர்தோளினனுவப்ப $ யூபத்தில்
வலங்கிளர்மரகதநிறத்ததான்மணி
இலங்குளைப்பரியெலாம்யாப்புறுத்தினர். (கருஅ)

வரிந்தபைங்கழலினன்மகிழமாதவர்
தெரிந்தமந்திரத்தினைச்செவியிற்செப்பிநின்
றரிந்தனரரிந்ததாலவனிசேப்புறச்
சொரிந்தன திசையெலாந்துளைந்தசோரியே. (கருகூ)

¶ பருத்தடிதனையரிந்திட்டுப்பைம்புனக்
குருத்தழல்கொழுந்துவிட்டெரியக்கோதிலாக்
கருத்துடைமறையவர்கனிந்தகாதலால்
அருத்தினராவுதியமரர்தம்மையே. (கச௦)

### வேறு.

தேவர்கள் Ψ செல்லறீர்த்தவிராமன்முன்செய்தசெம்பொற்
பாவையைத்தனுவகத்துப்பாரியாச்சங்கற்பித்தும்
பூவையையனையதன்மைப்புரோகிதன்சடங்குகாட்டத்
தூவருந்தவர்களோடுந்தொடங்கினன்வேள்வியென்ன. (கசக)

* நீடிய - தவத்திலுயர்ந்த. † கோடிய-வளைந்த.
‡ குறைய-இடம்போதாதென்றுரைக்க.
$ யூபத்தில்-யாகப்பசுவைக்கட்டுந்தறியில். ¶ பருத்தடி-பரியஊன்.
Ψ செல்லல்-துன்பம்.

### வே று.

### வான்மீகி குசலவர்களை அழைப்பித்தல்.

இசைபுனையிராகவனியேவேள்விகள்
நசையறவேட்குமந்நாளினுண்டிறை
வசையறுமதுரவான்மீகிமன்னிய
குசலவர்வருகெனக்குறித்துக்கூறினன். (கசஉ)

### குசலவர் வான்மீகியை வணங்கிநிற்றல்.

சுந்தரத்திருநிறத்தூயவெண்ணகைச்
சிந்துரப்பவளவாய்ச்சிவந்தவாள்விழிக்
கொந்தணிகுழற்குசலவர்கள்கோதிலார்
வந்தனர்முனிவனைவணங்கிமன்னினர். (கசங)

### வான்மீகிகுசலவர்க்கு நீவிர் இராமன்கேட்க இராமாயண மிசைத்திரெனல்.

இடாறுமுனிவரனிகலிராகவன்
அடல்புனைந்தேத்தியவளவிலாதபோர்
* இடிமொழிக்காப்பியமதுரவின்னிசை
படாறுமரசவைபகர்திர்போயென்றான். (கசச)

### இராமன் முதலியோருக்குச் சீதைமக்களெனத் தெரியாமலுரைத்திரெனல்.

சந்தணியிருபுயச்சனகர்கோமகள்
மைந்தரென்றறிவுறுவகைமறைந்துநீர்
அந்தணிரிருந்துழியரசர்சேர்ந்துழிப்
† பைந்துவர்வாயினீர்பகர்திரென்றனன். (கசரு)

### வே று.

உழையிளிவிளரிதாரங்குரல்கிளைதுத்தமென்னும்
பழையனவிசைகளேழும்பான்மையிற்றெரியப்பண்ணுள்
‡ இழுமெனவிசைக்குங்கோள்களேழவை ¶ திவவுகாட்டி
மழவிடையனையநீரார்மாடகயாழ்கைக்கொண்டார். (கசசு)

கனிதருபவளச்செவ்வாய்க்காமனுஞ்சாமனுனும்
முனிவர்தம்வடிவங்கொண்டமுறைமையதாகுமென்னப்
பனிமலர்வேணிசாத்திப்பருவரையருவிபோல
இனியவெண்புரிநூன்மார்பிலிலங்கிடவலங்கரித்தார். (கசஎ)

முனிவனைவணங்கிநீங்கிமுழுமலர்ப்பன்னசாலைச்
சனகியைவிடைகொண்டிப்பாற்றருமிசை ○ வருடைபாயும்

---

* இடிமொழி - உறுதிச்சொல். † பைந்துவர் - பசியசெம்மை.
‡ இழுமென - விட்டிசைக்காத அருவியோசையையொப்ப.
¶ திவவு - வீணையின்கட்டு. ○ வருடரை - வரையாடு.

பனிமலர்ச்சோலைநீங்கிப்பலவரியுழுவைக்காகக்
கனைகுரலுழைகண்டஞ்சாக்கல்லதரத்தஞ்சேர்ந்தார். (கசஅ)

கானவரம்பைமாய்க்குங் * கல்லதரழுவநீங்கி
வானவரம்பைமாதர்மணிபயில்குறங்குபோல
வானவரம்பைநீத்துமலரயனுலகுசேரும்
கானவரம்பைசூழுங்கடிமணற்கங்கைசேர்ந்தார். (கசகூ)

பூத்தமின்கமலமீதுபொரியெரிப்பெய்தபோலக்
காத்தருபூகப்பாளைகதுமெனவுதிருங்கங்கை
ஆர்த்தனரேறியாங்கணருமறைமுனிவர்சூழ
வேத்தவையிருந்தகோலவியலெரிவேள்விசென்றார். (கருo)

வித்தகமுனிவன்பின்போமைந்தர்கள்முனிவேடத்துக்
கத்த ரிவர்களென்பார்காணுதுங்கடைக்காலென்பார்
கைத்தலந்தூயபாதங்கண்ணிணைகமலமென்பார்
இத்தலத்திவரைப்போலவெழிலுள்ளோரில்லையென்பார். (கருக)

கோடகங்கொண்டகேள்விக்கோள்களோரேழுங்கோத்த
மாடகயாழையின்றிவரிசிலையுளதேயாயின்
பாடகமலர்த்தாளன்னைபணிமொழிமறுதுபோகிக்
காடகமகிழ்ந்துமீண்ட † கண்ணனேபோல்வரென்றார். (கருஉ)

## வேறு.

வெம்பரிவேள்வியிலிருந்தவேந்தரும்
உம்பருமுனிவருமுளமகிழ்ந்திட
இம்பரினிராகவனிசைகொளின்னிசை
தும்புருநாரதர் ‡ தொலையப்பாடினார். (கருங)

மாடகயாழிடத்தேந்துமைந்தரால்
பாடியவின்னிசைப்பனுவறஞ்செவி
ஊடுறநிறைதலாலுருகுசிந்தையோ
டேடலர்தாரினற்கெடுத்துக்கூறினார். (கருச)

## வேறு.

ஓதநீர்வண்ணன்வேள்விகாணியவுவந்துவந்த
மாதவர்மன்னராதிமா o சபைமைந்தர்பாடும்
தீதறுதெய்வகானஞ்செவிமடுத்தினிதின்மாந்தி
ஈதுநாமிதற்குமுன்புகேட்டறியாததென்றார். (கருரு)

---

* கல்லதர் - மலைவழி. † கண்ணனே - இராமனே.
‡ தொலைய - தோற்க. o சபை - சபையினர் ஆகுபெயர்.

### வேறு.

அனையவர்த்தருகெனவமலனேவலும்
புனைதுகிற்போர்வையர்புலிக்கண்பார்வையர்
இனநரைமுடியினரிடிக்குஞ்சொல்லினர்
* துனைமலரடியினர்தொழுதுபோயினர். (கருசு)

ஆயசீராகவனரு † ளிப்பாடென
லாயில்காப்பாளருமகிழ்ந்துகூறலும்
ஏயெனுமாத்திரையிளையமைந்தரும்
போயவாரரசவைபுகுந்துமேவினர். (கருஎ)

குரன்முதலெழுவகைநரம்புகூட்டிய்
விரல்கவர்ந்தடுத்துளவேதர்சீரியாழ்
கரமிசைவாங்கினர்கவின்கொள் ‡ காப்பிய
உரைபயிலின்னிசையுரைப்பதாயினர். (கருஅ)

### வேறு.

$ நகவன்மாசிறகரிந்தவனன்மறைக்கிழவன்
அகவன்மாயையென்றறிநெறி ¶ நால்வருக்களித்தோன்
உகவன்மாய்த்தவருணர்வருமறையைவான்மீகி
பகவன்மாதவன்பணித்தனவண்ணமேபகர்வாம். (கருகூ)

ஞானநாயகனன்மறைநாயகனளினத்
தேனநாயகன்றிருப் Ψ பதநதிபொதிசெனியன்
ஆனநாயகனம்பிகைக்கருடிருக்கதைக்கோர்
§ சேனைநாயகனடியிணைசிறந்தநற்றுணையே. (கசுo)

நாடுகோசலநாடுமானதிபுனற்சரயு
ஆடுதிண்கொடியயோத்திமாநகரதற்கிறைவன்
தேடுவண்புகழ்த்தசரதன் o றேவியர்முதன்மை
சூடுகோசலைகைகேசிசுமித்திரையென்பார். (கசுக)

மற்றுந்தேவியரறுபதினாயிரமடவார்
சொற்றமன்னவன்சுடர்புகழ்வேள்வியைத்தொடங்கிப்
பெற்றமைந்தர்பேர்பிறங்குவேலிராகவன்பரதன்
எற்றுநீள்புயத்திலக்குவன்சத்துருக்கினனே. (கசுஉ)

அன்னமன்னவனரியணைமீதுவீற்றிருந்தான்
இன்னமாநிலம்படைப்பெனன்றவனியல்வேள்விக்

---

* துனை-விரைந்து † அருளிப்பாடு-கட்டளை. ‡ காப்பியஉரை-இராமாயணவசனம். $ நகவன்மாசிறகு-மலையின்பெரிய இறகு. ¶ நால்வருக்கு-நால்வராவார். ஸனகர்-ஸநந்த-ஸநாதன-ஸனத்குமார ரென்பார். Ψ பதநதி-கால்வழிகங்கை. § சேனைநாயகன்-விடுவசேனன்.
o தேவியர்-தேவியரில்.

குன்னன்மைந்தரிலிராமனைத்தருதியென்றுரைத்தான்
மன்னர்மன்னவன்மறுத்தனன்வசிட்டனீதுரைத்தான். (கசுங)

மறுத்தியன்றெனவுரைத்தலுமன்னர்கோன்முனியைப்
பொறுத்தியென்றவன்பொன்னடிசென்னியிற் * புனையா
உறுத்திமைந்தரையளித்தலுமுவந்துமாமுனியும்
கறுத்தசெம்மலுந்தம்பியுங்காடுசென்றடைந்தார். (கசுச)

காமன்மாறுபட்டலந்ததோர்காடுகண்டேகித்
தாமவார்குழற்றாடகைபடச்சரந்தூண்டி
ஏமமாகியபடைக்கலம்யாவையுமெய்தி
ஓமமாவவியுறைந்ததோருறையுள்சென்றுறைந்தார். (கசுரு)

வெவ்விலிச்சினவீரரைக்காக்கெனவிடுத்தே
அவ்விடத்துமாமுனிவனும்வேள்வியையமைக்க
எவ்விடத்தினுமரக்கர்வந்திடியெனவார்த்தார்
வவ்விடச்சரமாரியால்வானத்தைமறைத்தார். (கசுசு)

கண்டவீரனுமரக்கரைக்கடிந்துதாடகையாம்
சண்டவேகத்தடனையரிலொருவனைச்சரத்தால்
துண்டமாக்கிமற்றொருவனைக்கடல்புகத்துரந்தான்
மண்டுவேள்விசெய்முனிவனுமதுகண்டுமகிழ்ந்தான். (கசுஎ)

கண்டமாமறைமுனிவனுந்தம்பியுந்தானும்
கண்டல்சூழ்கரைக்கங்கையுங்கானமுங்கடந்து
பண்டைமாநிறமகலிகைபெறப்பணித்தருளி
வுண்டொடும்மதின்மிதிலைமாநகரின்மேவினரால். (கசுஅ)

சனகர்கோனைவந்தணுகலுந்தழல்புரிவேள்வி
முனிவவிங்கிவராரெனக்கருளெனமொழிந்தான்
வினையம்வேறிலைவிறல்புனைதசரதனென்பான்
தனையர்மற்றுநின்றனுவலிகாண்குறச் † சமைந்தார். (கசுகூ)

வேறு.

இந்திரவில்லெனயாருமியம்ப
வந்தநெடுஞ்சிலைவள்ளல்வளைத்தான்
அந்தரவானிலரம்பையரார்த்தார்
தந்தையுகந்திடச்சார்ந்திடுமென்றே. (கஎ0)

சனகனலந்திகழ்தசரதனுக்கோர்
துனியறுமோலையைத்தூதொடுமேவத்

---

* புனையா-செய்யாயென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

† சமைந்தார்-ஒருபட்டார்.

தனையரொடுங்கிளர் தவமுனியோடும்
வினையம்வலான்மதின் மிதிலையடைந்தான். (கஎக)

தெள்ளமிழ் தம்புரை சீதையையன்பால்
வள்ளலிராமன் மகிழ்ந்துமணந்தான்
முள்ளிலவெயிறிதழ் மூவரையும்போர்
வெள்ளிலைவேலவர் மூவரும்வேட்டார். (கஎஉ)

அந்நகர் தன்னையகன்றனரிப்பால்
மன்னுமழுப்படையான் சிலைவாங்கி
யன்னவனைத்தவமாரவிடுத்தே
பொன்னணிமாடவயோத்திபுகுந்தார். (கஎங)

அரியணைமீதிலிருந்தரசாளும்
வரிகழன்மன்னன்வசிட்டனைநோக்கா
உரியதவம்புரிவேனென்மகற்கே
விரிகதிர்மோலிமிலைச்சுமினென்றான். (கஎச)

அன்னதுகூனியறிந்தனள்சொல்லக்
கன்னன்மொழிக்குயில்கைகசிகேட்டே
மன்னவநீமுனளித்தவரத்தால்
என்மகனுக்கரசீந்தருளென்றாள். (கஎரு)

வடிவுடைமன்னன்மயங்கினன்வீழ்ந்தும்
இடுகழல்வீரவிராகவவின்றே
* நெடில்படுகானகநீபுகுகென்றே
கொடியவள்சீரைகொடுத்தனளன்றே. (கஎசு)

மலர்க்குழலாளொடும்வார்சிலைவன்கை
இலக்குவனோடுமிராகவனன்றே
அலக்கணுறுமலயோத்திகடந்தே
நலக்குறுகங்கைநறுங்கரைநண்ணி. (கஎஎ)

அங்கணிருங்குகனம்பிவிடப்போய்க்
கங்கைகடந்துறுகங்குலினங்கோர்
சங்கையின்மாமுனிசாலையினண்ணிக்
† கொங்கலர்சித்திரகூடமடைந்தான். (கஎஅ)

சித்திரகூடமடைந்திடுசெய்தி
அத்தனறிந்திவணுருயிர்விட்டான்
வித்தகமாமுனிமெய்ப்பரதற்கே
உய்த்தனனோலையுணர்ந்தனன்வந்தான். (கஎகூ)

---

* நெடில் - மூங்கில்.
† கொங்கலர் - கோங்கலர்களையுடைய.

### வேறு.

மன்னனுக்குமகனுக்குமுற்றவா
றன்னைகூறவறிந்துமனந்தளர்ந்
தென்னபாவிசெய்தாயென்றிரங்கினான் (க௮0)
தன்னைமாமுனிதான்வந்துதேற்றினான்.

இன்னதந்தைக்கிங் * கீமக்கடன்செய்த
பின்னைமாமுடிசூடெனப்பேசிடப்
பன்னுமாலைப்பரதனிராகவன் (க௮க)
தன்னைநாலைத்தருவெனென்றோதியே.

சடையும் † வற்கலையுந்தரித்தாங்கிரு
புடையுந்தாயருமன்னரும்போதர
இடையகங்கைக்குகனொடுமேறிப்போய்க் (க௮௨)
கொடிகொள்சித்திரகூடஞ்சென்றெய்தினான்.

வையமாளுடையானைவணங்கிப்பின்
ஐயன்வானமடைந்ததுகூறிட
ஐயகோவென்றரற்றியிராகவன் (க௮௩)
கையினாலக்கடன்கழித்தானரோ.

ஆதிமாமுடிசூடென்றடிதொழப்
போதியேழிரண்டாண்டுபொறுத்தியென்
றோதமின்றியிராகவன்கூறலும் (க௮௪)
பாதுகங்கொடவனும்படர்ந்தனன்.

விடங்கொள்வேற்கைவிராதனைவீட்டிப்போய்த்
தடங்கொள்வீடுசரபங்கனுக்களித்
தடங்கவா ‡ வமகத்தியன்றந்தபின் (க௮௫)
இடங்கொள்பஞ்சவடியிற்சென்றெய்தினான்.

மங்கைசூர்ப்பநகைப்பெயர்மாதராள்
கொங்கைநாசிகுழையொடரிந்தபின்
அங்கையாற்றன்வயிறலைத்தாவெனக் (க௮௬)
கங்குல்வாழ்க்கைக்கரனுக்குரைசெய்தாள்.

கரனுந்தூடணனுங்கவினப்பரித்
திரிசிராவுஞ்சினப்படையீட்டமும்
வரனிராமன்கைமாண்டதெல்லாங்கடி (க௮௭)
துரைசெய்தாள்சென்றிராவணற்கோடியே.

---

* ஈமக்கடன் - அந்தியேட்டி
† வற்கலை - மரவரி
‡ ஆவம்-அம்புகூடு

சீதைமற்றவன்றேவியைக்கொண்டியான்
போதலுற்றுழிப்புக்கதிதென்றலும்
காதலுற்றவட்காண்குறுமாசையான்
* மாதுலற்கொருமாற்றஞ்சென்றோதினன். (கஅஅ)

மறுத்துணர்த்திடமாமன்மாரீசனும்
வெறுத்துரைத்தனன்வெஞ்சொலிராவணன்
பொறுத்திநீயெனப்பொன்னிளநவ்வியாய்
நிறுத்தசீதைநிலேயிற்சென்றெய்தினன். (கஅகூ)

கண்டுசீதைகவர்ந்ததுதாவென
† அண்டர்கோனுமதன்பின்னரேகியே
கொண்டமாயையறிந்துகொலேசெய்தான்
ஒண்டொடீஇயிளேயோயென்றுலேந்ததே. (ககூ0)

அன்னமன்னவளவ்வுரைகேட்டலும்
தன்னநாயகன்றம்பியையேவினள்
பன்னசாலேயிற்பார்ப்பனவேடமாய்
‡ இன்னல்செய்யவிராவணனெய்தினன். (ககூக)

¶ மானமீதுமடந்தையைக்கொண்டனன்
போனபோதுபுகுந்தசடாயுவை
ஈனமாக்கித்தானேறியதேர்விடா
மீனவேலேயிலங்கையைமேவினன். (ககூஉ)

மன்னனிராகவன்றம்பியைவந்தவா
றென்னேயென்னவியன்றதுரைசெய்தான்
பன்னசாலேயிற்பாவையைநாடிப்போய்
முன்னர்வீழ்ந்தசடாயுவைமுன்னினர். (ககூங)

## வேறு.

இறந்தவெருவைக்கரசையீமவெரியேற்றி
முறஞ்செவியயோமுகியைமூக்கிலேயரிந்து
மறந்தருகவந்தலேயும்வானினிடைவைத்திட்
டறந்திகழ்தருஞ்சவரியாச்சிரமமுற்றூர். (ககூச)

மிக்கசவரிக்கினியவீடருளிவிட்டுப்
பக்கமதுமிக்கமலர்ப்பம்பையதுகண்ணுற்
றக்கணமகன்றநுமனுமெனவுரைப்பச்
சுக்கிரிபனேத்துணேயெனத்தொடர்வுகொண்டான். (ககூரு)

---

* மாதுலன்-மாமன். † அண்டர்கோனும்-தேவர்தலேவனுகிய இராமனும். ‡ இன்னல்செய்ய-துன்புறுத்த. ¶ மானம்-விமானம்.

மந்தரமெனத்திகழ்மராமரமதெய்தே
துந்துபிகளேபரமதைச்சுவடுறுத்தி
இந்திரன்மகற்கிமயலோகமருளித்தன்
அந்தமுடைவாளவன்மகன்பெறவளித்தான். (௧௯௬)

சுக்கிரிபனுக்குரியதொன்முடிகவித்தே
மிக்கதிறல்வானரர்கண்மேவவருவித்தே
கக்குமுகின்மிக்கமழைக்காலமதகன்றால்
இக்கண்வருவாயெனவிராகவன்விடுத்தான். (௧௯௭)

சுந்தரனுமத்துணைதுயர்க்கடலுள்ளாழ்ந்தான்
இந்திரன்மகற்குரியதெய்தினனிருந்தான்
வந்திலனருக்கன்மகன்மாரிகழிவுற்றும்
தந்தனையெனக்கடிதுதம்பியைவிடுத்தான். (௧௯௮)

மற்றவனழைத்தருளமாருதியுமேனைக்
கொற்றவனும்வந்தனரிராமனடிகூடி
* எற்றதுசெயக்கடவதென்றனரிருந்தார்
முற்றிழையைநாடவிடுமென்றிறைமொழிந்தான். (௧௯௯)

அன்றநுமனங்கதனறிந்தருள்செய்சாம்பன்
என்றவர்கடம்முடனிரண்டுகவிவெள்ளம்
சென்றனர்கடென்றிசையினிற்கடிதுசில்லோர்
† பொன்றலில்பிலத்திடைபுகுந்தனர்பெயர்ந்தார். (௨௦௦)

வே று.

குன்றமுநதிகளுங்குழைந்தகானமும்
தென்றிசையெங்கணுந்தேடிக்காண்கிலர்
இன்றுயிர்விடுவதேநன்றென்றியாவரும்
மன்றல்சேர்மகேந்திரவரையைமேவினர். (௨௦௧)

இறைவியாண்டிருந்தவாறெருவைவேந்தனும்
முறைமையால்வந்தவாமொழியக்கேட்டபின்
அறைகழலநுமனுமரக்கிவாய்பிளந்
தெறிகடல்கடந்துபோயிலங்கையெய்தினன். (௨௦௨)

எரிவிழி ‡ யிலங்கைமாதேவிதான்கெடக்
கருநிறவரக்கர்தங்கனகமாளிகைத்
தெரிவையையெங்கணுந்தேடிக்காண்கிலான்
அரிமலர்ச்சோலைகண்டாழிகாட்டினன். (௨௦௩)

---

* எற்றது-என்னையது. † பொன்றலில்-கெடாத.
‡ இலங்கைமாதேவி-இலங்கணி.

மானவனறிந்தருண்மதுரமாமணி
சானகியளித்தனள்விடையுந்தந்தபின்
யாணிவண்வந்துவீணேகறீதெனப்
போனமாமாருதிபொழிலைவாட்டினான். (௨௦௪)

காட்டொருவானரங் * கடிகொள்சேனையை
வாட்டினதென்றுகாவலர்சென்றோதலும்
கேட்டனன்றசமுகன்கிளர்ந்தசேனையை
மூட்டினனதரெதிரநுமன்முன்னினான். (௨௦௫)

வேறு.

தொக்கரக்கரைத்துரந்துதோரணத்திருந்துபோய்
அக்கனைத்தரைப்படுத்தரைத்திரத்தமிக்கெழத்
தக்கசம்புமாலியைத்தரைப்படுத்திவெற்றிசேர்
பக்கநின்றபஞ்சசேனைமன்னரைப்படுத்தினான். (௨௦௬)

மேகநாதன்வந்தெதிர்த்துவேதநான்முகன்றரும்
நாகபாசம்வீசிஞானநாதனைக்கொணர்ந்துதம்
ஓகைவாளிராவணற்குரைத்தலும்முருத்தெழா
ஏகவாலினங்கியிட்டெரித்தியென்றியம்பினான். (௨௦௭)

வாலின்வைத்ததீயைமாடமாளிகைக்கண்வைத்தபின்
சாலவந்துசீதையைப்பணிந்துசாகரந்தனைக்
காலினேகிவந்துதங்கவிக்குலத்துவீரராம்
வேலைசூழவேலிராமன்விட்டசோலைகிட்டினான். (௨௦௮)

† மன்றலோதிதந்தகோலமணியைநல்கிமாருதி
நின்றுவாசகங்கள்கூறநீடுவேலிராமனும்
‡ என்றின்மைந்தவிப்பதாதியெழுகவென்றெழுந்தபின்
தென்றிசைக்கருங்கடற்றிரைப்புறத்துமேவினார். (௨௦௯)

வேறு.

கடற்கரையிறுத்தனன்கவியின்சேனையோ
டடற்படையிராகவனரக்கனேவலால்
மடற்கமலத்தயன்மயனுந்தானுமாய்ப்
படைத்தனனிலங்கையைப்பண்டுபோலவே. (௨௧௦)

மேலுயர்மண்டபத்திருந்துவெய்யவன்
தோலியல்குரங்கிவ்வூர்ச்சுட்டதாவென
மாலியவான்முதலரக்கர்வல்லென
ஓலுயர்கடலெனவுளையக்கூவினார். (௨௧௧)

---

* கடிகொள் - காவல்காக்கின்ற.

† மன்றலோதி - மணம்பொருந்திய கூந்தலினையுடையாள்.

‡ என்றின்மைந்த - சூரியகுமாரனான சுக்கிரீவ.

வேறு.

மைந்தனிந்திரசித்துமவுலியான்
தந்தைதன்னொடுகூறத்தடுத்தெதிர்
தந்தபோதவர்தங்கட் * கயில்படு
வெந்தபுண்ணென வீடணன்கூறுவான். (உகஉ)

வேறு.

இரணியனென்பவன்யாவர்தம்மினும்
முரணியனவ † னிவன்முனியமாய்ந்தனன்
அரணியநெஞ்சினனவன்றன்றேவியாம்
தரணியின்றுயைவிட்டருளறக்கதால். (உகங)

என்றலுமிராவணனெரியுஞ்சிந்தையான்
நின்றனையேனினை ‡ யடுவலீங்கெனத்
தன்றுணைநால்வருந்தானும்வீடணன்
வென்றிகொளிராகவன்சரணமேவினன். (உகச)

கடலுடையிலங்கையி $ னரணுங்காவலன்
உடையநீள்வரங்களுமைந்த ¶ ரூற்றமும்
படையினதீட்டமும்பகர்திநீயென
அடையவாளிராமனுக்கரக்கன்கூறினன். (உகரு)

வேண்டினனொருவழிவேலைவேந்தனை
ஈண்டியவிலங்கைக்கன்றெய்தலின்மையால்
தூண்டினன்சுடுசரம்வருணன்றோன்றிவந்
தாண்டகையிராகவனடியின்வீழ்ந்தனன். (உகள)

ஆனபேர்வேலையையடைத்தபின்புயர்
o மானவர்தலைவனும்வானரேசனும்
கோனகரின்புறக்குன்றிறுத்தபின்
ஊனமிலிராவணனொற்றர்மேவினர். (உகள)

பற்றினர்சாரணசுகரைப்பன்முறை
சொற்றனர்கண்டவத்தூயமானவன்
விற்றொழில்வீடணற்சரசுவிட்டதும்
கொற்றவற்குரைக்கெனக்கூறிப்போக்கினன். (உகஅ)

வேறு.

சேதுபந்தமும்வீடணன்செய்தியும்
தூதுசென்றவர்சொல்லத்தசமுகன்

---

* அயில்படு - வேல்பட்ட. † இவன் - இவ்விராமனாகிய நரசிங்கன்.
‡ அடுவல் - கொல்வேன். $ அரணும் - மதிலும்.
¶ ஊற்றமும் - வன்மையும். o மானவர்தலைவன் - இராமன்.

ஓதும்வெவ்வுரையோதினனப்பொழு
தேதமின்றியெழுந்த * திரவியே. (உககூ)

வேறு.

இலங்கைவேந்தனுமிராமனுமெரிபடைகாண்பான்
† இலங்கைமாளிகைத்தலையினுமலையினுமேற
இலங்கையான்மணிமுடிபறித்திரவிசேயகன்றான்
இலங்கைவேந்தனுமிராமனுமிருக்கைசென்றடைந்தார். (உஉ0)

நாலுவாயிலுநரரும்வானரருமேநண்ணி
‡ ஓலவேலையினுருத்தனரெனச்சிலருரைத்தார்
ஆலகாலவேலரக்கனும்படைவகுத்தமைந்தான்
வேலிராகவனங்கதற்றாதெனவிட்டான். (உஉக)

சீதையென்னுமத்திருவைவிட்டுன்சிரம்பெறுகென்
றோதிவிட்டனனிராமனென்றங்கதனுரைத்தான்
போதிபோதியென்றிராவணன்புகறலுமிராமன்
பாதபங்கயம்பணிந்தனனெழுந்ததுபதாதி. (உஉஉ)

அரக்கரைம்பதுவெள்ளமுமனிகமுமுடையக்
குரக்குவேந்தனுமநுமனுநீலனுங் $ குரைத்தார்
அரக்கனவ்வுரைகேட்டுவந்தடர்த்தலுமநுமன்
குரக்குவேந்தர்மற்றவரவன்சரம்படக்குலைந்தார். (உஉங)

இளையவீரனுமிராவணனீரைந்துசிலையும்
உளையவெய்தன ¶ னுடம்பிடியவனுரத்துய்த்தே
வளையும்வாளெயிற்றிராவணன்வவ்வுவான்செல்ல
இளையவீரனைமாருதியெடுத்துக்கொண்டகன்றான். (உஉச)

ஆளியாயிரம்பூண்டதேரரக்கன்வந்தடர்த்தான்
காளைமாருதிதோளின்மேலிராமனுங்கடந்தான்
மூளும்வார்சிலைபத்துடன்முடிபத்துமொழித்து
நாளைவாபொரவென்றனனகர்சென்றுபுக்கான். (உஉரு)

மூலத்தானையைத்தருகெனத்தூதரை Ψ முடுக்கிக்
கோலப் § பள்ளியிற்குறுகலுங் 0 குரவன்வந்தணுகிச்
சாலச்சாம்பினைமுன்னமேசாற்றினெனென்றான்
மாலைத்திண்புயமகோதரன்மறுத்திதுசொன்னான். (உஉசு)

கும்பகன்னனையழைக்கெனத்தூதருங்கொணர்ந்தார்
எம்பிபோரினையியற்றுதிமனிதரோடென்றான்

---

* இரவி-சூரியன். † இலங்கை-விளங்குகின்ற அழகிய. ‡ ஓலவேலை ஆரவாரமுள்ளகடல். $ குரைத்தார்-ஆரவாரித்தனர். ¶ உடம்பிடி-வேல். Ψ முடுக்கி-விரைந்தோட்டி. § பள்ளியில்-படுக்கையில். 0· குரவன்-பாட்டனை மாலியவான்.

* வெம்புபோர்க்களம்புகுந்தனன்வினவினனிராமன்
தம்பிநாணிவற்றருகென்றான்றசமுகற்கிளையான். (உஉஎ)

வியந்துவீடணனழைத்தலும்வெய்யவன்மறுத்து
† வயந்தனைப்பிசைந்தருக்கன்மாமகனைக்கொண்டகன்றான்
இயைந்தநாசிகொண்டிரவிசேயகன்றனனிராமன்
உயர்ந்தொரம்பினாலவன்றலையுவரியிலிட்டான். (உஉஅ)

அப்புறத்தினின் ‡ மருத்தனைச்சனகர்கோனாக்கிக்
குப்புறத்தினன்மகோதரன்சீதையுங்குலைந்தாள்
எப்புறத்தினுமிராவணன்செவியெலாங்கேட்க
இப்புறத்தினின்றார்த்ததங்கிராவணன்சேனை. (உஉகூ)

வேறு.

கும்பகன்னன் $ குறைந்தமைகூறிடத்
தம்பியோவென்றரற்றித்தசமுகன்
அம்பொற்றேரதிகாயனையேவினான்
எம்பிராற்கிளையோனெதிர்தாக்கினான். (உ௩௦)

வேறு

எதிரெதிர்தாக்கினவிரண்டுசேனையும்
கதுமெனவிராகவற்கிளையகாவலன்
¶ அதிர்கழல்புனையதிகாயன்றன்னையோர்
சதுமுகன்சரத்தினாற்றலையைத்தள்ளினான். (உ௩க)

வேறு.

குரக்குவேந்தர்கள்குன்றுகொண்டேவலும்
அரக்கன்மைந்தரனைவருமாண்டனர்
பரக்கவன்கொலைப்பாடுகண்டார்சிலர்
இரக்கமெய்தியிராவணற்கோதினார். (உ௩உ)

அரக்கனவ்வுரைகேட்டலுமங்ஙனே
இரக்கமுற்றிந்திரசித்தையேவினான்
குரக்குவேலையைக்கொன்றனன்கொன்றபின்
தரைக்குநாயகன்றம்பியையெய்தினான். (உ௩௩)

வேறு

எரமுங்கவிலக்குவன்மேனிமேல்
கூரமுங்கநெடுஞ்சரங்கூட்டினான்

---

* வெம்புபோர்க்களம்-கோபந்ததும்புகின்ற சமர்க்களம்.
† வயந்தன்-வசந்தனென்னு மொருவானரவீரன்.
‡ மருத்தன்-ஒரு அரக்கன்.
$ இறைந்தமை-குறைந்தமை.
¶ அதிர்-முழங்குகின்ற.

தேரழிந்துதசமுகன்றிண்மகன்
போரழிந்துவிசும்பிடைப்போயினான். (உருச)

வேறு.

இடந்தருமிராகவற்கிளவலைக்கவித்
தடம்புனையெழுபதுவெள்ளத்தானையை
அடங்கலுமரக்கன்மாமதலையல்லிடை
விடந்தருநாகபாசத்தின்வீக்கினான். (உருரு)

போயினனரக்கனும்புரண்டுவானரர்
கூயினரிராகவற்கனலன்கூறிட
மேயினன்வருந்தினன்விகங்கராசனும்
பாயினனுகரனைப்படுத்திப்போயினான். (உருசு)

சென்றதூதுவர்சொலத்தெசமுகத்தவன்
தன்றருபெரும்படைத்தலைவர்க்கூயினான்
நின்றிலர்கொன்றனர்நிசிதர்தங்களைக்
கொன்றனர்வானரத்தலைவர்குன்றினால். (உருஎ)

வேறு.

உரையதுகேட்டுமைந்தர்க்குரைத்தலுமரக்கர்கோமான்
கரன்மகன்மகரக்கண்ணன்செல்கெனக்காற்றினம்பும்
வருணன்றனம்புங்கூட்டிமாயையாவிட்டான்மாயன்
பொருசரமொன்றாற்சென்னிபோக்கினான்மாயையோடும். (உருஅ)

இற்றனவரக்கர்தானையிருபதுவெள்ளத்தோடும்
* செற்றவாளரக்கன்கேட்டான்மைந்தனைச்சேறியென்றான்
மற்றவன்றேரிலேறிவானரப்படையைச்சீறி
எற்றுவவனினியென்றெண்ணியிலக்குவன்றன்னோடேற்றான். (உருகூ)

அறுபதுவெள்ளத்தானையாயிரந்தேரினோடும்
வெறுவதுசெய்வக்கண்டுமயன்படைவிடுவேனென்றும்
உறுவலியரக்கன்வானத்தொளித்ததையோரான்றம்பி
எறிபடைபூசைசெய்வானெழுந்தனனிராமனிப்பால். (உசo)

வேறு.

உரைத்தனனிராவணியிராவணிற்குற்றவாறெல்லாம்
வரைப்புயமகோதரன்வருகவென்றேவினன்வலத்தால்
குரைத்தெழும்வானரக்குழுவைவென்றிலக்குவன்சரத்தால்
† பொருக்கெனவெழுந்தனனந்தரவிசும்பிடைப்போனான். (உசக)

---

* சொற்றவாளரக்கன் - சீற்றத்தினையுடைய.
† பொருக்கென - விரைவாக.

முட்டினமகோதரன்முனிவருமமரர்களாகச்
சிட்டனீதென்னைகொலென்றுளந்திகைத்தனனின்றான்
விட்டனனயன்படையிராவணியிலக்குவன்மீதே
பட்டனன்பட்டவாறிராவணற்குவகையிற்பகர்ந்தான். (உசஉ)

ஏய்ந்தெழிலிராகவனிலக்குவன் * பாடுகண்டேங்கிச்
சாய்ந்தனன்சாம்புவன்மாருதிதருதியாலென்னப்
பாய்ந்தனன்மருந்துகொண்டமரிடையயனதுபடையால்
ஒய்ந்தவர்யாவருமுயிர்த்தனர்தூதர்போயுரைத்தார். (உசங)

### வேறு.

யாவதிங்குநாஞ்செய்வதென்றியம்பலுமைந்தன்
ஆவதுண்டெனவரக்கனுமதுசெயென்றடைந்தான்
தேவிசீதையாச்சமைத்தபின்னநுமன்முன்சிதைத்துப்
போவனுனயோத்தியிலெனநிகும்பலைபுக்கான். (உசச)

ஆயவாறெலாமநுமன்வந்திராகவற்கறைய
மாயையேயெனவீடணன்வலிக்கின்றதென்றான்
ஏயகாரியஞ்செய்திரென்றெழுந்தனனெம்மான்
போயொர்மாயையால்வீடணனிலங்கையிற்புக்கான். (உசரு)

ஆனமாயைகண்டறிந்துவந்தரக்கர்கோனுரைப்ப
வானரேசனுமிளவலும்வடதருநீழல்
சேனைசூழ்தரநிகும்பலைவேள்வியைச்சிதைத்தே
போனபோதெதிரிந்திரசித்தமர்புரிந்தான். (உசசு)

† கறுத்திராவணிவிடுங்கணையெலாம்விடுகணையால்
இறுத்தொரம்பினுற்கையுடன்வில்விழவெய்தான்
குறித்தொர்சூலத்தாலிலக்குவனுயிர்கொளக்கொதித்தான்
அறுத்தொரம்பினலவன்றலைகொண்டனனகன்றான். (உசஎ)

அடுத்துரைத்தனர்தூதுவரரக்கர்கோன்களப்புக்
கெடுத்திரங்கினன்மதலைதன்றலையிலாயாக்கை
படுத்தனன்றயிலத்திடைமூலமாப்படையும்
விடுத்துவந்தடிபணிந்தனராயிரவெள்ளம். (உசஅ)

மூலத்தானையைரிராமன்மேன்முடுகித்தான்குரக்குக்
கூலத்தானைமேற்சென்றனனிராவணக்கொடியோன்
மூலத்தானைசென்றிராமனைமுடுக்கலுங்குரக்குக்
கூலத்தானைபோயிரிந்தனகுரைகடற்கப்பால். (உசகூ)

வேர்த்திருந்தவக்கவியெலாமங்கதன்மீட்பக்
காத்திநீயெனத்தம்பியைக்காவலாவிடுத்தே

---

* பாடுகண்டு - மரணத்தினைப் பார்த்து.

† கறுத்து - கோபித்து.

ஆர்த்தவெம்படையாயிரவெள்ளமுமடியக்
கோத்தவம்பினாலேழரைநாழிகைகுரைத்தான். (௨௫௦)

அத்தனசிலையிளவலோடரக்கர்கோனடர
* வித்தினன்சரம்பலப்பலவிளவலும்விட்டான்
எத்தினன்னெடுமோகமாப்படைதொடுத்தெய்தான்
அத்தனச்சரமாழியான்சரத்தினாலட்டான். (௨௫௧)

அறிந்துகூறினன்வீடணனாமெனவயில்வேல்
எறிந்தனனனவன்மேனியிலிலக்குவனேற்றான்
பிறிந்துபோயினனிராவணன்மாருதிபெயர்த்தும்
செறிந்தமாமருந்தழைத்தலினுயிர்பெற்றான்சேயோன். (௨௫௨)

சென்றுகூடினனிராமனைத்தெசமுகத்தவனும்
வென்றிமூலமாத்தானைக்கவிருந்திடவமைந்தான்
பொன்றினாரவரென்பதுதூதுவர்புகலக்
கன்றினான்களம்புக்கனன்கவியெலாமவிய. (௨௫௩)

வேறு.

† பூதலமளித்தோன்கூறப்புரந்தான்கொடுத்ததிண்டேர்
மாதலகொணரவேறிமகிழ்ந்தனனிராமனென்று
காதினவரக்கர்சேனைகவிப்பெருஞ்சேனையான்ம
கோதரன்றன்னையாவிகுறைத்தனன்பகழியொன்றால். (௨௫௪)

அந்தரத்தரக்கன்போகவமலன்றேரணுகவிட்டான்
மந்திரமாயையெய்யஞானத்தால்வள்ளன்மாய்த்தான்
உந்தினசூலமொன்றையுகுத்தனனுங்காரத்தால்
கந்தரத்தலைகள்பத்துங்கரங்களுங்கணையாற்கொய்தான். (௨௫௫)

கிளைத்தனசிரமுந்தோளுங்கேடிலானெய்யவெய்ய
விளைத்ததோர்வரமுண்டென்ன ‡ விரிஞ்சன்மாப்படையைவிட்டான்
உளைத்தவன்றலத்துவீழ்ந்தானுடன்பிறப்பென்னுமன்பால்
இளைத்துவந்தடியில்வீழ்ந்தானிராவணற்கிளையகாளை. (௨௫௬)

¶ மயன்மகள்வந்துமாய்ந்தாள்வருகெனநிருதர்க்கூவிப்
புயவலியிராமவேந்தைப்போற்றுதிரெனவிராமன்
இயமலியீமஞ்சேர்த்தியென்றலுமரக்கன்சேர்த்தான்
செயமலியநுமன்றன்னைச்சீதைபாற்சேறியென்றான். (௨௫௭)

சென்றனனநுமனோடுவீடணன்சீதைதன்பால்
நின்றவ னிகழ்ந்தவாறுநிரப்பிமஞ்சன்நீராட்டி

---

* வித்தினன்-இறைத்தான்.

† பூதலமளித்தோன்-பிரமதேவன்.

‡ விரிஞ்சன்-பிரமதேவன்.

¶ மயன்மகள்-மண்டோதரி.

ஒன்றியகலன்கள்பூட்டியுய்த்தனனிராமனோக்கி
நன்றுநீசெய்ததென்னநடுங்கினளெரிபுக்குய்ந்தாள். (உருஅ)

ஏறிடவிமானந்தன்னில்யாவருமிறைவிதானும்
மாறினவசந்தன்சேனைநின்றதுமலரவன்பால்
கூறினனநுமன்வாங்கிக்கொண்டபின்குரிசிறானும்
ஆறியபரத்துவாசனணிமலர்ச்சோலைபுக்கான். (உருகூ)

வரதனுமநுமன்றன்னைவரன்முறையேவலோடும்
பரதனையெரிபுகாமற்பண்ணினாமீண்டபின்னர்
எரிமணிவிமானத்தேறியாவருமிளையகோவும்
அரிமலர்க்குழலினாளுமிராமனுமயோத்திசேர்ந்தார். (உசுo)

## வேறு.

பொன்னியல்சீதைதன்புதல்வர்பாடிய
இன்னிசைமருவியவியல்கொள்காப்பியம்
தன்னிசையாதலாற்றரளவெண்குடை
மன்னவன்மைந்தரைமகிழ்ந்துகூறுவான். (உசுக)

வயம்புனையிராமன்மைந்தர்தம்மையம்
புயந்திகழ்விழிமலர்புனைந்துநோக்கியிப்
பயன்கெழுகாப்பியப்பனுவலின்னிசை
இயம்பினரியாவர்நீர்யாவரென்றனன். (உசுஉ)

நும்பெரும்புகழினை * நுனித்துக்கூறினான்
வம்புயர்கங்கைவான்மீகியம்முனி
தம்பமென்றவனுரைதலையிற்கொண்டுளேம்
எம்பெயர்குசலவரென்றுகூறினார். (உசுங)

நீடியதன்னுருநிகர்க்குமோரிரண்
டாடியபாவையனாருக்கங்ஙனே
பாடியபனுவலாற்பத்தின்மேலுமென்
கோடிசெம்பசும்பொனேனென்றனன். (உசுச)

## வேறு.

மன்னவர்வலிதின்வௌவாவளமனைக்கள்ளர்கொள்ளா
இன்னுயிர்க்கிதுதிசெய்யாவிழந்தபினிரங்கல்வேண்டா
துன்னியதுயிலையொட்டாதோகையர்காதல்கூட்டா
உன்னியபொருளதீட்டாமுடைமையினின்மைநன்றால். (உசுரு)

---

* நுனித்து-சிறப்புற எடுத்து.

பூரியர் தமைவேந்தர்க்கும்புவிபுரப்பிக்குந்துய்க்கும்
சீரியவுண்டிசேர்க்குந்தேவர் தம்முலகம்போக்கும்
காரியமனைத்துங்கூட்டுங்கருதலர் தம்மைவாட்டும்
கூரியதிதன்மேலில்லைகொழும்பொனீர்கொண்மினென்ருர். (உசுசு)

* மூலமுஞ † சாகந்தானும்பலங்களுமுவந்துகொள்ளும்
மாலையமுனிவரோடவ்வனத்துறைவோமதாஞல்
காலைநீரருளுகின்றகாஞ்சனங்காஞ்சிரங்காய்
போலுமதெங்கட்கென்றுபுகன்றனர்புதல்வர்தாமே. (உசுஎ)

குருதிவேற்ருனைவேந்தன்குசலவர் தம்மைநோக்கி
வருதிரோவெம்பாலின்னுமைந்தர்நீரென்றுகூறப்
பருதிவேற்றடக்கைவேந்தேபாடுதுநாளும்வந்தென்
றரிமலர்த்தாரிஞனையகன்றுமாமைந்தர்போனூர். (உசுஅ)

பன்னிமபனுவலின்சொற்குசலவர்பாடுகின்ற
இன்னிசைகேட்டுநாளுமியல்புளியொருநாளந்தப்
பொன்னியற்சனகிபெற்றபுதல்வரென்றறிந்துவாங்கித்
தன்னிகர்புதல்வர் தம்மைத்தழுவினனெழுவுத்தோளான். (உசுக)

மருந்தெனத்திகழுமின்சொன்மைதிலிகற்புக்கந்த
அருந்ததிகற்புநாணுமறந்தலையறிவனேனும்
இருந்தழலதனின்மூழ்கியிலங்கையிலமரர்காணப்
புரிந்ததுபுரியுங்காணப்புரிவிப்பெனின்னுமென்ஞ. (உஎ0)

### வேறு.

### குசலவர்களை வான்மீகியிட மனுப்புதல்

அன்னதன்மைக்குசலவரையருளிஞேக்கியருமறைகள்
பன்னுதவத்தின்வான்மீகிதன்பாற்போமினெனப்பகர்ந்து
மன்னர்முதலமாசனத்தைவிடுத்துப்போக்கிவளரொளியால்
பின்னுமுகில்போற்றிருமேனிவீரன்பின்னுமிவைசெய்தான். (உஎக)

### வேறு.

வேதியர்வேந்தர்க்கெல்லாம்விடைகொடுத்தருளிநின்ற
காதலர் தம்மைப்புல்லிக்கதுமெனவெழுந்துகாதல்
மாது ‡ மைதிலிதஞேடுவரமுனிவருகவென்று
தூதரையேவிப்பைம்பொற்சுடர்மணிக்கோயில்புக்கான். (உஎஉ)

இருநிலமுழுதுங்காணவெரியிடைமூழ்கியின்னும்
வருகெனமடந்தைதன்னைமன்னவனருளிவிட்டான்

---

* மூலமும் - கிழங்கும். † சாகந்தானும் - கீரையும்.
‡ மைதிலி - மிதிலையிற் பிறந்தவள்.

வெருவுறுதலினாங்கண்வீழ்குறும்வண்ணங்காணா
தருளுடையாரினோடியருக்கனுமத்தஞ்சார்ந்தான். (உஎங)

வகைமிகுமன்னனெண்ணமறிந்தபின்வல்லியெல்லாம்
முகைமுகமவிழ்ந்துகண்ணீர்சொரிந்தனமுளரியோடும்
தொகைமிகுமரமும்புள்ளுமொடுங்கினதொல்லைவேலைச்
செகதலமென்னுமங்கைதிகழ்முகஞ்சிவந்ததன்றே. (உஎச)

## வேறு.

துண்ணெனும்படிதுன்னிமுன்றோன்றிடு
கண்ணிகந்தவர்கண்டனகாரிருள்
எண்ணிகந்ததிகாந்தமுமெங்கணும்
விண்ணுமண்ணும்விழுங்கினபோன்றதே. (உஎரு)

தூபமென்குழற்றோகையர்தம்முடன்
தாபமேலிடத்தாமவர்மேற்செல்வான்
கோபமென்பதென்முன்னர்க்கொளுத்திய
தீபமென்னவெழுந்தது திங்களே. (உஎசு)

## வேறு.

கொங்கவிழ்குமுதமுங்கூடிவாடிய
மங்கையர்நயனமுங்குவிந்தவாரணம்
சங்கொடுவலம்புரிதமரவண்டுசூழ்
பங்கயம்பலவும்வாய்ப்படமலர்ந்ததே. (உஎஎ)

தகைமிகுமுலகினிற்சார்ந்துளோர்வயின்
மிகுகொடையவர்புகழ்விளங்குமாறுபோல்
வகைமிகுபெரும்புகழ்வானமீமிசை
அகன்மதியொளிகெடவருக்கன்றோன்றினான். (உஎஅ)

காலையகடன்பலகழித்துக்காவலன்
* மாலைவந்தடியிணைவணங்கிமாதவர்
சாலமாநிதிபெறவளித்ததண்புனல்
வேலைவாயெதிர்வுறவிரைந்தமீன்களே. (உஎகூ)

நலந்திகழுலகொருநான்குமேவிய
வலந்திகழ் † மன்பதைமருங்குசூழ்தரத்
துலங்கியநவமணிச்சுடர் ‡ கொளாடகம்
இலங்குசிங்காதனத்திராமனேறினான். (உஅ0)

---

* மாலை - திருமாலின். † மன்மதை-மக்கட்பரப்பு.

‡ ஆடகம் - ஒருவிதப்பொன்.

### வேறு.

### இராமன் கோலுவிருத்தல்.

அறைவேதங்கட்கறிவரியோனற்றைவைகல்கழிந்ததற்பின்
மறையோர்மன்னர்வைசியர்சூத்திரர்களாதிமண்ணுலகின்
உறைமாசனத்தையொளியாமலொக்கக்கூடக்கொண்டிருப்ப
நிறைஞானத்தவான்மீகிநீளநோக்கியிதுசெய்தான். (உஅக)

### சீதையுடன் வான்மீகிவருதல்.

ஈனப்பழிக்குத்தானிறைஞ்சியிளையோன்றன்னைப்பிரிந்ததற்பின்
* மானக்கூர்வேனிறத்தான்றவைகரேறுந்தளர்வாளை
கானிற்றெய்வங்கண்டிரங்கக்கண்களாருய்ச்சொரிவாளை
ஞானத்தவத்தோன்பின்கொண்டுநாதன்சவையினுட்புகுந்தான். (உஅஉ)

எண்ணுதிவளைத்துறந்தனனிவ்விறைவனென்பாரிறைவியத்தம்
கண்ணுற்கண்டாரெல்லாருங்கண்கள்புதைப்பார்கையாரப்
பெண்ணுறிற்றுயருற்றாரில்லையென்றுபெரியோராம்
மண்ணேரிவ்வாறுரைசெய்யவந்துசீதையிதுசெய்தாள். (உஅந)

### வேறு.

வடித்தபைங்குழலடிமறைப்பமாசுற
உடுத்தவெண்டுகிலினளொசிந்துபின்வரத்
† தொடுத்தவெம்புற்றிடைத்தோன்றுமாமுனி
அடுத்தபேருலகுறையவையின்மேவினன். (உஅச)

விரிகதிரவனொளிவிளங்கவீசிய
எரிமணிப்பூணினனிராகவன்னெதிர்
மருவுவன்மீகத்தின்வந்துதோன்றிய
அருமறைமுனிவனையடிவணங்கினன். (உஅரு)

வணங்கியம்முனியைமுன்வைத்துத்தானுமோர்
இணங்கியவாசனத்தினிதிருந்தபின்
உணங்கியமுகத்தினளொன்றுநோக்கிலள்
நுணங்கியபூமியைநோக்கிநின்றனள். (உஅசு)

காதலிகற்புகாசினியின்மீதலால்
மீதலமிசையருந்ததியுமேத்துவ
தாதலையனகனேயறிவல்யானெனக்
கோதிலாவருமறைமுனிவன்கூறினன். (உஅஎ)

அன்னதுவாய்மையொன்றுதிக்கங்கைபோல்
மன்னியகுலத்தொருமாசுகூறுவோர்

---

* மானம் - அபிமானம்.

† தொடுத்தவெம்புற்றிடைத்தோன்றுமுனி - ஒன்றன்பினொன்று நெருங்கிய புற்றினிடத்துத் தோன்றிய சிறந்தவான்மீகி முனிவன்.

துன்னியநரகிடைத்துய்ப்பராலென
இன்னதுமீளவுமிசைத்திருந்தனன். (உஅஅ)

முனிவநீயருளியமொழியைவானவர்
அனைவரும்யானுமுன்னறிவமாயினும்
கனைகடலுலகுளோர்காண்டல்வேண்டுமென்
றினையனவிராகவனெடுத்தியம்பினான். (உஅகூ)

நாட்டியவுலகொருநான்குமோர்வயின்
ஈட்டிய * சவைநடுவிசைத்தவம்மொழி
வாட்டடங்கயல்விழிமடந்தைமைதிலி
கேட்டனனினைதொறுங்கிளருஞ்சிந்தையாள். (உகூ0)

ஒன்றியகேண்மையானுவந்தபோதினும்
கன்றியபோதினுங்கலந்தபோதினும்
நன்றெனநிலைகெடாநலங்கொள்கற்பினை
இன்றொருபொருளினாலியம்பற்பாற்றதோ. (உகூக)

பூதலமிசையருந்ததியும்போற்றிய
தாதலையறிந்திருந்தவனிமீமிசைத்
தீதிலென்கட்டளைதிகழமேவிய
† காதலன்றீதெனிற்கற்புண்டாகுமோ. (உகூஉ)

மறுத்தினியுரைப்பதென்வாயின்வைத்தகுஞ்
சிறக்கிடினலதுயிர்க்கிறுதிசெய்யுமோ
அறக்கொடும்பழியுரைத்தருள்வராயினர்
பிறக்கெனநெஞ்சினைப்பிளந்துகாட்டுகேன். (உகூங)

தேங்கமழ்குழலியைமுனிவன்சீறலென்
றாங்கவனுரைப்படியையந்தீர்கெனத்
தாங்கியமண்டலத்தண்ணெனீரினை
வாங்கியாசமித்திவைவழங்கினாரோ. (உகூச)

## வேறு.

தன்கணவன்செய்கொடுமையினைத்தானுட்கொள்ளாச்சானகிதான்
என்கணவன்செய்தனவெல்லாமிதமாமெனக்கென்றெண்ணிநந்த
பின்கணவன்றனுடல்கண்டுபெரிதாற்றாதுபோய்விழுந்து [ள்.
புன்கணவன்றன்பொறைதீர்த்தான்பொற்றாள் வணங்கிப்புவிக்குரைப்பா

வினைப்பாசத்தையறுத்தமுனிவேள்விகாத்துமிதிலைபுகுந்
தெனக்காவீசன்வில்லிறுத்தன்றெனைக்கைப்பிடித்தவெழிலாரும்

---

* சவை - சபை.

† காதலன்றீதெனில்-நாயகன் குற்றமான செயலென்று கூறினால்.

புனைக்காயாம்பூநிறத்தானையன்றிமற்றோர்பூமனையான்
மனத்தால்வாக்கானினையேனேல்வழிதாவெனக்குமண்மகளே. (௨௯௬)

வேறு.

வருந்தியேபயந்தநீமற்றென்கற்புமவ்
வருந்ததிகற்புமொன்றனதென்றிடின்
பெருந்துதிமாநிலம்பிளத்தியென்றனள்
இருந்துதியமரருமேத்துங்கற்பினாள். (௨௯௭)

பலதலை * மாசுணப்பள்ளிமேவிய
நிலைபெறுகற்பினானிதிகொண்மேனியாள்
வலைமுலையாகத்தாண்மாரிக்கூந்தலாள்
அலைகடலாடையாளவனிதோன்றினாள். (௨௯௮)

சேணுலாவிய † தலமடந்தைசீதைதன்
பூணுலாவியபுயம்பொருந்தப்புல்லுறீஇ
வாணிலாவியகதிர்வழங்கல்செல்கலாக்
கீணிலைப்படலமுங்கிழியப்போயினார். (௨௯௯)

தீதலதென்வயிற்றிகழ்ந்ததிங்ஙனே
ஆதலிதென்கொலென்றையமெய்திடக்
காதலிபோனதோர்வழியுங்காண்கிலான்
பூதலமடந்தையைப்புலர்ந்துசீறினான். (௩௦௦)

முனிவனாரங்கையின்முகந்துகொண்டவக்
கனைகடல்புடைத்திடக்கிடந்தகாசினி
பனிமதிவேணியான்பாவம்போக்கிய
‡ புனிதனோரடிக்கிடம்போந்ததில்லையால். (௩௦௧)

குயிற்றிடப்புனைந்தநன்மவுலிக்கோளராத்
துயிற்றிடைக்கிடந்ததுஞ் $ சூகரத்தினார்
எயிற்றிடைநாகத்துமெங்கணாயகன்
வயிற்றிடைக்கிடந்துமறந்ததென்கொலோ. (௩௦௨)

கடறிரைத்துரப்பவுங்காண்கிலாண்மயன்
றடநெடுஞ்சிலைவளைத்தம்புநான்விடப்
படரெரிகொளுத்தியபௌவந்தன்னிலோர்
திடர்கொலோமறைத்ததுசீதைதன்னையே. (௩௦௩)

பூதலந்தன்னையிப்புணரிசேறெழப்
பாதலத்தழுந்திடமிதிப்பென்பாவியென்

---

* மாசுணப்பள்ளி - அனந்தசயனம்.
† தலமடந்தை - பூமிதேவி.
‡ புனிதன்-மோகினியுருவங்கொண்ட திருமால்.
$ சூகரத்தினார்-சுவேதவராகப்பெருமாள்.

மாதவிதனைமிகவருத்தங்காண்குறு
மாதவினலதற்கென்றுமாற்றலேன். (கூ0ச)

**இராமனெதிரே பிரமன் றோன்றுதல்.**

இன்னனவுரைத்துரைத்திகலிராகவன்
துன்னியபுவியினைத்துணிப்பெனென்றுழிப்
பொன்னிகர்சததளப்பூந்தண்கோயிலில்
மன்னியபிதாமகன்வந்துதோன்றியே. (கூ0ரு)

வானகமாருதம்வன்னிநீரெனும்
போனகம்விரும்பியோராலின்பொற்றளிர்
மேனலத்துறுதியின்மேவிமேலைநாள்
கானிலத்துலகொருமூன்றுங்கண்டுளாய். (கூ0சு)

ஒப்பருநிலைமையாயுனக்குநான்சில
செப்புவதுளததுசிறிதுகேண்மதி
எப்பொருளாய்மிகவிருண்டவானகத்
தப்புறமாயுளேயடங்குநின்னுரு. (கூ0எ)

மின்னுளேபிறங்கொளிர்மேகமாமென
நின்னுளேபிறங்கொளிர்நிலையில்யோனிகள்
உன்னுளேபிறந்திறந்தொளிப்பதல்லதிங்
கென்னுளேபிறப்பிறப்பென்னலாகுமோ. (கூ0அ)

முந்தைநாட்புலத்தியமுனிவன் * மைந்தனூர்
தந்திடுந்தசமுகன்றன்னைக்கொல்வதற்
கிந்தநாளமரர்வந்திரந்ததாலிவண்
வந்துமானுடவர்தம்வடிவிற்றோன்றினய். (கூ0கூ)

ஆதிநீயுலகெலாமளித்துக்காக்குறும்
போதுநின்னுந்தியிற்பூத்ததாமரைத்
தாதியறமணியத்தனிப்பொகுட்டினின்
மீதுநின்றுலகெலாம்விரிந்ததல்லவோ. (கூக0)

**வேறு.**

ஆதலாலுனக்கன்றுவந்தவிப்
பூதலத்திடைபுக்கமங்கைநின்
காதன்மங்கையாலவளைக்காண்பதுன்
† நீதிலாநிலத்தென்றுசெப்பினன். (கூகக)

ஆதலாலுனக்கறிவுமன்னினல்
நீதனென்றன்னைச்செய்கொணுததற்

---

* மைந்தனூர்-விசிரவசு முனிவன். † நீதிலாநிலத்து-பகை பிணி மூப்பு மரண மாதிய குற்றமற்ற பரமபதமாகிய இடத்து.

கேதுவாலிவையியன்றதேயெனு
வேதநான்முகன் விரித்துக்கூறினான். (௩கஉ)

அங்கண்மானகத்தமலனுமெனப்
பங்கயாசனப்பரனுரைத்தலும்
துங்கவார்சிலைத்துணைநெடும்புயச்
செங்கண்வீரன்வெஞ்சினமொரீஇயினான். (௩க௩)

கதலிசூழ்பொழிற்கங்கைநாடனும்
மிதிலைமெல்லியல்பயந்தமென்னகைக்
குதலைமென்மொழிக்குசலவப்பெயர்ப்
புதல்வரைத்தழீஇவேள்விபுக்கனன். (௩க௪)

அம்புயத்திடத்தரிவையைப்புனை
அம்புயத்தில்வைத்தாளுமன்பினான்
* வெம்பரித்தொகைவேதவேள்வியோர்
ஐம்பத்திற்றிரண்டவைமுடித்தனன். (௩க௫)

சேடனாயிரஞ்சிரமசைந்திடக்
கோடலாமதிக்குழவியன்னகோட்
டோடையானையினும்பரேறியே
† ஆடன்மாவினனயோத்திமேவினான். (௩க௬)

தன்குடைக்கிடைத் ‡ தலமொரேழையும்
பொன்பெய்மாரியான்பொதுவறப்புரந்
தன்பர்சூழவாளரசர்போற்றநீ
டின்பமேநுகந்தினிதுவைகினான். (௩கஎ)

க௫ - வது அசுவமேதயாகப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉ௩௪.

---

## கசு - வது, கந்திருவர்வதைப்படலம்.

### கோசலையின் மரணம்.

இன்னதன்மையாலினியவையகம்
பன்னியாளுநாட்பலகழிந்தபின்
கன்னன்மென்மொழித் ※ கவிர்கொள்செய்யவாய்
அன்னகோசலைக்கந்தமுற்றதால். (க)

---

* வெம்பரித்தொகை வேதவேள்வி-வேகத்தினையுடைய குதிரையை வேதமந்திரத்தாற் கொன்று செய்யும் யாகம்.

† ஆடன்மாவினன்-வெற்றித்திருவினையுடைய வீராமன்.

‡ தலம்-பூமி. ※ கவிர்-முருக்கலர்.

பொன்னின்வையமும்புரவியீட்டமும்
மன்னுவேழமுமறவர்வெள்ளமும்
துன்னமன்னவர்தொழுபதாம்புயன்
அன்னடாளின்மேலழுதுவீழ்ந்தனன். (உ)

### வேறு.

கொன்னேர்வைவேற்கோசலமன்னன்குலமங்காய்
அன்னேயன்னேயத்தனுமுன்னேயகல்வுற்றான்
இன்னேநீயுமென்னைநீத்தாயெனின்யானும்
பின்னேவந்தேன்வந்தேனென்றே $ பேதுற்றான். (ங)

கொந்தார்கோலக்கோசலநாடன்குலமங்காய்
சந்தார்மார்பத்தசரதனின்பத்தகைவல்லி
அந்தோவந்தோவையனைநாடியடியேனும்
வந்தேன்வந்தேனென்றுதளர்ந்தேமாழ்குற்றான். (ச)

பொன்னேமுத்தேபூதலமேழும்புகழ்மேவும்
தன்னேரில்லாதசரதன்மார்பந்தனியாள்வாய்
அன்னேயன்னேயென்றிருகண்ணீரறவார
என்னேயென்னேயென்றிளையோருமிடருற்றார். (ரு)

### வேறு.

அழலிடைமிதிப்போலடிநிலத்துறா
இழையணிமுலைத்தடத்தெற்றியெற்றியே
குழலெனவிழைந்துநைந்தேங்கிக்கோதிலா
மழலையஞ்சொல்லினார்மாழ்கிவாடினார். (சு)

செழுந்தடங்காரகில்சிறந்த * சந்துடன்
அழுந்திடவிடமகமடுக்கியாடவர்
முழங்குசங்கொலியெழமுரசுபேரிகை
தழங்கிடச்சடங்குகள்சமைந்தபின்னரே. (எ)

கரத்தணிசிரத்தினர்கவிழ்ந்தகண்ணினர்
இரைத்தெழும்பலசனமிரங்கிப்பின்செல
அரத்தமென்கரத்தியரஞ்சொல்வஞ்சியர்
விரைக்கருங்குழலியர்விமானமேறினார். (அ)

### கோசலையின் தகனம்.

இடரினையுழந்துழந்தேங்கிக்கண்ணினீர்
அடலமர்மார்பகத்தருவிபோலுகக்

---

$ பேதுற்றான்-வருந்தினான்.

* சந்துடன்-சந்தனக்கட்டைகளுடன்.

* கடனவைகழிந்தபின்காதலன்னையைப்
படரெரிமயானமேற்பள்ளிசேர்த்தினர். (க௯)

சேதனர்புகறரத்திலமைவார்புனற்
கோதினன்பிண்டமுங்கொடுத்துச்செங்கையால்
பூதனங்கோதனம்பொலன்செய்பல்கலன்
மாதனமறையவர்பெறவழங்கினன். (க௰)

## கைகேசி சுமித்திரைகளின் மரணம்.

இன்னநாள்சிலகழிந்திருந்தகாலையில்
கன்னல்செய்மொழியள்கைகயன்மடந்தையம்
துன்னியகுழற்சுமித்திரையுமென்னுமிவ்
வன்னையரிருவருமந்தமெய்தினர். (கக)

மடங்கல்போன்மொய்ம்பினன்வரிசையின்வழா
தடங்கலும்விதிமுறையமைத்துமாரிபோல்
கடன்களுமறையவர்க்களிக்கநல்கியே
தடம்புனல்படிந்துநற்றானஞ்செய்தனன். (கஉ)

### வேறு.

தானைமன்னர்தொழுகழற்காற்சத்துருக்கன்றனக்குமிகை
வானரர்க்குமன்னனுக்குமகனுக்கும்மம்மாருதிக்கும்
மீனமமருங்கடலிலங்கைவீடணற்கும்விடையருளி
ஏனைமன்னர்புடைசூழவிலங்குமொளியாசனத்திருந்தான். (கங)

### வேறு.

மொய்காமர்விழியார்தமுலைமுகடுபொருதடந்தோட்
கொய்கேயவரிமுராரர்க்கொடைப்பரதன்றிருமாமன்
கய்கேகயன்குலக்குருவாங்கலைமறைதேர்காசிபனும்
பொய்கேதமில்லாதபுகழ்முனிவனவைபுகுந்தான். (கச)

பூரணமாயகம்புறமும்புளகிப்பப்புனைதுளப
நாரணன்றன்றிருநாமநவின்றொருகான்மறவாத
ஆரணமாமறையோனையடிவணங்கிநீவந்த
காரணமேதுரையென்றுகதிர்வடிவேலவனுரைத்தான். (கரு)

போதுபுனைகமழ்தாராய்புகழ்புனைகாந்திருவர்களுன்
மாதுலனையமர்தொலைத்துவவ்வினரால்வளநாட்டை
¶ ஏதியினலவரையெறிந்தினிதாள்கையியல்பென்று
ஓதுமறைமுறைதெரிந்தவுயர்முனியுமுரைசெய்தான். (கசு)

---

* கடன்-சூரணோத்ஸவம்.

¶ ஏதினல்-ஆயுதத்தால்.

## பரதனையுமக்களையுங் கந்திருவருடன்போரவனுப்புதல்.

தக்கனுடன்புட்கரனைத்தடமகுடம்புனைவித்துத்
திக்குநிகழ்காந்தவரைத்திறன்முருக்கிச்சிந்துநா
டொக்கவுடன்றடிப்படுத்தியொருதனிநீவருகவென
மக்களுடன்பரதனையும்வரன்முறையேசெலவிடுத்தான். (கஎ)

### வேறு.

குறைமதியனையவெண்கோட்டுக்கோலமா
நிறைமதிபுரைவனதிலகநெற்றிய
சிறை * மதுகரங்களுந்தேனினீட்டமும்
மறைதருமும்மதத்தருவிவாரணம். (கஅ)

நிழலொடுமெலைவனநீள்கரத்தன
அழலுறுவிழியன † வசலம்போல்வன
தழைசெவியுடையன ‡ சமரந்தீர்ப்பன
மழையெனவிதிர்வனமதுகைவாரணம். (க௯)

சூட்டியமணியனதுலங்குசெவ்வரக்
கூட்டியவுருளையவொளிகொள்பொன்னினல்
கோட்டியகொடிஞ்சியகுதிரைநான்குடன்
பூட்டியசெழுமணிப்பொலன்கோடேர்பல. (உ0)

நிறப்பலமணியெனுநிறங்களெண்ணில
உறப்பெரும்புவிபெறுதென்னவும்பரில்
பறப்பனபோல்வனபதுமத்தெண்ணன
பிறப்பனபெருங்கடல்பெரியதிக்கன. (உக)

நிலத்தடியிடம்பெறுதென்றுநீண்டவால்
தலத்திடைமிதிப்பபோற்றுவுங்கோளன
வலத்தினுமிடத்தினும்வாவுங்கொட்பன
குலத்தினுக்கிசைந்தனகுரகதங்களே. (உஉ)

ஒத்ததுபிறந்தனயூகத்தாயின
வெத்தகப்பிறந்தனவெள்ளைவானிறம்
பத்ததுமுகத்தினும்பயந்தபான்மைய
வத்தியிற்கடியனவாசியீட்டமே. (உ௩)

சூர்முகத்தனவுமிழ்தோமரத்தினர்
கூர்முகப்பகழியர்கொதித்தநெஞ்சினர்
கார்முகக்கரத்தினர்கழலர்கல்லெனத்
தார்முகத்தெழுவுதோட்டறுகண்வீரரே. (உ௪)

---

* மதுகரங்களும்-வண்டுகூட்டங்களும்.
† அசலம்-மலை. ‡ சமரம்-போர்.

இனையனகரிபரியிரதம்வாளரி
அனையவரங்ககரன்றிமுன்செலப்
பனிமதிவெண்குடைப்பரதன்றனுமோர்
இனமிகுகதிர்மணித்தேரிலேறினன். (உ௬)

அந்தரமதிர்வுறவார்க்குமார்ப்பொலி
இந்திரன்றிசைமுதலெட்டுங்கிட்டிடத்
தந்திரத்தலைவருந்தழுவிச்சூழ்வர
மைந்தருமணியணி * வையமேறினர். (உ௬)

அமிழ்தினுநுகர்தருமயோத்திமாநகர்
இமிழிசைவாயில்விட்டேகுமப்படை
கமழ்தருதுழாய்மதுக்கண்ணியானுகர்ந்
துமிழ்தருமூலகினையொத்தவாமரோ. (உஎ)

முரசொலிகிளையொலிமுழங்குவாழ்த்தொலி
புரசணியானையின்புனைந்ததேரொலி
அரசொலிநெடும்பரியமைந்ததேரொலி
பரசொலிசங்கொலிபரந்ததெங்குமே. (உஅ)

பரதனதெழும்படைப்பரப்பினலிந்தத்
தரைதிரைசுவறினசாற்றவேண்டுமோ
சுரநதிசுவறினதூளியான்மறைந்
திரவிதனெழுபரியேகிற்றில்லையால். (உ௯)

பாகைவென்றடர்வனபடர்மருப்பின
மோகவெங்கரிசொரிமும்மதத்தினல்
ஓகைவெம்புனல்பரந்தோடைநீடிய
ஆக்வெம்பாலையுமருதமானவால். (௩0)

எரிதவழ்பாலையுமிருங்குறிஞ்சியும்
அரிதவழ்முல்லையுமயங்கொணெய்தலும்
ஒருதனிநிகழ்ந்தபினேடையானையான்
மருதமாஞ்சிந்துநாடதனின்மன்னினன். (௩க)

வேறு.

வந்துபரதன்றனதுமைந்தருடனேயும்
சிந்துவளநாட்டினிடைவிட்டசெயலெல்லாம்
புந்தியுருகச்செவிபுகப்படுகதத்தால்
கந்திருவர்கேட்டனர்கடுத்தவதனத்தார். (௩உ)

கரித்தெழுசினத்தினர்கரத்தொடுகரத்தைப்
பொருத்தி † வடவெற்பனபுயத்திடைபுடைத்தே

* வையமேறினர்-தேரேறினர். † வடவெற்பன-மேருவனைய.

முரித்தபுருவத்தினர்முழங்குநயனத்தோ
டெரிப்பொறிதெறித்திடவிடித்துநகைசெய்தார். (௩௩)

பன்னியபுகழ்ப்பரதனைப்படமுருக்கி
மன்னியதன்மைந்தரையும்வாளுடைவரத்தால்
வெங்கிடமுருக்கியிவர்தம்மைவரவிட்டோன்
தன்னுடன் * மலைப்பமிதுவேசரதமென்றார். (௩௪)

செழுமின்மணியோடையதிசைக்கரிகளோடும்
குழுமினகுலக்கிரிகள்குலைதரநலஞ்சேர்
கெழுமினநெடுந்திசைகள்கிழிபடவுரப்பா
எழுமினெனலுங்கடிதெழுந்ததுபதாதி. (௩௫)

வேறு.

முடுகியதானைநான்குமுகிலெனமுழங்கியார்க்கக்
கடுகியசேனைகாவற்காவலர்கவசம்வீக்கிச்
சுடுபடைதெரிந்துவானச்சுடர்மணித்தேரினேறிப்
பொடிகடலேழும்போர்ப்பப்பொன்னகர்ப்புறத்திற்போந்தார். (௩௬)

அதிர்ந்திடுந்தலங்கணுன்குமல்லிடைவில்லுக்காட்டும்
உதிர்ந்திடும்பகலேயும்பருடுவெலாமிரவிதன்னோ
டெதிர்ந்திடுந்திசைகளெட்டுமெழும்புகைகாயகூடம்
முதிர்ந்திடக்கூகைபாடுமுதியதுன்னிமித்தங்கண்டார். (௩௭)

அல்லொலிகடல்கணுன்கினுர்ப்பொலியன்னவீரர்
சொல்லொலிதுவன்றியார்க்குந்தூரியத்தொலிகைம்மாவின்
வல்லொலிகாகளத்தின்வயங்கொலிமதுகைவீரர்
வில்லொலிமயங்கவந்துவேந்தர்வெங்களத்தரானர். (௩௮)

தூக்கியமதத்தவாய † தோல்கொடுதோல்கடாமும்
நூக்கியபுரவித்திண்டேர்நுவல்பரிதன்னினோடும்
வீக்கியகழற்கால்வீரர்வெஞ்சினச்சூரரோடும்
தாக்கினவிரண்டுசேனைசரமழைமயங்கிற்றன்றே. (௩௯)

வேலினைச்சிலவர்வாங்கிவிடுதலுஞ்சிலவர்வில்லால்
கோலினைவாங்கிக்கொன்றுகுறைப்பர்தங்குதிரைமீதே
தோலினைவிடுவர்விட்டதோலினுற்றுரகந்தன்னை
வாலினைப்பற்றியெற்றிமண்ணின்மேன்மலைதல்செய்வார். (௪0)

இருவர்சென்றொருவர்தம்மேலிகல்செய்வகரில்வாளோச்சி
ஒருவரோடொருவர்தாக்கியுருக்குவருதிரமாரி

* மலைப்பம் - போர்புரிதும்.
† தோல்கொடு - யானைகளைக்கொண்டு.

சொரிவர்முன்றேறுமார்புந்துளைப்பர்போர்விளைப்பரோடி
வெருவரவிழித்துநோக்கிவெங்கணைமாரிபெய்வார். (சக)

பய்யெடுத்தநந்தனேத்தும்பங்கயத்தனையசெங்கண்
மய்யெடுத்தனையமேனிமானவன்வகுத்தசேனை
நெய்யெடுத்திலங்குபாணநெருங்கலின் * ஞெகிழிபோலக்
கய்யெடுத்தநந்தகோடிக்கவந்தநின்றாடிற்றன்றே. (சஉ)

காந்தவர்சேனையெல்லாங்களத்திடைமடியக்கண்டு
வேந்தருஞ்சிலைகோல்வாங்கிவிரைபரித்தேர்மேல்விட்டார்
† நாந்தகவுழவன்பின்னோனவமணிக்கழற்கால்வீரன்
பாந்தளின்பாரந்தீர்ப்பான்பரதனுமதனைக்கண்டான். (சங)

வேறு.

‡ தந்திரமுங்கரிபரியுந்தாமமணித்தேருமிக
அந்தரமுற்றிகழ்ந்தசெயலறிந்திருந்துமறிகிலீர்
உந்திருமற்றுயிரிருந்தாலுழுதிருந்துமுண்ணலாம்
கந்திருவர்போமினெனக்கனைத்துறுமினகைத்தனரால். (சச)

வேறு.

உன்னையுயர்தானையுடனோடவொர்சரத்தால்
$ வெந்நிடமுருக்கவரிதல்லவதுவேண்டேம்
என்னவுரைசெய்தனகொலென்றுலகிவ்வாகை
மன்னவநின்மைந்தருடன்மறிகைதிடமென்றார். (சரு)

வெங்கண்மதகரிநிரைகண்மிக்கவுளவேனும்
சிங்கவிளங் ○ குருளையொடுசென்றுசெருச்செயுமோ
இங்கிவர்களிளையரெனவிகழலெனவுரையாத்
துங்கநெடுஞ்சிலைவளைத்துச்சுடுசரங்கடுரந்தான். (சசு)

வேறு.

கரியற்றனகொடியற்றனககனத்துறுகவனப்
பரியற்றனபணையற்றனபடையற்றனவிடையே
வரியற்றனசிலையற்றனமரமற்றனவயவார்
கிரியற்றனவெனவற்றனகிளர்பொற்கொடியணிதேர். (சஎ)

பொருதந்திரவிதமாரிளபுணரிப்படைவிரவார்
ஒருகந்திரிவிதமாயுளவுயர்வெங்கணைவிடலால்
மிருகந்திரிகிரிபோலுயர்மிகுதேரதன்மிசையே
வருகந்திருவரும்வார்சிலைவளைத்தார்செருவிளைத்தார். (சஅ)

---

* ஞெகிழிபோல - குறைகொள்ளியையொப்ப.
† நாந்தகம் - ஒருவாட்படை விசேடம்.
‡ தந்திரமும் - காலாட்படையும்.
$ வெந்நிட - முதுகிட.
○ குருளையொடு - குட்டியொடு.

பாருடினகழுகாடினபடர்சோரியின்றிரைப்பே
ராருடினவலகைக்குலமடர்காகமுங்கழுகும்
மாருடினர்வேருடினர்மகிழ்ந்தாடினமறவோர்
நீருடின திசையெங்கணுநிமிர்ந்தாடினகவந்தம். (சக)

வேறு.

உரமதுடையவுயர்தலைகள்புயமதற வுரியவலியதனுவளையவே, சரமதெதிரவவர்தலைகடவிடுபடுதொகுதியெனமுடிகடறியவாள், கரமொடிடறவுலவைகழலவிகடதடகருணிகதறவெயிறுகமிகும், புரவிகழறுணியவிரதவுருணெரிகொள்பொடிசெய்திடுமிவனெய்சரமரோ. (ருo)

இருவரொருவழியிணிகழவிவர்முடுகியிகல்செய்பவர்தமதுமறம்விடார், ஒருவரொருவழியினுஉரறுமுருமினெனருரறுகுரலினர்களுலகெலாம், பருவமழைமுகில்கள்பொழிவதெனநெடியபரதன்விடுபகழிமழையினுல், வருவன்வருவனவன்வருவன்வருவனெனவெருவிமலைமுழையினுழைவருல்

மதுரகளபதன * மகளிர்மகிணர்படர்மருவுமுடறழுவியிடைவிடார்
உதிரநதியிடையினெழுகியுயிரொழிவருாகபணநெளியவுடும்வெங்
கதிருமதியுமுகவதிருமதகரடகரியுமிகுகவனவிரதமும்
குதிரையணியினெடுதுணிவவொருவனெருகொடியகழிவிடுகளமெலாம்.

வேறு.

முரிதருஞ்சிலைமூன்றுகோடிகந்
திருவர்பட்டவச்செங்களத்தினில்
பரிகள்பட்டவும்பகழிபட்டவும்
கரிகள்பட்டவுங்கணக்கொன்றில்லையால். (ருரு)

ஒரிடங்களுமொழிவுறுதுவெம்
பேரிடங்கரின்பிணையல்காதிடைக்
காரிடங்கள்வெங்கழுகுமோரியும்
பாரிடங்களும்பருந்துமானவால். (ருச)

அந்தரத்தின்மீதகன்றகாதவெம்
பந்தரிற்கொடைப்பரதனங்ஙனே
கந்தமிக்கபைங்கமலக்கையினல்
மைந்தர்வம்மையேவாகைசூட்டினன். (ருரு)

தாதுசேர்மலர்த்தாமவண்டுசூழ்
சீதமென்புனற்சிந்துநாட்டினில்
ஆதிவானவனளகைபோலவே
ஏதமில்புரமிரண்டுசெய்வித்தான். (ருசு)

---

* களபம் - சந்தனம்.

### வேறு.

### பரதன்தான் கைபற்றிய நாட்டினைத் தன்மக்கட்களித்தல்.

திக்குநிகழ்புகழ்ப்பரதன்றீதிலாவாந்தினமென்ப
மிக்கமறைமுறைமையினுல்வேதியரோடினிதாய்ந்து
புக்கமிகைப்புட்கரற்குப்புட்கரமாநகர்போர்வில்
தக்கனுக்குத்தக்கசிலைநகரிவர்க்குத்தான்கொடுத்தான். (௫எ)

மானவனத்திருமகற்குமதியனையவெண்குடைக்கீழ்ச்
சோனைமுகில்சுரந்தோங்குந்தொகுபுனலால்வயல்விளையும்
ஆனபுகழ்ச்சிந்துநாடடிப்படுத்தியெடுத்தங்ஙன்
ஏனைமன்னர்தொழுதிறைஞ்சவெதிரறவீற்றினிதிருந்தான். (௫அ)

விம்பமதிவெண்குடைகீழ்விரையளியினிசையகலா
வம்பலர்தார்மைந்தர்க்கும்வளநாடுவளம்படுத்திக்
கம்பமதகரிபரிதேர்காலாளுமிகவருளி
அம்பொனெடுமணி * முடியனயோத்திமாநகரடைந்தான். (௫௯)

பனிமதியேநிகர்வதனபங்கயத்துப்பனிமொழியார்
கனகமணிபுனைகாம்பிற்கவரிகொடுபணிமாறத்
தினகரன்போலொளிவீசுஞ்செழுமணியாசனத்தின்மிசை
இனிதிருந்தகனைகழற்காலிராகவனையடிபணிந்தான். (௬0)

காரிருண்டதெனுநிறத்துக்காந்திருவர்கடற்சேனை
போருடைந்துபுறங்காட்டப்பொருதவரைத்தொலைத்ததுவும்
வாரிருந்தகனைகழற்கான்மைந்தருக்குவளநகரம்
ஓரிரண்டுவகுத்ததூவுமுரைத்தனனவ் ‡ விரைத்தாரான். (௬க)

கசு - வது, கந்திருவர்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஙருரு.

---

## கஎ - வது, சந்திரகேதுநகர்ப்படலம்.

அந்தவுரைகேட்டுமகிழ்ந்தடற்பரதன்முகநோக்கி
தந்திரமுங்கரிபரியுந்தரைப்படவென்றொருகணையால்
இந்திரனையமர்தொலைத்தானிகன்மலைக்கும் † பெருந்திறலான்
மைந்தருக்கும்வளநாடுவகுத்துரைத்தியெனவுரைத்தான். (க)

---

* முடியான்-முடியினையுடைய விராமனுடைய என்றுமாம்.

‡ விரைத்தாரான்-மணமாலையான். † பொருந்திறலோன்-போராற்றலினையுடைய இலக்குமணன்.

கராமலியக்கயலுகளுங்கழனிமிசைக்கதிர்விரிக்கும்
* சரோருகமேற்சங்குதங்குசந்திரகாந்தப்பெயரால்
பராவரியவளநாடுபணித்தியெனப்புகழ்ப்பரதன்
இராகவனையடிவணங்கியெழுமுரசமறைவித்தான். (உ)

## இலக்குமணன் மைந்தர்களை முடிசூட்டியரசாளவைத்தல்.

கந்தமிகுநறுந்தெரியற்கனைகழலங்கதனுக்கும்
சந்திரகேதுவுக்குமிகைச்சமரமிகுதனியாண்மை
இந்திரனையமர்தொலைத்தோனிகல்தொலைத்தோன் ‡ பிதாவாகும்
மைந்தரவரிவர்தமக்கேமணிமகுடம்புனைந்தானால். (ங)

மறங்காலுங்கரிபரிதேர்வயவீரரெனுநான்கு
கறங்காழிப்படையேவிக்கழல்புனையங்கதனைக்கொண்
டிறங்காதசிலையேந்தியீரேழாண்டிடைபிரியா
துறங்காதவில்லியையுமுடன்போகென்றுரைசெய்தான். (ச)

ஐங்கோலையாமாறனையவதிமதத்தவனலுமிழும்
பைங்கண்ணவேழுறுப்பும்படிதோயும்பான்மையன
வெங்கதவெண்டிசைக்கரியோடமர்விளைப்பதெனப்படுதந்
தங்குமணியோடையனதடக்கைமதகதக்கரிகள். (ரு)

நிழல்செய்ததழைசெவியநிலந்தோயுநீள்கரத்த
சுழல்விழியகூற்பேயுந்தொகைப்பருந்தும்பின்செல்ல
அழல்விழியவதிமதத்தவயின்மருப்பினடல்வீரர்
சுழல்சுளிவபுகர்முகத்தகடகரிகள்பலகோடி. (சு)

இயல்வனத்திற்பிறந்தபேரிளங்கிளியினிறத்தனவும்
மயினிறத்தவனைநிறத்தமணிநிறத்தமரைநிறத்த
பயிநிறத்தகடலகத்தும்பலதேசத்தும்பிறந்த
குயினிறத்தகொய்யுளையகுரகதங்கள்பலகோடி. (எ)

கோகனகமுகையனையகொழுங்கனகக்கொடிஞ்சியன
பாகனகமகிழவயப்பரிபூணும்பான்மையன
நாகனகங்குழையமிசைநடந்தோடுந்தடங்கால
மாகனகநெடுந்துவசமணித்திண்டேர்சதகோடி. (அ)

உருத்துநெடுங்கதிர்வேல்கொண்டிரங்கிழிப்பதல்லாது
மருத்துவரினுங்கூடிவெங்காட்டிமீளாதார்
எதிர்த்துவருங்கழல்வீரரிரியநிலைக்கிரியெறியும்
மருத்துவினைநிகராகும்வயவீரர்கணக்கில்லார். (கூ)

---

* சரோருகமேல்-தாமரைமலர்மீது.
‡ பிதாவாகும்-தந்தையாகவுள்ள.

புனைமணிய * வியன்மார்பர்புரிவளைகண்மிகமுழங்க
இனையபரித்தானையுடனிகல்வடிவேலிலகுவனும்
துனைபரித்திண்டேரேறிச்சுடர்மடங்கத்தடந்திசைமேல்
கனைகழற்கான்மைந்தருடன்காரகாபதியமைத்தான். (க0)

## வேறு.

மதமுகந்திடுமயனுடைமறைமுனிநெறியே
திதியும்வாரமுந்தினமுமென்றன்னனதெரிந்து
கதிர்நெடும்புனற்காரகர்பதியினையமைத்தான்
துதிமிகுந்தெழுவாகையன்றொடைபுனைதோளான். (கக)

நெடுந்தெருக்களுநியமமுநீளுறுமறுகும்
தடங்கொள்கூலமுஞ்சந்தியுஞ்சதுக்கமுமணியின்
இடுஞ்சுடர்த்தொடு $ மிஞ்சியுமஞ்சுவந்துறங்கும்
தொடுங்கிடங்குமேற்சூளிகைவாயிலின்றொகையும். (க௨)

கருதிநீடியகருமணிக்கூலங்களொருபால்
பரிகணீடியபருமணிப்பந்திகளொருபால்
விரிநெடுங்கொடித்தேரணிவீதிகளொருபால்
உருவின்மேகத்திலுயர்மணித்தோரணமொருபால். (க௩)

‡ பனகர்வாழ்திருநகரமோபருமணியதனால்
தினகராதிபர்நகரமோசித்தர்கணகரோ
அனகவிந்திரனகரமோவளகையோயாதோ
கனகமாநகர்க்குவமையோகணிப்பதற்கரிதால். (க௪)

ககனமங்கையர்கழுத்தெனக்கமுகினநெருங்கும்
வகைநெடும்புனல்வளநகர்வருபவர்க்கெல்லாம்
நகலருஞ்செழுநவமணியொளிநனிமயங்கிப்
பகலுமேனையவிரவுமென்றொருபரிசிலதால். (க௫)

படைத்தமாமுனிபாரெலாமொருவழிப்படுத்தி
அடைத்ததொக்குமிவ்வணிநகரோவியத்தணிந்த
மடைக்கண்மங்கையர்முகமெனமதியின்மேன்மறுவைத்
துடைப்பபோன்றனதுகிலணிதேர்மணித்துவசம். (க௬)

மதுரமென்மொழிமடந்தையர்வடம்பரிந்திட்ட
கதிர்கொணித்திலப்பன்வணியெங்கணுங்கலங்கி
உதிர்தலாலும்பரிழுக்கிவிழ்ந்தொழிகதிர்சிதறி
மதியுமீன்களுங்கிடந்தவாபோன்றுளமறுகே. (க௭)

---

* வியன்மார்பர்-அகன்றமார்பினர்.

$ இஞ்சியும்-மதிலும். ‡ பனகர்-நாகர்.

அன்னமாநகராங்கவற்கருளியாங்கவற்குப்
பொன்னும்வையமும்புரவியுங்கரிகளும்புகர்வேல்
இன்னவீறர்கீதளித்துமீண்டிராவற்றொழவே
மன்னர்மன்னவனயோத்திமாநகர்சென்றுபுக்கான். (௧௮)

தடங்கண்மங்கையர்தமனியச்சாமரமியக்க
மடங்கலாசனத்திருந்தவாளிராமனைவணங்கிக்
கிடங்குசூழ்நகரியற்றியகிளைர்முடிமதலைக்
குடன்கொள்சேனைநான்குடன்கொடுத்தனவெலாமுரைத்தான். (௧௯)

அன்னதம்பியோடினிதிருந்தகமகிழ்ந்தொருநாள்
பன்னுவெஞ்சிலையிராகவன்பணிக்குடைப்பரதன்
தன்னைச்சந்திரகேதுவைச்சந்திரகாந்தம்
என்னுநாட்டிடையிருத்திநீதருதியென்றுரைத்தான். (௨௦)

ஆனைதேர்பரியடற்படைத்தலைவரென்றறைந்த
சேனைநான்குடனெடுமணித்தேர்தெரிந்தேறிச்
சோனைமாமுகிலாமெனத்தூரியந்துவைப்ப
ஆனமைந்தனோடயோத்திமாநகரினையகன்றான். (௨௧)

பாழிவெண்கொடிப்பருமணிக்கொடிஞ்சியநெடுந்தேர்
ஆழியானெரித்ததுவரைக்குலமெலாமடையப்
பூழியாயினபுரவியின்விலாழியிற்புகர்வெம்
* சூழியானைமும்மதத்தினிற்றுகளடங்கினதால். (௨௨)

கான்குலாவியகனவரைநெரிதரக்கழனி
மீன்குலாவியதரைநெடுந்துகளெழவிரைதேர்
வான்குலாநதிசுவறிடவழங்குவெம்படைகள்
நான்கினோதையா † னரலைவாயொலியடங்கினதால். (௨௩)

பாலைமாநிலங்கடந்துதண்குறிஞ்சியிற்படர்ந்து
சாலமுல்லையுநெய்தலுங்கடந்துபோய்த்தமர
மாலைவண்டினமுரல்வனமருதமென்பணைசூழ்
ஏலவார்பொழிற்சந்திரகாந்தநாடிறுத்தான். (௨௪)

செம்பொற்கோபுரவாயிலிற்செழுமணிநீலத்
தம்பத்திற்குளிர்தரளவெண்சாரளமுகப்பின்
விம்பக்கோபுரவேயினமாளிகைவிதான
அம்பொற்சந்திரகாந்தையென்றணிநகர்சமைத்தான். (௨௫)

---

* சூழியானை-முகபடாமணிந்தயானை. † நரலை-கடல்.

### வேறு.

சந்திரகேதுவைத்தானைநான்குடன்
இந்திரனென்னமாநகரிருத்தியே
பந்திவெம்பரியினிற்பரதன்மீண்டுவந்
தந்தமிலிராகவனடியிறைஞ்சினான். (௨௬)

இயன்றவாறியம்பினனிருந்தகாலையில்
பயின்றவேன்மன்னற்குப்பரதன்றன்னுடன்
வயின்றொழவிடைகொடுத்தருளி * மாமலை
குயின்றபொன்மணிமதிற்கோயிலெய்தினான். (௨௭)

கனைகடலுலகெலாங் † கலைகடம்மொடு
துனைபரிவல்லியந்துன்றிநீருண
இனையநாலாண்டரசியற்றியெல்லுமிழ்
வனைகழலிராகவன்மகிழ்ந்திருந்துழி. (௨௮)

### எமன்மாறு வேடம்பூண்டிராமனை யடைதல்.

தென்றிசைக்கடவுளுந்தேவனேவலால்
அன்றுதன்னுருவொழித்தயோத்திமாநகர்
குன்றுநின்றனையதேர்கோயில்வாயிலில்
ஒன்றியமுனிவரனுருவங்கொண்டுளான். (௨௯)

தடங்கைவேத்திரத்தினர்தழைத்ததாடியர்
அடங்குறுதிடியெனவார்க்குஞ்சொல்லினர்
மடங்கலையனையவர்வரிந்தகச்சையர்
படம்புகுமிலேச்சரைப்பரிந்துகூறினான். (௩0)

மறங்கிளர்கனல்விழிவாயில்காவலர்
இறங்கினர்தொழுதபினிலங்குநூலினான்
முறஞ்செவியானையாய்முனிவன்வந்துநின்
புறங்கடையானெனப்புகறிபோயென்றான். (௩௧)

போயினகாவலர்போற்றிமன்னவ
ஏயினன்றுறவினோர்வேதமாமுனி
கோயிலின்மணிமதிற்கொடிகொள்கோபுர
வாயினின்றனனெனவணங்கிக்கூறினார். (௩௨)

கடாசலக்களிற்றணிக்காவல்வேந்தனும்
விடாவருண்முனிவர்மேல்வைத்துமேதினி

---

* மாமலைகுயின்ற - சிறந்தமலையாலியற்றிய.
† கலைகள்தம்மொடு - மான்களுடனே.

அடாநெறியவுணரையறுப்பதாதலால்
தடாதிரிங்கவன்றனைத்தருதிராலென்றான். (௩௩)

பாருடைமன்னனைப்படர்ந்துபையென
ஏருடைமறலிவந்தெய்திற்றுதலால்
நீருடையுலகினினிகழ்ந்துளோர்க்கெலாம்
சேருமென்றறிந்துமாதவங்கள்செய்ம்மினே. (௩௪)

வள்ளலைப்பின்னருமறலிமாதவர்
கொள்ளுருக்கொண்டுயிர்கோடன்மேவலால்
ஒள்ளியவுலகினிலுருவுகண்டபின்
எள்ளலைபிறரைநீரெனவியப்பது. (௩௫)

ஓரில்வேறுவமையொன்றில்லையுன்னையே
ஆருநீருலகிற்கண்டறிவதில்லையால்
பாரையேருறத்தரும்பதுமத்தோன்றலைப்
பேரைநீயுரையெனவிராமன்பேசினான். (௩௬)

தூயவாளிராமனைத்துனைந்துநோக்கிய
மாயவானுருவுடை * மறலியாமுனி
சேயவர்மதுமலர்த்திசைமுகத்தினான்
ஏயவாசெய்வனென்றெடுத்துக்கூறினான். (௩௭)

உரைப்பதொன்றுள்ளதாலொருங்கியாமினி
இருப்பதுகாரணம்யாவராயினும்
தெரிப்புறவருவரேலவரைத்தீரவே
விருப்புறுதகற்றியேவிடுதல்வேண்டுமால். (௩௮)

இனையமாமுனிதனக்கிசைந்திலக்குவன்
தனைமுகநோக்கியதாரிராகவன்
எனையவராயினுமெய்துறுவகை
கனைமணிவாயிலைக்காத்தியாலென்றான். (௩௯)

இளவலைக்காவலிலேவியேடலர்
தளைவருமதுமலர்த்தாரிராகவன்
உளமகிழ்ந்தருளிநீயுரைத்தியாலெனக்
கொளமறைமுனிவனைக்குறித்துநோக்கினான். (௪௦)

மந்திரமுதுமொழிமறைவலாளனும்
கொந்தலர்தாரவர்க்குறித்துநோக்கினின்
றந்தமூவுலகினுக்களப்பதாயினுள்
வெந்திறற்கூற்றுவன்விளம்பன்மேயினான். (௪௧)

* மறலியாமுனி - யமனாகிய முனிவன்.

## வேறு.

அந்தத்திசைநான்முகனையடைவே
பந்தப்பழநான்மறையாடிடுவோன்
உந்திக்கமலத்திடையுற்பவனாய்
வந்திப்புவியேழும்வகுத்தனனால். (௪௨)

அன்னானுரைசெய்ததமைந்ததுகேள்
என்னாலுமெதிர்ந்திமையோர்களகந்
தன்னாலும்வெலற்கரியான் * சடையோன்
† மன்னாகமெடுத்தமெதார்மாலியவான். (௪௩)

வில்லார்கதிர்மென்மதிமீதுசெலா
வெல்லார்கதிர்சூழுமிலங்கையர்கோன்
மல்லார்புயமாவலிவானவரின்
அல்லார்தொலையாததொராயுளினான். (௪௪)

தாமந்திகழ்செஞ்சடையோனிடையே
வாமஞ்சுடர்வாளதுபெற்றவனால்
ஏமந்திகழ்கின்றவிராவணனும்
நாமந்திசைநாலுநடந்துடையான். (௪௫)

அன்னானுயிர்கொள்வதமைந்தயில்வேல்
மன்னாகதிரோன்வருமாமரபிற்
பன்னாகணையோடுபயோததியும்
பின்னாகவிகந்துபிறந்தனையால். (௪௬)

அவ்வாறுமுடித்தனையாதலினின்
மெய்வானுலகெய்துதல்வேண்டுமெனா
இவ்வாறுரைசெய்தனனிங்கிதுவே
செய்வாயெனநின்றுரைசெய்தலுமே. (௪௭)

## வேறு.

இலங்குமணிப்பசுந்தண்டாரிராகவன்றனைமுபரித்தேர்
வலங்கிளர்செங்கனகமணிமாளிகையின்மதில்வாயில்
அலங்கியசெங்கனல்வேள்வியத்திரிதன்றிருப்புதல்வன்
துலங்கியநூற்றுருவாசனெனுமுனிவன்றோன்றினனால். (௪௮)

ஏற்றரியசிலைத்தடக்கையிலக்குவவேலிராகவன்பால்
ஊற்றமுளதொருமாற்றமுரைப்பதுள்ளதாதலினால்
போற்றரியவரமுனிவன்புறங்கடையினானென்று
சாற்றுகைநின்கடனென்னச்சதுமறையோனுரைசெய்தான். (௪௯)

---

* சடையோன் - சிவன்.
† மன்னாகம் - இருக்குமலை.

வேணிரைத்தமெதனவிளங்கும்வெண்பூவால்வியன்சுரும்பிற்
றேனிரைக்கும்பொழிற்கங்கைத்திருநாடன்றிருத்தம்பி
பானிரைத்தவெண்புரிநூற்பழமறையோய்குறையாமல்
யானுரைத்தபடிமுடிப்பெனியம்புதியென்றிறைஞ்சினனல். (ருo)

வேறு.

முனைவனெஞ்சின்முனிந்துநின்முன்னவர்க்
கிளையவென்வரவென்றியம்பாயெனின்
துணைவவுங்கடந்தொல்குலமாள்வதோர்
அணையசாபமளிப்பெனென்றோதினன். (ருக)

வண்ணமாமறைமன்னவன்கூறலும்
துண்ணெனெஞ்சினனாகித் * துனியுடன்
எண்ணியின்னதிராமற்குமாகுமென்
றண்ணல்வேலவனஞ்சிநடுங்கினன். (ருஉ)

புன்னுனைப்பனிநீரும்பொழிமழை
மின்னுமம்மழைமேவிய † மொக்குளும்
அன்னவின்னநிலையிலவாக்கைகள்
என்னவெண்ணியிளவனுமேகினன். (ருங)

வேறு.

பொறைமலியத்திரிபுதல்வன்போதமா
மறைமுனிவந்துநின்வாயிலோனெனக்
குறைமலிகூற்றுவன்மாற்றங்கொள்ளுறும்
இறைவனையடிதொழுதிளவல்கூறினன். (ருச)

கருமைக்கோட்டுக்கனலுமிழ்கண்ணுடை
எருமைப்போத்தையினிதுவந்தேறிய
அருமைக்கூற்றையகற்றி ‡ வருதுமென்
றொருமைக்கூற்றினுரைத்தனன்போக்கினன். (ருரு)

துன்னிச்சொன்னதுணையுடன்வந்தபின்
மன்னுமாமறையத்திரிமாமகன்
தன்னதாளையிறைஞ்சிச்சதுமறை
என்னவந்ததையென்னிலென்றோதினன். (ருசா)

**துருவாசன் இராமனை உண்டிவேண்டுதல்.**

முந்தையோர்முறையேமுடிசூட்டிய
அந்தநாடொட்டோயிரமாண்டிற்கு

---

* துனியுடன் - துக்கத்துடன்.

† மொக்குளம் - நீக்குமொழியும்.

‡ வருதுமென்று - வருவோமென.

வந்தநாளுன்வயினயின்றேகுற
இந்தநாளந்தநாளென்றியம்பினுன். (ருஎ)

## வேறு.

நாலிருக்குநடக்குநலத்தால்
வாலுவர் நூலணிமார்பினர்மன்னர்
சாலுமனத்தொடுசொயையுரை
ஏலவழைத்திடுமென்றுரைசெய்தான். (ருஅ)

மாடமதிக்கதிர்மாளிகைவாயில்
நீடலமன்னவனெஞ்சின்விரைந்தே
ஆடைதயங்கவலங்குலைவுற்றே
ஓடியழைத்தனர்தூதருவந்தே. (ருகூ)

தொடையணிமன்னவன்றூதரையேவக்
கடல்புரைசேர்கணத்திடையேகா
அடைவுறவோடியவண்டரவல்லே
* மடைதொடுவாரவண்வந்துபுகுந்தார். (சுo)

மாமுனியெம்வயின்வந்ததையன்றே
காமுறுமும்மதுகைத்தொழில்காண்பான்
ஆமிவன்வந்ததமைத்திடுமின்னே
பூமலிவெய்தியபோனகமென்றுன். (சுக)

## வேறு.

பொன்னும்வெள்ளியுமல்லதுபோக்கியே
மன்னுமாசுதுடைத்துமணிக்குடம்
தன்னினற்புனல்கொண்டுபொற்சாடிகள்
துன்னவெங்கணுந்தூசிட்டெழுடினுர். (சுஉ)

வந்துமன்னிமடைப்பளிதன்னிடை
வெந்தவெண்பலிநீக்கிவிரைமலி
சந்தனத்தொடுதண்ணகிற்கூட்டுநீஇ
இந்தனத்திலெரியிடைமாட்டினுர். (சுங)

பொடித்தபோக்கிப்புழுகுசம்பாமணி
படித்தநூற்றுப்பத்தாயிரப்பத்திபொற்
றுடுப்பிற்கொண்டுதுழாவிப்பதத்துற
வடித்துக்கூட்டிவகையிலிறக்கினுர். (சுச)

---

* மடைதொடுவார் - சோறுசமைப்பார்.

### வேறு.

கவப்புறுகொடுஙகுரற்கனகச்சாலிநெல்
உவப்புறுசெம்பொனுமுரளிடைக்கொளீஇ
நிவப்புறுமுலக்கையானெடிதுவல்லவர்
* அவைப்புறுமரிசியாலடிசிலாக்கினர். (௬௫)

### வேறு.

கைய்வகைப்படுகின்றகாமாட்சியர்
மெய்வ்வகைப்படுநெய்யிடைவெந்தன
குய்வ்வகைப்படுகின்றகொழுங்கறி
ஐவ்வகைப்படறுசுவையாக்கினர். (௬௬)

அறுசுவைக்கறியாக்கியதற்பினே
செறியுந்தாளிதஞ்செய்துவைத்தானெயும்
முறுகக்காய்ச்சிமுதிர்வுறுமுக்கனி
குறுகுபால்கன்னலானவுங்கூட்டினர். (௬௭)

### வேறு.

அன்னவைசமைத்தவரமைந்தகாட்டலும்
மன்னியமுதுமொழிமறைவலாளனைப்
பன்னியபோனகம்பற்றென்றேதினன்
இன்னிசையரியெழுந்திரைக்குந்தாரினன். (௬௮)

நிலமிசையாசனமிட்டுநீர்கொடு
தலமிசைதெளித்தொருதமனியப்பெருங்
கலமிசைமாமுனிகைகழீஇயபின்
பலமுறைபோனகம்படைத்துமேவினர். (௬௯)

மெய்யுறுமந்திரவிதியினுளினன்
மய்யறுபுனலினுல்வலம்வளைத்தபின்
கய்யுறுபுனலதுகுடித்துக்காதலால்
† அய்வகைமந்திரத்தமுதருந்தினன். (௭௦)

பலாக்கனிமாங்கனிபாலினோடுதேன்
நிலாப்பயில்கிரிநிகர்நிறைவெண்சோறளி
உலாப்பயில்கொழுங்கனலோமமாமுனி
விலாப்புடைமுசிப்பறவீங்கமாந்தினன். (௭௧)

அங்கைநீரயின்றபினாரணத்தினன்
துங்கமாமணிமுடித்தூயமன்னவர்
செங்கையாலாடகச்சிரகத்தேந்திய
கங்கைநீர்கொண்டுசெங்கைகழீஇயினன். (௭௨)

---

* அவைப்புறு-குத்தப்பட்ட.

† ஐவகைமந்திரத்து-பஞ்சப்பிராண மந்திரத்தினால்.

தாலுவிலறுசுவைதழைப்பச்சர்க்கரை
பாலிடையடிசிலின்பயின்றபான்மையின்
நாலிருதிசையினுநண்ணலாதென
வாலுவத்தலைவரைமதித்துக்கூறினன். (௭௩)

மன்னவரிவரவர்மரபுங்கேண்மையும்
இன்னதென்றிராகவனெடுத்துக்கூறலும்
அன்னதுகேட்டலுமகமகிழ்ந்தொரீஇ
முன்னியதிசையிடைமுனியும்போயினன். (௭௪)

வனைந்தபூண்மறலிதன்வார்த்தையெண்ணியும்
துனைந்ததன்பின்னவன்பிரிவுசூழ்ந்ததை
நினைந்துதனிருகணீர்நிலநனைந்திட
இனைந்தினைந்திராகவனிடரின்மூழ்கினன். (௭௫)

கருங்கயற்கேகயன்மகட்குக்காவலன்
வரங்கொடுத்தின்னுயிர்மறலிக்கீந்தபின்
இரங்கனீயென்வயினென்றிலக்குவன்
அலங்கல்வேலிராகவனடிவணங்கினன். (௭௬)

வேறு.

உன்னைவாய்மொழிகாத்தலாலுலகத்திலுளதூங்
கன்னைவாய்வரங்கொடுத்தனனுதவலாலிரங்கல்
என்னைநீமறலிக்கருளெனவிசைவரங்கள்
தன்னையேயருடருதியால்விடையெனத்தளர்ந்தான். (௭௭)

வேறு.

அன்னதுகேட்டபினருவியாமெனத்
தன்னிருதடங்கணீர்தாழ்ந்துமார்புற
மன்னியநிழலெனமார்புநீங்குறுப்
பின்னவன்பிரிவினுக்கஞ்சிப்பேதுற்றான். (௭௮)

வளர்நகர்மாந்தரைவசிட்டன்றன்னுடன்
தளமலர்த்தாரினீர்தருதிராலென
அளியினமெழுந்தெழுந்தார்க்குமாமதுத்
துளவணிமார்பினன்றூதுபோக்கினன். (௭௯

போனபின்றூதுவர்புகன்றவாய்மொழி
ஆனதுகேட்டபின்னரசன்கண்ணுறீஇ
மாநகர்மாந்தரும்வசிட்டன்றன்னுடன்
ஏனையவிருவருமிருந்தவேலையில். (௮0)

### வேறு.

இருந்தபேரவையைநோக்கியிவர்சடைமுனிவன் றன்னை
வரந்தருகென் றவாறுமத்திரிமைந்தனேவத்
தரந்தருமன்ன தம்பிதன்னுழைவந்தவாறும்
அரம்புனைந்திலங்குவைவேலடல்புனையிராமன்சொன்னான். (அக)

மத்தகயானையானைவசிட்டனுநோக்கியுந்தை
தத்துறுபுரவிதிண்டேர்த்தசரதன் தன்பால்வந்த
அத்திரிபுதல்வன் றன்னைவரன்முறையடிவணங்கி
எத்தனபுதல்வரில்லேனென்னைகொல்செய்வதென்றான். (அஉ)

உறுபரிவேள்விவேட்பினுரனுடைமைந்தர்நால்வர்ப்
பெருகுவையொருவன் றன்னதாருயிர்பிறியுங்காலை
மறுவறுமூவர்தாமுமடிகுவர்மன்னவென்ற
தறிகுவள்யானுமென்றேயருமறையாளன்சொன்னான். (அங)

ஆதலால்விதியைவெல்வதரிதுநீயருணப்பைம்பூண்
ஏதிவாள்கடகச்செங்கையிலக்குவற்கிரங்கவேண்டா
தாதவிழலங்கற்பைந்தார்த்தமனியத்தானபைம்பூண்
மாதிவெம்புரவித்திண்டேர்மன்னவென் றின்னசொன்னான். (அச)

நங்குலக்குரவனனநான்மறைமுனிவன்சொன்ன
திங்குநீகேட்டியன்றேயினிவிடைதருதியென்று
* மங்கைதனுருவமாக † வார்சிலைமீதுசென்ற
பங்கயவருணராகப்பதயுகமீதுவீழ்ந்தான். (அரு)

தன்மத்தின்கன் றதாயதம்பிதான்பிரிவெனஃகம்
மன்மத்தையீர்தலாவேமலர்க்கணீரருவிசோரக்
கன்மத்தின்வினைவையெண்ணிக்கட்டுரையொன்றுங்கூறான்
உன்மத்தனுயிருந்தானுணர்வுடனு § யிர்ப்புமில்லான். (அசு)

செதுமொழிவினைஞர்செய்தசித்திரப்பாவைபோல
எதிர்மொழியொன்றுங்கூறு திராகவனிருத்தலோடும்
கதுமெனவெழுந்துமுன்னோன்கழலிணைதொழுதுவாழ்த்தி
அதுவிடையென் றுநில்லாதணிநகரகன்றுபோவான். (அஎ)

தேன்பிரியாதகானிற்சிலைகொடுகாத்தபின்னோன்
ஊன்பிரிகின்றகாலத்துயிரினையொத்தான்முன்னோன்
கான்பிரிகல்லாவோதிக்கைகயன்மடந்தைகூறத்
தான்பிரிகின் றநாளிற்றந்தைதன் றகையனுனன். (அஅ)

---

* மங்கை-அகலிகை.

† வார்சிலை-நீண்டுகிடந்தகல்.

§ உயிர்ப்பு-சுவாசம்.

நம்புநான்மறையோர்க்கெல்லாநல்கியேநடந்தான்கண்டால்
உம்பரார்சொன்னவார்த்தையொழியுமோவுலகத்தென்பார்
கம்பியாநின்றதுள்ளங்கழிந்ததோர்காலமென்பார்
தம்பியாரின்றியாவிதரிக்குமோதமையனென்பார். (௮௯)

வலத்தியன்மன்னர்க்கெல்லாம்வரங்கொடுத்தாவிநீத்தல்
குலத்தியல்பன்றேவென்பார்கொள்ளுமோகூற்றமென்பார்
அலக்கணுற்றிடாதுவாழ்வோடமையுமோவயோத்தியென்பார்
இலக்குவனாவிநீங்கினிருக்குமோயாமுமென்பார். (௯௦)

இன்னநன்னகரத்துளோரினைந்தினைந்தேங்கிமாழ்க
நன்னகர்வாயினீங்கிநவமணிகொழித்துமுத்தம்
பொன்னொடுவரன்றியெங்கும்புனல்பரந்துலகம்போற்றும்
தன்னிகர்நதியொன்றில்லாச்சரயுப்பேராறுசார்ந்தான். (௯௧)

ஆசின்மணிமதில்சூழயோத்திநகருறைகின்ற
மாசனங்கடுயருழக்கமடந்தையர்செங்கனன்மூழ்கப்
பாசநடுவினினில்லாப்பரதன்விழிப்புனன்மூழ்கப்
தாசரதியிடர்மூழ்கச்சரயுநதிமூழ்கினனால். (௯௨)

சூக்ரத்தினெடுங்கோட்டாற்றுணைப்புண்டதுயர்நீக்கிச்
சீகரத்தவுலகாண்டதிறல்வெய்யோன்றிருத்தம்பி
மோகரித்தமுதுபிணிநோய்முதலாயபெரும்பிறவிச்
சாகரத்தின்கரையேறத்தடங்கரையினேறினனால். (௯௩)

அறுபகையைவிளக்கின்றவைம்புலனுமகத்தடக்கி
உறுவனவொன்பதுவாயவுயர்வாயுள்ளடக்கி
மறுவறுசங்கினந்தவழும்வாலுகத்தடங்கரைமேல்
எறிகதிர்வேலிலக்குவனுமியோகத்தங்கிருந்ததனால். (௯௪)

போதிலங்குமாயிரஞ்செம்புண்டரிகம்பூத்ததொரு
சாதிலிங்கச்செழுங்கனிபோற்றமணியம்பூணிமையவர்கோன்
மூதிலங்கைதீமூளறுனிந்தோன்றன்பின்னோன்முன்
மீதிலங்குசெழுங்கனகவிமானத்தின்மேல்வந்தான். (௯௫)

தன்னையமர்தொலைத்ததாரரக்கன்றன்மகனைப்
பின்னையமர்வென்றபெரியோனைப்பேசரிய
மன்னியமெய்யாக்கையுடனேமகிழ்ந்தேத்திப்
பொன்னியதேர்மானமிசைக்கொண்டுபோயினனால். (௯௬)

மீனோதவேலைபுடைசூழ்வியனுலகில்
ஏனோர்புலம்பவிகல்வேலிலக்குவனும்
ஊனோடவற்றுளுலையாவுடம்பெய்தி
வானோர்புடைசூழவைகுண்டம்போய்ப்புக்கான். (௯௭)

அப்பாலியன்றததுநிற்கவிங்ஙனே
இப்பாலியன்றதியம்புவெனானெந்நாளும்
தப்பாததம்பிதனைநினைந்துசாய்துயர்க்கு
வைப்பாகியுள்ளேமெலிந்தான்மறவேலான். (௯௮)

பார்த்தானிளையோனைக்காணான்பதைத்துள்ளம்
வேர்த்தான்றிருமேனியெல்லாமெலிவுற்றான்
காத்தாய்நெடுங்காலங்கைவிட்டாயோவென்று
பூத்தாமரைக்கண்புனலாய்ப்புலம்பினான். (௯௯)

விம்பக்கவிகைவிறன்மேகநாதனையோர்
அம்பிற்றடிந்தாயருவினையேனாருயிரே
வம்புற்றதாரான்மகனேமதியிலியேன்
தம்பித்துணையேதரியேன்றரியேனே. (௧௦௦)

ஆற்றுவனோவேந்தேயவயம்புகுந்தானைக்
கூற்றுவனேவந்துகுறுகாவகைகாத்து
மாற்றவனேர்விட்டவடிவேல்வரைமார்பில்
ஏற்றவனேயெம்பியிலக்குவனேயென்னுயிரே. (௧௦௧)

என்செய்வேனென்றென்றிவையிவையேநின்றரற்றிம்
பொன்செய்மணிமார்பன்பொருப்பின்மழையென்ன
மின்செய்யருவிவிழவேயழுதனனால்
தன்செய்யதாளிணையேதந்தருளுந்தன்மையான். (௧௦௨)

வண்ணவரையழுதமாநாகமுமழுத
விண்ணுந்திசையும்வியன்ஞாலமுமழுத
எண்ணிநினைவுற்றினைந்தினைந்திங்ஙனே
அண்ணலழுதானழாததொன்றங்கில்லையால். (௧௦௩)

இன்னுயிர்போனாலிருக்குமோபொய்யாக்கை
பின்னவன்போந்தநெறியானும்போகுவனால்
துன்னுமணிமுடிசூடுவாய்நீயென்னப்
பன்னுமதுகைப்பரதனையேநோக்கினான். (௧௦௪)

நோக்கப்பரத * னொறிலிற்கரஞ்சிரத்தின்
மேக்கிற்குவியாவிரைத்தார்முடிவேந்தன்
காக்கப்புவனமுனக்கேகடனென்னா
ஏக்குற்றடியினிறந்தானெனவிழுந்தான். (௧௦௫)

## வேறு.

நாதனென்னைநளிர்முடிசூடென
ஏதமுள்ளறக்கூறியதெம்முடைத்
தாதைதன்னைத்தடக்கைகயன்பெற்ற
கோதைகொண்டவரத்திற்கொடியதால். (௧௦௬)

அண்ணனீபுரந்தாள்கின்றவையகம்
எண்ணியென்வயினீந்ததுதெய்வதம்
நண்ணிநாகஞ்சுமக்குமிந்நானில
மண்ணிநாகஞ்சுமக்கெனின் ○ மாண்டதால். (௧௦௭)

---

* நொறிலில் - விரைந்து.

○ மாண்டது - சிறப்பாயுள்ளது.

* இம்மிசெந்நெலினுக்கிணையாகுமேல்
இம்மிமற்றையருவரையொக்குமேல்
† மிம்மினிச்சுடர்வெம்கதிரொக்குமேல்
உம்மிலொத்துலகாளுதலுண்மையால். (க0அ)

ஆதியின்னுடையாண்டொழின்மேயினர்
நீதிவையிகழ்த்திடவல்லரால்
கோதில்வண்மைக்குசலவர்தம்மைநீ
சோதிமாமுடிசூட்டென்றியம்பினன். (க0கூ)

## குசலவர் பட்டாபிஷேகம்.

இன்னகூறியிளவலிறைஞ்சலும்
மன்னர்கோனுமனமகிழ்ந்தவ்வயின்
கொன்னவின்றகொலைவேற்குசலவர்க்
கன்னநாளிலணிந்தனன்காப்புநாண். (கக0)

புரைசெய்மாமதப்போதகமீமிசை
அரைசரீண்டினரந்தணர்சூழ்ந்தனர்
முரைசதிர்ந்தனசங்குமுழங்கின
விரைசெய்பூங்குழலார்விளக்கேந்தினர். (ககக)

அண்ணல்யானையிருடகப்பொற்குடம்
கண்ணினூற்றெட்டிற்கங்கையினீர்கொண்டே
மண்ணினைசைதவிர்ந்தவன்மைந்தரைப்
பண்ணினபிடேகம்பரிந்தரோ. (ககஉ)

நாடிமாமறைகூறியநாளினில்
ஆடகத்தவரியணைமீதரி
ஓடையானையரொண்கரஞ்சென்னிமேல்
சூடமைந்தரைமாமுடிசூட்டினன். (ககங)

பாசிலையேய்ந்தபரூஉக்குலைவாழைகள்
காசறுமாதவர்கவானெனநீடிய
கோசலநாட்டிற்குசலவதியென்றோர்
மாசறுநீண்மதின்மாநகர்செய்தான். (ககச)

ஒத்தனநால்வகையுள்ளதானையும்
அத்தகுசெல்வமொடமைவமைவாகக்
கொத்தலாதார்புனைகுசனையமாநகர்
வைத்தனன்மாமுடிமன்னவர்கோமான். (ககரு)

உத்தரகோசலவொளிர்திருநாட்டில்
சித்திரமாயசிரப்பதியென்றோர்

---

* இம்மி-மத்தங்காய்ப் புல்லரிசி.
† மிம்மினி-மின்மினிப்பூச்சி.

பத்திதரும்பருமாமணியாலுயர்
மத்தகமாநகர்மாளிகைசெய்தான். (கக௬)

தன்னுடைநால்வகையாகியதானை
மன்னியசெல்வமுமாண்புறநல்கிப்
பொன்னினியன்றுளபுரிசையிலங்கும்
அந்நகர்தன்னிலவனையும்வைத்தான். (ககஎ)

வேறு

இத்தினமிறந்தபினிலக்குவன்சென்ற
அத்திறமியானுஞ்சென்றடைவனுமெனச்
சத்துருக்கினற்குநீர்சாற்றுமென்றுதேன்
துய்த்தடைதாரினன்றூதுபோக்கினன். (கக அ)

மதுரைமாநகரிடைப்புகுந்துமன்னவன்
அதிர்கழல்வணங்கிநின்றயோத்திமாநகர்ப்
புகுவதுநிகழ்ந்ததும்புகுந்தவார்த்தையும்
கதுமெனவுரைத்தனர்காலின்காட்சியார். (ககக)

* ஒட்டர்வந்துரைத்தனருரைத்தவாறெலாம்
கேட்டனன்செவிசுடக்கிழிந்தநெஞ்சமும்
நாட்டமும்புனலுகநடுங்கிமெய்யெலாம்
தோட்டடங்களுமிகமெலிந்துசோர்ந்தவே. (க௨௦)

தன்னிகர்பிறிதிலாத்தாரிராகவன்
பொன்னடிதொழுதுயப்போவனினி
இந்நகராண்டினிதிருத்திர்நீரென
மன்னவன்மைந்தனைமகுடஞ்சூட்டினன். (க௨க)

மதிதொடுமாளிகைமதுபுரந்தனில்
விதிசெயுஞ்சிராப்பளியென்றுமிக்குள
புதுநகரியற்றித்தம்புதல்வர்தம்மையப்
பதிவயினிருத்தினன்பைம்பொற்றாரினன். (க௨௨)

பாடகச்சீறடிபவளச்செய்யவாய்ச்
சூடகமடந்தையரினைந்துசோர்வுற
மாடமாமாளிகைமதுகையிற்பட
ஆடகமதிலணியயோத்திமேவினன். (க௨௩)

மன்னனையிணையடிவணங்கிமைந்தர்க்குப்
பொன்முடிகவித்ததும்புரவியானைதேர்
இன்னவைகொடுத்ததுமிலங்குமாமதில்
அந்நகரளித்ததுமமையக்கூறினன். (க௨௪)

அன்னதுகேட்டபினருவிக்கண்ணினன்
தன்னிகர்பிறரிலாத்தாரிராகவன்

* ஒட்டர் - தூதர்.

முன்னேநாட்பெயர்ந்துமொய்ம்பிளவல்போகிய
நன்னெறிசெல்லுமர்நாடுங்காலையே. (கஉரு)

சந்திரனிகரெனத்தரளவெண்குடை
அந்தரமீமிசையழகெறித்திடக்
கந்தகெரடவெங்கவளயானேமேல்
வந்தனன்வீடணனென்னும்வாய்மையான். (கஉசு)

பயங்கெழுமிராவணன்பத்துமாமுடி
தயங்கியமணிபறித்தெழுந்ததன்மையான்
இயங்கியவெழுபரித்தேரிலெண்டிரை
வயங்கியகதிரவன்மகன்வந்தெய்தினன். (கஉஎ)

கருத்துவந்தெழுகதிர்க்கடவுடன்னையோர்
பருத்தசெங்கனியெனப்பாய்ந்தபான்மையான்
உருத்துவந்துலகெலாமொருங்குகாதுமா
மருத்துவின்மைந்தனும்வந்துமேவினன். (கஉஅ)

ஆற்றியவுலகெலாமடியிரண்டினல்
மாற்றியவமலனேவலங்கொண்டிங்கென
காற்றியல்வெம்மையாற்கனகவெற்பறை
சாற்றியவெண்கினற்றலைவன்சார்ந்தனன். (கஉக)

வரைபலவலிமிகவாங்கிவானவர்
சிரமிசைகொண்டனர்செல்லச்செல்லவோர்
கரமிசைக்கொண்டவர்கலித்துமோதிடு
நரலையையணைசெய்தநளன்வந்தெய்தினன். (கநo)

* கோல்பிடித்தெய்துசெங்குருதியாறெனை
வேல்பிடித்தெறிதருமரக்கர்வெள்ளத்தை
வால்பிடித்தெற்றிடவந்தமாமதத்
தோல்பிடித்தெற்றியதுமிந்தன்றோன்றினன். (கநக)

மருப்பிணலிருகரியுடனுமற்றுள
பொருப்பெலாம்பொருந்திடப்புணரிவற்றிட
உருப்பிணுலகெலாமுலையவோங்கிய
நெருப்பின்மாமகனிகனீலன்மேவினன். (கநஉ)

குரங்கொடுபொரவெளிதென்றுகொண்டுதஞ்
சரங்கொடுபொரவருமரக்கர்தானையைக்
கரங்கொடுமலைகொடுகதிர்வெண்பற்கொடு
மரங்கொடுசாடியமயிந்தன்றோன்றினன். (கநந)

நீலனுங்குமுதனுநிசாசரர்க்கெலாங்
காலனென்றமரெலாங்கடக்குமாற்றலாற்

* கோல் - அம்பு.

* ஞாலமெண்ணியபடைத்தலைவர்யாவரு
மூலமாகியமுழுமுதலைமுற்றினார். (கநச)

தப்பறத்தயரதராம † னாகவ
வைப்புறுபுவியில்வானரங்களாமெனச்
செப்பியதேவர்களியாருஞ்சேரவே
வொப்புறவந்துவந்தொருங்குகூடினார். (கநரு)

ஏனையசனங்களுமெய்திற்றாதலாற்
போனவன்றன்பினேபோவதேயெனா
வானவர்மவரடிவணங்கினார்க்கெலாந்
தேனமர்தெரியலான்றெரியக்கூறினான். (கநசு)

மின்பயில்தடக்கைவேல்வீடணன்றனைப்
பொன்பயினகர்வயிற்போதிபூதல
மன்பதையளவுநீவாழ்தியாலென
வன்புடனாணையானகலநீக்கினான். (கநஎ)

அன்னதுகேட்டபினருக்கன்மாமகன்
றன்னையும்விடுப்பதுதகுமென்றஞ்சியே
துன்னியங்கதனைமாமகுடஞ்சூட்டிவைத்
தின்னணம்வந்தனனென்றிறைஞ்சினான். (கநஅ)

ஏந்துவேலிராமனோடிரவிதன்சுதன்
சேர்ந்துழிச்சேர்வதுதெளிந்துசெப்பினான்
ஆர்ந்தவராயினோரகிலமூன்றினும்
வாய்ந்தவர்செய்நன்றிமறக்கற்பாலரோ. (கநகூ)

## இராமன் அயோத்தியைத்துறந்து சரயுநதி யடைதல்.

மருத்துவின்மைந்தனைமகிழ்ந்துநோக்கிமுன்
புரைத்ததுமுணர்தியாலுலகில்வாழ்வதுன்
கருத்துமுண்டாதலாற்கனகத்தோளினாய்
இருத்திநம்மாணையென்றிராமன்போயினான். (கசo)

கனைகதிர்மைந்தனுங்கரடிவேந்தனும்
குனிவுறுகுமுதனுங்கொலைமயிந்தனும்
துனைதருதுமிந்தனுஞ்சூரனீலனும்
எனையவரியாவருமேனைவேந்தரும். (கசக)

வீரனதாணையான்விலங்கிநிற்கவார்
தோரணமாநகர்தொக்கமாக்களும்
காரிகையாருமக்கடவுண்மாமறை
ஆரணநான்குடையந்தணாளரும். (கசஉ)

---

* தாலம் - இவ்வுலகம். † ஆகவவைப்பு - போர்க்களம்.

பின்னியகாதலிற்பிரிகலாற்றலர்
மன்னியதாள்வயின்வதிந்தவேட்கையால்
தொன்னகர்பாழ்படத்துனைந்துசூழ்தர
அன்னவர்வாயில்விட்டகன்றுபோயினார். (கசரு)

**பிரமன் சரயுநதிக்கரையடைந்து இராமனைப்பழிச்சல்.**

உற்றதன்காதலானுலகந்தன்னொடன்
பற்றவர்பிறந்தநாளயோத்திமாநகர்
முற்றுறுதமிழ்முனிமுகப்பமுன்னைநாள்
வற்றியசுரிமணல்வாரிபோன்றதே. (கசச)

தடமலிசரயுத்தண்டுறையிற்றாழ்புனல்
அடியுறச்செல்வுழியலரினான்முகன்
மிடன்மிகுகணக்கிலாவிம்பவூர்திகள்
உடனணிவானகத்துச்சிதோன்றினான். (கசரு)

மெய்யனேதுய்யனேவிளங்கும்விண்ணுளோர்க்
கய்யனேயமலனேயருணவாழிவாழ்
கய்யனேநின்பெருங்கடவுட்காயமோ
டெய்தனீவேண்டுமென்றிறைஞ்சிகூறினான். (கசசா)

**இராமன் சரயுவின்முழுகி முன்னுருவேய்திநிற்றல்.**

துன்னியவானவர்துயரநீக்குவான்
மன்னியவுலகினிற்பிறந்தமாயையைத்
தன்னிகரிலாதவச்சரயுநீத்துத்தன்
பின்னவர்தம்முடன்பெயர்த்துமேயினான். (கசஎ)

ஏதமில்சரயுமாநதியிகந்துபின்
காதுவேற்றயரதன்காவல்கொண்டிடும்
ஆதிவானவர்பயிலரியநான்மறை
ஓதுநாலுருவுமோருருவமாயதே. (கசஅ)

**வானரர் தேவராதல்.**

தழுவியசெழுமணிச்சரயுப்பூந்துறை
முழுமையும்பணிப்பவர்முழுகிமொய்த்தபின்
அழுமியவானரவீரர்யாவரும்
பழையதங்கடவுடன்படிவமெய்தினார். (கசகூ)

வணங்கியமலரயன்றனைநோக்கிமால்
அணங்கியகொடிமதிலயோத்திமாநகர்க்
கணங்கொடுவெதிபவரியார்க்குங்காதலால்
இணங்கியபதியமைத்திடுதியென்றனன். (கருo)

### வேறு.

நிறங்கிளர்கரியமேனிநேமியானருளக்கேட்டுக்
கறங்கிசைமுரலுஞ்செய்யகமலமாமலரின்மேயாள்
அறங்கிளர்கருணைவெள்ளத்தயோத்தியாள்பவருக்கெல்லாம்
பிறங்குசந்தானமென்னும்பெரும்பதியமைவித்தானால். (கருக)

### அயோத்திமாநகரினர் தேவவுருப்பெற்றுச் சந்தானபுரி யடைதல்.

அமலனாங்கமைத்தபின்னரயோத்திமாநகரத்துள்ளார்
திமிரநீர்ச்சரயுவென்னுந்திருநதியதனின்மூழ்கி
இமையவர்படிவமெய்தியெண்ணிலாதியங்குஞ்செய்ய
தமனியவிமானமேறித்தடங்கொள்சந்தானஞ்சேர்ந்தார். (கருஉ)

### இராமன் வைகுந்தமடைதல்.

ஆழியான்மகிழ்ந்துபூவினயன்மறைகொண்டுவாழ்த்தச்
சூழியானையின்மீதேறியிந்திரன்றுதிசெய்தேத்தப்
பூழிவாழ்மேனியானும்புகழ்ந்திடக்கணங்கள்போற்ற
வாழிவானவர்கள்கூறமருவிவைகுந்தஞ்சேர்ந்தான். (கருந)

கலைமறைமுனிவர்வாழ்த்தக்காரிகையர்தங்கற்பு
நிலைபெறமன்னர்செங்கோனீணிலந்தன்னில்வாழ்க
அலைகடலிலங்கைமூதூரரக்கர்வேரறுத்தவைவேற்
சிலைதொடுவில்லிகாதைச்செந்தமிழ்வாழ்கவென்றே. (கருச)

இனையநற்காதைமுற்றுமெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதுதன்னைச்சொல்வோர்க்கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கனைகடற்புவிமீதேகாவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலாம்விண்ணவன்பதத்தைச்சேர்வார். (கருரு

கஎ - வது, சந்திரகேதுநகர்ப்படலம் - முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம் - கருக௦.

---

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

## உத்தரகாண்டம் - முற்றிற்று.

---